


கல்கி
பொங்கல் மலர்
30
காசு
KALKI
14-1-1962



திட்டத்தை நிறைவேற்ற முன்னணியில்...

ஐந்தாண்டு திட்டங்களின் பிரமாத சாதனைகளை உருவாக்கி, நம் நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்கு அடிகோலுவதில் **ஏஸிஸி** மற்றும் **சங்கர்** பிராண்டு ஸிமெண்டுகள் ஆற்றிவரும் பணி கொஞ்ச நஞ்சமல்ல — அணைகள், ஹைடெல் தேக்கங்கள், தொழிற்சாலைகள், குடியிருப்புக் காலனிகள், சமூக நலத் திட்டங்கள், சாலைகள், பாலங்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் இவற்றை அமைப்பதில் இந்த ஸிமெண்டுகள் பெருமளவில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

...*ஏஸிஸி* மற்றும் சங்கர் பிராண்டு ஸிமெண்டுகள்

தி ஸிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிட். , தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்.

JWT/CHI-2029a


ஜனவரி 14ம் முதல்
சாந்தி ஸ்ரீகிருஷ்ண
உமா மற்றும் தென்னாடெங்கும்
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ்
பார்த்தால் பசிதீரும்
தயாரிப்பு:
GK புரொடக்ஷன்ஸ்
திரைக்கதை-டைரக்ஷன்:
A.பீம்சிங்
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
கதை
திருலோக்சந்தர் M.A.
வசனம்
ஆரூர்தாஸ்
ஒளிப்பதிவு
விட்டல்ராவ்
AVM
புரொடக்ஷன்ஸ்


இன்பப்
பொங்கல்
தாமரைக் கைகளிலே கூடை;
கூடையிலே செங்கரும்பு, செழுஞ்சுவைக்
கனிகள்; பொங்கற்பானை; பொங்கற்
பானையிலே வண்ணக் கோலம்;
புத்தாடையிலே புதுப் பொலிவு.
இதழ்க் கடையில் புன்னகை;
இதய ஓடையில் பெருவகை;
கண்களிலே புத்தொளி; கருத்தினிலே
இனிய நினைவுகள்;
நடையிலே நவீனம்; நங்கையவள்
நெஞ்சினிலே நல்லதோர் வருங்காலம்
பற்றிய நம்பிக்கை; நம்பிக்கைதானே
வாழ்வின் உயிர் நாடி!
பொங்கற் பொன்னாளிலே
பொலிவு மிக்க வருங்காலத்திற்கு
நம்பிக்கைக் கொள்ள
வகைசெய்வது ஆயுள் இன்சூரன்சே!
ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை
ஆயுள் இன்ஷ்யூரன்சு
நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே
நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்
EP/LIC/SZ/13

கல்கி

பொருளடக்கம்

பொங்கல் மலர்

பிலவ தையீ 1 ★ ஜனவரி 14

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 24

பொறுமையை விடுத்து ஆராயுங்கள்!

பொங்கல் பண்டிகை உழவர் திருநாளாகும். இந்த நன்னாளில் விவசாயத்தைப் பற்றி எல்லோருமே சிந்தித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் கட்சியின் நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் நோக்கத்தையும், விளைவுகளையும் கடவுளுக்குப் பொதுவாக ஆராய்ந்து பார்க்க இது தக்க சமயமாகும்.

இப் பிரச்னையை அணுகும்போது, ஒரு சிலர் அதிக வசதி படைத்திருப்பதில் அவர்கள்மேல் பொறாமையோ, துவேஷமோ கொள்ளாமல் அவர்களுடைய வசதிகளைக் குறைப்பதால் தங்களுக்கு ஏதேனும் நன்மை உண்டா, தேசத்துக்கு ஏதேனும் நன்மை உண்டா என்பதை உழவர் பெருமக்கள் உள்ளவாறு எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று எல்லாத் துறைகளிலும் நாட்டின் பெரும் பிரச்னை, உற்பத்தியைப் பெருக்க வேண்டு மென்பதுதானே? உற்பத்தி பெருக வேண்டுமானால், விவசாயத் தொழிலில் ஓரளவுக்கு நவீன இயந்திரங்கள் உபயோகமாக வேண்டியதும், ரசாயன உரமிடுவதும் அவசியமாகும். சிறு நில உடைமைகளுக்காக இத்தகைய முதலீடுகள் செய்வது சாத்தியமு மில்லை; சிறு உடைமைக்காரர்களிடம் அதற்குரிய பொருள் வசதியுமில்லை.

ஆனால் இவ்வித முதலீட்டு வசதி பெற்றவர்களே அரசியல்வாதிகளின் வெறுப்புக்கு ஆளாகி வந்திருக்கிறார்கள். நீரையும் காற்றையும் போலவே நிலமும் எல்லோருக்கும் பொதுவானது என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தக் கருத்து தேச நலனைத் தராது என்பது சிறிது சிந்தித்துப் பார்த்தால் தெரியும். நீரையும் காற்றையும் போலன்றி நிலத்தை உபயோகத்துக்குக் கொண்டுவருமுன் அதற்கு நம் உழைப்பை அளிக்கவேண்டி யிருக்கிறது. கழனியில் இறங்கி உழவு செய்பவர்களின் உடலுழைப்புடன் நிலத்தின் தன்மையை உணர்ந்து பயிரிடத் திட்டமிடுபவர்கள் அறிவால் செய்யும் உழைப்பும் இதில் அடக்கமாகும். நிலத்தின் செழிப்பை வெளிக் கொண்டுவருவதற்காகப் பணத்தைச் செலவிடக் கூடியவர்களும் தேவைப்படுகிறார்கள். இன்று நிலச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள், அல்லது அவர்களது முன்னோர்கள், இந்த உடைமையைப் பணம் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்த்தால் நிலத்தை நீருடனும் காற்றுடனும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கில்லை என்பது புலனாகும். இந்த உரிமையாளர்கள் உழவுத் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தாமல், அவர்களது உழைப்புக்கு உரிய பங்கினை அவர்களுக்கு அளிக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது சர்க்காரின் பொறுப்பு. நிலத்தில் பணத்தைப் போட்டவர், சாகுபடியாளர், விவசாயத் தொழிலாளர் இவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் தருவதே அரசாங்கத்தின் கடமை. மாட்டை அவிழ்ந்து விட்டால் வண்டி ஓடாது. மாட்டைச் சமாளித்துச் சரியாக ஓட்ட வேண்டுமே யொழிய, மாடே வேண்டாமென்று அவிழ்த்து விடுவது மடமையாகும்.

ஆனால் இந்நாட்டின் துரதிருஷ்ட வசமாகக் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு உணவு உற்பத்தியில் அக்கறை இல்லை. வோட்டு உற்பத்தி ஒன்றே அதன் குறிக்கோளாகி விட்டது. எனவே சிறுபான்மையினரான நிலச் சொந்தக்காரர்கள் மீது குடியானவ மக்கள் பொறாமை கொள்ளும்படி அவர்களைத் தூண்டி விட்டிருக்கிறார்கள். 'சிலரிடம் பெரிய உடைமைகள் இருப்பது அநீதி; அவற்றை யெல்லாம் சிறியதாக்கி மீதியை உங்களுக்குப் பங்குபோட்டுத் தருகிறோம்' என்று விவசாயத் தொழிலாளர்களிடம் கூறி நிலவரம்புச் சட்டங்கள் போட்டிருக்கிறார்கள்.

சொத்துரிமை ஒரு சாராரிடமிருந்து இன்னொரு சாராருக்கு மாறுவதால் உற்பத்தி எப்படிப் பெருகும்? அதுவும் செலவு செய்ய வசதி படைத்தவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி திரவிய பலமில்லாதவர்களிடம் அதை ஒப்புவித்தால் உற்பத்தி குறையவே அல்லவா செய்யும்? வரிகள் போட்டுச் சர்க்காரே நிலத்துக்கு வேண்டிய முதலை இவர்களுக்கு அளித்துச் சாகுபடி நடத்துவது சாத்தியமா? அது நியாயமாகவும் சிக்கனமாகவும்தான் நடக்குமா?

போகட்டும்; ''சமூக நீதி' என்ற பெயரில் பொறுமைக்கு மதிப்பளித்து நிலத்தை விவசாயிகளுக்கெல்லாம் விநியோகிப்போம் என்றார்களே, அதாவது காரியசாத்தியமானதா என்று பார்த்தால் ஏமாற்றமே அடைவோம். உச்ச வரம்பு விதித்தபின் கிடைக்கும் உபரி நிலத்தை எல்லா விவசாயிகளுக்கும் பிரித்துக் கொடுத்தால் அவர்கள் ஆளுக்குக் கால்ஏக்கராகூடப் பெற முடியாது. எனவேதான், இன்னொரு மாயத்தைத் தொடங்கினார்கள் காங்கிரஸ்காரர்கள்.

அதுதான் கூட்டுறவுப் பண்ணை என்பது. உபரி நிலத்தை யெல்லாம் ஒருவருக்கும் தனிச் சொத்தாக்காமல் சர்க்காரே நடத்துவதுதான் கூட்டுறவுப் பண்ணை. இது உண்மையில் நிலங்களை யெல்லாம் மொத்தமாகத் திரட்டி விவசாயம் செய்யும் கூட்டுப் பண்ணை தானே ஒழிய விவசாயிகள் பரஸ்பரம் ஒத்துழைக்கும் கூட்டுறவுப் பண்ணை அல்லவே அல்ல. உபரியாகக் கிடைக்கப் போகும் நிலங்களைப் போலவே நாட்டிலுள்ள எல்லா சிறு உடைமைகளும் 'கூட்டுறவு' முறையின் கீழ் வந்தால் உற்பத்தி பெருகும் என்பது காங்கிரஸின் மகா மந்திரம். ஆனால் உடைமை உரிமைகள் தனித்தனியாக இருக்கும் வரையில்தான் உற்பத்தி பெருகும் என்பது உலகம் கண்ட உண்மை.


'தன்னுடைய உடைமை இது' என்ற உணர்வு இருந்தால்தான் ஒருவன் அதில் கண்ணும் கருத்துமாக இருப்பான். நிலத்தின் உற்பத்தியைப் பெருக்கினால் தனக்கு இலாபமுண்டு என்பது நிச்சயமானால்தான் அதன் விளைச்சலை அதிகரிக்க எவனும் பாடுபடுவான். உழைப்பும், ஊக்கமும் விவசாயத்துக்கு ஜீவாதாரமாகும். 'கூட்டுறவு' விவசாய முறையில் அதன் கீழுள்ளவர்கள் பெயரளவில் பெற்றிருக்கும் தத்தம் நிலத்தின் வளத்தைத் தனிப்பட அதிகரிக்க முடியாது. கடுமையாக உழைத்தவன், தீவிரமான ஊக்கம் செலுத்தியவன் - இவர்களைப் போலவே அக்கறை காட்டாதவனும் விளைச்சலின் பலனை அநுபவிக்கும் நிலை ஏற்படும். 'எல்லாருக்கும் எல்லாம் சொந்தம்' — என்ற ஏட்டுச்சுரைக்காய் இறுதியில் 'ஒருவருக்கும் ஒன்றும் சொந்தமில்லை; நாம் ஊக்கமும் உழைப்பும் செலுத்தாவிட்டால் என்ன?' என்ற கருத்தையே தோற்றுவிக்கும்.

'கூட்டுறவு' அங்கத்தினர்களின் இலட்சணம் இப்படி என்றால், இவ்வாறு சிறு உடைமைகளைக் கூட்டிப் பயிரிடுவதற்குத் தூண்டுகோலாக இருந்து மேற்பார்வையிடும் சர்க்காரைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். விவசாயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாத அதிகாரிகள் இந்தக் கூட்டுப் பண்ணைகளின் மானேஜர்களாக இருப்பார்கள். உற்பத்தி எப்படியானாலும் அவர்களுக்குச் சம்பளம் என்னவோ தட்டாமல் கிடைத்துக் கொண்டுதான் இருக்கும். தங்களுக்கு வேண்டிய ஒரு சலுகை சாதியைப் படைத்துச் சோம்பலுக்கு ஊட்டமளித்து வருவதோடு அவர்களுடைய விவசாயப் பெரும் பணி முடிந்து விடும். விளைச்சலில் அக்கறையும், விவசாய அறிவும் படைத்த உரிமையாளருக்குப் பதில் அக்கறை, அறிவு இரண்டும் இல்லாத அதிகாரிகளின் கீழ் வேலை செய்வதே விவசாயிகளின் கதியாகும்.

காங்கிரஸ் கொள்கையில் இன்னும் பல பேராபத்துக்களும் அடங்கியுள்ளன. சொந்தக்காரர் கவனமாகப் பேணிவந்த பெரிய நில உடைமைகளைத் துண்டாடி, மீண்டும் அவற்றைப் பெரிய நிலக் கூட்டுறவுகளாகவே ஒன்று சேர்த்து, ஈடுபாடற்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் இந்த விசித்திரமான ஏற்பாட்டுக்குக் கோடிக் கணக்கில் செலவிட வேண்டியிருக்கும். ஆர்ஜிதம் என்ற பெயரில் பறிமுதல் செய்யும் நிலங்களுக்கு எவ்வளவு குறைவாக 'நஷ்டஈடு' கொடுத்தாலும், மொத்தத்தில் இந்த நஷ்டஈடுகள் சர்க்கார் பட்ஜெட்டுகளில் ஒரு கணிசமான பகுதியை விழுங்கி விடும். அதன்பின் இந்த நிலங்களில் புது ரீதியில்

குடியானவர்களே! நிலத்துக்குக் கிஸ்திக் கட்டணத்தை ஒழித்துவிட முன்வந்திருக்கிறது சுதந்திரக் கட்சி. அந்தக் கட்சியை ஆதரியுங்கள்!

சாயும் 'பைசா' கோபுரம்



யந்திரங்களைக் கொண்டு பயிரிட ஏராள மான தொகையைக் கடனாகவும் மானிய மாகவும் செலவிட வேண்டும். அதாவது இன்று சொந்தக்காரர்களே செய்யும் செலவையெல்லாம் சர்க்கார் ஏற்க வேண்டும். இதற்காகப் புது வரிகள் போட்டால் அவை விவசாயிகள் உட்பட எல்லார் தலையிலும் விழும். புது வரிகள் போடாவிட்டால் நாசிக்கிலுள்ள அச்சகத்தை மேலும் முடுக்கிவிட்டு ரூபாய் நோட்டுக்களைப் பெருக்கெடுக்கச் செய்வார்கள். இதனால் விலைவாசிகள் ஏகத்தாறாக உயரும். எப்படிப் பார்த்தாலும் நாட்டு மக்கள் யாவரும் பாதிக்கப்படுவார்கள்.

இதையெல்லாம் விவசாயிகள் உணர்ந்து சூதும், கபடமும், துவேஷப் பிரசாரமும் தங்களிடம் செல்லாது என்பதைத் தேர்தலில் நிருபிக்க வேண்டும்.

நிலத் தீர்வைகளை ஒழித்து உரிமையாளருக்கு ஊக்கமளிக்கும் சுதந்திரக் கட்சியை, நிலத் தொழிலாளருக்கு நியாயமான ஊதியமும் நிரந்தரமான ஊழியமும் வழங்குவதாக உறுதி கூறியுள்ள சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதுதான் இரு சாராருக்கும் உகந்தது: அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்கவும் உகந்தது: இறுதியில் நாட்டுக்கே உகந்தது என்பதை அறிந்து உழவர்கள் இந்த விவசாயக் கட்சிக்கே தங்களின் வோட்டை அளிக்க வேண்டும். அடுத்த பொங்கலின் போது ஒவ்வொரு விவசாயியின் வீட்டிலும் பொங்கல் பொங்குவது போல் பூமித் தாயும் மகிழ்ந்து தன் விளைச்சலை அள்ளி அளிக்குமாறும், அதனால் நாடெங்கும் இன்பம் பொங்குமாறும் அவர்கள் செய்ய வேண்டும்.

பிரதமரின் பாதரட்சை

பாட்னா காங்கிரஸுக்கு எழுந்தருளிய நேரு அவர்கள் அணிந்திருந்த ஒரு கிழிந்துபோன பாதரட்சையைப் பற்றிப் பத்திரிகை நிருபர்கள் சிலர் செய்தி அனுப்பி, கொட்டை எழுத்தில் விளம்பரமாகி யிருக்கிறது.

நேரு அவர்கள் இன்னொரு அறுந்துபோன பாதரட்சையை அணிந்திருக்

கிறார். தம் மனத்தைக் கவ்விப் பிடித்துள்ள இந்தக் கிழிந்த மிதியடியைக் கழற்றி எறிய முடியாது என்கிறார். சோஷலிஸம் என்பதுதான் இந்த அறுந்து போன மிதியடி. சுபிட்சப் பாதையில் செல்ல உதவுமென எண்ணிப் பல நாடுகள் உபயோகித்துக் கிழிந்து போன இந்தச் செருப்பை அவை தூர எறிந்து விட்டன. அதனையே நேரு அவர்கள் இப்போது உபயோகித்துப் பார்க்கிறார்.

அதோடு நின்றாரா? சோஷலிஸம் இல்லாவிட்டால் உலகமே இயங்க முடியாது என்கிறார். உள் நாட்டின் மாபெரும் பிரச்னைகளைவிட அகில உலகத்தில் நிகழும் சில்லறைச் சச்சரவுகளைப் பெருத்த ஈடுபாட்டுடன் கவனித்து வரும் பிரதமர் அவர்களுக்குச் சர்வ தேச ஞானம் போதாது என்று யாரும் சொல்ல முடியாது. இருந்தபோதிலும் சென்ற உலக மகாயுத்தத்தினால் உருத் தெரியாமல் அடிநாசமான ஜெர்மனி உள்படப் பல நாடுகள் சோஷலிஸத்தை ஏற்காமலே இன்று சுபிட்ச வாழ்வை எய்தி விட்டன என்பதனை அவர் மறந்தது — அல்லது மறைத்தது — விந்தையாகத்தான் இருக்கிறது. 'அமெரிக்காவைப் பார்; அங்கு கூடத் தொழில் துறைக் கட்டுப்பாடுகள் உண்டு' என்கிறார் பிரதமர். அவர் வாக்கை ஏற்று நாமும் அமெரிக்காவைப் பார்த்து வைத்தால் என்ன காண்கிறோம்? அங்கு ரயில்வே, உள் நாட்டு விமானப் போக்குவரவு, வானொலி, நீர்ப்பாசன, ஜல—மின்சார நிறுவனங்களின் ஆரம்ப கட்ட வேலைகள்—இவை கூடத் தனியார்த் துறையில் இருப்பதைத் தான் காண்கிறோம். ஏன், ராணுவ தளவாடத் தொழில்களில் கூட சர்க்காருக்குத் தனியார் துறைக் கார்ப்பொரேஷன்கள் ஒத்துழைப்புத் தரும் அதிசயத்தையும் காண்கிறோம். தனி முதலாளிகள் ஒன்று கூடி ஏகபோக அமைப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்றுதான் அமெரிக்க சர்க்கார் கட்டுப்பாடு விதித்திருக்கிறது. இதனையே நேருஜி திரித்தும் பெரிதுபடுத்தியும் பேசியிருக்கிறார். இவ்வித ஏகபோக அமைப்புக்களை ஒழிப்பது சுதந்திரக் கட்சியின் முக்கியமான இலட்சியங்களில் ஒன்று; ஆனால் பெர்மிட் லைசென்ஸ் வழங்கி நாட்டின் தொழில்களைத் தன்னிஷ்டப்படி அமைக்கும் நேருஜியின் காங்கிரஸோ தனக்கு வேண்டியவர்களுக்கு இப்படிப்பட்ட ஏகபோக பாத்தியதைகளையே அளித்து வருகிறது.

பொதுத் துறையையும், தனியார் துறையையும் பற்றி நேருஜி குழப்பியிருப்பது அவரது உள்ளம் கலங்கியிருப்பதைத்தான் காட்டுகிறது. வியாபாரத்திலும், விவசாயத்திலும் தனியார் சுதந்திரம் வேண்டுமென்று தான் இன்று கோரப்படுகிறதே ஒழிய, இந்த நாட்டையும் அதன் நிர்வாகத்தையுமே தனிப்பட்டவர்களுக்கு விட வேண்டுமென்று கோரவில்லை. ஆனால் இன்று காங்கிரஸ் ஆட்சியில் இந்த நாடும் நிர்வாகமும் ஒரு தனி மனிதருடைய சொத்து போல் தான் ஆட்டி வைக்கப்படுகின்றன.

வெற்றி வீரர்களை வரவேற்கிறோம்


இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் குழுவுக்கும் கல்கத்தாவில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் பந்தயத்தில் இந்தியா வெற்றி பெற்று விளையாட்டுலகில் தனது புகழை நிலைநாட்டியுள்ளது. வெற்றி தோல்வியின்றி முடியும் ஆட்டங்களைக் கண்டு அலுத்துப் போன மக்களுக்கெல்லாம் உற்சாகமூட்டியுள்ளது இந்தச் செய்தி.

இதுவரை இங்கிலாந்துடன் இந்தியா ஆடியுள்ள இருபத்தெட்டு மாட்சுகளில் 1952-ம் வருஷத்தில் சென்னையில் நடைபெற்ற டெஸ்ட் பந்தயத்தில்தான் இந்தியா எம். ஸி. ஸி. குழுவை ஜெயித்திருக்கிறது. அதற்குப் பிறகு இப்பொழுது கல்கத்தாவில் ஜெயக்கொடி நாட்டியிருக்கிறது.

காப்டன் உம்ரிகரின் திறமையான தலைமையும், சலீம் துரானி, போர்டே, தேசாய், ரஞ்சனேயின் பந்து வீச்சும், பட்டோடி நவாப், போர்டே ஆகியோரின் விறுவிறுப்பான பாட்டிங்கும், மஞ்சரேகரின் திறமை மிக்க பீல்டிங்கும் இந்தியாவின் ஜயத்துக்குப் பாதை வகுத்திருக்கின்றன.

வெற்றிப் பெருமிதத்தோடு சென்னையில் ஜனவரி 10, 11, 13, 14, 15 தேதிகளில் கடைசிப் பந்தயமாட இந்திய கோஷ்டியினர் வருகிறார்கள். இந்தப் பந்தயத்தில் இந்தியா வெற்றி பெற்றாலும், அல்லது ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தாலும் இந்தியாவுக்கு 'ரப்பர்' கிடைக்கும்.

விளைவை எதிர்பார்க்காது விளையாட்டை மட்டுமே பாராட்டுவது தான் நேர்மையானது என்பார்கள். நேர்மையான நோக்குக்குக் கிரிக்கெட் விளையாடுவது என்ற பரிபாஷையும் வழங்குகிறது. இதற்கேற்ப, கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்திலிருந்து விருந்தினர்களாக வந்திருக்கும் எம். ஸி. ஸி. ஆட்டக்காரர்களையும் 'வருக! வருக!' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.





மேட்டூர் கெமிக்கல்ஸ் வெள்ளி விழா

1. விழாவின் முதல் நாள் கொண்டாட்டத்தைத் தமிழ்நாட்டு மரபுப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார் சென்னை கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி; இக் கம்பெனி மானேஜிங் ஏஜண்டு திரு கே. கே. ராமன் அருகில் நின்று களிக்கிறார். 2. மேட்டூர் கெமிக்கல்ஸ் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தை ஸ்ரீமதி மேதி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்த வைபவத்தில் ஸ்ரீமதி அமிலா ராமன் அவர்கள் கவர்னர் தம்பதிகளை வரவேற்றுப் பேசுவதைக் காணலாம். 3. மத்திய சர்க்கார் தொழில் அமைச்சர் திரு கே. வி. ரெட்டி உரை நிகழ்த்துகிறார். 4. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசை நடந்து கொண்டிருக்கிறது. 5. விழாவில் கலந்து கொண்டிருந்த





இளையாத்தங்குடியில்

‘நானல்’



[ஐப்பசி மாதத்தில் ஒருநாள் இளையாத்தங்குடியில் பெற்ற அனுபவம், இன்று இந்தப் பொங்கல் நாளையொட்டி, நினைவில் எழுகிறது.]

1. நிலையில்லா உலகத்தை நிலையென்றெண்ணி
நீளும் உயிர் விருத்தியினைப் பல என்றுன்னி
உலைகின்ற பேதையின் உள்ளத்துள்ளும்
ஓங்கிநிமிர் ஆன்மஒளி காட்டி நின்றான்:
‘அலைகில்லா நித்தியம்போல் ஆடும் இந்த
அண்டமெலாம் வெறும் மாயை என்றுதேறி
நிலையான உன்னை உள்ளே உணர்ந்தால் அங்கே
நீயுமில்லை, நானுமில்லை அறிவாய்’ என்றான்.


2. ‘வானத்தை வையகத்தை வந்து வாழ்வின்
வகைகோடி அவற்றைத் தேர்ந்தோன்றும் உன்றன்
ஞானத்தில் புடம்போட்டே எங்கும் சாம்பர்
நவையறிவும் கரைந்து விட்டால் உள்ளதொன்றே;
மோனத்தில் அழுந்தி அந்த ஆன்மபோதம்
முழுவதையும் கண்டு நின்றால் முக்தி அங்கே;
நான் அந்தம் மறையும்; தான் ஒன்றே தோன்றும்;
நாள் உலையும், கோள்உலையும், ஞானம் நிற்கும்.

3. ‘வேதமெலாம் விளம்புகின்ற வித்தை ஈதே;
வேருக்கி வேருக் கியந்திடாமல்,
போதமெலாம் அகமஸ்மி என்றே காண்பாய்;
பொன்றுமல் தத்வமஸி என்றே நிற்பாய்;
ஏதமில்லா நித்தியத்தில் இசைவ
தான்ம
ஏகத்தைத் தொடுவது
வேறில்லை’ என்றான்
ஆதிமுனி சங்கரனும் ஞானி, எம்மை
அருட்கரத்தால் எடுத்தணைத்த
பகவத்பாதன்.

4. அன்னவன்தன் தனிமரபில் வந்த தூயோன்;
அருளாளன், தவமுனிவன், உலகில் எங்கும்
துன்னி அடர் வினைப்புயலில், துடிக்கும் மாந்தர்
துணையாக நின்றுதுயர் துடைக்கும் யோகி;
முன்னிஎழும் ஆணவத்தை முறித்துத் தீமை
முற்றும்எரி பெருந்திறலோன்; காமகோடிப்
பொன்தவிசில் வீற்றிருந்து தயையால் இந்தப்
புவிக்கெல்லாம் உய்யுநெறி புகட்டி வாழ்வோன்.

5. இன்றவன்தன் அருட்பாதம் பரவப் பெற்றேன்;
இயம்பவரும் மறைவழியில் ஏறலுற்றேன்;
சென்றபல பலகோடி சன்மம் தம்மில்
சேர்த்த பழ வினைக்கனையும் சிதறப் பெற்றேன்;
என்றென்றோ எங்கெங்கோ முனிவர் பல்லோர்
எடுத்தெடுத்துத் தொடுத்த அறிவு எளிதில்
பெற்றேன்;
என்றுமுளபேரின்ப எல்லைஉற்றேன்;
எனைமறந்தேன் தன்மயத்தில்
பிறந்தேன் வாழ்ந்தேன்.

தெற்கே வீசிய கவித் தென்றல்



நவ பாரதத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்கள் எல்லாரையும் விடத் தாகூர் அதிகமான பெருமை பெற்று உலகளாவிய புகழ் படைத்தவராக விளங்குகிறார். அதற்குத் தக்க காரணங்கள் உண்டு. பாரதி, இக்பால் போன்ற மறுமலர்ச்சிக் கவிஞர்களும் இதே அளவு புகழுக்கும் பெருமைக்கும் தகுதி உடையவர்கள் தாம் என்றாலும் உலகம் பாரத நாட்டின் புதிய நல்ல முறைக் கவிகளில் தாகூர் ஒருவருக்கு மட்டுமே இந்தப் புகழையும், பெருமையையும் தந்திருக்கிறது. தாகூருடைய சமாதான இலட்சியங்களும், கவிதைகளும் இந்த ஒரு நூற்றாண்டுக்குள் உலகளாவிய பெருமை பெற்றிருக்கின்றன. தாகூரின் கவிதை அழகுகளும், உன்னத கட்டுப்பாடுகளும் உலகமெங்கும் வியாபித்திருப்பது பாரத நாட்டுக்குப் பெருமைதான்.

தாகூர் என்னும் கவித் தென்றல் தெற்கேயும் வீசியிருக்கிறது. கவியரசருடைய பிறந்த பொன்னாடாகிய வங்க பூமியோடு ஒத்த வாழ்க்கைச் சூழ்நிலைகளும், மொழியுணர்வும், பண்பாட்டுப் பெருமையும் வாய்ந்த தென்னாட்டிலும் அவர் சில முறை சுற்றுப் பயணங்கள் செய்திருக்கிறார். கவியரசர் தெற்கே சுற்றுப் பயணம் செய்த காலத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவங்களை ஸ்ரீமதி நிர்மல்குமாரி வங்க மொழியில் விவரித்து நூலாக எழுதியிருக்கிறார். அவற்றிலிருந்து சில பகுதிகளை இங்கே தொகுத்து அளிக்கிறோம்.

1. கப்பல் பயணம்

அந்தக் குதூகலமான நாட்களெல்லாம் என் மனத்தில் மனோரம்மியமான சித்திரங்களாக உறைந்திருக்கின்றன. தினேந்திர நாதர், ரவீந்திர நாதர் ஆகியோருடைய வாக்குவாதங்களைக் கேட்கும் பாக்கியம் பெற்றவர்களுடைய சிந்தனையில் அவற்றின் நினைவு விலைமதிப்பற்ற இரத்தினங்களைப் போலச் சுடரொளி வீசும். நான் சொல்ல ஆரம்பித்த கதை இதுதான்:—

1928-ம் ஆண்டு கோடைக் காலத்தில் ரவி பாபுவின் உடல் நலத்தை முன்னிட்டும், கவிஞரின் ஆரோக்கியத்தை நோக்கமாகக் கொண்டும், குடும்ப சகிதம் மேல் நாட்டுப் பயணம் செய்வது தீர்மானித்தனர். கப்பல் புறப்படுவதற்கு ஒரு மாதத் தவணை இருக்கும்பொழுதே பிரதிமா தேவி கணவருடன்—கோடைக்கானலுக்குப் புறப்பட்டுப் போனாள். கவியரசர் கல்கத்தாவிலிருந்து கப்பல் ஏறிச் சென்னை அல்லது கொழும்பு சேரும் பொழுது மகனும் மருமகளும் கோடைக்கானலிலிருந்து சென்னைக்கு வந்து அவரோடு சேர்ந்து கொள்வதாக ஏற்பாடாகியிருந்தது.

கப்பல் புறப்படும் நாளும் நெருங்கியது. கவிஞரின் பிரயாணத்துக்கான ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. புறப்படுவதற்கு முதல் நாள் கவிஞருடைய இல்லத்தில் ஸுரேன்கர், அரியம், ஆண்ட்ரூஸ் துரை முதலியோர் கூடியிருந்தனர். திரு அரியமும், ஆண்ட்ரூசும், கவிஞருடன் சேர்ந்து பிரயாணம் செய்வதற்கு இருந்தார்கள். ஸுரேன்கர் வழியனுப்புவதற்கு வந்திருந்தார்.

கப்பல் பயணத்துக்கான ஏற்பாடுகளை முடித்துவிட்டு வந்திருந்த துரை, 'இந்தக் கப்பலில் கவிஞருக்குத் தேவையான எல்லா வசதிகளும் இருக்கின்றன' — என்று உறுதி கூறினார். படுக்கையறையோடு இணைந்தாற்போல அமைந்திருக்கிற குளியலறை கவிஞருக்கு அவசியம். அவருடைய அன்றாடப் பழக்க வழக்கங்களை அறிந்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

கப்பல் பயணத்துக்கான சாமான்களை ஏற்றுவதற்கு முன்னால் போய்க் கவனித்தபோதுதான் கவிஞருக்குத் தேவையான வசதிகள் அங்கு இல்லையென்று தெரிந்தது. கப்பலைப் போய்ப் பார்த்து விட்டு வந்த ஸுரேன் பாபு, 'அதில் கவிஞர் பயணம் செய்ய இயலாது' — என்று உறுதியாகத் தெரிவித்தார். கவிஞர் இதை அறிந்தவுடன் தம்முடைய முடிவை மாற்றிக் கொண்டார். "இந்தக் கப்பலில் அரியமும், ஆண்ட்ரூசும் வேண்டுமானால் புறப்பட்டுப் போகட்டும். இரண்டு நாட்கள் பொறுத்து நான் இரயிலில் புறப்பட்டாலும் அவர்களுடனேயே சென்னையில் போய் ஒன்று சேர்ந்து விடுவேன்" என்று கவிஞர் கூறினார். கடைசியில் அவர் கூறியபடியே நடந்தது.

அடுத்த நாள் நாங்கள் அவரைக் காண்பதற்குச் சென்ற போது, "நீங்கள் இருவரும் என்னை மதராஸ் வரை கொண்டு போய் விடுங்கள். நெடுங்காலம் எனக்குத் துணையாய் வந்திருக்கிறீர்கள். இப்போதும் துணையாய் வாருங்கள்" என்றார். நாங்களும் அதற்கு

ஸ்ரீமதி நிர்மல் குமாரி மஹல்னவிஸ்

இணங்கினோம். எல்லாருமாக மதராஸ் மெயிலில் புறப்பட்டோம். சென்னையில் அவரைக் கப்பலேற்றி விட்ட பிறகு எங்களுடைய கோடை விடுமுறை நாட்களைத் தென் இந்தியாவில் கழிக்கலாம் என்று நாங்கள் எண்ணிக் கொண்டிருந்தோம்.

2. திட்டம் மாறியது

கோடைக்காலத்து ரயில்பயணம்மிகவும் வேதனையாயிருந்தது. சென்னை இரயிலடியில் முன்பே கப்பலில் வந்து சேர்ந்திருந்த அரியரும், ஆண்ட்ரூசும் எங்களை வரவேற்கக் காத்திருந்தனர். கவிஞரை அடையாறில் வந்து தங்கும்படி பெஸண்ட் அம்மையார் அழைத்திருப்பதாக அவர்கள் கூறவே நாங்கள் எல்லாரும் அடையாறில் தங்குவதற்குத் தீர்மானம் செய்தோம்.

அடையாறில் நாங்கள் தங்கியிருந்த விடுதி மிகப் பெரிய பங்களா. மேல் மாடியில் கவிஞருக்கும் எங்களுக்கும் அறைகள் விடப்பட்டிருந்தன. கீழே துரை தங்கினார். அரியரும் வேறு எங்கோ தங்கியிருந்ததாக நினைக்கிறேன். சென்னையில் விருந்துபசாரம் அபாரமாயிருந்தது. ஆனால் மின்சார விசிறி இல்லாமல் வெயிலின் கொடுமையான வெப்பத்தில் துவண்டு வாடிப் போனோம். சென்னைவாசிகளுக்கு மின்சார விசிறி என்றால் நிமோனியா ஜுரம் வந்து விடுமோ என்று ஒரு பயமும் உண்டாம். கவிஞர் படும் வேதனையைப் பார்த்து விட்டு மனம் பொறுக்காமல் துரை எங்கேயோ தேடி அலைந்து ஒரு மேஜை விசிறியைத் தேடிக் கொண்டு வந்திருந்தார்.

நாங்கள் தங்கியிருந்த வீட்டின் முன் வராந்தாவில் இருந்து பார்த்தால் எதிரே நீலக் கடல் பரந்து தெரியும். இப்படி எங்களுடைய நாட்கள் சென்னையில் கோடை வெப்பத்தில் கழிந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் ஆண்ட்ரூஸ் துரை மனத்துக்குக் குதூகலம் அளிக்கும் செய்தி ஒன்றைத் தெரிவித்தார்.



"கூனூரில் தம்மோடு சில நாட்கள் வந்து தங்கியிருக்க வேண்டும் என்று பீத்தாபுரம் மகாராஜா தந்தியடித்திருக்கிறார். அவருடைய அழைப்பைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார் அவர்.

அன்றே நாங்கள் கூனூருக்குப் புறப்பட எண்ணினோம். பத்து நாட்கள் கவிஞர் மலைவாசம் செய்து விட்டுத் திரும்புவதென்று ஏற்பாடு. பயணத்தைத் தொடங்கி விட்டோம். விடியற் காலையில் இரயில் நீலகிரி மலையின் அடிவாரத்தை அடைந்திருந்தது. மலை அடிவாரத்திலிருந்து மேலே கூனூர் போவதற்குக் கவிஞர் (பல்சக்கர) இரயிலை விடக் காரையே விரும்புவார் என்பது எனக்குத் தெரியும். முன்பே துரைக்கும், எனக்கும் இதைப் பற்றிப் பலமாக விவாதம் நடந்திருந்தது. 'மேட்டுப்பாளையம் வரை இரயில் டிக்கெட் வாங்குங்கள். அப்புறம் அங்கிருந்து கூனூருக்குக் காரில் போய்க் கொள்ளலாம்' என்று நான் சென்னையிலிருந்து புறப்படும் போதே சொல்லி யிருந்தேன். என் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளாமல் துரை கூனூர் வரை இரயில் டிக்கெட் வாங்கியிருந்தார்.

ஆனால் நான் சொல்லி யிருந்தபடியேதான் நடந்தது. மேட்டுப் பாளையத்தில் கவிஞர் இரயிலிலிருந்து இறங்கினவர்களோடு அங்கிருந்த வாடகைக் கார் ஒன்றில் போய் அமர்ந்து கொண்டு விட்டார். கவிஞருடன் நாங்களும், துரையும் காரிலேயே சென்றோம். அரியரும் பெட்டி படுக்கைகளோடு இரயிலில் வந்தார்.

கூனூர் தேவலோகம் போலிருந்தது. விடுதியின் முன்புறத்து அறையில் கவிஞருடனே மகாராஜா பேசிக் கொண்டிருந்தார்.

மகாராஜாவின் ஏற்பாட்டில் மிக முக்கியமானதொரு வசதியைத் தவிர மற்றெல்லா வசதிகளும் நிறைந்திருந்தன. கூனூரின் குளிருக்கு அத்தியாவசியத் தேவையான படுக்கைகளையும் கம்பளிகளையும் தான் எங்கும் காணவில்லை. எங்களிடம் கைவசம் இரண்டு கம்பளிகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. சென்னையிலிருந்தே போதுமான படுக்கைகளையும் கம்பளிகளையும் கொண்டு வந்திருக்கலாம். அப்படிக் கொண்டுவர வேண்டியது அநாவசியம் என்று துரை தடுத்திருந்தார். எங்களுக்கு ஏற்பட்ட ஒவ்வொரு தடையும் பாதி வேடிக்கையாகவும் பாதி விளையாட்டாகவும் ஆண்ட்ரூஸ் துரையினாலேயே ஏற்பட்டிருந்தன. ஆண்ட்ரூஸ் துரைக்குக் குழந்தை மனம். பின் விளைவுகளை யோசிக்காமல் எதையாவது செய்துவிடுவார். ஆனால் அதைப் பற்றி எவ்வளவு கேலி செய்தாலும்



சில விசேஷ

ஹோமியோபதி ஔஷதங்கள்

ALTOBEX

வைட்டமின் பி. காம்ப்ளெக்ஸ் சேர்ந்த
அல்பால்பா டானிக் - டானிக்குகளில் அரசன் :
4 அவுன்ஸ் பாட்டில் **ரூ. 3.50** 1 பவுண்டு **ரூ. 12.00**

"BAHOLA" ALFALFA TONIC

இரும்புச் சத்தும் சேர்ந்த **"பஹோலா" அல்பால்பா டானிக்.** அல்பால்பா டானிக்குகளில் உயர்ந்தது.
4 அவுன்ஸ் பாட்டில் **ரூ. 2.25** 1 பவுண்டு **ரூ. 7.50**

"BAHOLA" EASY DELIVERY TABLETS

சுகப்பிரசவ ஔஷதம். கருப்ப காலத்தில் உண்டு வர, பிரசவ காலத்தில் சிரமமில்லாத பேறு ஏற்படும்.
90 மாத்திரைகள் கொண்ட பாட்டில் **ரூ. 3.00**

"BAHOLA" HOUSE-HOLD REMEDIES

அன்றாடம் ஏற்படும் வியாதிகளுக்கு ஏற்ற 8 ஔஷதங்கள் கொண்ட செட். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டிய ஒரு குடும்ப டாக்டர்!

உபயோக விவரப் புத்தகத்துடன்

சிறிய செட் விலை **ரூ. 3.00** - பெரிய செட் விலை **ரூ. 5.00**

(விற்பனை வரி, பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம்)

○●○

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் - கும்பகோணம் (தென் இந்தியா)

G. P.

பொறுத்துக் கொள்ளக் கூடிய சுபாவமும் அவருக்கு இருந்தது.

கூனூர் கவியரசருக்கு மிகவும் பிடித்து விட்டது. அவருடைய உடல் நலமும் அங்கே தேறத் தொடங்கி விட்டது. மகாராஜா மட்டும் தம்முடைய உபசாரங்களைக் கொஞ்சம் குறைவாகச் செய்திருந்தாரானால் கவியரசருக்கு இன்னும் வசதியாகப் போயிருக்கும். ஏற்கெனவே கவியரசர் மிகவும் குறைந்த ஆகாரம்தான் உட்கொள்ளுவார். கூனூருக்கு வந்ததும் அந்த அளவு இன்னும் குறைந்து போய் விட்டது. மகாராஜா உணவு மேஜைமேல் குவித்திருந்த எண்ணற்ற பதார்த்தங்களைப் பார்த்துக் கவிஞருக்குச் சலித்துப் போயிற்று. பசியும் அடைத்துப் போயிற்று.

கூனூரின் காற்றும் குளுமையும் கவிஞருக்கு மிகவும் அனுகூலமாயிருந்தன. அவர் மனமும் அந்தச் சூழ்நிலையில் களிப்புற்றிருந்தது. பத்து நாட்கள் கழிந்திருந்தன. நாங்கள் கூனூரிலிருந்து திரும்புவதற்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினோம்.

ஆண்ட்ரூஸ் மதராஸிலிருந்து கப்பலைப் பற்றிய தகவலை வரவழைத்தார். இன்னும் மூன்று நான்கு நாட்களில் சென்னையிலிருந்து ஒரு பிரெஞ்சுக் கப்பல் புறப்படுவதற்கு இருப்பதாகத் தெரிந்தது. அதன் மூலம் கவிஞர் தம்முடைய மேல் நாட்டுப் பயணத்தைத் தொடங்கலாம் என்று ஏற்பாடாயிற்று. மேற்படி கப்பல் கொழும்பு வழியாகப் போவதாகவும் தெரிந்தது.

"நீங்களும் என்னோடு புறப்படுங்கள். கப்பலில் கொழும்பு வரை என்னுடன் வந்து இலங்கையில் பார்க்கத் தகுந்த இடங்களாகிய கண்டி, நுவரெலியா முதலிய ஊர்களில் உங்களுடைய மீதி விடுமுறை நாட்களைக் கழித்து விட்டுத் திரும்பலாம். கொழும்பிலிருந்து எனக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு அப்புறம் நீங்கள் கல்கத்தாவுக்குத் திரும்பி விடலாம்" என்று எங்களை வேண்டிக் கொண்டார் கவியரசர்.

3. யாத்திரை

அப்படியே செய்வதமென்று இட்டத்துடன் கூனூரிலிருந்து சென்னைக்கு வந்து கப்பல் ஏறினோம். கப்பலில் எங்களுக்காக இரு டீலக்ஸ் அறைகள் கிடைத்திருந்தன. அறைகளும் அவை அமைந்திருந்த விதமும் வசதியாயிருந்தன. ஆண்ட்ரூஸ் துரைமதராஸிலிருந்து கொழும்பு வரையில் இரயில் பயணம் செய்து அங்கிருந்து கவிஞருடன் கப்பலில் செல்வதாக ஏற்பாடாகி யிருந்தது. இதற்குள்ளே ரதிபாபுவின் உடல் நலம் மேலும் குன்றியிருந்ததனால் பிரதிமா தேவி அவரைக் கூட்டிக்கொண்டு தானாகவே மேலே நாட்டுக்குப் பயணமாகி யிருந்தாள். எனவே கவியரசருக்குத் துணையாக அரியமும் ஆண்ட்ரூசும் மட்டுமே போக வேண்டியதாகி யிருந்தது. நாங்கள் சென்னையிலிருந்து கொழும்புக்குப் பயணம் செய்த கப்பலின் பெயர் இப்போது என் நினைவில் இல்லை. இந்தக் கப்பலிலும் ஆண்ட்ரூஸ் துரையின் புத்திசாலித்தனம் தெரிந்தது. டீலக்ஸ் அறையில் குளிக்கும் பகுதிமட்டும் வசதியாக அமையவில்லை. கப்பல் புறப்படுவதற்கு ஐந்து நிமிஷத்துக்கு முன்புதான் இந்த விஷயமே தெரிய வந்தது.

எப்படியோ இருக்கிற வசதிகளை வைத்துக் கொண்டு கொழும்பு வரையில் போய்ச் சேருவதென்று உறுதி செய்துகொண்டு புறப்பட்டு விட்டோம் நாங்கள்.

சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பல் இரண்டு தினங்கள் கழித்துப் பாண்டிச் சேரியை அடைந்து நின்றது. பாண்டிச்சேரியில் தம்மை வந்து காணும்படி அரவிந்தர் கவிஞருக்கு அழைப்பு அனுப்பி யிருந்தார். இரண்டு ஆண்டுகளாக உலக நடவடிக்கைகளிலிருந்து விலகி ஏகாந்தமாயிருந்த அரவிந்தரின் அழைப்பை மிகவும் மதித்து அவரைக் காண வேண்டுமென்று கவியரசரும் ஆசைப்பட்டார். நாங்களும் பாண்டிச்சேரியில் அரவிந்தரைப் பார்ப்பதற்கு அவரோடு போயிருந்தோம். பலவீனமான நிலையிலிருந்த கவியரசரைக் கப்பலிலிருந்து இறக்குவதற்காக ஒரு பீப் பாய்க்குள் முக்காலியை இட்டு அவரையும் அவருக்குத் துணையாக என்னையும் அமர்த்திக் கிரேன் மூலம் கீழே இறக்கக் கப்பல்காரர்கள் செய்த முயற்சி இன்னும் எனக்கு வேடிக்கையாக நினைவு இருக்கிறது.

அரவிந்த ஆசிரமத்தின் மாடியில் கவிஞரும் அரவிந்தரும் சந்தித்துச் சுமார் ஒருமணி நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள். ஆசிரமவாசிகள் எல்லாரும் கவிஞரை வணங்கிவாயில் வரை வந்து வழியனுப்பினார்கள். சுமார் இருபது, முப்பது பேர்கள் எங்களோடு வழி அனுப்புவதற்காக ஆசிரம வாயில் வரை வந்திருந்தார்கள். ஆசிரமத்தார் தாய் என்று அழைக்கும் அம்மையும் வாயில் வரை வந்து வழியனுப்பினார். கவிஞர் கப்பலுக்குத் திரும்பி வந்ததும் எங்களிடம் அரவிந்தரைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறினார்.

"அரவிந்தரைப் பார்த்த பின்பு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், வியப்பாகவும் இருக்கிறது. ஒளிமிக்க முகம். அறிவு ஒளி பளபளக்கும் கண்கள். அவருக்கு ஏதோ ஓர் அரிய உண்மை மனத்தில் புலப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறாற்போன்ற பார்வை. அவருடைய சந்திப்பினால் 'எனக்குத் தெய்விகமான ஆனந்தம் கிடைத்திருக்கிறது."

அன்று அவர் கப்பலில் அரவிந்தரைப் பற்றி எழுதிய கவிதையைப் பிரபாஸி பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். பாண்டிச்சேரியிலிருந்து கொழும்பு ஒரே நாள் யாத்திரை தான். கப்பல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்த போது அந்நகரமே கவியரசரை வரவேற்கத் திரண்டு வந்திருப்பது தெரிந்தது. அக்



கூட்டத்தின் முன்னணியில் நின்றபடி ஆண்ட்ருஸ் துரையும் காத்துக் கொண்டிருந்தார். ஆண்ட்ரூஸைப் பார்த்தவுடன் கவிஞர் கப்பலில் இருந்தபடியே சிரித்து விட்டார்.

கொழும்பில் செல்வச்சீமானான டிஸில்வாவின் வீட்டில் கவிஞர் தங்கினார். தொடர்ந்து, பழைய பிரெஞ்சுக் கப்பலில் பயணம் செய்வதில்லை என்று முடிவு செய்து கொண்டு விட்டார் கவிஞர். கொழும்பில் இறங்கியதுமே அவருடைய உடல் நிலை மிகவும் மோசமாகியிருந்தது. கால் வீக்கமும் அதிகமாயிருந்தது.

டிஸில்வா தமக்கு மிகவும் பழக்கமுள்ள வைத்திய நிபுணர் ஒருவரை அழைத்து வந்தார். அந்த நிபுணர், "இம்மாதிரி உடல் நிலையோடு நீங்கள் நீண்ட தொலைவு பயணம் செய்வது நல்லதில்லை" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். நீண்ட ஆலோசனைக்குப் பின் கவியரசர் மேல்நாடு போவது நல்லதில்லை என்ற முடிவு ஏற்பட்டது.

நாங்களும், கவியரசரும் இரயில் மார்க்கமாய்த் தாய்நாட்டுக்கே திரும்பி விடத் தீர்மானித்தோம். நாங்கள் கொழும்பிலிருக்கும் பொழுது புத்த பௌர்ணமி விழா இலங்கையெங்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. டிஸில்வா பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். ஒவ்வோர் ஆண்டிலும் அந்த நல்ல நாளில் அநுராதபுரத்துக்குப் போய்ப் பவித்திரமான அரச மரத்தடியில் அர்ச்சனை செய்வது அவருடைய வழக்கமாம். இவ்வாண்டும் அவர் அந்தப் புனித நோக்கத்தோடு தம் காரிலேயே அநுராதபுரம் புறப்பட்டபோது எங்களையும் உடன்வருமாறு அழைத்தார். நாங்கள் மட்டும் அவரோடு புறப்பட்டு அநுராதபுரத்துக்குப் போய்விட்டு வந்தோம்.

திரும்பிக் கொழும்பு வந்து சேர்ந்தவுடன் அநுராதபுரத்தில் கண்ட அற்புதங்களையெல்லாம் பற்றி நான் கவியரசருக்கு விவரித்துச் சொன்னேன். அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். மேலும் சில இடங்களுக்கு நாங்கள் மட்டும் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டுவந்தோம்.

கொழும்பில் இருந்த போது கவியரசரின் உடல்நிலை முற்றிலும் நன்றாயில்லை. அதனால் அவர் வெளியார் அழைப்புக்கள் எதையும் ஏற்காமல் வீட்டிலேயே தனிமையாக இருந்து எழுதிக் கொண்டிருந்தார். உடல் நலம் குன்றிய நிலையிலும் எழுதுவதில் தெம்புடன் இருந்தார். அவர் எழுதுவதில் உற்சாகமாயிருப்பதைக் கண்டு நாங்களும் மகிழ்ந்தோம்.

இந்தச் சமயத்தில் கொழும்பு நகரத்துச் சீமான் ஒருவர் கவியரசருடனும் எங்களுடனும் வந்திருந்த அரியத்தைத் தம் மாப்பிள்ளையாக வரித்துக் கொள்ள விரும்பினர். ஆனால் அரியம் இதற்குப் பிடிகொடுக்கவே இல்லை. கவிஞர் மூலமாகத் தம்முடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கருதிய சீமான் ஒரு நாள் தம் பெண்ணுடன் தேடி வந்திருந்தார். சுமார் ஒரு லட்ச ரூபாய்க்குச் சீராகவும் பண்டமாகவும் செய்து அரியத்தைத் தம் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டு விடுவதாகக் கவியரசரிடம் கூறினர் அவர். பெண் மாநிறத்துக்கும் குறைந்த நிறமாய்ப் பூஞ்சையான தோற்றத்தோடு விளங்கினாள். ஓர் இலட்சத்துக்கும் அதிகமாகவே தம்மால் செய்ய முடியும் என்பதைக் காட்டிக் கொள்வது போலச் சீமான் நிறைய நகைகளால் பெண்ணை அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தார். அன்று அரியம் ஆளே தென்படாமல் எங்கோ தலைமறைவாகப் போய் விட்டார்.

இதற்குப் பின்பு கவியரசர் பலமுறை, "அரியம்! நீ இன்னும் ஒரு முறை நன்றாக யோசித்து விட்டுச் சொல். ஓர் இலட்சம் ரூபாய் என்பது இலேசான காரியம் இல்லை. இப்படி மறுப்பதால் உனக்கு என்ன பயன்? பெண்ணைப் பார்த்தால் பயப்படும்படியாக ஒன்றும் இல்லை. இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பே திருமணத்தை முடித்துக் கொண்டு விடு. உனக்குப் பிடிக்கவில்லையானாலும் பணத்தை மட்டும் என்னிடம் கொடுத்து விடு" என்று அரியத்தைக் கேலி செய்து கொண்டிருந்தார்.

"ஓர் இலட்ச ரூபாயையும் பெண்ணையும் கொண்டு இப்போது என்னை யாரும் தேடி வரவில்லையே என்று நான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன். பாதி இராச்சியத்தோடு இராஜ குமாரியும் கிடைப்பது போலக் கக

சுதந்திர நிதி


22-12-61 லிருந்து 7-1-62 வரை


எஸ். ராமசாமிப் பிள்ளை	50	00	பி. ஆர். மாதவன்	101	00
ராமநாத் அண்ட் கோ	51	00	து. ராஜகோபால்	1	00
வெர்னர் ஜிம்மர்மன்	23	25	என். ரங்கநாதன்	1000	00
ஜனுப் கே. பி. எஸ். ஏ. பக்பாலி	51	00	10-1-61 லிருந்து 21-12-61 -		
பி. எஸ். வெங்கடசுப்பையர்	250	00	வரை	16292	11
எம். கே. மாரியப்ப தேவர்	25	00			
எஸ். பொன்னுசாமி	20	00	ஆக மொத்தம்	17864	36

மாடும் மனையும் பண்ணையும் பாதுகாக்கும் அரசன் இல்லை. எல்லாம் தனதே எனக் கருதும் ஒரு கூட்டம் அரசு புரிகிறது. இது ஒழிந்து சுதந்திரமும் சுயராஜ்யமும் வேண்டும் என்று போர் புரியும் சுதந்திரக் கட்சிக்கு இந்தப் புனித மாதத்தில் பொருளுதவி செய்யுங்கள்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி C/O கல்கி காரியாலயம் சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.


அஜந்தா கொண்டை அழகுக்கும்
அடர்த்தியான நீண்ட கூந்தலுக்கும்
கேசவர்த்தினி
உபயோகியுங்கள்
கேசவர்த்தினி
கூந்தலைப் பாதுகாத்து
வளர்த்து
அழகுபடுத்துகிறது
தயாரிப்பவர்கள் கேசவர்த்தினி பிராடக்ட்ஸ், கோயமுத்தூர்-12


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
துணிகளை
வாங்கி
கைத்தறி வாரத்தில் கிடைக்கும்
ரூபாய்க்கு 10 ந.பை.
தள்ளுபடியைப் பயன்படுத்திக்கொண்டு
பொங்கல் பண்டிகையை
மகிழ்ச்சியுடன்
கொண்டாடுங்கள்
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
எழும்பூர், சென்னை-8
அருகிலுள்ள எங்கள் விற்பனை
நிலையத்திற்கு வருகை தாரீர்!

மான இலாபம் அல்லவா இது? ஓர் இலட்ச ரூபாய் இப்போது எனக்குக் கிடைத்தால் 'விசுவபாரதி' யை உருவாக்குவதற்கு எவ்வளவு வசதியாக இருக்கும் தெரியுமா?'' — என்றும் அரியத்திடம் வேடிக்கையாகப் பேசினார் கவியரசர்.

கடைசி கடைசியாக நாங்கள் தாய் நாடு திரும்ப வேண்டிய வேளையும் நெருங்கியது. கொழும்பிலிருந்து இரயிலில் புறப்பட்டு வழியில் மதுரையில் இரண்டு நாட்கள் தங்கி இளைப்பாறத் திட்டமிட்டோம். ஒரே மூச்சில் முழுப் பிரயாணத்தையும் செய்வதற்குக் கவியரசரின் உடல் நிலை சரியில்லை. மதுரையில் நாங்கள் அப்போது பிரசித்தமாயிருந்த பாரிஸ்டர் கோபால மேனனின் வீட்டிலே தங்கினோம். அவர் திரு. கே. பி. எஸ். மேனனின் தமையனார். பாரிஸ்டர் குடும்ப சகிதம் வெளியூர் போயிருந்ததனால் அவருடைய இளைய மகனும் வேலையாட்களுமே வீட்டில் அப்போது இருந்தனர். ஆனாலும் அவர் முன்பே தமக்கு அனுப்பியிருந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு கவியரசர் அங்கே தங்கி விட்டார்.

மதுரையில் சாந்திநிகேதனத்தைச் சேர்ந்த பழைய மாணவர் பஸிம் ராவ் இருந்தார். அவரும் அவருடைய மனைவியும் வந்து கவியரசரைக் கண்டு மகிழ்ந்தனர். மற்றும் பலர் அவரைக் காண வந்தனர். உடல் நலம் குன்றிய நிலையிலும் அவர் எல்லாருடனும் கலகலப்பாகப் பேசினார். மதுரைப் பாடகர் ஒருவர் வந்து வெகுநேரம் பாடிக் கொண்டிருந்தார். மதுரையிலிருந்து மீண்டும் எங்கள் பயணம் சென்னைக்குத் தொடர்ந்தது.

பயணத்தின் போது திருச்சி ஜங்ஷனில் உணவு வந்தது. பளபளவென்ற டிபன் அடுக்குப் பாத்திரங்களில் உணவும் பட்டுப்போன்ற இளம் வாழை இலைகளும் வந்தன. கவிஞருக்கு அரிசிச் சாப்பாட்டில் மோகமில்லை என்றாலும் கூட நாங்கள் ருசியாய் ஆவி பறக்கும் சோற்றில் வெண்ணெய் நிறைய நெய் விட்டுப் பருப்புக் கூட்டுக் கறி அப்பளம் பச்சடி வறுவல் ஊறுகாயுடன் உண்ணுவதைப் பார்த்ததும் தான் மாத்திரம் ஸ்பென்சர் உணவு சாப்பிட வேண்டியதாயிற்றே என்று மிகவும் பச்சாத்தாபப்பட்டார் அவர்.

மறுநாள் அதிகாலையில் இரயில் மதராஸை அடைந்தது. அப்பொழுது ஜூன் மாதத்தின் நடுப் பகுதி நடந்து கொண்டிருந்தது. மழை மூட்டத்துடன் வெப்பம் ஆவி போலிருந்தது. கவிஞர் அன்றிரவே கல்கத்தாவுக்குக் கிளம்ப விரும்பினார். ஒரு நாளாவது சென்னையில் இளைப்பாறிச் செல்ல வேண்டும் என்பதையும் மறுத்துக் கவிஞர் அன்றே போக வேண்டும் என்று பிடிவாதமாயிருந்தார். ஆனால் தெய்வ சங்கல்பத்தால் அன்றைய இரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் ஓர் இடம் கூடக் கிடைக்கவில்லை. சென்னையில் ஒரு நாள் தங்கி விடும்படியாகவே நேர்ந்தது.

மறு நாள் இரயில் புறப்பட இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்து நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்காரரான ஸ்ரீ கண்டத் இடவசதி ஏற்பாடு செய்தார். அரியம் மதராஸிலேயே தங்கி விடவும் நான் மாத்திரம் கவிஞருக்குத் துணை செல்லவும் ஏற்பாடு ஆகியிருந்தது. ஆனால் அதற்குள் பெங்களூர் சென்று வர எண்ணித் திடீரென்று திட்டத்தை அதற்கு ஏற்ப மாற்றியிருந்தார் கவிஞர்.

காலை ஐந்து மணிக்குப் பெங்களூர் சேர்ந்தோம். டாக்டர் ஸீல் இரயிலடிக்கு எங்களை வரவேற்க வந்திருந்தார். பெங்களூரில் பிரஜேந்திரநாதரைக் கண்டு புலவர் மிகவும் களிப்புற்றார். இருவரும் பேசி மகிழ்ந்தார்கள். பெங்களூரில் இருக்கும் போது கவிஞர் ஏற்கெனவே தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த 'யோகாயோக்', 'சேஷேர் கவிதா' இரண்டுமே ஒன்றாய் முன்னேறி வளர்ந்தன. வேறு வேறு போக்கும், அமைப்பும் கொண்ட இவ்விரண்டு கதைகளையும் அவர் ஒரே சமயத்தில் எப்படி மாற்றி மாற்றி எழுதிக் கொண்டிருந்தார் என்பது எங்களுக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது. ஒரு நாள் நான் இவற்றைப் பற்றி அடக்க முடியாத ஆவலோடு கவிஞரிடமே கேட்டு விட்டேன்.

''எப்படி நீங்கள் இவ்விரண்டையும் ஒன்றாய் எழுதிக் கொண்டு போகிறீர்கள்? கதைகளின் போக்கு முற்றிலும் வேறு பட்டவை ஆயிற்றே. உங்களுக்கு இதில் கஷ்டம் ஒன்றுமில்லையா?''

கவிஞர் அழகாகப் பதில் கூறினார் இதற்கு.

''இதில் கஷ்டம் என்ன? நானெல்லாம் கதாபாத்திரங்களைப் பார்க்கிறேன். பேசுகிறேன். குமுதினியுடன் பேசும்போது விப்ரதாஸ், மதுசூதன் இவர்கள் வருகிறார்கள். அவர்களுடைய பேச்சும், கதையும், என் முயற்சியின்றியே பேனா வழியாய்த் தானாகவே வெளிப்படுகின்றன. பிறகு அமிட் ராயுடன் பேசும் போது லிலி, கேட்டி முதலிய நவநாகரிகப் பெண்களைக் கொண்ட ஒரு நவ உலகம் என் முன் உருவாகிறது. இவர்களுள்

ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதரவர்களின் நவக்கிரகக் கீர்த்தனைகளை அக்ஷர சுத்தமாகப் பயின்று, சம்பிரதாயம் வழுவாது மெட்டுக்களைக் கேட்டறிந்து கானம் செய்யக்கூடியவர்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், இளையாத்தங்குடி முகாம், ராமநாதபுரம் மாவட்டம் என்ற விலாசத்துக்கு எழுதி இந்த நவக்கிரகக் கீர்த்தனங்களின் அச்சுப் பிரதியைப் பெறலாம்.

* * *

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞைக்கு இணங்க ஆடுதுறைக்கு அருகிலுள்ள சூரியநாராயணர் கோயில் என்ற நவக்கிரக க்ஷேத்திரத்தில் அஷ்டக் கிரகதோஷ பரிகாரமாக நவக்கிரக ஹோமம் நடைபெற்று வருகிறது. 24-12-61 அன்று தொடங்கிய இந்த ஹோமம் 6-2-62 அன்று பூர்த்திபெறும்.

லாவண்யாவும் அவன் சித்தியும்தான் வித்தியாசமானவர்கள். லாவண்யாவிடம் எனக்கு மிகவும் அன்பு உண்டு'' என்றார்.

கவிஞரின் படைப்புகளைப் பற்றி அவரே கூறிக் கேட்கும்போது சுவாரஸ்யமாக இருக்கும். அவர் மௌனமாய் உட்கார்ந்திருக்கும் போது இந்தக் கதாபாத்திரங்கள் எல்லாரும் அவருடைய மனத்தில் நடமாடுகிறார்கள் என்றே தோன்றும். அவருடைய முகபாவமே இதைப் புலப்படுத்துவதாய் இருக்கும்.

பெங்களூரின் குளிர்ந்த சூழ்நிலையில் புலவரின் உடம்பு தேறத் தொடங்கியது. அவ் வீட்டில் எங்களைத் தவிர வேறு எவரும் இல்லாதது சௌகரியமாக இருந்தது. வெளி உலகத்தைப் பற்றிய நினைப்பே இல்லாமல் கவிஞர் எழுதுவதில் தம்மை மறந்திருந்தார்.

பெங்களூரில் ஒரு கடையில் நான் எனக்காக ஒரு புடவைக்கு ஆர்டர் கொடுத்திருப்பதை அறிந்த கவியரசர் தம்முடைய மகள் மீரா தேவிக்கும் ஒரு புடவை தரி போடுவதற்கு ஆர்டர் கொடுக்குமாறு என்னிடம் ஆர்வத்தோடு கூறினார்.

பெங்களூர் வாசம் அவருக்கு மிகவும் பிடித்திருந்ததனால் அங்கிருந்து புறப்படுவதற்கு, அவர் சிறிதும் அவசரப்படவே இல்லை. நிம்மதியாய்த் தங்கி நிறைய எழுதினார். கொழும்பிலும் அவர் நிறையத்தான் எழுதினார். ஆனால் பெங்களூரில் கொழும்பிலிருந்ததைக் காட்டிலும் உற்சாகமாகவும் ஆவலுடனும் அதிகமாக எழுதினார். பெங்களூரில் ஏறக்குறையப் பன்னிரண்டு நாட்கள் தங்கினோம். அங்கிருந்து புறப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னால் இரவு டாக்டர் ஷீலிடம், ''ஏறத்தாழக் கதை முடிந்து விட்டது. நாளை உங்களுக்கு வாசித்துக் காண்பிக்கிறேன்'' என்று சொன்னார். ஒவ்வொரு நாளும் இரவு பன்னிரண்டு மணி வரை பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் படுக்கப் போவார் கவிஞர்.

''லாவண்யாவின் கதை கொஞ்சம் பாக்கியிருக்கிறது. அதை முடிக்கும் வரையில் என் மூளையில் உளைச்சலாயிருக்கும். எனக்குத் தூக்கமே வராது. அதை முடித்து விட்டேனானால் அப்புறம் நிம்மதியாகத் தூக்கம் வரும்'' என்று கவிஞர் என்னிடம் அன்றிரவு கூறினார். நான் பேசாமல் போய்ப் படுத்துத் தூங்கி விட்டேன்.

இரவு சுமார் ஒரு மணிக்கு மறுபடி நான் விழித்துப் பார்த்த போதும் அவருடைய அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவருக்காக விரித்திருந்த படுக்கையும் மடிப்புக் கலையாமல் அப்படியே இருந்தது. போய்ப் பார்த்தேன். கவிஞர் குனிந்தபடி ஆவேசமாக எழுதிக் கொண்டிருந்தார். மறுபடியும் மூன்று மணிக்கு ஓசைப்படாமல் எழுந்து போய் அவருடைய நாற்காலியின் பின்னால் நின்று கொண்டு அவர் அப்போது எந்தப் பகுதியை எழுதிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தேன். எழுதிக் கொண்டிருந்த ஆவேசத்தில் அவர் என்னைக் கவனிக்கவே இல்லை. அப்பொழுது 'சேஷேர் கவிதா'வின் கடைசிப் பாகத்துக்காக, கவிதை ஒன்று எழுதிக் கொண்டிருந்தார் அவர். ''நண்பனே! போய் வருகிறேன்'' என்று முடியும் அப் பாடலின் உருக்கமான கருத்திலும் சொற்களின் அழகிலும் நான் என்னை இழந்து நின்றேன். அப்போது அவரே முணுமுணுக்கிற குரலில் தமக்குத் தாமே அப்பாடலைச் சொல்லிப் பார்த்துக் கொள்ளத் தொடங்கினார். கவிஞரின் வாயிலேயே அந்தச் சொற்கள் பிறந்து ஒலித்தபோது எனக்கு அதைக் கேட்டு மெய் சிலிர்த்தது. நான் மகிழ்ச்சிக் கூவிட்டு வந்து நிற்பதை அறியச் செய்து விடுவேனோ என்று பயமாயிருந்தது.

அப்போது காலை நான்கு மணி. சில நாழிகைகளில் பொழுது விடிவதற்கு இருந்தது. ஓர் இரவு முழுவதும் கண் விழித்திருந்த சோர்வு சிறிதும் தெரியாமல் மறுநாள் காலையில் உற்சாகமாகவே இருந்தார் கவிஞர்.

''இந்த மாதிரி வேளைகளில் எழுதாமலிருந்தால் தான் என் உடம்பு கெடும்'' என்று என்னிடம் சிரித்துக் கொண்டே கூறினார் அவர். அன்று சாயங்காலம் பிரஜேந்திர நாதருக்கு அந்தக் கதையை வாசித்துக் காண்பித்தார் கவிஞர். பிரஜேந்திரர் ஆவலோடு கேட்டுப் பாராட்டினார். அவர் படித்து முடிக்கிற வரை நாங்கள் பேச்சற்ற சித்திரங்களாய் அமர்ந்து இருந்தோம். ''இந்த வயதிலும் இவரால் இப்படி அற்புத இலக்கியங்களைப் படைக்க முடிகிறதே! மூப்பும், பலவீனமும் இவரைப் பாதிக்கவில்லையே?'' என்று சொல்லிச் சொல்லி வியந்தார் டாக்டர் ஷீல். அதைக் கேட்டுக் கொண்டே எதிரே உட்கார்ந்திருந்த கவிஞர் ஒன்றும் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார். அவருடைய முகத்தில் மிகவும் ஆழமான அமைதியும் உள்ளடங்கிய உவகையும் தெரிந்தன.

அட்டைப்பட விளக்கம்

நந்தவனத்திலே மலர்களோடும் பூங்கொடிகளோடும் காட்சி தருகிற அந்த இளம் நங்கையிடம் செம்மலர்கள் ஏதோ இரகசியம் பேசுகின்றன! பூங்கொடியோடு பூங்கொடியாக நிற்கும் அந்தப் பெண்ணின் மலர் முகத்திலே உணர்ச்சிக் கனவுகளும் வாழ்வுக் கற்பனைகளும் தவழ்கின்றன! அந்த மலர்களின் இங்கிதப் பேச்சையும், அந்த அன்பழகியின் கனவுகளையும் பின்னணியில் நின்று மௌனமாகப் பார்த்து ரசிக்கும் அந்த ஓவிய இளைஞன் யார்? இவர்களுடைய வாழ்வையும் காதலையும் சித்திரிக்கிறது, இவ்விதழில் ஆரம்பமாகியுள்ள புதிய தொடர்கதை **நந்தவனம்**.

நமது ஓவியர் 'வினு' அவர்களின் வர்ணக் கனவிலே இந்த இளம் காதலர்களின் இன்பக் கனவுகள் உயிர் ஓவியமாக மலர்கின்றன!

சுகந்தவல்லி

ஸ்ரீ வேணுகோபாலன்



ஏதோ ஓர் இடத்தில் வண்டி நின்றிருக்கிறது. ஓசை முறிந்த பின் தோன்றியபடியோர் அமைதி அவனை எழுப்பி விட்டது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். தூரத்தில் விளக்குடன் கார்டு நடந்து கொண்டிருந்தார். லக்கேஜ் பெட்டியிலிருந்து நார்க் கூடைகளை இரண்டு சிப்பந்திகள் தரையில் உருட்டிக் கொண்டிருந்தனர்.

விருத்தாசலமா? விழுப்புரமா?

விளக்குகளெல்லாம் தூங்குவதுபோல் அழுது வடிந்து கொண்டிருந்தன. வெகு தூரத்தில் ரயில் நிலையப் பெயர்ப் பலகையின் எழுத்துக்கள் மங்கிய ஒளியில் ஏதோ கிறுக்கல் போல் காணப்பட்டன. எல்லாம் கனவு உலகந்தான்!

தலையை உள்ளிழுத்தான். மனமும் உள்ளிழுத்துக் கொண்டது. கண்களை மூடினான்; விளக்கிலிருந்து தெறிக்கும் மெலிவான நீலவொளி அவன் இமைகள் மேல் படிந்தன.

ஊருக்குப் போகிறோம்!

பத்து வருடங்களாகி விட்டன. ஊர் எப்படி இருக்குமோ? எப்படி வரவேற்குமோ? சொந்தம் கொண்டாடக் கூடியவை இரண்டு ஊர்கள்: ஒன்று தேச மாணிக்கம்! தந்தை பிறந்த ஊர். இரண்டாவது மேழந்தம்! தாய் பிறந்த ஊர்! முதலில் தேச மாணிக்கத்துக்குத்தான் போக வேண்டும்!

வண்டி ஒரு தரம் தன்னை உலுக்கிக்கொண்டது. எஞ்சின் மாட்டி விட்டார்களோ?



பாதாளத்திலிருந்து ஒரு கீச்சுக் குரல் வருகிறது. எஞ்சின் ஊதலாகத்தான் இருக்க வேண்டும். பெட்டிகள் தண்டவாளத்தில் தாளமிடத் தொடங்கி விட்டன.

மீண்டும் இரைதல் ஆரம்பமாகி விட்டது. ரயில் நிலையத்துக்கு அப்பால் பரந்துள்ள இருளில், தன் நீண்ட வாலை இழுத்து மறைத்துக் கொண்டு செல்லும் ராட்சத மிருகமாய் எஞ்சின் விரைந்தோடியது.

வயது முப்பதா? முப்பதைக் கூடக் கடந்து விட்டாற்போலிருக்கிறது எப்படியும் இந்த வருடம் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதுதான் நாட்கள் ஓடி விடும்! நேற்றைக்கு ஊரை விட்டாற் போலிருக்கிறது. பத்து ஆண்டுகள் ஆகி விட்டன......... தேறா....

குளிர் காற்று ஊசி போல் உள் நுழைந்து குத்துகிறது. ஜன்னலைச் சாத்த நினைவுதான். ஆனால் எழுவதற்குத்தான் மனமில்லை. இந்த அரைத் தூக்க நிலை கலைந்து விடுமென்று பயம்! காதுகளைச் சுற்றித் துண்டை இழுத்து விட்டான். சுருட்டிய கைகளும் கால்களுமே ஒரு வெது வெதுப்பை அளித்தன.


யாரைக் கல்யாணம் செய்து கொள்வது? வரப்போகிற 'அவள்' யார்? யாராயிருந்தால் என்ன? அவள் உருவை நினைத்துக் கற்பனை பண்ணிய நாட்களெல்லாம் மறைந்தோடி விட்டன. இப்போது......

யாரோ ஒருத்தி வரவேண்டும்! அவ்வளவுதான்! முன்பு அவள் இன்ன உருவென்று வடித்த இலக்கணங்கள் ஒழிந்து விட்டன. வாலிபத்தின் கனவுகள்தான் என்ன? அவள் எப்படி நடக்க வேண்டும், எப்படிப் பேச வேண்டும்; எப்படிச் சிரிக்க வேண்டும்? இவையெல்லாவற்றுக்கு மல்லவா ஒரு நாளில் மனம் இலக்கணம் சமைத்திருந்தது. இப்போது நினைத்தால் வேடிக்கையாக இல்லை? அவன் நினைத்த அந்தக் கற்பனைப் பெண் வரவா போகிறாள்?

ஒரே ஒரு விஷயம். வரப்போகிறவளது வயதைப் பற்றி அவனுக்குத் திட்டவட்டமான நினைவு உண்டு! அவளுக்கும் அவனுக்கும் ஐந்து வயதுக்கு மேல் வித்தியாச மிருக்கலாகாது! அப்படி யிருந்தால்தான் தன் மனவளர்ச்சியோடு பிணைத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும்! இந்த விஷயத்தில் ஒரே தீர்மானமாக இருக்க வேண்டும்! ஆமாம்!

பாலமா! அதற்கும் கோபமா? ஏன் இப்படி ஓலமிடுகிறது? வண்டியின் வேகம் அதிகம்! தன் அமைதியைக் கெடுத்ததற்காகக் காற்று வெளியே உறுமுகிறது. யாரோ எதிர் வரிசையில் கூஜாவைத் திறக்கும் சத்தம்! வளையல்கள் சரிந்து விழும் கலகலப்பு!

ஊதல் கேட்கிறது. வண்டி விரைகிறது. வாழ்வின் பெரிய பயணத்தில் ஒரு சிறிய



வல்லி தோன்றிவிட்டாள். அவ்வளவு தான்! மற்றெல்லா நினைவுகளும் சட்டென்று அறுந்து அந்தரத்தில் தொங்கின.

ஊரைப் பிரிந்தபோது அவளுக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயது இருக்குமோ? இப்போது அவள் எப்படி வளர்ந்திருப்பாள்!

அவளுக்குக் கண்களில் நீலம் வண்டலாய்ப் படிந்திருக்கும். முகம் முழுதும் நிலவு பூத்திருக்கும்.

இரவுகளில் அவள் ''கரண்டா மூடி'' விளையாடுவாள். 'சுந்தரி இங்கே வா!'' என்று எப்போதாவது அவன் அழைப்பான். தாச்சியைத் தொட்டு அவள் குதித்து வருவாள்

''எதுக்குடா, கோபு. கூப்பிட்டே?''

பயணம் நடக்கிறது. அவனுள் நினைவும் கனவும் உறவு கலந்தன.

எவ்வளவு நாழிகையோ? கண்களின் இமைகள் பிரியவில்லை; ஆனால் காதுகள் விழித்துவிட்டன. வெளியே ஒரே இரைச்சல்; வண்டி எங்கே நிற்கிறது?

ஓகோ! விடிந்து விட்டது போலிருக்கிறது. மெதுவாகக் கண்களை விரித்துப் பார்த்தான். மதுரை சந்திப்புத்தான். வண்டி சிறிது நேரம் நின்றது. மீண்டும் புறப்பட்டு விட்டது.

எழுந்து சன்னலோரம் சாய்ந்து கொண்டான். இப்போது விழிப்பிலே ஓர் அரைத் தூக்க நிலை.

திருநெல்வேலிவந்ததும்பஸ்பிடித்து நேராகத் தேசமாணிக்கம் போக வேண்டியது தானே? ஆமாம் அப்படித்தான் செய்ய வேண்டும். வந்த காரியம் தெரிந்தால் அங்கே நிறைய வரன்கள் வந்து குவியும். ஊரில் நிலபுலன்கள் அதிகம் வைத்திருக்கும் பெரிய புள்ளிகளில் அவனும் ஒருவன்!

சேறத்தும் போனால் என்ன? சொன்னதுபோல் அங்கே போகலாமே! சொந்த வீடு அங்கே என்ன கதியில் இருக்கிறதோ? நினைவில், ஊரில் உள்ள ஒவ்வொருவராக வந்து மறைந்தனர். வரதன், சோமா நரசிம்மன் எல்லாருமே தோன்றி மறைந்தார்கள். பிறகு பள்ளிக்கூட வாத்தியார் ராஜு சார் தோன்றினார். உடனே அவர் பெண் சுகந்த

அவனுக்கு அப்போது இருபத்திரண்டு வய தாவது இருக்கும். எனினும் அவள் அவனை 'டா'ப் போட்டுத்தான் அழைப்பாள்.

ஏதாவது காரணத்தை நினைக்க முயல் வான். அதற்குள், நீலம் பொலிந்திருந்த அவள் கண்களில் கழலும் அபூர்வ ஒளி ஒன்றின் மீது அவன் பார்வை லயித்துக் கேட்க வேண்டியதை மறந்து விடுவான்.

''போடா, கோபு! உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான்...அட, ஜானு! நான் பண்ட்டு!'' கூவியபடியே, பாவாடை சர சரக்க அவள் ஓடிவிடுவாள்.

இப்போது அவள் வளர்ந்திருப்பாள். நீண்ட குழல் அலையாய்ச் சரிந்து, கழுத்திலிருந்து கொழுத்த பின்னலாய்த் தொங்கிக் கொண் டிருக்கும்! அவள் கண்களில் கனவுகள் அலை களாய்ச் சலனமிட்டுக் கொண்டிருக்கும். வாசற் படிகளில் நின்று மாலை வேளைகளில் தெருவை நோக்கிக் கொண்டிருப்பாள். 'கரண்டா மூடி' யாராவது விளையாடினால் அவள் மனம் துள்ளி ஓடிக் கொண்டிருக்கும். ஒருவேளை அவளே துள்ளி விளையாடினாலும் ஆடுவாளோ?

அல்லது கல்யாணமாகி யிருந்தால்...

ரயிலுக்கு இப்போது அசுர பலம் வந்துவிட் டது. என்ன வேகமாய்ப் போகிறது? ஏதேச்சையாகக் கிடந்த உடம்பை நிமிர்த்தி யெடுத்து உட்கார வைத்தான்.

கண்களை மூடிக் கொண்டான். பால்கனி யும், நீண்ட கைப்பிடிக் கவருமுள்ள விசால மான அவள் வீடு கண்களுக்குப் புலனாகிறது. சன்னல் வழியே பார்த்தால் உள்ளே ஹரிக் கேன் விளக்கு புகை கப்பி எரிந்து கொண் டிருப்பது தெரிகிறது.

அவன் பரீட்சைக்குப் படித்துக் கொண் டிருக்கிறான் இன்னும் ஒரு வாரந்தான். அத்துடன் வாழ்க்கையில் படிப்புக்கே முழுக் குப் போட்டு விடலாம்.

வெளியே மண்ணின் துணியை விரித்தாற் போல் எட்டாம் பிறைமதி நிலவை விரித் திருந்தது. மெல்லிய இளங் காற்றில் எங் கிருந்தோ பூ வாசனை வருவது போலிருந்தது. அவனுக்குப் படிப்பு ஓடவில்லை. பால்கனியில் வந்து நின்று கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். வான மத்தியில் இப்போது பிறை நிலா வெண் மேகத்தின் பிஞ்சுத் துணுக்கு ஒன்றுள் சிக்கிக் கொண்டிருந்தது.

மனத்தில் ஏதோ நிரம்பி வழிவது போல் தோன்றியது. உள்ளே திரும்பிப் பார்த்தான். கண்கள் அப்படியே மலர்ந்து நின்றன. மாடியைத் தொட்டு நிற்கும் படிக் கட்டில், இருட்டுக் குழம்பில் அந்த உருவத் தைத் தெரிந்து கொள்ளப் பல கணங்கள் ஆயின. உற்றுப் பார்க்கப் பார்க்க, இருள் தன் சக்தியை இழந்து விட, அந்த முகம் நன்கு தெரிந்தது. உள் உயிர் வரை ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது!

''சுகந்தியா?''

அவள் சிரித்தாள். தென்றல் போல் பெயர்ந்து வந்து ஹரிக்கேன் விளக்கு முன்னால் நின்றாள். இருளின் கருவிலிருந்து அப்போது தான் உரித்து எடுத்த ஒளிக் கட்டியோ எனத் திகழ்ந்தாள்!

''தெரியலையா, கோபு?''

''நீ தாவணி உடுத்தி நான் பார்த்ததே யில்லே; இப்போதுதான் பார்க்கிறேன். ஒரு பெரிய பெண் போல் இருக்கிறாய்!''

அவள் சிரித்தாள் படிப்பு மும்முரத்தில் அவளைக் கவனியாதபடி இரு மாதங்கள் அவ ளைப் பொறுத்தவரை ஏதோ மாயம் நிகழ்த்திய காலம் என அவனுக்குத் தோன்றியது.

''பரீட்சை முடிந்த பிறகு ஊருக்குப் போகப் போகிறாயா, கோபு?''

''ஆமாம்!''

''உன் கேரம்போர்டை என்னிடம் கொடுத்து விட்டுப் போவாயா?''

''ஓ, தருகிறேனே!''

அவள் அப்படியே சற்று நின்றிருந்தாள்.

''சுகந்தி!'' என்றான் அவன்.

''என்ன, கோபு?''

''நீ இனிமேல் இங்கே தனியாக வரக் கூடாது!''

அவள் அவனை ஒரு கணம் பார்த்தாள். பிறகு திரும்பினாள். படிக்கட்டில் இறங்கி இருளுள் மறைய ஆரம்பித்தாள்.

பால்கனிக்கு ஓடிச் சென்று வெளியே நோக் கினான். மாடி பன்னீர்ச் சொம்புகளின் இடுக்கு வழியே புகுந்து வீழ்ந்த ஒளி அவள் கன்னத்தில் இருதயத்தின் உருக்கொண்ட, நிழல் துணுக்குகளாக மாறி மாறி விழுந்து கொண்டிருந்தது.

அதுதானே அவளைக் கடைசியாகப் பார்த் தது....?

வண்டிகளுள் பரபரப்பு ஏற்பட்டு விட்டது. தண்டவாளங்களில் மாறி மாறிச் செல்லும் வண்டிச் சக்கரங்கள் 'கொலுக் கொலுக்' கென இருமிக் கொண்டன. ஊர் வந்து விட் டதா? இரும்பை அரைத்துத் தியும் நெடியைக் கிளப்பியவாறு வண்டி நின்றுவிட்டது.

பெட்டி படுக்கைகளுடன் வெளியே வந் தான். ஜட்காவில் ஏறிக் கொண்டான்.

''எங்கே போவணும் சாமி?''

'கீழத்தெருவுக்கு விடு!''

அவளையா பார்க்கப் போகிறோம்? அதற் காகவா இந்தப் பிரயாணத்தை மேற்கொண் டோம்? இது வேடிக்கையாக இல்லே?

அவளைப் பார்க்கப் போவதில் ஒரு பொரு ளும் கிடையாது. ஊரில் உள்ள கோபுரம், அல்லிக் குளம், வருணி ஆறு இவைகளை வெகு நாட்கள் கழித்துக் காண விரும்புவது போல் அவளையும் காண விரும்பினான். ஊருக்கு அழகு தந்தவற்றுள் அவளும் ஒருத்தி. அவ் வளவுதான்! அதற்கு மேல் அவனது இந்தச் செய்கைக்குப் பொருள் கிடையாது.

வண்டி பாளையங்காலைத் தாண்டிக் கொண் டிருந்தது. பழைய நினைவுகள் மனத்தில் குமுறி எழுந்து கொண்டிருந்தன.

''அம்மா வீடு எங்கிருக்கு?''

''இன்னும் கொஞ்சம் தூரம்!''

சிறுமிகள் கண்ணைக் கட்டி விளையாடும் இந்த 'அம்மா வீடு' விளையாட்டு நினைவுக்கு வந்தது. சுகந்திக்குத்தான் என்ன அழகிய குரல்? இப்போது அவள் குரல் எப்படி மாறி யிருக்குமோ?

வண்டி போய் நின்றதும், வெளியே அழிக் கம்பியைப் பற்றிக் கொண்டு எட்டிப் பார்த் தாலும் பார்ப்பாள். அப்போது அவள் உதடுகள் நெளிந்து புன்னகை உருவானாலும் ஆகுமல்லவா?

அல்லது பார்த்தாலும் சிரிக்காமல் உள்ளே ஓடி விடுவாளோ?

'அவளைப் பற்றி ஏன் நினைக்கிறாய்?' என்று கேட்டது அவன் உள்மனம்.

'எல்லாம் தெரிந்த தோஷம்தான்! மற்றப்படி அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? என்னைப் பொறுத்த வரையில் அவள் சிறுமி! அவளையோ, அவள் நடத்தும் வாழ்வையோ நேரில் கண்டு நிறைவு அடையவேண்டும் என்பதைத் தவிர, அவளை நினைப்பதில் வேறு ஓர் அர்த்தமும் கிடையாது' என்று அவனது மற்றொரு மனம் கூறிக் கொண்டது.

''தெருவுக்குள்ளே வண்டியை விடட்டுங்களா?'' வண்டிக்காரனின் குரல் கேட்டது. அவன் தலையை அசைத்தான்.

வண்டி அவன் வீட்டுக்கு முன் நின்றது. பக்கத்து வீட்டை அவன் ஆவலுடன் உற்று நோக்கினான். அங்கே சுகந்தியைக் காண வில்லை. மனத்தில் சற்றே சூன்யம் படர்ந்தது போல் தோன்றியது. பிரயாணம் வெறுமையாகி விட்டதோ?

வெகு நாட்கள் பூட்டிய வீடு! உள்ளே குப்பைகளை ஒழிக்கவே வெகு நேரமாகியது. உடம்பைக் கழுவிக் கொண்டு நடு கூற்றத்தில் அமர்ந்து கொண்டான்.

அடுத்த வீட்டில் ஏதோ சிரிக்கும் குரல் கேட்டது. இரண்டு பேர்கள் ஏதோ பேசிச் சிரிக்கிறார்கள். பெண்மணிகள்தான்! சுகந்தி தானோ? ஒருவேளை அவளது குடும்பத்தினர் அங்கே இல்லையோ?

இரவில் வெகு நேரம் நதி மணற்கரையில் கிராம நண்பர்களுடன் அமர்ந்திருந்தான்.. நேரம் ஆக ஆக அவனும் நரசிம்மனும்தான் மிஞ்சினர். குறை நிலாக் காலமாதலால் ஒரே இருள். எதிர்க் கரையிலுள்ள அனந்த கிருஷ்ணபுரத்தில் தெரிந்த ஓர் ஒற்றை விளக்கு நீரில் ஒரு கீற்றுப் பாலத்தைக் கட்டி யிருந்தது.

'' அப்புறம் ஊரில் யார் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று சொல்லவில்லையே!'' என்று ஆரம்பித்தான் அவன்.

''இன்னும் யாரைப் பற்றிச் சொல்லப் பாக்கி யிருக்கிறது?'' என்றான் நரசிம்மன்.

''வாத்தியார் ராஜு என்ன ஆனார்?''

''அவர்தான் இப்போது நம்ப ஊர் ஸ்கூல் ஹெட் மாஸ்டர்!''

''அப்படியா?''

''அவர் பெண் சுகந்தி இருந்தாள் தெரி யுமோ?''

''ஆமாம்; அவளுக்கு என்ன ஆச்சு?''

''அவளுக்குக் கல்யாணமாகி ஆறு மாதங் களுக்குள்ளே புருஷன் தவறிப் போய் விட்டான். இப்போது அவள் ஒரு விதவை!''

தூரத்தில் ஒரு நட்சத்திரம் நீளைக் கவ்விய வாறு கீழே விழுந்து கொண்டிருந்தது. அவன் உள்ளத்திலும் நட்சத்திரப் பதவிக்கு உயர்த்தி வைத்திருந்த ஒரு நினைவு திடீரென்று உதிர்ந்து தரை மட்டமானதுபோல் இருந்தது.

இரவில் உறக்கம் வரவில்லை. மனம் குழம் பிக் கொண்டிருந்தது. மூடிய கண் முன் எத்தனையோ வடிவங்களும் உருவங்களும் தோன்றி நீந்தின. மலரும் குங்குமமும், நல்லணியும் தரியாத சுகந்தியையா தான் பார்க்க வேண்டும்!

மனம் அவளைப் பார்க்க ஒப்பவில்லை. மறு தினம் மாலைக்குள் ஊரை விட்டுப் புறப்பட வேண்டுமென்று எண்ணம் தோன்றியது.

காலை அலர்ந்தது. இளம் ஒளி அடுத்த வீட்டுக் கூரை தட்டிப் பெரிய முக்கோண வடிவு நிழல் திணையிடுக்கில் கிடந்தி யிருந்தது. குளித்து விட்டுப் பிரயாணத்தை உடன் தொடங்க நிச்சயித்தான்.

திணையிலிருந்து _ர் எடுக்கும்போது, பக்கத்து வீட்டுத் தட்டோட்டி மீது பார்வை சென்றது. அங்கே, விரித்த வாதா மரக்கிளை களைப் பின்னணியாகக் கொண்டு யாரோ ஒருத்தி நிற்பது தெரிந்தது.

ஒருவேளை சுகந்திக்கு அக்காள் வேறு இருப்பாளோ? தன் துக்கத்தையே சிரிப்பாக மாற்றி விட்டாள். அவன் ஏன் அவளுக்கு அனுதாபப் படவேண்டும்?

அவள் அழகு அவன் முன் பளிச்சிட்டு நின்றது. நிலவு சிரித்த முகம். அதில் இந்திர தனுசு போல் சர்வளைவுப் பாலமாய்ச் செவிக் குச் செவி வளைந்த புருவங்கள். அதன் நிழலில் காயம் போல் நீலமாய்த் தேங்கிக் கிடந்த கண்கள். முறுவலிலே செறிந்த மின்வெட்டு! அவளுக்கா இந்தத் துக்கம் நேர வேண்டும்?

''ஸார் எப்போ வந்தாப் போலே?'' வாச லில் ராஜு ஸார் நுழைந்து கொண்டிருந்தார்.

''வாங்கோ, ஸார், வாங்கோ!''

''இப்போதுதான் நம்ம சுகந்தி சொன்னாள். என்ன சௌக்கியமா? ஊரை யெல்லாம் ஒரேயடியாக மறந்து விட்டீர்களே!'' பழைய 'வாத்தியார்'தான்! அதே குடுமி! அதே புகையிலே குதப்பிய வாய்! தலையில் ஓரிரு நரை அதிகமா யிருக்கிறது. மற்றப்படி எல் லாம் அவர்தான்!

பேச்சுக்கள் ஊரைச் சுற்றி யெல்லாம் புரண்டன. கடைசியில் ராஜு எழுந்தார்.

''சுகந்திக்கு நேர்ந்ததைப் பற்றிக் கேள்விப் பட்டேன் மனசுக்கு ரொம்பக் கஷ்டமா யிருந்தது!'' என்றான் அவன்.

அவர் மௌனமானார். இயல் நிலைக்கு வர ஒரு கணம் ஆகியது.

''எல்லாம் முன் ஜன்ம 'கர்மம்'! வேறே சொல்கிறதுக்கு என்ன இருக்கிறது?''

அவர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு பேசலானார்: ''நான் கூடப் பார்க்கி றேன். பழைய வழக்கங்களை நம்பி ஏன் வாழ ணும்? பெண் புருஷனது முகத்தை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. யாராவது அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முன் வந்தால் பேசாமல் கொடுத்து விடலாம்னு பார்க்கி றேன். இதை இத்தனை நாட்களும் மனசிலே வைத்திருந்தேன். உன்கிட்டேதான் இப்போ சொல்கிறேன். நீ வெளியே விட்டுவிட வேண் டாம். பட்டணத்திலே யாராவது உனக்குத் தெரிந்தால் எனக்குக் கடிதாசி போடு...''

அவர் போய் விட்டார்.

தெருவில் பெரும் இரைச்சலுடன் சண்டை போட்ட குருவிகள் இப்போதுதான் நிறுத்தி விட்டுப் பறக்க ஆரம்பித்தன. சிறிது நேரம் உலகமே சூன்யமானதுபோல் ஒரு மௌனம். அவன் இருதயத்தின் பிரதிபலிப்புத்தான் அதுவோ எனத் தோன்றியது.

மறு கணத்தில் மீண்டும் சப்த அலைகள் தோன்றிவிட்டன. பசிய உச்சிகளின் ஒலி விசி

சலங்களுடன் காற்று சலசலக்கத் தொடங்கி விட்டது. ஏலங்கள் கரையைத் தொடங்கின. மரங்கொத்திகள் 'டொக் டொக்'கென இசைக்கத் தொடங்கி விட்டன.

ராஜு" ஸார் சொன்னதை ஒரு கணம் பிர பஞ்சமே மௌனமாய் நின்று மெய்ம் மறந்து கேட்டு விட்டுப் பிறகு அதை நினைத்துக் கலகலக்க ஆரம்பித்து விட்டது போல் தோன்றியது.

மாலையில் கார்த்திகை இருள் கவிந்துவந்தது. தெருவின் இரு வரிசைகளிலும் அகல்சட்டிகள் கோலச் சுடர் பூத்துக் கொண்டிருந்தன.

வீட்டுக்குத் திரும்பும்போது அடுத்த வீட்டில் சுகந்தி பாடும் குரல் கேட்டது. வெளித் திண்ணையில் அமர்ந்து கொண்டான். இருவர் வாணங்களைச் சுற்றிப் போல் துகள் களாய்த் தீச்சுடர் உதிர்த்துக் கொண்டிருந் தனர். வீதியில் ஒரே இரைச்சல்.

சிறுமிகள் 'காண்டா மூடி' விளையாட ஆரம்பித்து விட்டனர். சுகந்திதான் நாச்சி யாக இருந்தாள். இன்னுமா சுகந்திக்கு விளை யாட்டுப் புத்தி போக வில்லை'

அவள் சிரித்து உதிர்த்து கொண்டிருந்தாள். இடையில் "கோபு. இங்கேதான் இருக் கிறாயா உன்னைப் பார்க்கவே இல்லையே?" என்று கூறினாள்

'இங்கேதான் இருக்கிறேன். உன் பாட் டைக் கூடக் கேட்டேன்."

"எப்படியிருந்தது?"

நன்றாகத்தான் இருந்தது."

"பாளையங்கோட்டை சாமிக் கம்பன் டீச்சர் சொன்னது. பத்துப் பதினைந்து கீர்த்த னங்கள் தெரியும் இன்னும் கத்துக் கொண் டிருப்பேன். அதற்குள்ளே அப்பா கல்யாணம் பண்ணி வைத்து விட்டார்!" அவள் குரலில் ஒலித்த கலக்கமோ. துக்கமோ இல்லை

"தினம் பாடுவேன் கேளு!" என்றாள். அவள்.

"கேட்கிறேன்; கேட்கிறேன், இன்னும் ஒரு மாதம் தங்கப் போகிறேனே!"

சிறுமிகள் நாச்சியைப் பிடிக்க இரைச்ச லோடு வந்து கொண்டிருந்தனர். சுகந்தி துள்ளித் துள்ளிக் குதித்தாள்.

'பாரு பண்டு.... நிலா செகண்டு. செம் பகப் தேர்டு....'

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அந்த ஊரில் ஏன் தங்குகிறோம் என்பது அவனுக்கே புரியவில்லை.

இரவில் பனி சில்லிட்டு அடித்துக் கொண் டிருந்தது. அவனுக்கு அது இதமாக இருப்பது போல் பட்டது. மேற்கே நிப்பாய்ந்த அம்மன் கோவில் வரை நடையிட்டு வந்தான்.

குழலாதும் பெருமாள் கோவிலில் முதல் முதலாக மின்சார விளக்குகள் போட்டிருந் தார்கள். வரதனும் சீமாவும் உள்ளே அழைத்துப் போய்க் காண்பித்தார்கள். மண்டபத்திலும் கருவறையிலும் கோபுரத் திலும் பளிச்சிடும் வெளிச்சம் எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சி.

வீட்டுக்கு வந்தான். பக்கத்து வீட்டின் அழிக் கதவைத் தாண்டிச் சுகந்தி வெளியே எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

"கோவில் என்ன ஜகஜ்ஜோதியாக இருக் கிறது!" என்றான் அவன். அவளது கண் களில் நிலச் சுடர் அந்த இருட்டிலும் தெரிந்தது.

"ஆமாம் எல்லாரும் போய்ப் பார்க் கிறார்கள்!" என்றான் அவன்.

'எனக்கும் போய்ப் பார்க்க ஆசை!"

"போய்ப் பார்த்து விட்டு வாயேன்!"

"ஐயே! நான் அங்கே யெல்லாம் போகக் கூடாது. கோபு! உனக்குத் தெரியாதா?"

அவன் மௌனமாகி விட்டான். உள்ளே போய்ப் பாயை விரித்து அமர்ந்து கொண் டான். ஊர் அடங்கிவிட்டது. அவன் நினைவுகள் இளை இளையாய்ப் படர்ந்து கொண் டிருந்தன. அடுத்த வீட்டிலிருந்து சுகந்தி பாடும் குரல் மெதுவாகக் கேட்டது.

அவன் வாழ்வு தன்னுள் மலர்ந்து விடும் என்று அநேக கணங்களில் அவன் எண்ணிய துண்டு. ஆனால் இப்போது....வயதைப் பற்றிய தனது கொள்கையைச் சற்றுத் தளர்த்தி விட்டாலும், அவள் மனமுதிர்ச்சி பெறுமளிருக்கும் போது அவனைத் தன் வாழ் வுடன் எப்படிப் பிணைத்துக் கொள்வது'

அன்று பின்புறக் கதவில் கற்கள் விழுந்து ஓசைப்படுவது கேட்டது. இப்போதெல்லாம் அவனைப் பேச அழைப்பதற்கு அந்த முறை யைத்தான் அவள் கையாள்கிறாள். தட் டோட்டியிலிருந்து சிறு கற்களைப் பின்புறக் கதவில் வீசி எறிகிறாள்.

அவன் கதவைத் திறந்து கொண்டு நின் றான் அவள் முற்றத்துச் சுவர் மேல் அடி மேல் அடி வைத்து நடந்து கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் குலுங்கிச் சிரித்தாள்.

''வாதாம் பழம் வேணுமா, கோபு?''

''எங்கேயிருக்கிறது?''

''இந்தக் கிளையிலே ஒளிஞ்சிண்டிருக்கு. பாரு. பறிச்சுத் தரேன்!''

''சுவர் மீது அப்படி நடக்கலாகாது. கீழே விழுந்தால்.........''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் நிலை தடுமாறியது. சமாளிக்க முடியாமல் அவள் வீட்டு முற்றத்தில் குதித்து விட்டாள். சுவர் அதிக உயரமல்ல

''என்ன? என்ன?''

''ஒண்ணுமில்லே. சிராய்ச்சிருக்கு!'' என்றவாறு அவள் எழுந்தாள். குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

''கசந்தி! நீ இன்னும் பச்சைக் குழந்தை போல் இருக்கிறாயே! எத்தனை நாட்கள் இப்படியிருப்பது?''

''நான் ஒண்ணும் குழந்தையில்லே!''

அதை உணர்ந்து கூறுகிறாளா? உணராது கூறுகிறாளா? அவன் அவளையே சிறிது நேரம் உற்று நோக்கினான்.

''உன் வாழ்வை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய், கசந்தி?''

''வாழ்க்கை!'' எனக் கூறிக் கலகலவெனச் சிரித்தாள்.

அவள் மெதுவாகக் கொல்லைப்புறம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள். கதவின் நாதாங்கியைக் கழற்றியவள் சற்றுத் தயங்கி நின்றாள்.

''உன்கிட்டே படிப்பதற்கு ஏதாவது கதைப் புத்தகம் இருக்கிறதா, கோபு?''

''இரு. இதோ தருகிறேன்.'' உள்ளே போய் ஒரு புத்தகத்தை எடுத்து வந்தான். அது ஒரு மொழிபெயர்ப்பு நாவல். ஒரு வட நாட்டு இளம் விதவையைப் பற்றியது. அவளது ஆசாபாசங்கள் முழுவதும் இதயங்களை உருக்குமளவுக்கு அதில் சித்திரிக்கப்பட்டிருந்தது. புத்தகத்தைக் கொடுத்து விட்டு வந்து விட்டான். அதைப் படித்து அவள் ரசிப்பாளா உணர்வாளா?

ஒரு வாரம் போய் விட்டது. தினம் தினம் தான் அவன் பேசுகிறான். அவள் உணர்ந்து விட்டதாக ஒன்றும் தோன்றவில்லை. அவன் தேசமாணிக்கத்துக்குப் புறப்படத் தீர்மானித்து விட்டான். புறப்படும் தினத்தன்று அவன் முன்னால் வந்தாள் அவள்.

''என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போகலாம் என்று பார்க்கிறாயா?''

''இல்லையே!''

''இந்தா உன் புத்தகம்!''

''படித்து முடித்து விட்டாயா?''

''முடித்து விட்டேன்!''

''உனக்குப் பிடிச்சுதா?''

''பிடிக்கவேயில்லே; அமலா எதுக்கு அழுறான்னு புரியவே இல்லே.''

அவன் திரும்பி விட்டான். கண்களுள் நீர் துளித்து விட்டது. அவள் அவனைப் பொறுத்த வரையில் இன்னும் சிறுமிதான்!

வண்டி ஆடிக் கொண்டே ஊரை விட்டுப் புறப்பட்டது. மனத்தின் ஆட்டத்துக்கும் குறைவில்லை. கசந்தியின் உரு அவன் முன் தோன்றியது. என்ன அசாதாரண அழகு! அவள் கண்கள் மீண்டும் பனித்தன ''வாழ்வு வாழப்படாமலேயே போகிறது!'' என்று தோன்றியது.

தேசமாணிக்கத்தை அடைந்து விட்டான். நாட்கள் மாதங்களாய்ப் போய்க் கொண்டிருந்தன. வருடங்கள் குவிந்துகொண்டிருந்தன.

நிச்சயமாகி விட்டது. கீழநத்தம் அருகிலுள்ள மற்றொரு கிராமத்துப் பெண்தான். மண நாள் குறிப்பிட்டு விட்டார்கள். திருமணம் நடக்கும் ஊர் நான்கு பர்லாங்குக்குள்ளேயே இருந்ததால், கீழ நத்தத்தில் அவன் சொந்த இடத்திலிருந்தே அவனை ஊர்வலமாக அழைத்துப்போக ஏற்பாடாகியிருந்தது.

'மாப்பிள்ளை அழைப்பு' தினம்! மாலையாகி விட்டது! கீழநத்தத்துக்கு அவன் வந்து சேரச் சற்றுத் தாமதமாகிவிட்டது. நண்பர்களும் உறவினர்களும் காத்திருந்தார்கள்.

மீண்டும் அந்த வீட்டுக்குள் நுழைந்ததும், கசந்தியைப் பற்றிய நினைவுகள் அவன் உள்ளத்தில் தோன்றி நின்றன. வாசலில் ஊர்வலக் கார் நின்றிருந்தது. உடை மாற்றிப் புறப்படத்தான் நேரம் இருந்தது

பின்புறக் கதவில் பலத்த ஓசை கேட்டது! அவள்தானா? உடை மாற்றத் தொடங்கினான்.

மீண்டும் பலத்த ஓசை! உடையணிந்து போய்க் கதவைத் திறந்தான். ''கசந்தியா?''

முற்றத்துச் சுவரிலிருந்து குதித்துச் சற்றுத் தள்ளி நின்றிருந்தாள். அவள் கண்களில் கண்ணீரா? பழைய கசந்திதானே? அவள் சிரிப்பு எங்கே? தலை விரிந்து கிடந்தது. உடல் வெளிறி அவளது வெண்மைப் புடவையினும் வெண்மையாய்க் கிடந்தது.

''என்ன கசந்தி?''

அவள் விக்க ஆரம்பித்தாள்.

''எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லே.'' அவள் விக்கினாள் அவள் கண்களில் கண்ணீர் பிரவாகமாய் ஓடியது.

''நீ போன பிறகு எனக்கு எல்லாம் வெறிச்சுன்னு போச்சு. கோபு! உன்கிட்டே தினம் தினம் பேசாவிட்டால் மனசு வெடிச்சுடும் போல ஆயிடுத்து. உன்னைப் பார்க்கா விட்டால் பைத்தியம் பிடிச்சுடும்னு தோன்றிப் போச்சு! நீ கேட்டதெல்லாம் எனக்கு இப்போத் தெரிஞ்சு போச்சு. கோபு! நீ பேசியதெல்லாம் பொருள் விளங்கிப் போச்சு!''

கண்ணீர் அருவியாகக் கொட்டியது. அவள் கீழே நோக்கினாள்.

''நீ கொடுத்த நாவலில் அமலா ஏன் அழுதான்னு இப்போ புரிஞ்சு போச்சு, கோபு! எனக்கு வாழ்வு புரிஞ்சு போச்சு!''

அவன் தலை நிமிர்ந்தான். இத்தனை நாட்களும் அவனை அழைப்பதற்காக அவன் எறிந்த கற்கள் சுற்றி வரக் குவியல்களாகக் கிடந்தன. ஒவ்வொரு கல்லும் அவள் மனம் முதிர்ந்து வரச் சின்னமாயிருந்த ஒவ்வொரு மைல் கல் என்று தோன்றியது

''பிஞ்சிலே கனிந்து விட்டாள்!'' என்று கூறிக் கொண்டான் அவன். வாசலில் மேளம் முழங்க ஆரம்பித்தது. ''மாப்பிள்ளை புறப்படுங்கோ!'' குரல்கள் கிளம்பின.

கசந்தியை ஏறிட்டுப் பார்த்தான். கைகளினால் முகத்தை மூடிக் கொண்டு அவள் விம்மினாள். பழைய கசந்தி அல்ல! முதிர்ந்த கசந்தி!

''ம்......ம்! வாங்கோ மாப்பிள்ளே!''

படிகளில் ஏறிப் பின் கதவைச் சாத்தினான்; அவள் விம்மும் சத்தம் அடைபட்டுவிட்டது! அவள் உருவமும் மறைந்துவிட்டது!

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்

அளிக்கும் பொங்கல் பரிசு!

5 ரூபாய்க்கு 6 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள்!

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், கீழ்க்கண்ட 50 சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இவை உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உற்சாகமூட்டுபவை உங்கள் நண்பர்களுக்கும் பரிசாக வழங்குவதற்கு ஏற்றவை. இந்தப் புத்தகங்களில் 6 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுங்கள்: ஆனால் ரூபாய் 5 செலுத்தினால் போதும்! இதேபோல் 12 ரூபாய் ஆர்டருக்கு 10 ரூபாய் 18 ரூபாய் ஆர்டருக்கு 15 ரூபாய் என்று செலுத்தினால் போதும்!

பத்து ரூபாய்க்கு மேல் தபால் செலவு இனாம்! 10 ரூபாய் அல்லது அதற்குமேல் வாங்கினால், தபால் செலவும் பாக்கிங் செலவும் இனாம். ஆனால் அதற்குக் குறைவாயிருந்தால், நீங்களே தபால் செலவை ஏற்க வேண்டும்.

முன் பணம் அனுப்ப வேண்டாம். எதிர்ப்புறம் உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து உடனே அனுப்புங்கள். புத்தகங்கள் உங்கள் வீடு தேடி வி. பி. பி. மூலம் வந்து சேரும்.

இந்த விசேஷ சலுகை: பொங்கலை ஒட்டியே — 15-2-1962 வரைதான் உண்டு.

அற்புதமான 50 புத்தகங்கள்!

நாவல்

1. அன்னையின் குரல் ரூ. 3.00
   – ஆலன் பேடன்
2. கோகொரோ 1.00
   – நாத்சுமே ஸோஸெகி
3. காதல் வாழ்க! 2.40
   – டேவிட் கார்னெட்
4. சுவாமியும் சிநேகிதர்களும் 2.60
   – ஆர். கே. நாராயண்
5. இதுவா நாகரிகம்? 1.40
   – ரங்கேய ராகவ
6. யாத்திரிகள் 1.40
   – ப்ரபோத் குமார் ஸன்யால்

கதைகள்

7. சிறு - ஜப்பான் கதைகள் 1.65
8. நவமணிக் கதைகள் (தொகுப்பு) 1.40
9. சிறுகதைக் கோவை (தொகுப்பு) 1.50
10. அரசியல் கைதி (வங்கக் கதைகள்) 1.50

வாழ்க்கை

11. ஆல்பர்ட் ஷ்வைட்சரின் சுய சரிதம் 1.75
12. இமயத்துப் புலி (டென்ஸிங்) 2.00
13. மெய்யடியார்கள் ரூ. 1.40
   – டி. எம். பி. மகாதேவன்
14. மகரிஷிகள் வரலாறு 1.10
   – கே. எஸ். ராமசாமி சாஸ்திரி

நாடகங்கள்

15. பத்து நாடகங்கள் (தொகுப்பு) 1.25
16. சிலம் (தெலுங்கு நாடகங்கள்) 1.65
17. அடிமை (மலையாள நாடகங்கள்) 1.80
18. ஆண்டு விழா 1.65
   (கன்னட நாடகங்கள்)
19. நான்கு நாடகங்கள் 1.25

வைத்தியம்

20. வீட்டு வைத்தியர் 1.90
   – காப்டன் என். சேஷாத்திரிநாதன்
21. சுகாதாரமும் சுகவாழ்வும் 2.50
   – காப்டன் என். சேஷாத்திரிநாதன்
   – டாக்டர் ஆர். சாம்பமூர்த்தி
22. வைத்தியக் கலை -
   தொத்து வியாதிகள் 1.40
   – கே. வாசுதேவராவ்
23. வளரும் குழந்தை 2.00
   – டாக்டர் எஸ். டி. ஆச்சார்

வரலாறு

24. இந்தோனேஷியா ரூ. 2.10
25. நான் கண்ட திபேத் 2.50
26. ஆசிய வரலாறு 1.90
    — எம். ரத்தினசாமி
27. ஜப்பான் - அன்றும் இன்றும் 2.25
28. பர்மா 1.60
29. தென்னிந்திய வரலாறு 13ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு 2.40
    — டாக்டர் கே. கே. பிள்ளை

நடனம்

30. இந்தியக் கிராமிய நடனங்கள் 2.00
31. தென் இந்தியக் கிராமிய - நடனங்கள் 1.65

விஞ்ஞானம்

32. விஞ்ஞான உலகில் 1.50
    — பி. சவரிமுத்து
33. உயிரினங்கள் : தோற்றமும் வளர்ச்சியும் 2.10

மதம் – வேதாந்தம்

34. வாழ்வும் மதமும் —டால்ஸ்டாய் 1.60
35. நம்பிக்கை மறுமலர்ச்சி 2.10
    — டாக்டர் ராதாகிருஷ்ணன்
36. அமர காதலர் 1.75
    — தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்
37. நாம் வணங்கும் தெய்வங்கள் ரூ. 1.90
    — பி. ஆர். சீனிவாசன்

பொது

38. புதுத் தமிழ்க் கவி மலர்கள் 1.00
39. யானைக் கூட்டம் (தொகுப்பு) 2.10
40. ஜனத்தொகையும் குடும்பக் - கட்டுப்பாடும் 1.95
    — டாக்டர் எஸ். சந்திரசேகர
41. பொழுது போக்கு விளையாட்டுக்கள் 2.10
42. பொதுமக்களும் சட்டங்களும் 2.60
43. அரசியல் அறிவு - கேள்வியும் பதிலும் 1.60
    — எம். ரத்தினசாமி
44. பொதுமக்களும் பொருளாதாரமும் 1.95
    —வி.கே. நரசிம்மன், கே. வாசுதேவன்
45. நீங்களும் உங்கள் ரேடியோவும் 1.55

சிறுவர் நூல்

46. கடற்கரையில் மாலை நேரம் 1.50
47. மந்திர வித்தை 1.00
    — எம். எஸ். சபரிராஜன்
48. மிருகங்கள் நடத்தும் சர்க்கஸ் 1.50
49. மணி என்ன ? 2.00
    — கல்வி கோபாலகிருஷ்ணன்
50. முயல் குட்டி முத்து 1.00

அடியிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து கீழ்க்கண்ட எங்கள் விநியோகஸ்தர்களுக்கு அல்லது எங்களுக்கு அனுப்புங்கள்

- எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி ஜங்ஷன் *(திருநெல்வேலி, ராமநாதபுரம், கன்னியாகுமரி, கோவை, சேலம், நீலகிரி மாவட்டங்களுக்கு மட்டும்)*
- பழனியப்பா பிரதர்ஸ், தெப்பக்குளம், திருச்சி *(திருச்சி, தஞ்சை, மதுரை மாவட்டங்களுக்கு மட்டும்)*
- பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1 *(செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களுக்கு மட்டும்)*
- தென் மொழிகள் புத்தக டிரஸ்ட், 25, ஸ்டெர்லிங் ரோடு, சென்னை-34

பொங்கல் புத்தகப் பரிசு

அன்புடையீர்,

கீழேயுள்ள புத்தக எண்களில் எனக்கு வேண்டியவற்றைச் சுற்றி வட்டமிட்டுக் காட்டியிருக்கிறேன். அந்த எண்களுக்குரிய புத்தகங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வி. பி. பி. மூலம் அனுப்புங்கள்.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18
19 20 21 22 23 24 25 26 27 28 29 30 31 32 33 34
35 36 37 38 39 40 41 42 43 44 45 46 47 48 49 50

பெயர் ....

தபால் விலாசம் ....
....

....
கையெழுத்து

ஆயிரம் பொய் சொல்லி....



ஏ. எஸ். சுந்தரராஜன்

காட்சி 1

[கடை வீதி. பட்டாபிராமன் கல்யாணத் தரகர் சிவசாமியை வழி மறிக்கிறார்]

பட்டாபி: என்னய்யா சிவசாமி! கல்யாண சீசன் வந்தாலும் வந்தது. ஆள் காத்தாடியாப் பறக்கிறீரே!

சிவசாமி: காத்தாடி என்னங்க. ஜெட் மாதிரி பறந்தால்கூடக் கையிலே இருக்கிற ஜாதகங்களை முடிக்க முடியாது போலிருக்கு.

பட்டாபி: அவ்வளவு 'பிஸி'யா? நம்ப பொண்ணுக்கும் ஒரு பையனைப் பாருமே.

சிவசாமி: என்ன ஸார் விளையாடறீங்க. உங்களுக்கு ஏது பொண்ணு?

பட்டாபி: சரியாப் போச்சு. பட்டணத்திலே வைச்சுப் புட்டிப் பால் போட மனசில்லாமல், கிராமத்திலே விட்டு வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். சுவாமி- பதினெட்டு வயசுக் குமரியாக.

சிவசாமி: அடேடே, அப்படியா? எனக்குத் தெரியாதே. சரி, இந்த வாரத்திலே கலியாணத்தை நடத்தி விடுவோமா?

பட்டாபி: மாப்பிள்ளை?

சிவசாமி: இன்னைய தேதியிலே நூறு பிள்ளைகளுடைய ஜாதகம் என் கையிலே இருக்கு. அத்தனை பேரையும் அழைச்சுச் சுயம்வரம் நடத்தட்டுமா?

பட்டாபி: சுயம்வரமா?

சிவசாமி; ஆமாம். எல்லாரையும் நிற்க வைத்து. கல்லூரியைப் பத்துவருஷங்களுக்குக் குத்தகை எடுத்துக் கொண்டு வெறும் பி. ஏ. பட்டத்தோடு வெளிவந்த பால குரு இவர்; டாக்டருக்குப் படிக்க ஆரம்பித்து, கத்தியைத் தொடப் பயமாக இருந்ததால் பஞ்சு வியாபாரத்தில் பதுங்கிக் கொண்ட தஞ்சாவூர் மைனர் அவர்னு அறிமுகப்படுத்தறது....

பட்டாபி: ரொம்ப கிண்டலாப் பேசறீரே.

சிவ: ஒன்று கேட்க மறந்துட்டேனே. உங்க பொண்ணுக்குச் சங்கீதம், நடனம் ஏதாவது தெரியுமா?

பட்டாபி: அடேடே... இந்தத் தொழிலை எப்போ ஆரம்பிச்சீர்? கல்யாணத் தரகர் வேலையோடு சங்கீதத் தரகர், டான்சுத் தரகர் வேலையும் பார்க்கிறாப் போல இருக்கு.....

சிவசாமி: அது இல்லீங்க. இந்த 'இளவட்டங்கள்' இருக்குதுகளே, கல்யாணம் பண்ணிக்கிறியாடான்னு, பெண்ணை ஆடச் சொல்றான், நாடகக் கம்பெனிக்கு ஆள் எடுக்கிற மாதிரி. அதனுலேதான் கேட்டேன், பொண்ணு கிராமத்திலே வளர்ந்ததாச்சே, டான்சு கீன்சு வருமான்னு. சும்மா....... கிராமிய டான்சு ஆடினுல்கூடப் போதும். 'ஓரியண்டல்' டான்சுடா. கிராமப் பெண் உழவனுக்குக் கஞ்சி கொண்டு போகும் கட்டம்'னு சொல்லிச் சமாளிச்சுடலாம். என்ன பதிலே காணும்?

பட்டாபி: தப்பு செய்துட்டேன், சிவசாமி. என் கிராமத்திலே கொண்டு போய்ப் பெண்ணைத் தள்ளி விளையாடவிட்டுட்டேன். அதுக்குப் பாட்டும் தெரியாது. கூத்தும் தெரியாது.

சிவசாமி: அப்படியா? இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போகலே. நட்டுவனரை அமர்த்திக் கொஞ்சம் அப்பியாசம் சொல்லி வைச்சாப் போச்சு. பாட்டுக்கு நான் ஆச்சு.

பட்டாபி: இனிமேல் கத்துக் கொடுக்க முடியுமா?

சிவசாமி: முடியுமாவது, முடிச்சு வைக்கிறேன், பாருங்க. 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடி' என்பது அமுத வாக்கு. உங்க பொண்ணுக்காக நான் ஐம்பதாயிரம் பொய்கூடச் சொல்லத் தயார். எப்படியாவது 'அட்ஜெஸ்ட்' பண்ணிடுவோம்.

பட்டாபி: சரி, சாயந்திரம் நட்டுவனரை அழைச்சுக்கிட்டு வீட்டுப் பக்கம் வாங்க....

சிவசாமி: ஆகட்டும்.

[போகிறார்]

காட்சி 2

[பட்டாபிராமனின் வீடு. ஒரு மாதத்துக்குப் பிறகு.]

சாரதா: என்னங்க. டான்சு வாத்தியார் சம்பளப் பணத்துக்கு ஒத்தக் காலிலே நிற்கிறாராம். பெட்டிச் சாவியைக் கொடுங்க. டான்சாம், பாட்டாம். அந்தத் தரகர் பேச்சைக் கேட்டுக்கொண்டு இப்படி அமளி பண்ணுகிறீர்களே. இந்த ஒரு மாசத்திலே இவள் என்னத்தைக் கத்துக் கொண்டிருக்கிறாள்?

லட்சுமி: என்னம்மா இப்படிக் கேட்கிறாய்? நீ பார்க்க வில்லையா? 'காலைத் தூக்கி நின்றாடி' என்ற பதத்துக்கு நான் பிடிக்கும் ஒவ்வொரு பிடியும்....

சாரதா (குறுக்கிட்டு): குரங்குப் பிடியா இருக்குதுன்னு உன் வாத்தியார் பூரிக்கப் போறாரா? ஒரு நாளைக்குக் காலைத் தூக்கி நின்றாடி உன் வாத்தியாரை விரட்டியடிச்சால்தான் எனக்கு நிம்மதி.

[சிவசாமி வருகிறார்]

சிவசாமி: மாப்பிள்ளை கிடைச்சாச்சு....

பட்டாபி: கிடைச்சாச்சா? சாரதா! காப்பி கொண்டா!

சிவசாமி: கொஞ்சம் இருங்க, அம்மா. மாப்பிள்ளை யாருன்னு தெரிஞ்சுக்காமல் போய்க் காப்பி கலந்தீங்கன்னு கப்படாது. பரபரப்பிலே காப்பிப் பொடிக்குப் பதில் மிளகாய்ப் பொடியில் 'டிகாக்ஷன்' இறக்கி விடுவீர்கள். இப்போ நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளை ஒரு பெரிய டாக்டர்.

சாரதா (ஆவலுடன்): டாக்டரா!

சிவசாமி: ஆமாம். அதுவும் சாதாரண டாக்டரா? கண்ணைப் பத்திப் படிக்கிறதுக்காக அமெரிக்கா போய் வந்தவர். காதைப் பத்திப் படிக்கிறதுக்காக லண்டன் போய் வந்தவர். எதைப் பத்தியோ படிக்கிறதுக்காக ரஷ்யாவுக்குப் போகப் போகிறவர்.

பட்டாபி: சரிதான். நம்ப வீட்டில் ஒரு நல்லது கெட்டது நடந்தால் வெளி நாட்டுக்கு 'கேபிள்' கொடுத்துத்தான் மாப்பிள்ளையை அழைக்கணும் போல இருக்கு.

சாரதா: அது சரி. இவ்வளவு படிப்புப் படிச்ச பின்னே நம்ப பெண்ணைக் கட்டிக்கச் சம்மதிப்பானு?

சிவசாமி: சம்மதிக்க வைப்போம். அதிலே தானே இருக்கு, நம்ப சாமர்த்தியம்? ஒரு கேள்வி, இவரோ, பெரிய டாக்டர்; படிப்பாளி. வெளிநாடு சுற்றியவர். எப்படிப்பட்ட பெண் தமக்கு மனைவியாக வரணும்னு விரும்புவார்? சொல்லுங்கோ பார்ப்போம்!

பட்டாபி: இதென்ன கேள்வி? பொண்ணு காலேஜிலே படிச்சவளாகவும் நாகரிகமுள்ளவளாகவும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளாகவும் இருக்கணும்னு ஆசைப்படுவார்.

சிவசாமி: கரெக்டா சொல்லிட்டீங்க. ஆனால் ஒரு திருத்தம். பணம் அவருக்கு முக்கியமில்லே. படிப்பும் நாகரிகமும்தான் முக்கியம்.

சாரதா: எங்க லட்சுமி காலேஜ் பக்கம்கூட கண்ணெடுத்துப் பார்ப்பதில்லையே. கிராமத்துப் பள்ளியில் ஐந்தாம் கிளாசே ஒண்டு!

சிவசாமி: இருக்கட்டுமே. உங்க பெண்ணைக் 'காலேஜ் கேர்ல்' ஆக்க எவ்வளவு நேரமாகும்? அதிகமாப் போனால் அரை மணி...

பட்டாபி: என்னய்யா அது. ஜாலவித்தையாக இருக்கு!

சிவசாமி: வித்தைஒண்ணும் இல்லே. எல்லாம் வேஷம் — பெண்ணுக்குப் பிரமாதமா 'டிரஸ்' பண்ணி டம்பப்பை, கண்ணுக்குக் கறுப்புக் கண்ணாடி எல்லாம் மாட்டிட்டா, காலேஜ் பெண் என்ன, ஹாலிவுட் சினிமா நடிகை மாதிரியில்லே இருக்கும்.

பட் : அவன் 'மூனே' மேன் உமக்கு.

சிவசாமி: அப்புறம்..பெண்ணோட பெயரையும் மாத்திடணும். 'லட்சுமி'ங்கிறது அவ்வளவு நாகரிகமான பெயர் இல்லே.

சாரதா: இதோ பாருங்க. பெயரை மாத்த நான் சம்மதிக்க மாட்டேன். 'லட்சுமி'ங்கரது எங்க பாட்டியோட ஞாபகமா வைச்ச பேராக்கும்......

சிவசாமி: என்னம்மா நீங்க. பெயர் மாத்றத்திலே என்ன இருக்கு? இந்தக் கல்யாணம் ஆகி உங்க மகள் வயிற்றில் ஏழு பெண் குழந்தைகள் பிறக்கப் போகுது. அதுகளுக்கு வைவுங்களேன், தனலட்சுமி, தான்ய லட்சுமி வரலட்சுமி, கஜலட்சுமின்னு ஞாபகமா.

பட்டா: சாரதா! நீ கொஞ்சம் சும்மா இரு. சிவசாமியோட இஷ்டப்படியே செய்வோம். எப்படியாவது அந்த டாக்டர் நமக்கு மாப்பிள்ளையாகக் கிடைத்தால் போதும்.

சிவசாமி: அப்போ நான் வரேங்க. நாளைக்கு மறு நாள், அதாவது வெள்ளிக் கிழமை, மாப்பிள்ளையை அழைத்து வரேன்.

பட்டா: சரி. நாங்க தயாராயிருக்கோம்.

[சிவசாமி போகிறார்]

சாரதா: இதெல்லாம் என்னங்க. ஆளே மாத்து. பேரை மாத்துன்னு....எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலே.

பட்டாபி: மாப்பிள்ளை வரட்டும், பாரு. அப்புறம் பிடிக்கும். [போகிறார்]

காட்சி 3

சாரதா (வந்து கொண்டே): லட்சுமி! சீக்கிரம் ஆகட்டும். அவர்கள் வரும் நேரமாச்சு.

லட்சுமி (சிரித்து): அம்மா! எத்தனை தடவை அப்பா சொல்லியிருக்கிறார், என்னை லட்சுமி என்று கூப்பிடாதே என்று. என் பெயர் 'கந்தர்வ குமாரி'. சேலைத் தலைப்பிலே மறக்காமலிருக்க முடிச்சுப் போட்டுக் கொள்.

சாரதா: அட, ராமா! கந்தர்வ குமாரியாமே. கல்யாணம் தேவலோகத்திலா? அல்லது பூலோகத்திலேதான் நடத்தப் போகறுங்களா?

லட்சுமி (உதட்டுக்கு லிப்ஸ்டிக் தடவிக் கொண்டு): ஏம்மா, இப்போ என்னைப் பார்த்தால் கிராமத்துப் பெண்ணுன்னு யாராவது சொல்லுவாங்களா?

சாரதா: சொல்ல மாட்டாங்க. யாரோ சினிமாக்காரின்னு தான் சொல்வாங்க.

[பட்டாபி வருகிறார்]



பட்டா: அம்மா கந்தர்வம்! இந்தச் செருப்பைப் போட்டுக் கொள். இதோடு அலங்காரகாண்டம் முடிந்தது.

லட்சுமி: ஏம்பா! வீட்டுக்குள்ளே இருக்கும் போதுகூடச் செருப்புப் போட்டுக்கணுமா?

பட்டா: ஆமாம்மா— இதெல்லாம் நீவிர நாகரிகத்தின் சின்னங்கள். உம். சீக்கிரம் அதோ அவர்கள் வந்து விட்டார்கள்.

[வாசலில் கார் வந்து நிற்கிறது. சிவசாமியும் டாக்டரும் உள்ளே வருகிறார்கள்.]

பட்டா: வாங்க....வாங்க....

சிவசா : இவர்தான் பட்டாபிராமன். பெண்ணைப் பெற்ற பெரியவர்.

மாப்பிள்ளை: வணக்கம்.

பட்டா: உட்காருங்க. வேறு யாரும் வரவில்லையா?

சிவசா: அதுவா...இந்த கூட்டம் சேர்த்துக் கொண்டு வரும் பழக்கம் மாப்பிள்ளைக்குப் பிடிக்காது. அயல் நாட்டுப் படிப்பு பாருங்க....

பட்டா: ரொம்ப கரெக்ட். நாலு பேர் வந்தால் நாலுவிதமான கருத்துக்களைச் சொல் வாங்க. சிக்கல் விழும்.....

சிவசா: ஆமா...பெண்ணை வரச் சொல்ல லாமே....

[லட்சுமி காப்பி எடுத்து வருகிறாள்.]

பாருங்க மாப்பிள்ளே. இவர் மிஸ் கந்தர்வ குமாரி பி. ஏ.

லட்சுமி: வணக்கம்....

சிவசாமி: என்ன அதோடு நிறுத்திட்டே? இன்னும் ஏதாவது பேசம்மா. காலேஜிலே பட்டம் வாங்கின பெண். வெட்கப்படலாமா?

லட்சுமி: நீங்க .... உங்களுக்கு நல்லா தொழில் நடக்குதா?

சிவசா: பலே, இன்னும் கல்யாணப் பேச்சு முடிவாகவில்லே. அதற்குள் உங்க தொழில் மேல் எவ்வளவு அக்கறை பாருங்க பெண் ணுக்கு. [எல்லாரும் சிரிக்கிறார்கள்.]

மாப்பிள்ளை: உங்க பெண்ணை இதற்கு முன் எங்கோ பார்த்த மாதிரி இருக்கே?

பட்ட: பார்த்திருக்கலாம். கிராமத்திலே..

சிவசா: (இடை மறித்து) கிராமத்திலே சமூகத் தொண்டு என்று சொல்லிக் கொண்டு மாதர் சங்கங்கள் போகுமே. நம்ம கந்தர்வ குமாரி தான் மாதர் சங்கத் தலைவி. அதனாலே கிராமத்தில் நீங்க பார்த்திருக்கலாம்.

மாப்பி: பெண்ணுக்குப் பாட்டு. நடன மெல்லாம் தெரியுமா?

சிவசா: நல்லா கேட்டீங்களே ஒரு கேள்வி. எத்தனை மெடல், எத்தனை கப்பு – உப்பு முதல் துவரம் பருப்பு வரை இவர்கள் வீட்டில் அந்தக் கப்புகளில் தானே வைத்திருக் கிறார்கள்? நாலு நாளைக்கு முந்திக் கூட ரேடியோவில் டான்சுக் கச்சேரி நடத்துதே.

மாப்பி: ரேடியோவில் டான்சா?

சிவசா: அட, அதுதாங்க. பெயர் சட் டென்று ஞாபகத்துக்கு வரலே அதாவது.... டெலிவிஷன். குழந்தை டெல்லிக்குப் போய் ஆடி விட்டு வந்தது....

பட்ட: சிவசாமி...!...

சிவசா: நீங்க சும்மாயிருங்க. இதெல்லாம் அவருக்குத் தெரிய வேண்டியது தான். எங்கே ஒரு பாட்டுப் பாடி அதுக்கு ஒரு பிடியும் பிடிம்மா. மாப்பிள்ளை பார்க்கட்டும்.

மாப்பி: அதற்கு நேரமில்லே. ஊம். பெண் ணுக்குச் சமைக்கத் தெரியுமா?

சிவசா: வெளி நாட்டில் படிச்சவர் கேட் கக் கூடிய கேள்வியா இது? மாப்பிள்ளை சார்? பெரிய இடத்திலே வாழ்க்கைப்படப் போகும் பெண்கள் கூடவா சமைக்கக் கத்துக் கொள்ளணும்?

பட்டா: எங்க சமையலறையைப் பார்த் தது கூட இல்லே.

மாப்பிள்ளை: வெரி குட். அடுப்படிக்குப் போனால் முகம், கையெல்லாம் அழுக்கும் கரியும் படியும். டர்ட்டி பிஸினஸ்!

[எழுந்திருக்கிறான்.]

பட்டா: என்ன அதற்குள் புறப்பட்டு விட் டீர்கள்? போய்க் கடிதம் போடுகிறீர்களா?

மாப்பி: கடிதம் எதற்கு? வெளிப்படை யாக நேரிலேயே சொல்லி விடுகிறேனே... எனக்குப் பூரண சம்மதம்.... நகைகள், கல் யாண ஏற்பாடுகள், எல்லா விஷயத்துக்கும் சிவசாமியிடமே பேசி முடிவு பண்ணி விடுங்கள். வருகிறேன். வணக்கம்.

பட்டா: வணக்கம்.

சிவசா: இன்னும் கொஞ்ச நேரத்திலே திரும்பி வரேங்க.

[சிவசாமியும், மாப்பிள்ளையும் போகிறார்கள்.]

பட்டா: சாரதா! அதிர்ஷ்டம், அதிர்ஷ் டம்னு சொல்கிறார்களே. இதுதான் அது!

காட்சி 4

[ஒரு வாரத்துக்குப் பிறகு. பட் டாபி அமர்ந்திருக்கிறார். சிவசாமி வருகிறார்.]

சிவசாமி: என்னசார்! பிரஸ்ஸுக்குப் போய்க் கல்யாணப் பத்திரிகை அச்சடிக்கும்படி சொல்லி விட்டீர்களா?

பட்டா: பிரஸ்ஸுக்குப் போகவில்லே. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் வந்தேன். உம்மைப் பற்றிப் புகார் எழுதிக் கொண்டு....

சிவசா: ஏன், என்ன சமாசாரம்....?

பட்டா: ஓய் சிவசாமி! எவ்வளவு அற்புத மாகக் கரடி விட்டு விட்டீரய்யா – சாரதா! கதவைச் சாத்து. ஏனய்யா! மாப்பிள்ளை பெரிய டாக்டர், ரஷ்யா, அமெரிக்கா, கத்தார்க்கா போனவர்னு சொன்னீர் கடைசியில்...அவர் ஒரு மளிகைக் கடை குமாஸ்தாவாமே....

சிவசா: (சாதாரணமாக) அதனால் என்ன? இன்று குமாஸ்தாவாக இருப்பவர் நாளைக்கு முதலாளி யாகலாம். அப்புறம் ஏரோப் பிளேன்லே ஏறி உலகத்தையே சுத்தி வரலாம். அதெல்லாம் சகஜம் சார். பையனுக்கு என்ன குறை? அழகா லட்சணமா இருக்கான். நீங்க கேட்கும் நகைநட்டு போடத்தயார்.....

பட்டா: நகையும், நட்டும் யாருக்கு வேணும்...பெரிய டாக்டர்னு சொன்னீர்... அதை நம்பி.....


சிவசா: உங்கள் பெண்ணைக் கூடத்தான் காலேஜ் ராணின்னு சொன்னேன். ஏன்? 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடி'ன்னு பெரியவங்க எழுதி வைச்சுட்டுப் போனதை அப்படியே என் தொழிலில் கடைப்பிடிக்கிறவன் நான். ஒரு கல்யாணத் தரகன் , பெண்ணுக்காக ஆயிரம் பொய்யைச் சொல்லலாம், மாப்பிள்ளைக்காக அந்த பொய்யைக் கூடச் சொல்லக் கூடா துன்னு என்ன நியாயம்? கோவிச்சுக்கிறீங்களே?

சாரதா: தரகரே! உங்களைப் பாராட்ட நான் ஒருத்தி இருக்கேன். கல்யாணம் ஆன பிறகு பெண்ணைப் பற்றிய உண்மை தெரிந் தால், அந்த டாக்டர் என்ன செய்வாரோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளையா இரண்டு பேருடைய வேஷமும் கலைந்து போச்சு. மனசுக்கும் திருப்தியாச்சு. என்னங்க! சொல்லுங்களேன். காலேஜையே பார்க்காத நம்ப பெண்ணுக்கும், 'ஸ்டெ தாஸ்கோப்'பையே தொடாத அந்த டாக்டருக்கும் சுப தினம், சுப முகூர்த்தத்தில் கல்யாணத்தை நடத்திடலாம்னு சொல் லுங்க. [பட்டாபி வாயடைத்து நிற்கிறார்!]

நார்டன்

சைக்கிள்கள்

உல்லாசமுடன் சைக்கிளில்
சவாரி செய்ய நார்டன்



ஹிந்த் சைக்கிள்ஸ் லிமிடெட், ஒர்லி, பம்பாய்—18.

ASP/HC/177

ஹிந்த் பிரேம்களும் போர்க் கம்பிகளும் உறுதிக்கும் பலத்துக்கும் இன்று அகில இந்தியப் புகழ் பெற்றுவிட்டன. ஹிந்த் சைக்கிள் பிரேம்களும் போர்க்குகளும் உறுதியோடும் பலத்தோடும் சிறந்து விளங்குவதால் எண்பது சத விகிதத்துக்கு மேல் ரிக்ஷாக்களில் உபயோகப் படுத்துகிறார்கள். இதற்குக் காரணம் இந்தியன் ஸ்மெல்டிங் அண்டு ரிபைனிங் கம்பெனியார் தயாரித்தளித்துள்ள பித்தளை ஸோல்டரிங்கினால் உறுதியாகப் பற்றவைத்திருப்பதுதான்!

சென்னை & கேரளாவுக்கு ஸேல்ஸ் ஆர்கனைசர்கள்:

பி. கே ஜாபி & கோ., 99. ஆதியப்ப நாயக்கன் தெரு சென்னை-3


Kalinga tubes
தண்ணீர், காஸ்
இவற்றுக்குக்
கலிங்கா குழாய்களே
பிரிட்டிஷ் தர நிர்ணயத்
திட்டங்களின்படி உருவாக்கப்
பட்டுள்ள கருமை நிறம் மற்றும்
முலாம் பூசப்பட்ட உயர்ந்த ரக
எஃகுக் குழாய்கள்
கலிங்கா டியூப்ஸ் லிட்.
32, சித்தரஞ்சன் அவின்யூ : கல்கத்தா - 12
தொழிற்சாலை :
சௌத்வார் - கட்டாக் - ஒரிஸ்ஸா
KALPANA K. T. 31

அர்த்தம் பிறந்தது

பொன்முடி

பதினைந்து வயதுவரை அகராதியில் சொல்லியிருக்கிற அர்த்தம்தான் தெரிகிறது.

★ நாற்பது வயதுவரை அநுபவங்களின் அர்த்தம்தான் தெரிகிறது.

★ அதற்கு அப்புறம் எதிலுமே அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

அதோ தொலைவில் தெரிகிறதே அந்த நீலச் சிகரத்தின் அழகு நுனி. அதோடு இந்த மலையின் வாழ்க்கை முடிந்து விடுகிறது. அதற்கு அப்புறம் என்ன ஆரம்பமாகிறது என்று கேட்பதில் பயனில்லை. ஒன்று முடிந்தால் இன்னொன்று ஆரம்பமாகிக் கொண்டிருப்பதாகத் தான் அர்த்தம். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் ஒன்று முடிவதும் அந்த முடிவையே மறுபுறமாகக் கொண்டு மற்றொன்று தோன்றுவதும் உள்ளங்கையைத் திருப்பிக் காட்டினால் புறங்கையாகத் தெரிவது போலத்தான்.

ஆனால் எமரால்ட் காப்பி எஸ்டேட் உரிமையாளர் புதுங்கராவைப் பொறுத்த வரை இந்தத் தத்துவத்தில் ஒருபகுதிதான் உண்மை. மங்களூரிலிருந்து உதகமண்டலத்துக்குக் குடியேறி வாழத் தொடங்கிவிட்ட இந்தப் பதினைந்து வருட வாழ்க்கையில் அவர் அநுபவித்தும் கண்டும் உணர்ந்த எத்தனையோ முடிவுகளுக்கு மறுபுறமாக ஆரம்பமே பிறக்கவில்லை. அவருடைய முடிவுகள் யாவும் தம்மிலிருந்து எந்த ஆரம்பத்தையும் பிறப்பிக்காத மலட்டு முடிவுகளாய் வெந்த வித்துக்களாய் நிலைத்து விட்டன. அதாவது அந்த முடிவுகளிலிருந்து எந்த ஆரம்பமும் முளைக்கவில்லை. எந்தக் கிளையும் தோன்றிக் கிளைக்கவில்லை.

இங்கே இதோ இப்பொழுது இந்தப் பனிக் காலத்து மாலையில் உட்கார்ந்துகொண்டு கண் பார்வைக்கு எட்டுகிற ஊட்டிச் சிகரம் வரை பார்த்துக் கொண்டிருக்கிறாரே; இதே காரியத்தை எமரால்ட் எஸ்டேட்டின் பங்களா முகப்பிலிருந்து கடந்த நாலாயிரத் தெண்ணூறு நாட்களாகத் தவறாமல் செய்து கொண்டிருக்கிறார் அவர். நாலாயிரத்தெண்ணூறு நாட்களாக அல்லது பதினைந்து ஆண்டுகளாக - நடுவில் லீப் வருடங்களும் வந்திருக்கலாம் - ஆனால் அது அவருக்குத் தெரியாது. இந்த நீல மலைச் சிகரங்களுக்கு அப்பால் காலம் என்று ஒரு பொருள் நகர்ந்து ஓடியிருப்பதாகவே அவருக்குத் தெரியாது. இத்தனை ஆண்டுகளாக இந்த இடத்திலிருந்து அவர் பார்வைக்குத் தெரிந்த ஒரே முடிவு அந்தச் சிகரம்தான். அதற்கு அப்பால் அவருக்கு எதுவும் தெரிந்ததில்லை. அசோக மரத்தின் பச்சை இலை ஒன்றைப் பெயர்த்து நிறுத்தினாற் போல் செங்குத்தாக நிற்கிறதே அந்தச் சிகரத்தின் நுனியோடு அவருடைய பார்வையும் நினைவும் ஒருசேர ஒடுங்கி முடிந்து விடும். முடிந்து விடும் என்பது முக்கியமில்லையானாலும் அதற்கப்பால் படராதென்பது முக்கியம்.

'குறிக்கோள் குறிக்கோள்' என்று அடித்துக் கொள்கிறீர்களே அதுதான் என்ன? 'இதைச் செய்தே தீருவது' என்று எதையாவது ஒன்றை உறுதியாகக் குறிக் கொள்வதுதானே குறிக்கோள்? பரம்பொருளோடு ஒன்றுவதைக் குறியாக வைத்துக் கொண்டு பத்மாசனத்தில் உட்கார்ந்து தவம் செய்யும் துறவி. இலாபத்தைக் குறியாக வைத்துக் கொண்டு வியாபாரம் செய்யும் வியாபாரி இவர்கள் எல்லாரையும் போல எந்த ஓர் சித்தியையும் நினைக்காமல் எந்த ஓர் இலாபத்தையும் கருதாமலே அந்தச் சிகரத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஒன்றேகால் டஜன் வருடங்களைக் கழித்திருக்கிறார் புதுங்கராய். அந்தக் குறிக்கோளில் அவர் ஒரு நாள்கூடத் தவறியதில்லை. வெம்மை யறியாத பகலைப் பட்டாடையுடுத்தி என்னைத் தொலையாத வண்ணப் புதுப் பூக்களினுள் கண்ணைச் சிமிட்டிப் புன்னகை பூத்துக் கொண்டே உயரத்தில் வீற்றிருக்கும் சுந்தரப் பெண்ணைப் போல் கொலுவிருக்கும் பேரழகியான நீலகிரி நங்கையின் வாழ்க்கையில் இந்தப் பதினைந்து ஆண்டுகளில் எத்தனை எத்தனையோ புதுமைகள், எத்தனையோ மாறுதல்கள், எத்தனையோ வளர்ச்சிகள் ஏற்பட்டிருந்தன.... நேற்று வரை உருளைக் கிழங்கு வயலாயிருந்த இடத்தில் இன்றைக்குப் பங்களாக் கட்டிடம் தெரிகிறது. மஞ்சக் கௌடர் புதிய கிழங்கு சாகுபடிக்கு முன்னும் போட்டுக் கொண்டிருக்கிறார். சென்ற மாதம் வரை ஸ்டேன்சக்கும் நாமன் துரைக்கும் சொந்தமாயிருந்த கிரீன்பீல்ட் எஸ்டேட்டை வயநாட்டு நாயர் ஒருத்தர் விலைக்கு வாங்கி விட்டார். யூகலிப்டஸ் எண்ணெயையும் தம்முடைய 'சாமர்த்தியத்தையும்' சேர்த்துக் கண்ணாடிப் புட்டியில் அடைத்துப் பணம் பண்ணிக் கொண்டிருந்த மேட்டுப் பாளையத்துச் செட்டியார் ஒருவர் ரேஸ்கோர்சுக்கு எதிர்த்தாற் போல் மேட்டில் 'பிளஷர் லாட்ஜ்' என்று ஓட்டல் வைத்து விட்டாராம். இனி மேல் இந்த உதகமண்டலத்தில் பிளஷர் (சந்தோஷம்) வேறு எங்கேயாவது மீதமிருக்க முடியுமாவென்பதே சந்தேகம்தான்!

ஆனால் இந்த மாறுதல்கள் எல்லாம் புதுங்கராவின் குறிக்கோளைக் கலைத்துவிட வில்லை. அவருடைய மகிழ்ச்சியை யாராலும் பறிக்க முடியாது. காரணம்? மற்றவர்கள் மகிழ்ச்சி

படைய முடியாத – அல்லது 'மகிழ்வதற்கு இதில் என்ன இருக்கிறது?' - என்று மிக விரைவில் சலித்துப் போகக் கூடிய ஒன்றைப் பார்த்து அவர் மகிழ்ந்து கொண்டிருந்தார். அது அவர் மனத்துக்குப் பழகிப் போன அநுபவம். மற்றவர்கள் சொல்கிற மாதிரிச் சொன்னால் பழகிப் போன அசட்டுத்தனம்.

அந்தக் கருநீலச் சிகரத்துக்கு முன்னாலும் பல சிறிய சிகரங்கள் இருந்தன. பின்னாலும் சில இருக்கலாம். ஆனால் அவரைக் கவர்ந்தது அந்த ஒரே ஒரு சிகரம்தான். அது மட்டும் அவரைக் கவர்ந்ததற்கு எப்படிக் காரணம் கண்டுபிடித்துச் சொல்ல முடியாதோ அதே போல மற்றவை ஏன் அவரைக் கவரவில்லை என்பதற்கும் காரணம் கண்டுபிடித்துச் சொல்ல முடியாது. அவருடைய எஸ்டேட் பங்களாவின் முகப்பில் அவர் வழக்கமாக உட்காரும் இடத்திலிருந்து பார்த்தால் அது தான் பெரிதாக எதிரே தெரிந்தது. அதனால் அதுவே அவரைக் கவர்ந்திருக்கலாம் என்று நாமாக அநுமானம் செய்ய முடியும். ஆனால் புஜங்கராவ் அந்தக் காரணத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்.

அதற்குக் காரணம் என்று ஒன்றைக் கற்பிக்க முயல்வதையே ஒப்புக் கொள்ளாதவர் காரணத்தை எங்கே ஒப்புக் கொள்ளப் போகிறார்? எமரால்ட் எஸ்டேட்டின் சுற்றுப்புறத்தில் அவருக்கு எத்தனையோ நண்பர்கள் இருந்தனர். அவரைப் போலவே அவர்களும் காப்பி, தேயிலைத் தோட்டங்களின் முதலாளிகள். அவர்களில் சார்ல்வுட் என்று ஓர் ஆங்கிலேயர் இருந்தார். அவர் புஜங்கராவின் எஸ்டேட்டுக்குப் பக்கத்து எஸ்டேட்காரர். அந்த ஆங்கிலேயர் சில மாலை வேளைகளில் புஜங்கராவைச் சந்திப்பதற்கு வருவார். சார்ல்வுட் எதைப் பற்றியாவது சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருக்கிற போதுகளில் கூடப் புஜங்கராவின் செவிகள்தாம் அவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கும். அவருடைய இடுங்கிய சிறிய கண்களோ அந்தச் சிகரம் முடிகிற நுனியில் இருக்கும். ஒரு நாள் சார்ல்வுட் பொறுமையிழந்து புஜங்கராவிடம் இதைப் பற்றிக் கேட்டே விட்டார்.

"வாட் ஆர் யூ லுக்கிங் தேர்?" என்று தொடங்கித் தாம் அவரைப் பார்க்கிற போதெல்லாம் அவர் அப்படியே இருந்து வருவதைக் குறிப்பிட்டுச்





சொல்லிக் கேலி செய்தார் சார்ல்ஸட். புறங்கரால் அந்தக் கேலிக்கும் பதில் சொல்லவில்லை. புன்முறுவல் பூத்தார். அப்படிப் புன்முறுவல் பூத்தபோதும் அவருடைய கண்கள் வழக்கமான இலக்கில்தான் இலயித்திருந்தன - இதனால் சற்றே கோபமடைந்து விட்ட அந்த ஆங்கில நண்பர், 'அர்த்தமில்லாமல் எதையாவது பார்ப்பது சோம்பேறித்தனத்துக்கு அடையாளம்' என்ற கருத்தைக் கடுமையான ஆங்கில வார்த்தைகளில் தொடுத்துப் பொரிந்து தள்ளினார். நண்பரின் கோபத்தைக் கண்டு மேலும் சிரித்துக் கொண்டே தமது பார்வையைத் திருப்பாமலே

ஒரு கேள்வி கேட்டார் புஜங்கராவ். அது மிகவும் ஆழமான கேள்வியாயிருந்தது.

"மிஸ்டர் சார்ல்வுட்! அர்த்தம் அர்த்தம் என்று சொல்கிறீர்களே, அதுதான் என்ன? அர்த்தத்தின் அர்த்தத்தை முதலில் சொல்லுங்கள்....."

"இதற்குப் பதில் குழந்தைக்குக் கூடத் தெரியுமே மிஸ்டர் ராவ்! ஒரு வார்த்தையினால் குறிக்கப்படும் பொருள் அல்லது பயன் ஏதுவோ அதுதான் அதற்கு அர்த்தம்."

"நல்லது! இந்த உலகம் தோன்றிய முதல் நாழிகையின் முதல் விநாடியான யுகாரம்பத்தில் வார்த்தைகள் மட்டுமே பிறந்தன என்றும் அர்த்தங்கள் அதற்குப் பின்பே உண்டாயின என்றும் உங்கள் பைபிளில் சொல்லியிருக்கிறார்களே. அது உங்களுக்கு நினைவிருக்கிறதோ?" என்று கேட்டார் புஜங்கராவ்.

"தாராளமாக நினைவிருக்கிறது!"

"அதைப் போல் நான் இந்தச் சிகரத்தைப் பார்க்கத் தொடங்கிப் பதினைந்து வருடங்கள் ஆகியும் இந்த நோக்கு இன்னும் அர்த்தம் பிறவாத வெற்று வார்த்தையாகவே இருந்து வருகிறது. நமக்கு அர்த்தம் தெரியாத வார்த்தையை ;உயர்ந்த வார்த்தையை அதன் அர்த்தம் நமக்குத் தெளிவாகத் தெரியாத உயரத்தை உடையதென்று அறிந்திருக்கும்! நாம் காதலிப்பது உண்டா இல்லையா? இயற்கையின் அநுபவங்களைப் பற்றி அகராதியைப் போல் யாராவது இதற்கு இது அர்த்தம் என்று எழுதி வைத்திருக்கிறார்களோ? அர்த்தம் வார்த்தையைப் பொறுத்ததல்ல. அதனால் பின்பு எப்போதோ ஏற்படுவதற்கு இருக்கிற விளைவைப் பொறுத்துதான்....."



"இருக்கலாம்; ஆனால் மனிதர்கள்...., உயிரும் சதையுமாய் இருப்பவர்கள் அர்த்தம் பிறவாத காரியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பதை நான் வெறுக்கிறேன்...."

சார்ல்வுட்டின் ஆத்திரத்தைப் பார்த்துப் புஜங்கராவுக்குச் சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்தது. அவர் அடங்குகிற வரை நன்றாகச் சிரித்து விட்டு அந்த ஆங்கில நண்பருக்கு விடை கொடுத்து அனுப்பினார் அவர்.

புஜங்கராவின் வாழ்க்கையில் இதுவரை எந்த அநுபவத்துக்கும் அர்த்தம் பிறந்தது இல்லை. தம்முடைய இருபத்தெட்டாவது வயதில் காப்பித் தொழில் நுணுக்கங்களைக் கற்று வருவதற்காகத் தகப்பனாரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட போதும், ஆறடி உயரமும் நன்றாகப் பழுத்த ஆரஞ்சுப் பழத்தினும் சற்றே வெளுத்த சிவப்பு நிறமும் கொண்டு வெளிநாட்டுச் சூழ்நிலையில் வைத்துப் பார்த்தால் 'இவர் இந்தியர்தாமா?' என்று சந்தேகப்படக் கூடிய தம்முடைய தோற்றத்தினாலும் பிரேஸிலில் ஒரு வெள்ளைக்கார யுவதியைக் கவர்ந்து காதலித்து மணம் புரிந்து கொள்ள நேர்ந்தபோதும், மணம் புரிந்து கொண்ட சில மாதங்களிலேயே அந்தப் பெண் கார் விபத்தில் மாண்ட பெருந் துயரத்தின் போதும், அந்தத் துயரத்தோடும், ஒரு பெண்ணுக்குச் சிறிது காலம் கணவனாக இருந்தோம் என்ற நினைப்போடும் தாய்நாடு திரும்பி வந்த போதும், எப்போதும் அவருடைய வாழ்க்கையின் அர்த்தம் அவரே புரிந்துகொள்ளும்படி விளைந்ததில்லை. அவர் பிரேஸிலில் தங்கிக் கற்று வந்திருந்த காப்பிப் பயிர்த் தொழிலினாலும், மற்ற நுணுக்கங்களினாலும் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்குள் எமரால்ட் எஸ்டேட்டின் வளம் பெருகி வளர்ந்திருக்கிறது என்பதுதான் ஒரே விளைவு. ஆனால் இந்த விளைவை மட்டுமே தம்முடைய வாழ்வின் அர்த்தமாகக் கொள்ள அவர் தயாராயில்லை. வேறு ஏதோ ஓர் அர்த்தம் இருக்க வேண்டும் என்றே அவருக்குத் தோன்றியது. அந்த அர்த்தம் எது என்பதுதான் அவருக்கு இன்று வரையில் புலப்படவில்லை.

காரியமாகிய விளைவுக்குப் பிறகுதான் சில காரணங்கள் அழகாகத் தோன்றும். அதே போல் அர்த்தம் புரிந்த பின்புதான் அந்த அர்த்தத்தைப் பிறப்பித்த பதங்கள் முன்னைக் காட்டிலும் அழகாகத் தோன்றும். அவருக்கு அப்படித் தோன்றிய சமயங்களும் உண்டு.


புஜங்கராவ் தம்முடைய பதினைந்தாவது வயதில் மங்களூரில் ஹைஸ்கூல் படிப்புப் படித்த போது முதன் முதலாக 'எமரால்ட்' என்கிற ஆங்கில வார்த்தையைக் கற்றுக் கொண்டார். அந்த 'வார்த்தைக்குப் பச்சை நிறமுள்ள மரகதம்' என்று அப்போது அர்த்தம் சொல்லிக் கொடுத்திருந்தார்கள். ஆனால் அந்தப் பதத்தின் அர்த்தம் எவ்வளவு அழகு நிறைந்தது என்பது பள்ளிக்கூடத்திலும், வகுப்பறையின் வேத புஸ்தகமான அகராதியிலும் அவருக்குப் புரியவில்லை. தன் தகப்பனார் உதக மண்டலத்தில் எஸ்டேட் வாங்கியபோது தான் புஜங்கராவ் 'எமரால்ட்' என்ற வார்த்தைக்கு எவ்வளவு அழகான அர்த்தம் இருக்க முடியுமென்பதை விளங்கிக் கொண்டார்.

கவர்ச்சிகரமான கருநீலம் கலந்த அந்த மலைப் பிரதேசத்துப் பசுமையில் மனத்தைக் கொள்ளை கொடுத்த வெள்ளைக்காரன் ஒருவன் அகராதியிலுள்ள வார்த்தையையும் தன் மனத்தில் இருந்த கவித்துவத்தின் ஆசையையும் சேர்த்து அந்த இடத்தின் பெயராகச் சூட்டியிருந்தான். அந்த இடத்துக்குச் சூட்டியதால் அந்தப் பெயரின் பெருமையையே அதிகப்படுத்தி யிருந்தான்.

'எமரால்ட் - மரகதப் பச்சை'.

'கண்ணுக்கெட்டிய தூரம் வரை மேடும் பள்ளமுமாகப் பச்சைப் பட்டுடுத்தித் தன்னிச்சையாய்க் கிடந்து தூங்கும் பெண்ணழகி போல் தெரியும் இந்த மலைப் பகுதி எல்லாம் நிஜமாகவே மரகதமாயிருந்தால் எத்தனை இரத்


மிகவும்
ஆனந்தம்
அளிப்பது !
SATHE'S
MILK
CHOCOLATE


Bangle Bracelet
Expandable Bracelet
Model No. 92
Pat. Lic. No. 58926 - 56
"Bentex"
WATCHES & STRAPS
BRACELETS
A wide range of models to choose from.
SOLE AGENTS:
"Bentex" SALES CORPORATION.
BENTEX BLDG., TARDEO, BOMBAY 7.
MANUFACTURERS: COLLINS & CO., BOMBAY 7.
AVAILABLE AT ALL WATCH DEALERS


முயற்சியின் வெற்றியில் நாம் பெருமையடைகிறோம். கவர்ச்சியான தோற்றத்திற்குப் பளபளப்புடைய கருமையான கேசம் முக்கியம். அதற்குச் சிறந்தது வாஸ்மால்
அழகுடன் திகழும் கேசம் வெற்றிக்கு அறிகுறி!
வாஸ்மால் சிறந்த கூந்தல் தைலம். கூந்தலை கருமையாகச் செய்கிறது. கேசவளர்ச்சியை ஊக்குவிக்கிறது. தைலமாகவும், போமேடாகவும், மோசடி செய்ய முடியாத மூடியுடைய பாட்டில்களில் எல்லாக் கெமிஸ்ட்டுகளிடமும் கடைகளிலும் கிடைக்கும்.
கூந்தலின் இயற்கை வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின் சேர்ந்தது வாஸ்மால். கேசத்திற்கு அதிகப்படியான பாதுகாப்பை அளிக்கிறது
Yasmol

தின வியாபாரியாவது இதற்கு விலை கணிக்க முடியுமோ?' - என்று முதல் முதலாக அந்த எஸ்டேட்டுக்கு அப்பா தன்னை அழைத்துக் கொண்டு சென்றபோது தன்னுடைய பதினேழாவது வயதில் இளைஞன் புஜங்க ராவ் அந்த மலைப் பகுதியைப் பார்த்து நினைத்தான். பதினைவது வயதில் தான் படித்திருந்த 'எமரால்ட்' என்னும் பதத்துக்கு அகராதியில் எழுத முடியாத பாந்த அர்த்தத்தை அப்போதுதான் கண்ணாரக் கண்டான். அகராதியில் ஒரு வார்த்தைக்கு இருக்கிற அர்த்தத்தை விட அந்த வார்த்தை குறிப்பிடுவது எதுவோ அதையே அனுபவிக்கிறவன் உணர்கிற அர்த்தம் மிகவும் அதிகமானதென்று அவருக்குத் தோன்றியது.

இப்படியெல்லாம் நினைத்த மனம் கால் நூற்றாண்டுக்கு முற்பட்ட இளைஞன் புஜங்க ராவினுடையது தான். மங்களூரிலும், மைசூரிலும் பள்ளிப் படிப்பும், கல்லூரிப் படிப்பும் படித்த காலத்துப் புஜங்கராவ் வேறு. பிரேஸிலுக்குப் போய் இரண்டு மூன்று வருடங்கள் அங்கே தங்கி விட்டுத் தாய்நாடு திரும்பிய புஜங்க ராவ் வேறு. பிரேஸிலிலிருந்து தோட்டத் தொழில் நுணுக்கங்களை அறிவும், முன்பின் தெரியாத வெள்ளைக்கார யுவதியின் மனத்தில் ஆசையைக் கற்பித்ததால் நேர்ந்த புதிய உறவும், இறுதியில் அந்த உறவு அழிந்த வேதும் நினைவும் கொண்டு தாய் நாடு திரும்பிய புஜங்கராவ் வேறு.



பதினேழு வயதில் பார்த்த அதே பசுமை இன்னும் இன்றும் 'எமரால்ட்'இருக்கத்தான் இருந்தது. ஆனால் புஜங்க ராவின் மனத்தில் பசுமை குறைந்திருந்தது. இளமையில் தெரிந்தது போல அந்தப் பசுமைக்கும் அதைக் குறிக்க பெயருக்கும் விசேஷமாக எந்த அர்த்தமும் அவருக்குத் தெரியவில்லை. இங்கே திரும்பிய நாளிலிருந்து அவருக்குத் தெரிகிற ஒரே காட்சி அந்தச் சிகரம்தான். அதற்கும் இன்றுவரை அர்த்தம் தெரியவில்லை. சாதாரணமாக அர்த்தமே தெரியாதபோது விசேஷமாக எப்படி அர்த்தம் தெரியப் போகிறது?

அர்த்தமில்லாமலே எதையாவது தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது 'சோம்பேறித்தனத்துக்கு அடையாளம்' என்கிறார் சார்ல்வுட். ஆனால் அதிலிருந்தும் ஏதாவது ஓர் அர்த்தம் என்றாவது ஒரு நாள் பிறக்கும் பிறக்கிறவரை அதைப் பார்த்துக் கொண்டே இருப்பேன் என்கிறார் புஜங்கராவ். பத்து நிமிஷங்களுக்கு ஒரு படியும் மூன்று நிமிஷங்களுக்கு ஒரு சிகரெட்டுமாகக் குடித்துத் தீர்த்துக் கொண்டே சாயங்காலம் மூன்று மணியிலிருந்து இருட்டுகிறவரை ஒரே திசையில் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிற மனிதரைச் சார்ல்வுட் 'சோம்பேறி' என்று கூறியது கூட நியாயமாகவே இருக்கலாம். ஆனால் புஜங்க ராவ் அதை ஒப்புக் கொள்ள மாட்டார். காலையில் பதினொரு மணியிலிருந்து மாலை மூன்று மணி வரை நானூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள எமரால்டு காப்பி எஸ்டேட்டின் ஆபீஸ் நிர்வாகத்தைச் சுறுசுறுப்பாக அவர் கவனிப்பதாக மற்றவர்கள் சொல்கிறார்களே; அந்த வேளையில்தான் தமக்குப் பிடித்தமில்லாத எதையோ மந்தமாகவும், மெதுவாகவும் தாம் செய்துகொண்டிருப்பதாக அவர் உணர்ந்திருக்கிறார். உண்மையில் தாம் சுறுசுறுப்பாக இருப்பதாக அவர் உணர்கிற நேரம் எது தெரியுமோ?

ஒவ்வொரு நாளும் மாலை மூன்று மணியிலிருந்து இருட்டுகிற வரை ஒரு வேலையும் செய்யாமல் பங்களாவின் முகப்பில் உட்கார்ந்து கொண்டு கண் பார்வை விலகி விடாதபடி அந்தக் கடைசிச் சிகரத்தை அர்த்தமில்லாமல் பார்த்து அனுபவிக்கிறாரே, அதுதான் அவர் சுறுசுறுப்பான காரியத்தைச் செய்வதாய்த் தமக்குத் தாமே உணர்கிற நேரம்.

கருள் கருளாய் வெண் மேகங்கள் சுருட்டிக் கொண்டு படர்கின்ற சில கார்காலத்துப் பிற்பகல் வேளைகளில் விம்மி வோட்டிறவும் தன் செப்பு வெல்வெட் உதடுகளில் சிரிப்பு அரும்பப் பொன்நிறக் கூந்தல் தோள் பட்டைகளிலே சுருள் சுருளாய்ச் சரிய, ஜீவருடைய நிகழ்காலக் கற்பனை அவளுக்கு அணிவித்துப் பார்க்க ஆசைப்பட்ட இந்திய உடையில் அந்தச் சிகரத்தின் உச்சியில் அது முடியுமிடத்தின் மேல் கால்கள் பாவாமல் வந்து நிற்பதைப் போல் அவருக்குத் தோன்றும். ஆனால் அப்படித் தோன்றுவதிலும் அர்த்தம் ஏதும் இருப்பதாக அவர் உணரவில்லை. மேகச் சுற்றுகள் முடிகிற இடத்தின் கோடுகளில் தங்கத்தை உருக்கிப் பூசி பிடித்தாற் போல் கதிரொளி படர அந்தச் சிகரம் பொன் மலையாய்ப் பிரகாசிக்கிற கார் காலத்து மாலைகளில் அந்தவிடப் பிரகாசமான நிறத்தோடு அவருடைய காதலி அங்கே வந்து அதன் உச்சியில் சிரித்தபடியே நின்று கொண்டிருப்பாள். அதற்கும் அர்த்தமில்லை. விஷயமே கற்பனையாக இருக்கும்போது சத்தியமயமான அர்த்தம் எப்படி அதிலிருந்து பிறக்க முடியும்? அந்தச் சிகரத்தின் உச்சியிலிருந்து தேவலோகம் மிகவும் சமீபமோ என்று இந்த நாற்பத்தேழாவது வயதில் பதின்மூன்று வயதுப் பையனின் நினைவு அவ

ருக்கு வருவதுண்டு. அந்த நினைவுக்கும் அர்த்தமிருக்காது. 'எமரால்ட்' என்ற வார்த்தையின் அர்த்தத்தைக் கண்டு அநுபவித்தபோது பதினேழு வயதில் முதிர்ந்த பக்குவமான கற்பனை அவருக்கு ஒரு காலத்தில் வந்தது போல்இப்போது நாற்பத்தேழாவது வயதில் பதின்மூன்று வயதுப் பிள்ளைத்தனமான கற்பனை வருகிறது. பக்குவமும் முதிர்ச்சியும் இல்லாமல் குழந்தை நினைப்பாக வருகிறது. ஒன்றும் உடுத்துக கொள்ளாமல் - ஒன்றும் புனைந்து கொள்ளாமல் குழந்தை வருவது போல் தன் மேனியோடு வருகிறது. தன் மேனியோடு வருகிற கற்பனைக்கு அர்த்தம் இருக்க முடியாதுதான். பிரேஸிலில் இறந்து போன வில்லி வோட் ஹவுஸ் நினைவில் வந்து தோன்றுவதற்கு அர்த்தம் ஏது?

யட்சன் தன் காதலிக்கு மேகத்திடம் தூது சொல்லி யனுப்பியதாகக் காளிதாசன் பாடியிருப்பது போல் அந்தச் சிகரத்தின் நுனியில் வந்து கூடுகிற பரிசுத்தமான மேகங்களிடம் தேவலோகத்திலே போய்ச் சொல்லும்படி வில்லி வோட் ஹவுஸுக்கு ஏதாவது சொல்லி அனுப்ப வேண்டும் போல் அவருக்குத் தோன்றும். ஆனால் மறுகணமே அப்படிச் செய்ய நினைப்பதில் அர்த்தமில்லை என்று புத்தி மேலெழுந்து அவரை அடக்கி விடும்.

அந்தச் சிகரம் இருக்கிறதே. அது ஒவ்வொரு பருவ காலத்தில் ஒவ்வொரு விதமாக நிறம் மாறி அழகு காட்டும். கரு நீலக் கவர்ச்சி ஒரு சமயம், கரும் பசுமைக் கவர்ச்சி ஒரு சமயம். வயலெட் மை - அதாவது காப்பிங் பென்ஸில் நீரில் குழப்பினாற் போன்ற நிறத்தோடு கூடிய கவர்ச்சி ஒரு சமயம், சாம்பல் நிறங்கலந்த பசுமை ஒரு சமயம், - இன்னும் வார்த்தைகளால் சொல்ல முடியாத எத்தனை எத்தனையோ நிறச் சேர்க்கைகள் அந்தச் சிகரத்தில் நிகழும். அந்தச் சிகரத்தின் பருவ காலத் தோற்றங்களிலிருந்து தான் நிறங்களைப் பற்றிய நினைப்பே அவருக்கு இன்னும் மறந்து விடாமல் இருந்தது.

பளிச்சென்று வயலெட் மை உருகி வழிவது போல் அந்தச் சிகரம் காட்சியில் தென்படுகிற சில நாட்களில் எப்போதோ ஏதோ ஆங்கிலப் புத்தகத்தில் படித்திருந்த ஒரு காதல் கவிதையிலிருந்து இரண்டே இரண்டு வார்த்தைகள் மட்டும் அவருக்கு நினைவு வரும். அதில் அந்தப் பெண்ணின் இதழ்களை வருணிக்க 'ஸில்க்கன் லிப்ஸ்' -பட்டுமயமான உதடுகள் என்ற பதங்களை அதைப் பாடிய கவி பயன்படுத்தியிருந்தான். அந்தப் பதங்களின் அர்த்தம் அவருக்கு நினைவு வருகிற விநாடிகளில் அந்தச் சிகரத்தின் உச்சியில் மிக நளினமாய் மடிந்து பனி ருத்துப் பாளும் இரண்டு செம்பட்டு ரோஜாப் பூவின் இதழ்கள் தோன்றிச் சிறிது சிறிதாக வளர்ந்து அந்த இடத்தில் வில்லி வோட் ஹவுஸ் எழுந்து உருவாகி நிற்பாள். அந்தத் தோற்றம் மறைந்தவுடன் அந்த வார்த்தைகள் அந்த நினைப்பு யாவும் அர்த்தமின்றி மறைந்து விடும். கடைசியில் புஜங்க ராவும் அவருடைய அந்தச் சிகரமும் தான் அர்த்தமில்லாத வார்த்தைகளாய் அங்கே மீதமிருப்பார்கள்.

இனிமேலும் வில்லிவோட்ஹவுஸைப் பற்றி நினைப்பதே அசட்டுத்தனமல்லவா? அவள்தான் இன்றைக்குப் பதினறு வருடங்களுக்கு முன்பே கார் விபத்தில் மாண்டுபோய் விட்டாளே? பதினறு வருடங்களாக ஒரே பெண்ணை நினைத்துக் கொண்டிருப்பது பெரிய காரியம்தான், அதுவும் அவள் இறந்து போன பின்பும்? மனிதர்களிலும் இராமர்கள் இருக்கிறதைத் தானே காட்டுகிறது இது! வாழ் நாள் முழுதும் 'பிற மாதரைச் சிந்தையாலும் தொடேன்' - என்று ஒரே பெண்ணைத் தவிர வேறு யாரையும் நினைக்காததனால் தான் இராமனுக்குக் காவியப் பெருமை. அப்படி நினைத்து விட்டதுதான் இராவணனுக்குச் சிறுமை. புஜங்கராவ் எந்தக் காவியத்துக்கும் நாயகனாவதற்கு விரும்பவில்லை... பிரேஸிலில் வில்லிவோட் ஹவுஸுக்கு நாயகனாக இருந்த போதே தாம் ஒரு நடமாடும் காவியத்துக்கு நாயகனாக இருந்ததாகத்தான் அவர் எண்ணிக் கொண்டிருந்தார். தம்முடைய வாழ்க்கையில் அவர் ஒரே ஒரு முறைதான் மிகச் சிறந்த காவியத்தை அநுபவித்திருக்கிறார். பொன் அவிழ்ந்து கொட்டுகிறாற் போன்ற நிறத்தில் கொடியுடலும், கருண்ட கேசமும், பட்டுச் செவ்விதழ்களும், முத்துப் பல் வரிசையுமாக வில்லி வோட்ஹவுஸ் என்ற பெண் அவரைக் காதலித்த சமயம் தான் அது. அவள் இருந்தவரை தான் அந்தக் காவியாநுபவத்துக்கு அர்த்தமும் இருந்தது. இப்போது நினைவுகள் மட்டுமே இருந்தன. அவற்றுக்கு எந்த அர்த்தமும் இருந்ததாகச் சொல்ல முடியாது. அதைப் போலவே ஒரு காலத்தில் எமரால்ட் என்ற வார்த்தைக்குக் காவிய மயமாக அவர் கண்ட அர்த்தமும் இப்போது அவருக்கு மறந்தே போய் விட்டது. ஆனால் அந்தக் கருநீலப் பச்சை மலைவெளி இன்றும் அப்படியே மறையாமல் இருக்கிறது. ஆம்! அந்த மலைகளைத் தூரத்திலிருந்து பார்க்கும் போது அவற்றில் நிச்சயமாக ஒரு நிறம் தெரியவில்லை. கருமை. நீலம்,பசுமை,மூன்றும் கலந்து மொத்தத்தில் ஏதோ ஒரு நிறமாகத் தெரிகின்றன. அது கவர்ச்சியாயிருக்கிறது. ஏதோ ஒரு வகையில் அழகாகவும் இருக்கிறது.

புஜங்க ராவைப் பொறுத்த மட்டில் என்றோ ஒரு நாள் அது கவர்ச்சியாயிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். இப்போது அந்தக் கவர்ச்சியின் அர்த்தம் அவருக்குப் புரியவில்லை. வார்த்தைகளின் அர்த்தத்துக்கும் மனிதனுடைய வயதுக்கும் ஏதாவதொரு நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதோ. என்னவோ? பதினைந்து வயது வரை அகராதியில் சொல்லியிருக்கிற அர்த்தந்தான் தெரிகிறது. நாற்பது வயதுவரை அநுபவங்களின் அர்த்தம்தான் தெரிகிறது. அதற்கப்புறம் எதிலுமே அர்த்தமிருப்பதாகத் தெரிவதில்லை. பூக்களின் மணத்தைப் போல் மணத்தைச் சுமந்து கொண்டிருந்த பொருள் வாடிக் கசங்கிய பின் ஒன்றுமில்லாமற் போவதுதான் வார்த்தைகளின் அர்த்தமோ என்னவோ?

புஜங்க ராவின் வாழ்க்கை எத்தனையோ சமயங்களில் எத்தனையோ காரணங்களால் அர்த்தமிழந்து அல்லது அர்த்தமழிந்து போயிருக்கிறது. கடைசியில் அது நிரந்தரமாகவே அர்த்தமற்றுப் போய் விட்டது. இனி அதிலிருந்து அர்த்தம் பிறவாது. வில்லி வோட்ஹவுஸின் சாவுக்குப் பிறகு அவருடைய வாழ்வில் அவள் எந்த இடத்தை நிரப்பி அர்த்தமளித்துக்கொண்டிருந்தாளோ,

அந்த இடமே அர்த்தமற்றுப் போய்விட்டது. அவர் தாய்நாடு திரும்பிய நாலைந்து ஆண்டு களில் தகப்பனார் மூப்பினால் மரணமடைந்து விட்டார். தகப்பனாருடைய மரணத்துக்குப் பின்பு அவருடைய தாயும் அதிக நாட்கள் இருக்கவில்லை. புஜங்கராவின் சகோதரிகளில் மூத்தவள் தெற்குக் கனராப் பகுதியில் ஏதோ ஓர் ஊரில் கணவனோடு இருந்தாள். அவள் கணவன் ஒரு தாசில்தார். இளைய சகோதரி மைசூரில் கணவனோடு இருந்தாள். அவ ளுடைய கணவனுக்கும் ஏதோ பெரிய உத்தியோகம்.

புஜங்க ராவ் மட்டும் அப்படியே இருந்து விட்டார். அவரிடமிருந்து தீபாவளி தவறாமல் இரண்டு சகோதரிகளுக்கும் முழுதாக ஆயிரம் ஆயிரம் ரூபாய்க்குச் 'செக்' போகும். அவர் களும் எப்போதாவது கோடைக்காலங்களில் ஊட்டிக்கு வருகிற சாக்கில் தமையனுடன் எமரால்ட் எஸ்டேட்டில் இரண்டு மூன்று வாரங்கள் தங்கள் தங்கள் கணவரோடு வந்து தங்கி விட்டுப் போவார்கள். தமக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள் என் பதை நினைத்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பமாக அவர்களுடைய வருகையைப் புஜங்க ராவ் எண்ணிக் கொள்வார். அதற்கு மேல் அதிகமான அர்த்தம் ஏதும் அவர்களுடைய வரவினால் அவருக்குப் புரிந்ததில்லை. புரிந்த தாக அவர் உணர்ந்ததும் இல்லை. அவர்கள் ஊர் திரும்பி விட்டால் வழக்கம் போல் அந்த நீலச் சொர்க்கத்தின் தனிமையோடு அவ ருடைய நாட்களும் நினைவுகளும் முடிந்து விடும். எப்போதாவது மிஸ்டர் சார்ல்வுட் 'வாட் ஆர் யூ லுக்கிங் தேர்?' என்று கேட்டுக் கொண்டே புஜங்க ராவின் பங்களாவுக்குள் நுழைந்து அவர் தருகிற தேநீரைக் குடித்து விட்டு அவரையே சோம்பேறி என்று திட்டிய பின் விடைபெற்றுக் கொண்டு வாக்கிங் போய் விடுவது வழக்கம். வருடக் கணக்கில் ஒரே பங்களாக் காம்பவுண்டை விட்டு வெளியேறா மல் இருக்கிற மனிதனைப் பார்த்து யாருக்குத் தான் அருவருப்பு ஏற்படாது? எமரால்ட் எஸ்டேட்டின் புரொப்ரைட்டர் ஒரு பைத் தியம் என்ற தீர்மானத்தை மிஸ்டர் சார்ல் வுட் மார்ட்டின் நீண்ட நாட்களுக்கு முன்பே செய்து கொண்டு விட்டாலும் அந்த மலைக் காட்டில் 'குட்மார்னிங் குட் ஈவினிங்' சொல்லிக் கொள்வதற்கு அந்த ஒரு பைத்திய மாவது மீதமிருக்கிறதே என்று திருப்திப் படவும் இடமிருந்தது. மிஸ்டர் ராவ் இல்லா விட்டால் காலையில் எழுந்தவுடன் நிலைக் கண்ணாடியில் தம்முடைய உருவத்தையே, திரும்பிப் பார்த்துத் தமக்குத் தாமே குட் மார்னிங் சொல்லிக் கொள்ளும்படி ஆகி விடுமோ என்ற பயம் சார்ல்வுட்டுக்கு உண்டு. அதனால்தான் எப்போதாவது வாக்கிங் புறப்படுகிற சமயத்தில் 'புஜங்க ராவ் நிச்சயமாக வாக்கிங் வர மாட்டார்' என்று தெரிந்திருந்தும் அவரை அழைக்க வருவது போல் ஒரு நடை தலையைக் காட்டி விட்டுப் போவார் மிஸ்டர் சார்ல்வுட். 'வாட் ஆர் யூ லுக்கிங் தேர்?' என்ற கேள்வியோடு உள்ளே நுழைந்த மூன்றாவது நிமிஷத்தில் தேநீர்க் கோப்பையைக் கீழே வைத்து விட்டு, 'ஐ ஆம் டேக்கிங் லீவ் மிஸ்டர் ராவ்' என்று புறப்பட்டு விடுவார் துரை. அதற்கு மேல் அங்கு நிற்கப்பொறுமை இருக்காது அவருக்கு.

'நான் ஒரே திசையை அலுக்காமல் பார்ப் பதைக் கேலி செய்கிற இந்த வெள்ளைக்காரன் என்னைப் பார்க்கும்போதெல்லாம் ஒரே கேள்வியையே அலுக்காமல் திரும்பத் திரும் பக் கேட்டுக் கொண்டிருக்கிறானே?'—என்று எண்ணிச் சில சமயங்களில் புஜங்க ராவ் மனத்துக்குள் சிரித்துக்கொள்வதுமுண்டு. அது வும் அர்த்தமில்லாத சிரிப்புத்தான். எப்போ தாவது பங்களாவின் முன்கூடத்தில் மாட்டி யிருக்கிற லில்லி லோட்டஸ்லியின் புகைப்படம் அவள் கைநிறைய மலர்க் கொத்துக்களை ஏந்திக் கொண்டு தம்முடன் நிற்கிற மணக் கோலப் படம் - அவரைப் பார்த்துச் சிரிப்பது போல் ஒரு பிரமை உண்டாகும். அப்போது எதிரே உயிரோடு நின்று சிரிக்கிற ஒருவருக் குப் பதில் சிரிப்புச் சிரிப்பது போல அவரும் பதிலுக்கு அர்த்தமில்லாமல் சிரிப்பார். அவ ருடைய உதடுகளில் அந்தச் சிரிப்பின் கடைசிச் சுவடு மறைவதற்குள் கண்கள் திரும்பி அந்தச் சொர்க்கத்தைப் பார்க்கத் தொடங்கி விடுவது உண்டு.

இப்படியே நாட்களும் வாரங்களும், மாதங்களும், வருடங்களும் கழிந்தன. ஒரு விதமான அர்த்தமுமின்றிக் கழிந்தன.

க் க் க்

நீலகிரியின் இருவிமாப் பருவமாகிய கோடைக்காலம். சித்திரை மாதத்துப் பௌர்ணமி. எமரால்ட் எஸ்டேட் நிலா

ஒளியில் பனி படர்ந்த சாம்பல் நிற நீலத்தில் குளித்து மின்னுகிறது. புஜங்க ராவ் அந்தச் சிகரத்தைப் பார்த்தபடி பங்களா முகப்பில் உட்கார்ந்திருந்தார். சூடாக டீ குடிக்க வேண்டும் போலிருந்தது அவருக்கு. வேலைக்காரன் லீவு வாங்கிக் கொண்டு ஊருக்குப் போயிருந்தான். அவனுக்குச் சமீபத்தில்தான் கலியாணமாகி யிருந்தது. சிகரெட் பாக்கெட்டுகளை எல்லாம் தேடிச் சோதனை போட்டாயிற்று. எல்லாம் காலி. தேநீரோ, சிகரெட்டோ, எது வேண்டுமானாலும் ஐந்தாறு மைல் போக வேண்டும். அப்போது நிலா ஒளியில் அந்தச் சிகரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட்டு விடவும் அவருக்கு மனமில்லை. சிகரெட்டோ, தேநீரோ குடிக்கவும் ஆசையா யிருந்தது.

நீண்ட நாட்களுக்குப் பின் புஜங்கராவுக்கு விநோதமானதொரு விருப்பம் உண்டா யிற்று. பதினைந்து வருடங்களுக்குப் பின்பு முதல் முறையாகத் தானே டிரைவ் செய்யக் காரை எடுத்தார் அவர். நிலா ஒளியில் சாம்பல் நிறம் பூத்துக் கிடந்த அந்த மலை வீதியில் காரைச் செலுத்தியபடி தம்முடைய இலட்சிய சிகரத்தைப் பார்த்துக் கொண்டே புறப்பட்டார் அவர். மின் விளக்குகள் புள்ளி புள்ளியாக மின்னுவதிலிருந்து அந்தச் சிகரத் தின் மேலும் ஓர் ஊர் இருப்பதை அவரால் அநுமானம் செய்ய முடிந்தது. அவ்வளவு மின் சாரவிளக்குகள் உள்ள இடத்தில் சிகரெட்டும் தேநீரும் கிடைக்கிற கடை ஒன்றாவது இருக்க வேண்டுமென்பது அவர் எண்ணம். எமரால்டு எஸ்டேட்டிலிருந்து வேறு திசையில் மிகவும் பக்கத்திலேயே ஊர்கள் இருந்தன. ஆனால் அங்கெல்லாம் போக அவருக்கு மனம் இல்லை. அவருடைய நோக்கம் இரண்டு பலன்களைக் கொண்ட ஒரே நோக்கம். கடைக்கும் போக வேண்டும். அந்தச் சிகரத்தையும் பார்த்துக் கொண்டே போக வேண்டும். நிலவைத் தன்னுடைய உச்சி நுனியில் பிடித்துச் சூட்டிக் கொண்டிருப்பது போலப் பரிபூரணமான அழகுடன் தெரிகிற அந்தச் சிகரத்தைப் பார்ப்பதிலிருந்து தமக்குச் சொந்தமான காலத்தில் விநாடி நேரம் கூட வீணா காமல் இருக்க வேண்டும் என்பதுதான் அவ ருடைய ஆசை. சிகரங்களைச் சுற்றிக் கொண்டிருக்கிற பாம்பு மாதிரி மலை ரஸ்தா ஏறியும் இறங்கியும், வளைந்தும், நெளிந்தும் முடிவில்லாமல் போய்க் கொண்டேயிருந்தது. சிகரமும் அருகில் வருவதாயில்லை.

ஒவ்வொரு நாளும் தாம் வழக்கமாகப் பார்க்கிற இடத்திலிருந்து அந்தச் சிகரம் எவ்வளவு தொலைவிலிருக்கிறது என்று புஜங்க ராவினால் புரிந்து கொள்ள முடிந்ததில்லை. ஆனாலும் அவர் போகிற வழியிலிருந்து பார்வை யில் அது தெரிந்து கொண்டுதான் இருந்தது. அது பார்வையிலிருந்து மறைந்திருந்தால் அந்த இடத்திலேயே காரை நிறுத்தி மறுபடியும் அது பார்வைக்குத் தெரிகிற வழியாகக் காரை ஓட்டிக் கொண்டு போயிருப் பார் புஜங்கராவ்.

இரண்டு கைகளும் நிறையப் பல நிற மலர்க் கொத்துக்களை ஏந்திக் கொண்டும் அந்தச் சிகரத்தின் மேலுள்ள நிலாவையே குண்ட லமாகப் பிடித்துக் கொண்டும் வின்னி லோட் – ஹவுஸிலிருந்து அதன் நுனியில் நின்றுகொண்டு சிரிக்கிறாள். அதே காட்சியை இன்னும் ஒரு கணம் பார்க்க வேண்டுமென்றும் அப்புறமும் முடிவற்ற பலகணங்கள் அதையே தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் புஜங்கராவ் எல்லையற்றுப் பொங்கும் ஆசை யோடு நினைக்கத் தொடங்கிய விநாடியில் சாலை அந்தச் சிகரம் பார்வையிலிருந்தே மறையும்படியானதொரு திருப்பத்தில் திரும்பி விட்டது.

'சீ! சீ! இதென்ன அர்த்தமில்லாத பாதை' என்று சொல்லிடங்காத வெறுப்போடு கூறிக் கொண்டே புஜங்கராவ் ஸ்டீயரிங்கை ஒடித்தார். தாம் அதைச் செய்தது மட்டுமே அவருக்குத் தெரியும்.

* * *

பனிக் கோலமான நீலகிரியில் பொழுது புலர்ந்தது. சூரியன் அந்தச் சிகரத்துக்கு மேலேயும் வந்து 'எமரால்ட்' என்ற வார்த் தைக்கு நிதர்சனமான அர்த்தத்தை நிரூ பணம் செய்து மரகதப் பச்சையை மினுக் கிக்கொண்டிருந்த போது, 'குட் மார்னிங் மிஸ்டர் ராவ்!' — என்று கூறியபடியே வழக்க மாகக் கேட்கிற அடுத்த கேள்வியின் முதற் படியாக 'வாட் ஆர் யூ....' என்று தொடங் கிய சார்லவுட் எதிரே காலியாயிருந்த சேரைப் பார்த்துத் திகைத்தார். திகைப் போடு திரும்பி அந்தச் சிகரத்தைப் பார்த் தார். அது அங்கேதான் இருந்தது. எமரால்ட் எஸ்டேட் பங்களாவில் கூர்க்கா ஓடி வந்து துரைக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில், முதலாளி முந்திய நாள் இரவு ஒரு மணிக் குக் காரைத் தானே டிரைவ் செய்து கொண்டு புறப்பட்டுப் போனபோது தான் மெயின் கேட்டைத் திறந்துவிட்டதாகச் சொல்லி அவர் இதுவரை திரும்பவில்லை என்பதையும் கூறி அவர் சென்ற சாலையின் திசையையும் காண்பித்தான்.

சார்லவுட் உடனே அந்தக் கூர்க்காவையும் ஏற்றிக் கொண்டு தம்முடைய ஜீப்பில் அதே சாலையில் விரைந்தார். நீண்ட தொலைவு சென்ற பின்பு சாலை திரும்பி ஒரு பயங்கர மான பள்ளத்தாக்கை ஒட்டிக் கீழிறங்கிச் செல்கிற போது ஓர் இடத்தில் ஜீப்பை நிறுத்தி இறங்கி முகம் கோரமாகி ஆயிரம் கோணலாக வக்கரித்துக் கொள்ளும்படி போக 'வாட் எ பிட்டி சேப்...' என்று கீழே பார்த்து உச்சுக் கொட்டினார் சார்லவுட் மார்ட்டின். அதற்கு மேல் அவருக்குச் சொல்ல வரவில்லை. வார்த்தைகளும் கிடைக்கவில்லை. சொல்லி யிருந்தாலும் அர்த்தமுள்ள சொற்களாக அப் போது அவருக்குக் கிடைத்திருக்காது.

'இன்னதென்று அர்த்தம் தெரியாமலே சில உயர்ந்த வார்த்தைகளை காதலிப்பது போல் அந்தச் சிகரத்தையும் தாம் காத லிப்பதாக' எப்போதோ ஒரு சமயம் புஜங்க ராவ் கூறியது சார்லவுட்டுக்கு நினைவு வந்தது. புஜங்கராவ் காதலித்த அந்த அர்த்தமில்லாக் காதலுக்கு இன்று ஏதோ ஒரு வகையில் அர்த்தம் பிறந்து விட்டதாகத் தோன்றியது.

ஆனால் அந்த அர்த்தம் பிறந்த போது அதற்குரியவர் இறந்திருக்க வேண்டாம் என்று எண்ணி அநுதாபப்பட்டார் சார்லவுட்.



இந்தப் பகுதியைத் தொடர்ந்து படிக்கப் போகிற வாசகர்களுக்கு முதலில் சில வார்த்தைகள். செல்வம் சேர்ப்பது எப்படி? அழகாகத் தோற்றமளிப்பது எப்படி? நண்பர்களோடு பழகுவது எப்படி? இன்னும் இப்படியே தொடங்கி எப்படி என்ற கேள்விக் குறியோடு முடியும் பல புத்தகங்களைப் போல் வாசகர்களுக்குக் கடினமான சுமைகளை முடிவான பயனாகத் தருவது இந்தப் பகுதியின் நோக்கமல்ல.

இதில் எதைச் சொல்லவில்லை என்பதை முதலில் சொல்லி விட்டேன். இனிமேல் எதைச் சொல்லப் போகிறேன் என்று சொல்ல வேண்டியது அநாவசியம். இன்னும் சுருக்கமாக விளக்க வேண்டுமானால் இதில் எதைச் சொன்னால் உங்களுக்குச் சிரமமோ அதைச் சொல்லப் போவதில்லை. எதைச் சொன்னால் உங்களுக்குச் சிரமமில்லையோ அதை எல்லாம் இதில் சொல்லப் போகிறேன்.

இரண்டு பக்கமும் மரங்கள் நிறைந்த சாலையில் நீங்கள் எப்போதாவது சுதந்திரமான நினைவுகளோடு சுதந்திரமான சூழ்நிலையில் கைவீசி நடந்திருக்கிறீர்களா, இல்லையா? அந்தச் சமயங்களில் எதிரே பார்ப்பவற்றை எப்போதோ பார்த்தவற்றை, அல்லது இனிமேல் பார்க்கப் போகிறவற்றைப் பற்றி மனம் போனபடி சிந்திக்கிற பழக்கம் உங்களுக்கு உண்டோ?

எப்போதோ யாரிடமோ கேள்விப்பட்டது. இன்றே கேள்விப்பட்டுக் கொண்டிருப்பது. நாளைக்குக் கேள்விப்படப் போவது. இப்படி எதையாவது பற்றி அது ஒரு கடினமான சிந்தனை என்ற களைப்பை உணராமல் பசி நேரத்து உணவுபோல் இயல்பாக ஏற்றுக்கொள்கிற சந்தர்ப்பங்கள் உங்களுடைய வாழ்வில் ஒவ்வொரு கணமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கலாம்.

ஏற்படாவிட்டால் இதுவரை அப்படி ஏன் ஏற்படவில்லை என்பதையாவது சாதாரணமாகச் சிந்திக்கத் தொடங்கியிருப்பீர்கள். எந்த விஷயத்தைப் பற்றியும் சுதந்திரமாகச் சிந்திக்கிற பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அப்புறம் நாமாகத் தவிர்க்க முயன்றாலும் நம்மிடமிருந்து போகாது அந்தப் பழக்கம்.

ஒரு மனிதனுக்கும் ஒரு குட்டிச்சுவருக்கும் என்ன வித்தியாசம்? 'மனிதன் வாழ்கிறான்! சுவர் நிற்கிறது' என்றான் வால்டர் பேடர்.

நாம் வாழ்கிறோம். சுறுசுறுப்பாக ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொன்றையும் உற்சாகமாகச் சிந்தித்து உற்சாகமாக முடிவு செய்துகொண்டு வாழ்கிறோம் என்பதை நினைப்பதற்கு அடையாளம் வியாபாரத்தில் கூட்டிக் கழித்துப் பார்ப்பதைப் போன்ற லாப நஷ்டக் கட்டுப்பாடில்லாத துறுதுறுப்பான சிந்தனைதான். வைகறை வேளையில் தாமரைக் குளத்தைச் சுற்றித் திரியும் வண்டுகளைப்போல் சுறுசுறுப்பாகச் சிந்திக்க வேண்டும். எதைப் பற்றி என்கிறீர்களோ? எதைப்பற்றி முடிகிறதோ, அதைப்பற்றி ஏதாவது சிந்தியுங்கள். அழகாகவும். இளமையுள்ளதாகவும்— (முதியவர்கூட இளமையான சிந்தனையைச் சிந்திக்கலாம்) நகைச் சுவையாகவும் ஏதாவது சிந்தியுங்களேன். முதியவர்கள் இளமையாகச் சிந்திக்கவும் நகைச்சுவையாகச் சிந்திக்கவும் முடியாதானால் அந்தக் கிழவன் ஷா சாகிற வரை அப்படிக் கோமாளித்தனம் பண்ணியிருக்க முடியுமோ ஐயா?

உங்களிடம் இளமை இல்லையானாலும் நீங்கள் சிந்திக்கிற விஷயத்துக்கு இளமை இருக்கும். ''தயவு செய்து எதையாவது வேடிக்கையாகச் சிந்தியுங்கள் சார். எல்லாவற்றையுமே கடுஞ் சிந்தனைகளாக்க வேண்டாமே!'' என்று யாரோ



மனம்போனபடி

வடவேங்கடவன்

உற்சாகமான மனிதர் இப்போது உங்களுக்குக் குரல் கொடுக்கிறார்.

வாருங்கள்! எதைப் பற்றியாவது மன நிலத்துக்குள்ளே வரப்புப் போடாமல் நம்முடைய விருப்பம் போலச் சிந்தித்துப் பார்க்கலாம்.



புது ஊரா ? பழைய ஊரா ?

பட்டினத்துக்கு வந்து நாலைந்து மாதங்கள் ஆன பின் நான் என்னுடைய சொந்த ஊருக்குச் சென்ற மாதம் போயிருந்தேன்.

''என்ன சார் புது ஊர் எப்படி இருக்கிறது?'' என்று என் நண்பர்கள் எல்லாரும் இவன் திரும்பி எப்போதாவது வந்தால் இந்தக் கேள்வியைத்தான் கேட்க வேண்டும் என்று முன்பே தங்களுக்குள் கூடிச் சதித் திட்டம் வகுத்து வைத்துக் கொண்டதைப் போலக் கேட்டார்கள். ஒரு வார்த்தைகூட வித்தியாசப் படாமல் எல்லாரும் இதே கேள்வியைக் கேட்டால் பிறந்த மண்ணின் மேல் ஆசையோடு ஊர் திரும்பியவனுக்குக் கோபம் வராதா என்ன?

''பழைய ஊர் எப்படி இருக்கிறதென்று நீங்கள் எல்லாரும் முதலில் சொல்லுங்கள். அப்புறம் புது ஊரைப் பற்றி நான் சொல்லுகிறேன்'' என்றேன். மதுரையிலிருந்து மெட்ராசுக்குக் குடியேறினவனுக்கு மெட்ராஸ் புது ஊர். மெட்ராஸிலிருந்து மதுரையில் வேலையாகிப் போகிறவனுக்கு மதுரை புது ஊர். எது பழையது? எது புதிது?

ஆனால் உண்மையில் இந்த மதுரையும் மெட்ராஸும் இருந்தபடியேதான் இருக்கின்றன. இமர் இடரென்று இரண்டொரு ஆட்கள் மாறிப் போவதனால் இந்த ஊர்களும் பழையதாகவோ, புதிதாகவோ மாறிவிடப் போவதில்லை. இவ்வாறு மனம் போனபடி நினைத்துக் கொண்டு நான் சிரித்தேன். நண்பர்களுக்கு என் சிரிப்புப் புரியவில்லை.

''இது என்ன புது தினுசாகச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஒரு பழைய நண்பர்.

ஓஹோஹோ! ஆபத்து சார்! ஆபத்து. நான் சிரிப்பதுகூட மெட்ராஸுக்கு வந்தப்புறம் புதிதாகியிருப்பதாக நீங்கள் நினைத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது?


போகட்டும்! நண்பர்கள் தானே? மனம் போனபடி கேட்டு விட்டார்கள். அதைப் போலவே மனம் போனபடி நானும் சிந்தித்து விட்டேன். மன்னித்து விடலாம் அவர்களையெல்லாம்.

ஏன் இந்தப் 'பிழைப்பு ?'


''அவன் தன்னுடைய கடமையில் தவறிப் போய் விட்டான்'' என்று தன் பெற்றோர்களை முதுமையில் இன்னலுற விட்டுவிட்ட ஒரு மகனைப் பற்றி ஒரு பெரியவர் நேற்று என்னிடம் குறைப் பட்டுக் கொண்டார். அவரே இன்று காலையில் மறுபடியும் என்னிடம் வந்து ''சார் தெரியுமோ சங்கதி? அந்தக் கிராதகனுடைய அப்பா இன்று அதிகாலையில் தவறிப் போய்விட்டார்'' என்றார். அவர் கூறிய இரண்டு வாக்கியங்களிலும் **'தவறிப் போய் விட்ட'** விவரம் எனக்குப் புரிந்தது. 'மகன் (கடமையில்) தவறிப் போய் விட்டான். தந்தையும் (உயிர்) தவறிப் போய் விட்டார்' என்று நினைத்துச் சிந்தனைக்குள்ளேயே 'தவறிப் போய்க் கொண்டு' இருந்தேன் நான்.

''இப்படிப் பெற்றோர்களை அநாதையாகச் சாகவிடுவது ரொம்பப் பெரிய பிழை சார். அவனுடைய மகன் போயும் போயும் இந்தப் பிழைப்புப் பிழைத்திருக்க வேண்டாம்'' என்றார் அவர் மீண்டும்.

நான் மறுபடியும் நினைத்தேன். 'பிழை' என்றால் தவறு என்று அர்த்தம் கொள்கிறார்கள். 'பிழைத்தான்' என்றால் வாழ்ந்தான் என்று அர்த்தம் கொள்கிறார்கள். பிழைத்தல் என்றாலே தவறுகளோ, தவறுகளைச் செய்துகொண்டோ வாழ்வது என்றும் ஓர் அர்த்தம் இருக்குமோ? இப் பிழையுள்ள பிழைப்பைத் திருத்தும் திருத்தக்க தேவர் எவரோ?



கடைசியில் நமக்கு வேண்டாம் இதைப் பற்றியெல்லாம் நினைக்கிற 'பிழைப்பு' என்று அதை விட்டு விட்டேன்.



இந்த மங்களகரமான திருநாளன்று எமது போஷகர்கள் எல்லோருக்கும் எவரெடியின் ஒளி வீசும் வாழ்த்துக்கள். ★ ★ ★ ★ ★ ★

மண்ணிலே மறைந்தது

நான் சாலையில் நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று பின்னாலிருந்து வெகு விரைவாக மோட்டார் ஒன்று அசுரவேகத்தில் வரும் சத்தம் கேட்டது. சாலையோ புழுதி நிறைந்த சாலை. அந்தக் கார் என்னைக் கடந்ததும் அதன் பின்னால் வீசிக் கொண்டு எழுகிற புழுதிப் படலம் என் கண்களையும் மூக்கையும் பாதிக்கும் என்ற எண்ணத்துடன் முன் ஜாக்கிரதையாக நான் கைக்குட்டையை எடுத்து மூக்கைப் பொத்துவதற்குள் அந்த வாகனம் என்னை நெருங்கித் தாண்டியும் சென்று விட்டது.

யாருடைய கார் இப்படி அசுர வேகத்தில் போகிறதென்று நம்பரைப் பார்க்க முயன்றேன். அது போன திசையெல்லாம் மண் பூத்துப் போய்ச் சாலையே தெரியாததால் எனக்குக் காரின் நம்பர் தெரியவில்லை. முதலில் எனக்கு என் கண்ணிலும் மூக்கிலும் புகுந்த மண்ணின் மேல் அடக்க முடியாத கோபம் வந்தது. சிறிது நேரம் நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தபோது தான் கோபம் மாறி வேறு அழகான உண்மை என்னுடைய உணர்வில் வந்து பதிந்தது.

இந்தக் கார் விஞ்ஞானத்தின் ஒரு படைப்புத்தான்; ஆனால் மண் என்பது காலத்தின் பிரதிநிதி. அது அன்றிலிருந்து இன்று வரை எங்கும் இருந்துள்ளது. நாளையும் இருக்கப் போவது. புதிய விஞ்ஞான வசதிகள் காலப் போக்கில் இல்லாது போகலாம். ஆனால் அப்போதும் மண் நிச்சயமாக இருக்கும். சிறிது நேரத்துக்கு என் கண் பார்வையிலிருந்து காரை மறைத்ததைப் போல் ஒரு காலத்தில் இந்த விஞ்ஞான வசதிகள் நிரந்தரமாகவே மண்ணில் மறைக்கப்பட்டு அழிந்து போகலாம். ஆனால் அப்போதும் மண் மறையாது. எது எதைக் கொண்டு மறைகிறதோ அதில் மறைக்கப்படுவது தான் தெரியாது. மறைப்பது எப்போதும் மேலாகத் தெரியும்தானே!


தேசியக் 'கொடியார்'

சுதந்திர தினம் ஆகி இன்றோடு ஒன்பது நாட்கள் கழிந்து விட்டன. ஆனால் எதிர்ப்பக்கமுள்ள கடையில் இன்னும் சுதந்திர தினத்துக்காகப் பறக்கவிடப்பட்ட கொடி இறக்கப்படவில்லை. அந்தக் கடைக்காரர் சிறு வயதில் பட்டம் பறக்க விடுவதில் அதிக ஆவல் உள்ளவர். தேசியக் கொடியையும் மூவர்ணப் பட்டமாக நினைத்துக் கொண்டு விட்டார் போலிருக்கிறது. "தேசியக் கொடிக்கு மரியாதை மதிப்பு எல்லாம் உண்டு! சுதந்திர தினம் முடிந்ததும் அதை இறக்கி விடுங்கள்" என்று அவரிடம் கூறலாம் போல் ஆசையாக இருக்கிறது எனக்கு.

"நாம் செய்து கொண்டிருப்பதே அக்கொடிக்கு அளிக்கும் மரியாதை தான்" என்று அவர் கூறிவிட்டால் என்ன செய்வதென்று பயந்தபடியே நான் பேசாமல் நடந்து போகிறேன். நீங்களாவது எப்போதேனும் வெற்றிலை பாக்கு வாங்கும்போது அந்தக் கடையில் நைஸாகச் சொல்லிப் பாருங்கள். 'வாடிக்கைக்காரர்களுக்குச் சலுகை உண்டு' என்று அந்தக் கடையில் போர்டு இருக்கிறது. அதனால் இது விஷயத்தில் உங்களுக்கு அவர் ஏதாவது சலுகை காட்டலாம். எதற்கும் முயன்று பார்த்து விடுங்கள்.

மங்களம் சார்! மங்களம்

கச்சேரி ஆரம்பமானதும் பாட்டைக் கேட்கிறோம். கேட்டுக் கொண்டே வரும்போது ஒவ்வொரு பாட்டையும் 'இதுதான் மங்களத்திற்கு முந்தின பாட்டோ' என்றெண்ணி மகிழ்கிறோம். அடுத்தகணமே வேறு பாட்டுத் தொடர்வதை அறிந்து 'அதற்கு அடுத்தது மங்களமாக இருக்குமோ?' என்று 'மங்களம் எப்போது' என்று அறிவதற்காகவே இன்னும் சிறிது நேரம் உட்காருகிறோம். இப்படிப் பல தடவை அநுமானம் செய்து பலதடவையும் ஏமாற்றமடைந்து நாம் சோர்ந்து போன பின் நாமே எதிர்பாராத சமயத்தில் மங்களம் பாடப்பட்டு விடுகிறது. இப்படி எதிர்பாராத விதமாகத் தாக்குவது நல்லவருக்கு அழகா?



ஒவ்வொரு கச்சேரியிலும் மங்களத்துக்கு முந்தின பாட்டு எது என்று தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஆனால் இதுதான் மங்களத்துக்கு முந்திய பாட்டு என்று கண்டுபிடித்துச் சொல்ல வழியில்லையே சார்!



அலுவல்களுக்கு இடையே ஒரு கப் காபி

அதிக வேலை உள்ள பொழுது காபி தெம்பு ஊட்டுகிறது. காபி எக்காலத்திலும் புத்துணர்ச்சி அளிக்கின்றது. காபி அருந்தி அதன் தனிச் சுவை...மணம்... தெம்பு உணர்ச்சி... இவைகளை அனுபவியுங்கள். காபி தயாரிப்பது மிகச் சுலபம். சொற்ப நேரமே ஆகின்றது. இன்றே தயாரித்துப் பாருங்கள்.

திருப்தியளிக்கும் காபி

காபி போர்டு
பெங்களூர்

"ஒவ்வொரு முறையும் தரமான காபி தயாரிப்பது எப்படி" என்ற எமது இலவசப்புத்தகத்திற்கு எழுதுங்கள்

FCB/CB-1 TM


பவழத்தீவு

கதை: வாண்டுமாமா

சித்திரம்: ரமணி

இளவரசனுடன் வந்தவரெல்லாம் இறந்து விடுகின்றனர். புண்காயமடைந்த ஆனந்தன் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கிறான். நிலைமையை அறிந்த பின் தோல்வியின் சுமையோடு மந்திரியின் முன் போய் நிற்க மனமில்லாதவனாகத் தன்னந்தனியே தனது பிரயாணத்தை மேற்கொள்ளுகிறான்......





இருவரும் தங்கள் உடைகளை மாற்றிக் கொள்ளுகின்றனர்.
ஏமாந்து போனான், பயல். கொள்ளைக் கும்பல் அது. போய்த் தொலைப் பட்டும். எப்படியோ நல்ல ஆடைகள் எனக்குக் கிடைத்து விட்டன.
துறைமுகக் கிராமத்தை அடைந்த ஆனந்தன்
அதோ அந்தக் கப்பலாகத்தானிருக்க வேண்டும். இரவு யாருமறியாமல் அதனுள் ஏறி ஒளிந்து கொண்டு விடவேண்டும்..
யாரோ என்னைப் பின் தொடருகிறாற் போலிருக்கிறதே...
ஐயோ! அது என்ன உருவம்?


அந்த உருவத்தி
டமிருந்து தப்பி
யாக வேண்டும்.
இனித் தப்ப
வழியில்லை.
அகப்பட்டுக்
கொண்டோம்.
ஐயோ, யார் நீ?
என்ன..
ஏன்...
ஹ..ஹ..ஹா! பழித்
தீவுக்கா போகப்போகி
றாய் நீ? உன்னைப் பாதா
ளத்துக்கு அனுப்பி வைக்
கிறேன் போ..ஹ..ஹ..ஹா!
முகமூடியணிந்த உருவத்தின் குரலை எங்கோ
கேட்டது போலிருக்கிறது ஆனந்தனுக்கு. ஆனால்
எங்கே? இனம் புரியவில்லை. அந்தக் குழப்பத்
திலேயே மூர்ச்சையாகிறான். மூர்ச்சை தெளிந்த போது
யாருக்கும் தெரி
யாமல் கப்பலில்
பிரயாணம் செய்ய
விரும்பினாயல்லவா?
இதுதான் அதற்கு
ஏற்ற இடம், வா!
ஐயோ! கப்பல் மூழ்கப்
போகிறதா? அடித்தளத்தில்
வந்து பார்க்க வேண்டுமென்று
யாருக்கும் தோன்றாதே. என்
வாழ்வு இப்படியே முடிய வேண்
டியது தானா?.......

தொடரும்.


என்னிடத்தில் இப்பொழுது



உஷா

தையல் மிஷின்

இருப்பதால்
முன்பைவிட
அதிகமாக
துணிகள்
தைத்துக்
கொள்ள
முடிகிறது



உங்களுக்கு வேண்டிய துணிமணிகளை நீங்களே தைத்துக் கொள்ளுவது எவ்வளவு சிறந்தது என்பது ஓர் பிரமிக்கத்தக்க விஷயமே ... மேலும், நீங்களே தைப்பது ஒரு சிறந்த பொழுது போக்கும் கூட. முன்பு நான் வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டு ஆனுல் என் சிலவுத் திட்டத்துக்குள் வாங்க முடியாதிருந்த ஆடைகளையெல்லாம் இப்பொழுது என்னிடம் உஷா தையல் மிஷின் இருப்பதால் குறைந்த சிலவிலேயே தைத்துக் கொள்ள முடிகிறது. உண்மையில், நான் உஷா தையல் மிஷினை வாங்குவதற்கு சிலவழித்த பணத்தை இவ்விதத்திலேயே மீண்டும் பெற்று விட்டேன். புதிதாக தைப்பவர்களுக்குக் கூட உஷாவில் தைப்பது மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இருக்கிறது.



இதற்கு முன்பு நீங்கள் தைத்ததில்லையென்றால்
உஷா எம்ப்ராய்டரி/தையல் பள்ளியில் சேர்ந்து சிக்கனமாக, வெகு விரைவில் தைக்கக் கற்றுக் கொள்ளலாம். முழு விவரங்களுக்கு உங்கள் வீட்டுக்கருகிலுள்ள உஷா டீலரைக் கேளுங்கள். அல்லது P.O. Box 2158 கல்கத்தாவிற்கு எழுதுங்கள்.

ஜே எஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிட், கல்கத்தா-31



பனித்திரை

காந்தன்

மண் மூடிப் போன கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் மக்கள் வெகுவாக மறந்து வருகிறார்கள். விசாலமான கல்வி அறிவும், நாகரிக வளர்ச்சியும் மக்கள் உள்ளங்களில் வேரூன்றி விட்டதன் பயனாக நம் வாழ்க்கை முறையிலேயே அதிசயிக்கத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பழைய குப்பைகளும், சந்தைகளும், நம்மை விட்டு ஒழிந்து விட்டதாக நாம் கருதும் மூட நம்பிக்கைகளும் எங்கும் போய்விட வில்லை. தமிழ்ப் படங்களில் ஒளிந்து கொண்டு விட்டன.

முக்தா பிலிம்ஸாரின் தயாரிப்பான 'பனித் திரை'யைப் பார்த்தால் மேற்கூறிய உண்மைகள் தெளிவாக விளங்கும். பிறக்கும் போதே ஒரு குழந்தை தன் தாயை இழந்து விட்டால் அது குழந்தையின் குற்றமாகி விடுமா? அப்படிப்பட்ட ஒரு குழந்தையைப் பெற்ற தகப்பன்கூடவா வெறுப்பான்? ஒரு தபால்காரர் தம் மகள் கல்யாணத்துக்குச் சேமித்து வைத்த பணத்தை இழந்ததும் அதுவும் தம் மகளின் துர்ப்பாக்கியவசத்தினால் தான் என்று நினைக்கிறார். பிறகு அவள் மணமும் அதே துர்ப்பாக்கியம் காரணமாக நின்று விடுகிறது. துயரம் தாங்காமல் தபால்காரர் இறந்து விடுகிறார். அந்தத் துர்ப்பாக்கியவதி தன் உடன் பிறவாத சகோதரனை சந்தானத்தின் வீட்டில் புகல் அடைகிறாள். அங்குதான் விமான ஓட்டி மோகனின் காதல் கிடைக்கிறது. பிறகு விவாகம் நடக்கிறது. துரதிர்ஷ்டமும் தொடர்கிறது. கணவனின் முகத்தைக்கூட அவள் பார்க்கக் கூடாது என்று மாமியார் உத்தரவு போடுகிறாள். கடல் கடந்து செல்லும் கணவனுக்கு விடை கொடுத்தனுப்பக்கூட முடியாமல் மனைவி வேதனையில் துடிக்கிறாள்.

துர்ப்பாக்கியமும், துரதிர்ஷ்டமும் தொடரும் பேதைப் பெண்ணாக பி. சரோஜாதேவி வருகிறார். மூடநம்பிக்கையின் காரணமாக எழுந்த அர்த்தமற்ற சோகமாயிருந்தாலும் அவர் நடிப்பு ஒன்றுதான் படத்திலேயே சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. பேய்க் காற்றில் இறைவன் சந்நிதியில் இருக்கும் தீபம் அணையாமல் இருப்பதைக் கண்டு கணவன் விமான விபத்தில் இறக்கவில்லை என்ற முடிவுக்கு வரும் கட்டத்தில் சரோஜா தேவியின் நடிப்பு மிகவும் நன்றாயிருக்கிறது.

மாமியாரின் கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு வெளியேறிய மருமகளுக்கு மீனவன் அடைக்கலம் தருவது எத்தனையோ தடவை எத்தனையோ படங்களில் வந்து போன சம்பவம் ஆயிற்றே! அந்தச் சம்பவம் மீனவர்களுக்கு அலுக்காமல் இருக்கலாம்; தமிழ்ப் படங்களில் வரும் அபலைப் பெண்களுக்கும் அலுக்காமல் இருக்கலாம்! தமிழ்ப் படாதிபதிகளுக்கும் அலுக்காமல் இருக்கலாம். ஆனால் படம் பார்ப்பவர்களுக்கு அலுத்துப் போய் விடுகிறதே! கதாசிரியர்களுக்கு இம்மாதிரி நிகழ்ச்சியை மீண்டும் மீண்டும் புனைய வெட்கமாயில்லையே!

எஸ். வி. சுப்பையாவின் சிறந்த நடிப்பு 'பனித் திரை'யில் மங்கியிருக்கிறது. சாதாரணமாக எந்தப் படமாயிருந்தாலும் சுப்பையாவின் நடிப்பு தரம் குன்றுவதில்லை என்ற அபிப்பிராயம் ரசிகர்களிடையே வெகு நாட்களாக இருந்து வந்தது. அது இந்தப் படத்தில் மாறி விட்டது. துர்ப்பாக்கியவதியைப் பெற்ற தபால்கார அபாக்கியவானாக வரும் அவர் நடிப்பு ஏனோ வழக்கம் போல் தனித்து நிற்கவில்லை. அதுவும் ஒரு துர்ப்பாக்கியம்தான்!

விமான ஓட்டியின் வேஷம் ஜெமினி கணேசனுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே பாடி ஆடுகிறார்; (ஏன் பாடுகிறார் என்று கேட்காதீர்கள்!) சரோஜா தேவியைக் காதலிக்கிறார். மூடநம்பிக்கை காரணமாக மனைவியைக் கொடுமைப்படுத்திய சிறிய தாயாரிடம் சீறுகிறார்; விமானம் ஓட்டுகிறார்; விமான விபத்தில் உயிர் தப்பி மனைவியின் கண்ணீரைத் துடைக்கிறார். ஆனால் துர்ப்பாக்கியவசமாக அவர் நடிப்பில் பாராட்டிக் கூறும்படியாக எதுவும் இல்லையே!

விமான விபத்தில் சிக்கி நினைவு தப்பி ஆஸ்பத்திரியில் கிடந்த மோகன் ஒரு சிறு காயம் கூட இல்லாமல் 'மொழு மொழு' என்று திரும்பி வருவது மிகவும் அதிசயந்தான்! அந்தச் சந்தர்ப்பத்திலும்கூட ஜெமினி கணேசன் நடிப்பில் துடிதுடிப்போ, பரபரப்போ காண முடியாததும் ஆச்சரியந்தான்.

ஹாஸ்ய ஜோடிகளான தங்கவேலுவையும் எம். சரோஜாவையும் கூட மூட நம்பிக்கையும், துர்ப்பாக்கியமும் நன்றாய் ஆட்டிச் சிரிப்

பாய்ச் சிரிக்க வைக்கின்றன. ஆனால் படம் பார்ப்பவர்களால் சிரிக்க முடியவில்லையே! எல்லாம் ஏற்கனவே சிரிக்கப்பட்ட ஹாஸ்யங்களாக இருந்து தொலைப்பதுதான் காரணம். மகளையும், மருமகளையும் சேர விடாமல் ஒரு தாய் தடுப்பது என்ன ஹாஸ்யமோ! அது ஒரே அசட்டுத்தனமாகவும், கேலிக் கூத்தாகவும் இருக்கிறது.

ஜெமினி கணேசனின் தந்தையாக வரும் டி. எஸ். பாலையாவையும் திரைக்கதையின் துரதிர்ஷ்டம் விட்டு வைக்கவில்லை. தீர்த்துக் கட்டி விட்டது. அவருடைய நல்ல நடிப்பைப் படத்தில் எங்குமே காணமுடியாதது அவருக்கு மட்டும் துரதிர்ஷ்டம் அல்ல, படம் பார்ப்பவர்களுக்கும் துரதிர்ஷ்டம்தான்.

'பனித்திரை'யில் ஆரம்பம் முதல் இறுதி வரையில் படிந்துவிட்ட துர்ப்பாக்கியம் பாடல்கள் மீதும் படிந்து விட்டது. ஒரு பாட்டுக்கூட நன்றாக இல்லை. வசனம் மாதிரியே இருக்கின்றன. பாட்டில் இசையும் இல்லை. கருத்துப் பசையும் இல்லை.

மோகனுடைய தம்பி கடைசி வரையில் சின்னப் பையனாகவே இருப்பது என்ன உத்தியோ! அந்தப் பாகத்தை ஏற்ற மாஸ்டர் ஸ்ரீதர், சுறுசுறுப்பாக நடிக்கிறான். தபால்காரரின் குழந்தைப் பருவ மகளாக வரும் பேபி உஷா ராணி சிறிது நேரமே வந்தாலும் துறுதுறு வென்றிருக்கிறான்.

படத்தின் ஆரம்பத்தில் தபால்காரர் ஒரு மணியார்டரைக் கொண்டு வருகிறார். அது ஒரு பெண்ணுக்குச் சேர வேண்டியது. அவள் கணவன் அந்த மணியார்டரைத் தன்னிடம் கொடுத்து விடும்படி கேட்கிறான். தபால்காரர் மறுத்து விடுகிறார். இது எதற்காகக் காட்டப்பட்டதுஎன்று விளங்கவில்லை. திரைக்கதைக்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாத காட்சி! மணியார்டரைக் கொடுத்து விடும்படி கேட்ட போக்கிரி ஒரு வேளை வில்லனாக மாறிப் பல இன்னல்களை விளைவிப்பானோ என்று நினைத்தேன். ஆனால் அவன் அந்த நிமிஷத்தோடு மறைந்து விடுகிறான்.

அதிர்ஷ்டவசமாக இப்படத்துக்கு டைரக்டரே தேவையில்லை. மனம் போனபடி எழுதப்பட்டிருக்கும் கதையைப் படமாக்குவது என்றால் டைரக்டர் என்னத்துக்கு என்று கேட்கிறேன்.

''நல்ல காலம் வருகுது. நல்ல காலம் வருகுது. சாதிகள் சேருது. சண்டைகள் தொலையுது....'' என்று பாடிய பாரதியார் பாதங்களில் புதுமைக் கனவுகள் காணும் எங்கள் முதல் தயாரிப்பாகப் 'பனித்திரை'யை, பக்தியுடன் சமர்ப்பிக்கிறோம்..'' என்று பாட்டுப் புத்தகத்தின் கதைச் சுருக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. மூட நம்பிக்கைகளைப் பனித்திரையாகக் காட்டுவது தான் படத்தின் கருத்துப் போலும்! ஆனால் தற்கால நிகழ்ச்சிகளுக்கு ஒத்ததாயில்லை. என்னத்தை நினைத்துக் கொண்டு கதை புனையப்பட்டிருக்கிறது என்றே விளங்கவில்லை. படத்தில் புதுமைக் கனவு எதையும் காணோம். முன்னேறி வரும் இன்றைய சமுதாயத்தில் இந்தப் படத்துக்கு வரவேற்புக் கிடைக்கும் என்று எப்படித்தான் எதிர்பார்த்தார்களோ! அது தான் புதுமையா யிருக்கிறது.


சரோஜா தேவியின் நடனத்தைப் புகுத்துவதற்குத் தோழியின் கல்யாண சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டிருக்கலாம். அதை விடுத்து, மணமாகப் போகும் மகிழ்ச்சியில் அவள் கற்பனையில் ஆடுவதாகக் காட்டியிருப்பது பாராட்டும்படியாக இல்லை. படம் என்றால் அதில் நடனமும் வந்தாக வேண்டும் என்கிற அசட்டுக் கொள்கையைத்தான் காட்டுகிறது. ஒரு கதையைப் படமாக்குவதற்கு முன்பு நம் டைரக்டர்களோ, படாதிபதிகளோ சிந்தித்துப் பார்ப்பதே இல்லையென நினைக்கிறேன். இல்லையென்றால் இம்மாதிரிக் கோளாறுகளெல்லாம் படங்களில் தொடர்ச்சியாக இடம் பெறுமா?

★

உருக்கமோ, உயர்ந்த கருத்தோ இல்லாத கதையைச் சுருக்கமாகவாவது எடுத்திருக்கக் கூடாதா? திரைக்கதையின் அடிப்படைக் கருத்தான மூட நம்பிக்கையையும், துரதிர்ஷ்டத்தையும் போலப் படம் வளர்ந்து கொண்டே போவதுமல்லாமல், கூவம் நதியைப் போல் வேண்டா வெறுப்பாக நகர்ந்து செல்கிறது.

'பனித்திரை' என்று ஏன் படத்துக்குப் பெயர் வைத்தார்கள் என்று என்னைக் கேட்காதீர்கள். அது தயாரிப்பாளர்களுக்கே தெரியாது. பனித் திரையைப் போன்ற படங்கள் இனிமேலாவது வராமல் இருக்க வேண்டும் என்று பனிமதி புனைந்த பரமேசுவரனைப் பிரார்த்திப்போமாக.






நந்தவனம்

1 சித்திர மடல்

திருநெல்வேலி லாலா மிட்டாய்க் கடையிலே போய் உட்கார்ந்துவிட்டால், பொழுது போவதே தெரியாது. என்னுடைய ஓய்வு நேரங்களில் அநேகமாக என்னை அங்கேதான் பார்க்கலாம். லாலா கடைக்கு வருகிற விதம் விதமான மக்களையும் அவர்களுடைய இயல்புகளையும் பார்த்துக் கொண்டிருப்பது, சுவை மிகுந்த ஒரு கதைப் புஸ்தகத்தைப் படிப்பதுபோல் அத்தனை ரசமாக இருக்கும்!

'லக்ஷ்மி விலாஸ்' என்று பெயர் தாங்கிய அந்த மிட்டாய்க் கடையில் மாலை நேரங்களிலே தினந்தோறும் ஒரே திருவிழாக் கூட்டமாக இருக்கும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, திருச்செந்தூர், திருவனந்தபுரம், சென்னை ஆகிய மூன்று இடங்களுக்கும் மாலை நேரத்திலேதான் திருநெல்வேலியிலிருந்து புகை வண்டிகள் புறப்படும். வெளியூர் செல்கிற நெல்லைவாசிகள் எல்லாரும் மிட்டாய்க் கடைக்கு வந்து அரைச் சேர் ஹல்வாவாவது வாங்கி எடுத்துக் கொள்ளாமல் வண்டியேற மாட்டார்கள்! காரணம் அந்த நேர்த்தியான ஹல்வாவின் புகழ் மணம் வெளியூர்களிலெல்லாம் சென்று 'கம கம' என்று கமழ்ந்து கொண்டிருந்தது! திருநெல்வேலிக்காரர்கள் வெளியூர் சென்றால் வெளியூர்க் குழந்தைகள்




சோரம்

'ஹல்வா'வையே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து நிற்பார்கள்!

'லக்ஷ்மி விலா'சத்தில் லக்ஷ்மியோடு சரஸ்வதியும் வாசம் செய்தாள் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், அந்தக் காலத்தில் பொட்டலம் கட்டுவதற்காக மிட்டாய்க் கடைக்கு வந்து சேருகிற பழைய காகிதங்கள் எல்லாம் வெறும் செய்தித்தாள்களா யிராது. பழம் புத்தகங்களாகவே இருக்கும்! பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவு, ஞான வெட்டியான், பதினென் சித்தர் ஞானக் கோவை, மூடமதி திறவுகோல், மங்கள விலாசம் அல்லது மாமியாருக்கு வாய்த்த மருமகள், — இப்

படிப்பட்ட இலக்கியங்களாக இருக்கும்! இவற்றோடு, முறிந்து போன பெரிய கடைகளின் பழைய பேரேட்டுப் புத்தகங்களும், பள்ளி மாணவர்களின் பாடப் புத்தகங்களும், வீட்டுக் கணக்கு நோட்டுகளும் இருக்கும்! தாராசிலே படிக்கல்லை வைத்து இந்த நூல்களை



யெல்லாம் எடை போட்டு வாங்கிக் கொள்வார் என் நண்பரான லாலா! படிக்கக் கூடிய புத்தகங்களாக வந்து விட்டாலோ விட மாட்டார். தராசிலிருந்து எடுத்துக் கடைக்குள்ளே போட்டுக் கொள்ளாமல், நண்பர்களிடம் கொடுப்பார்.

அநேகமாகத் தினந்தோறும் ஏதாவது ஒரு ரசமான பழைய நூல் எனக்குக் கிடைத்து வந்தது!

இப்படி இருக்கும் போதுதான், ஒருநாள் மாலை, என் நண்பர் என்னிடம் ஒரு காகிதக் கட்டை எடுத்துக் கொடுத்துக் கொண்டே சொல்லுவார்: "சோமு! இந்தப் பார்சலுக்குள் ஒரு ரசமான நோட்டுப் புத்தகம் இருக்கிறது. வீட்டுக்குப் போய் ஓய்வாக இருந்து அதைப் புரட்டிப் பாருங்கள்!"

நண்பர் கொடுத்த அந்தச் சிறிய பொட்டலத்தோடு, இரண்டு பலம் ஹல்வாவையும் வாங்கி முடிந்து கொண்டு வீட்டுக்குத் திரும்பினேன். வழக்கத்தைவிட அன்று என் நடையில் அதிக வேகம் இருந்தது. ஆவலும் பரபரப்பும் மேலிட்டவனாக, 'மளமள' என்று வீட்டுக்கு வந்து, முதலாவது காரியமாக அந்தக் காகிதப் பொட்டலத்தைத் திறந்து பார்த்தேன். திக்கெல்லாம் கமழும் அந்தத் திருநெல்வேலி ஹல்வாவையும் சாப்பிட்டு விடக் கூடியதாக இருந்தது, நண்பர் கொடுத்த புத்தகம்!

புத்தகம் என்று சொன்னேன்? உண்மையில் அது ஒரு நோட்டுப் புத்தகம்—ஒரு குறிப்பு ஏடு! கனமான காகிதங்களைக் கொண்டு நன்றாகக் 'காலிகோ' போட்டுக் கட்டடம் செய்த ட்ராயிங் நோட்டுப் புத்தகம் அது!

காகிதங்களை ஒவ்வொன்றாகப் புரட்டினேன். கற்பனையும் கலைத் திறனும் கூடிய அதிசய ஓவியன் ஒருவன், தன்னுடைய பேனாவும், இறகும், வர்ணங்களும் சென்ற திசையெல்லாம் சென்று, விதம் விதமான ஓவியங்களை வரைந்து பார்த்திருக்கிறான். பெரும்பாலான சித்திரங்கள் அரை குறையாகவே நின்றன. சில சித்திரங்கள் வெறும் பென்ஸில் கோடுகளாகக் காட்சி தந்தன. அவற்றைக் கூர்ந்து பார்த்தேன். ஓவியம் தீட்டுவதற்கு முன்பு, தோராயமாக 'ஸ்கெட்ச்' என்ற முன்னேட்டங்களை வரைந்து வரைந்து பார்த்திருக்கிறான் அந்தச் சித்திரக்காரன்!

சித்திர மடலில் இருந்த ஏடுகளை மேலும் புரட்டினேன். ஏதோ ஒரு பழைய கோவிலைப் புதுப்பிக்கும் பணியில், ஏதோ ஒரு புராதனமான கோவிலின் சுவர்களிலேயுள்ள பழைய சித்திரங்களைச் சீர்திருத்தும் வேலையில், ஈடுபட்டுள்ள ஒரு சித்திரக்காரனாக இருக்க வேண்டும் அவன்! கோபுரப்

பொம்மைகள், கலசங்கள், தூணின் மாதிரி வடிவங்கள், பலபல நடனத் தோற்றங்கள், புராதனக் காட்சிகள், கதை நிகழ்ச்சிகள் முதலியவற்றை விதம் விதமாக அந்த மடலிலே அப்படியும் இப்படியும் கிறுக்கிப் பார்த்திருக்கிறான்! ஆனால் இதென்ன! ஏதோ ஓர் அபூர்வமான சக்தி என்னை அளவு கடந்த வியப்பிலே ஆழ்த்தியது. அப்படியே திகைத்துப் போனேன்! அந்த நடனத் தோற்றங்களிலும், அந்த இளம் பெண்களின் பல்வேறு சாயல்களிலும் ஊடாடி நிற்கிற அந்த ஒரு விசித்திரப் பண்பு என்ன?

காகிதங்களைப் புரட்டப் புரட்ட என்னுடைய வியப்பு பன்மடங்கு அதிகரித்தது. இளமையும் எழிலும் மேனியெல்லாம் பொங்குகிற அழகுக் கன்னியர்கள் பல நிலைகளில் நிற்பது போலவும், அமர்ந்திருப்பது போலவும், ஒயிலாக நடந்து செல்வது போலவும், இடுப்பிலே தண்ணீர்க் குடம் தாங்கிக் கையை வீசி வீசி வருவது போலவும், நந்தவனத்திலே பூப் பறிப்பது போலவும், மானோடு கொஞ்சுவது போலவும், மயிலோடு விளையாடுவது போலவும், வானத்திலே தவழ்கிற பிறைச் சந்திரனைக் கை நீட்டிப் பிடிப்பது போலவும், உணர்ச்சி பொங்கும் இசைப் பதங்களுக்கு அபிநயம் பிடிப்பது போலவும், ஆயிரம் ஆயிரம் நிலைகளைப் பென்சில் கோடுகளிலே வரைந்து வரைந்து பார்த்திருக்கிறான் அந்த அபூர்வக் கலைஞன்! ஆனால் அத்தனை சித்திரங்களிலும் அத்தனை ஆயிரம் முகங்களிலும் ஏன் ஒரே சாயல்? ஏன் ஒரே முகம் அத்தனை ஓவியங்களிலும் திரும்பத் திரும்ப வருகிறது? இத்தனை கற்பனை வளம் மிகுந்த ஓவியனுக்கு, விதம் விதமான பல்வேறு முகங்கள் அந்த இறகிலே, அவனுடைய எழுதுகோலிலே, வரவில்லையா? ஏன் திரும்பத் திரும்ப அதே நீண்ட மூக்கு, அதே வட்டக் கரிய விழிகள், அதே சுருண்ட கூந்தல், அதே மாதிரி நாடி, அதே பிறை நெற்றி, காதணிகள்கூட அதே அணிகள்!

என்ன ஆச்சரியம் இது! எத்தனையோ சாயல்களிலே பெண்ணுருவங்களை வரைய முனைந்தாலும், எல்லா நிலைகளிலும், எல்லாச் சாயல்களிலும், மீண்டும் மீண்டும் அதே முகம், ஒரே முகம், ஒரே மாதிரியான முகம்! ஆனால் நெஞ்சை அள்ளும் முகம் இதயத்தைக் கொள்ளை கொள்ளும்



எழில் முகம்! அதில் மாற்றமே இல்லை! திடீரென்று என் யோசனையில் மின்சாரம் வந்து தாக்கியது! அந்த அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு மறுமுறையும் அந்த முகங்களையெல்லாம், அதாவது அந்த ஒரு முகத்தின் பல தோற்றங்களையும் கூர்ந்து பார்த்தேன். சந்தேகமில்லை. இந்தத் திருமுகத்தை, அழகு கொஞ்சும் இந்த எழில் வதனத்தை இதற்கு முன்பு எங்கேயோ நான் பார்த்திருக்கிறேன்! இந்தச் சுந்தரக் கன்னியை எங்கோ சந்தித்திருக்கிறேன்.

கண் இமைகளை நன்றாகத் திறந்து நினைவை யெல்லாம் பார்வையிலே கொண்டு நிறுத்தி அந்த முகத்தை நோக்கினேன். இதே பிறை நெற்றி, இதே வட்டக் கரிய விழிகள், இதே புன்னகை, குமிழும் சிரிப்பு, சுருண்ட கூந்தல், தூண்டில் போன்று இதயத்தைக் கொய்யும் பார்வை— இந்த முகத்தை அடிக்கடி பார்த்திருக்கிறேன். கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆனால் யார் அவள்? எங்கே பார்த்திருக்கிறேன் இந்த ஒப்பற்ற ரூப வதியை? எங்கே சந்தித்திருக்கிறேன் இந்தப் பேரழகியை?

யோசித்து யோசித்துப் பார்த்தேன். காண்போருடைய உள்ளத்தை மயக்கும் இந்தக் கட்டழகி யார் என்று எனக்கு நினைவு வரவில்லை. ஜன்ம ஜன்மாந்தர வாசனை என்றும், நினைவின் பூர்வ அலைகள் என்றும், சிருஷ்டியின் இரகசியம் என்றும் ஏதேதோ விளக்கம் சொல்லப் படுகிறதே, அப்படி ஒரு தொந்தமா இது? இல்லை. இல்லவே இல்லை. இந்த முகத்தின் சாயல் நினைவின் கோடியிலே அப்படி ஓர் இனம் புரியாத மங்கிய வடிவமாகத் தோன்றவில்லை. தினசரி வாழ்க்கையில் அடிக்கடி பார்த்துள்ள ஒரு முகம்தான் அது. ஆனால் இனந்தெரியாமல், யாரென்று கண்டுபிடிக்க முடியாமல் மூளையைக் குழப்புகிறதே!

அன்றிரவு முழுதும் இதே குழப்பம். தூக்கமே இல்லை. திரைப் படச் சுருள் வேகமாக ஓடுவது போல, என் மனத் திரையிலே பல விதமான முகங்கள் சுழன்றோடின! ஒவ்வொரு முகமாகக் கூர்ந்து பார்த்தேன். என்னுடைய பழைய நண்பர்கள், புதிய நண்பர்கள், என் உறவினர்கள், என்னுடைய பள்ளித் தோழர்கள்,— எல்லாருடைய முகங்களையும் நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்தேன். நாடகமேடைகளிலே



தோன்றியுள்ள நடிகைகள், திரைப் படங்களிலே காட்சி தந்த புகழ்பெற்ற நட்சத்திரங்கள்,- எல்லாருடைய முகங்களையும் மனக் கண்ணிலே நிறுத்தி ஒப்பிட்டுப் பார்த்தேன். எந்த முகமும் இதைப் போல இல்லை! படுக்கையிலிருந்து எழுந்து சென்று, அலமாரியைத் திறந்தேன். புகைப்பட மடல்களையெல்லாம் புரட்டிப் பார்த்தேன். என்னுடைய இரவுத் தூக்கம் கெட்டதே தவிர, சுந்தரி யார் என்றோ, இந்த ஓவிய முகத்தை எங்கே பார்த்திருக்கிறேன் என்றோ எனக்குச் சற்றும் புரியவில்லை! கலையின் விசித்திர இயல்புகளை எப்படிச் சொல்வது! உயிரற்ற வர்ணங்களுக்கு உயிர் ஊட்டுகிற ஒரு சிறு இறகு, இத்தனை மாயத்தைச் செய்ய முடிகிறதா? சித்திரக் கற்பனையிலே நாம் காணுகிற ஒரு பொய்த் தோற்றம் இந்த மெய்யையும் மனத்தையும் இத்தனை தூரம் குழப்ப முடியுமா? ஏன் இப்படி ஒரு மயக்கம்? ஏன் இந்த விசித்திரமான எண்ண அலைகள்?

2. அந்த முகம்

திருநெல்வேலிப் புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் செல்லுகிற புகை வண்டிகளெல்லாம் புறப்பட்டுப் போன பின்பு மாலை நேரங்களில் லாலாவும் நானும் தாமிரவருணிக் கரையில் மீனாட்சிபுரம் பாலத்தைத் தாண்டிச் சென்று, 'சீனிவாச மண்டப'த்தின் அருகில், ஒய்யாரமான அரச மரத்துக்குப் பக்கத்தில் ஆற்று மணலிலே உட்கார்ந்து பூமியையும் ஆகாசத்தையும் அளந்து கொண்டிருப்பது வழக்கம்! சித்திர மடல் என் கைக்கு வந்த மறுநாள் மாலை லாலாவிடம் சொன்னேன்:

''நேற்று உங்களிடமிருந்து இரண்டு பொட்டலங்கள் வாங்கிக் கொண்டேன். ஒன்று ஹல்வா. மற்றொன்று காகிதம். இந்த இரண்டில் எது எதை விடத் தித்திப்பானது என்று புரியவில்லையே....!''

லாலா சிரித்தார். "தித்திப்போடு நின்று விட்டதல்லவா?" என்று கேட்டார், வழக்கமான அவருடைய குறும்புப் புன்னகையோடு!

"சரி சரி, அந்தச் சித்திரமடலை நீங்களும் ஒரு தடவை புரட்டிப் பார்த்து விட்டுத்தான் என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது?" என்றேன்.

"ஒரு தடவையா! ஓராயிரம் தடவை புரட்டி விட்டேன். கடைசியில் அந்த முகம் யாரென்று கண்டு பிடித்தபிறகு தான், அந்தச் சித்திர மடலைப் பொட்டலம் கட்டி உங்களிடம் கொடுத்தேன்!" என்று ஒரு போடு போட்டார், நண்பர் மெதுவாக!

"என்னென்ன! அந்த முகம் யாரென்று கண்டுபிடித்து விட்டீர்களா நீங்கள்? கண்டுபிடித்து விட்டீர்களா? நிஜமாகவா?" என்று மிகுந்த பதற்றத்தோடு கேட்டேன்.

"ஆமாம். நேற்றுக் காலையில் பழைய பேப்பர்களோடு இந்தச் சித்திர மடலும் நம் கடைக்கு வந்தது. அந்த விநாடியிலிருந்து வியாபாரமே ஓடவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! பார்த்த முகம்; அடிக்கடி சந்தித்துள்ள ஒரு முகம் இப்படிக் கண்ணாம்பூச்சி விளையாடி விட்டதே! கடைசியில் ஒரு மட்டும் அந்த மனிதரை அடையாளம் கண்டுபிடித்ததும் எனக்கு ஏற்பட்ட உற்சாகத்தை எப்படிச் சொல்லுவது!" என்றார் நண்பர்.

"என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்! அடிக்கடி சந்தித்துள்ள ஒரு மனிதரா? மனிதரா? 'ரா' என்று முடிக்கிறீர்கள்?"

இவ்வாறு நான் கேட்டபோது என்னுடைய வியப்பு எல்லை கடந்து பொங்கியது. மறுகணம் எனக்கும் புரிந்துவிட்டது! மணலிலே உட்கார்ந்திருந்தவன் அப்படியே எழுந்து ஒரு துள்ளுத் துள்ளினேன்!



"நண்பரே! கண்டு பிடித்து விட்டேன். நானும் கண்டுபிடித்து விட்டேன். ஆம். அவரேதான்! அவரேதான்!"

இப்படி நான் கூச்சலிட்டதும் லாலா சிரித்து விட்டார். சிரித்துக் கொண்டே சொன்னார்:

"உட்காருங்கள். எழுந்து விட்டீர்களே! இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் வந்து விடுவார்! அநேகமாக இப்பொழுதே அவர் இங்கே வருகிற சமயந்தான்!"

இவ்வாறு சொன்னார் லாலா. நாங்கள் இருவரும் மணலில் உட்கார்ந்தவாறு மறுபக்கம் திரும்பி அவர் வருகிற திசையிலேயே கண்ணாக இருந்தோம்!

'அவர்' என்று குறிப்பிட்டேன். உண்மையில், 'அவன்' என்றே சொல்லலாம், அந்த அதிசய மனிதனை; அந்த விசித்திர இளைஞனை! அதே சீனிவாச மண்டபத்துக்கு வந்து மணல்மேட்டிலே நிற்பான். அடுத்த விநாடி அந்த உயரமான மணல்மேட்டுக்கு அருகே, துளசிமாடத்தின் எதிரே நிற்கும் குத்துக்கல்லில் ஒரு காலை ஊன்றி, மறு காலால் மண்டபத்தின் மேல் தளத்தில் ஓர் எம்பு எம்பிப் பாய்ந்தேறி விடுவான்!

தாமிரவருணியாற்றின் மணலிலே நின்ற அந்தச் சிறிய மண்டபம், மணல் மேட்டை ஒட்டி நின்றது. ஒரு காலத்தில் தாமிரவருணி வெள்ளத்தோடு மக்களின் பக்தி வெள்ளமும் கலந்து ஓடிக் கொண்டிருந்தபோது, நெல்லை வாசிகளிலே முதியவர்கள் எல்லாரும் அதுபோன்ற மண்டபங்களுக்குப் பூஜைப் பெட்டியோடு வந்து வழிபாடு செய்வது வழக்கமாம். நதியின் தண்ணீர் மண்டபத்துக்குள்ளே ஓடியாடி விளையாடிக் கொண்டு செல்லாமல், அடக்கத்தோடு பூஜைத் திட்டுக்களைத் தொட்டுக் கொண்டு செல்லும். உயரக் குறைவான மண்டப மாதலால், மணல்மேடு அவ்வப்போது அந்த மண்டபத்தின் மேல் தளத்தைக் கையால் தொட்டுப் பார்த்துக் கொள்ளும்! அதன் அருகில் ஒரு பெரிய அரச மரம். அதன் அடியில் நாகரும், விநாயகரும்! சற்றுத் தொலைவிலே சுப்பிரமணிய சுவாமி வீற்றிருக்கிற குறுக்குத் துறைக் கோயில். அங்கங்கே சிறு சிறு பூஜை மண்டபங்கள்; படித்துறைகள்! இந்த அழகான சூழலிலே தான் இரவு எட்டு மணி ஒன்பது மணி வரை, லாலாவும் நானும் மணலைக் கயிறாகத் திரித்துக் கொண்டிருப்போம்!

அந்த இளைஞன் தாமிரவருணி ஆற்று மணலுக்குப் புதிதாக வந்துள்ள ஒரு 'விருந்தாளி'! கடந்த



சில நாட்களாகத்தான் அவனை இங்கே பார்க்கிறோம்.

இளைஞன் என்று சொன்னால் போதாது. அழகன் என்றுசொல்ல வேண்டும் அவனை! அவன் அந்த ஆற்று மணலிலே விறு விறு என்று நடந்து வருவான். அங்கங்கே மணல்மீது பல கோஷ்டிகள் உட்கார்ந்து கொண்டிருக்கும். ''இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைக்குமா?'', ''இங்கிலீஷ்காரனுக்கும் காங்கிரஸ் மகாசபைக்கும் உடன்படிக்கை ஏற்படுமா?'' என்பது போன்ற அரசியல் வினா விடைகள் ஒருபக்கம்; ''மாஞ்சி ராகத்துக்கும் பைரவிக்கும் என்ன வித்தியாசம்?'', ''மால்கோஷ் என்ற வடநாட்டு ராகத்துக்கும், ஹிந்தோளம் என்ற தென்னாட்டு ராகத்துக்கும், இந்தளம் என்ற பண்ணுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?'' என்பது போன்ற சங்கீதச் சர்ச்சைகள் ஒரு பக்கம்; ''புலிக்காட்டு ஜமீந்தாருக்கும் ஏலமலை ஜமீனுக்கும் கொள்வினை கொடுப்பினை உண்டா?'' என்ற உள்நாட்டு விவகாரங்கள் இன்னொரு பக்கம்! இப்படிப் பெரிய பெரிய விவாதங்கள் ஆற்று மணலிலே உதிர்ந்த வண்ணமாக இருக்கும். அந்த இளைஞனோ இவை எதிலும் பட்டுக் கொள்ளாமல், எதையும் லட்சியம் செய்யாமல் நேரே நடந்து செல்வான். நாங்கள் இரண்டுபேர் ஒதுக்குப்புறமாக அரசமரத்துக்கு அருகிலே உட்கார்ந்திருப்போமே, எங்களையாவது ஏறிட்டுப்பார்ப்பானா? கிடையாது. அந்த மண்டபத்தின் மேல்தளத்திலே என்ன காந்த சக்தி இருக்குமோ, தெரியவில்லை! வேகமாக நடந்து போய் அந்த மண்டபத்துக்கு மேலே தாவி யேறி, கல்யாண தளத்திலே துண்டை விரித்து உட்கார்ந்து கொள்வான்! முதல் நான் அவனைப் பார்த்ததும் ஏதோ சங்கீத அப்பியாசம் செய்யப் போகிறானாக்கும் என்று நினைத்தேன்! ஆனால் ஒரே மௌனமாக உட்கார்ந்தவாறு, வானத்தையும் எதிரே ஓடுகிற தண்ணீரையும் பார்த்துக் கொண்டே மணிக்கணக்காக இருந்தான் அவன்! உடம்பு அசையாமல் இருந்தாலும் அவனுடைய பார்வை மட்டும் நான்குபுறமும் துருவிக் கொண்டே இருந்தது! மறுநாளும் அப்படியே செய்தான். அதற்கு மறுநாளும் இப்படியே நடந்தது! தினமும் இதே போலத்தான்!

வளைந்து தொங்குகிற நீல ஆகாயத்தையும், அதில் ஓடித் திரிகிற மேகங்களையும், பாடி நடந்து செல்லும் நதியின் புனலையும், கரைகளிலே நின்ற உயரம் உயரமான மருத மரங்களையும் அப்படியும் இப்படியுமாகப் பார்த்துக் கொண்டேயிருப்பான் அந்த இளைஞன்! அவனுடைய முகம்? ஆகா! அந்த முகந்தான். அதே அழகுப் பிம்பம் தான். லாலாவையும் என்னையும் குழப்பு குழப்பு என்று குழப்பியடித்ததே அதே ஓவிய முகந்தான் அது!

என்ன ஆச்சரியம்! இந்த இருபது வயது வாலிபனுக்குப் புடவை கட்டி நெற்றியிலே ஒரு குங்குமப் பொட்டும் இட்டுவிட்டால் போதும்! சித்திர மடலிலே தோன்றிய அந்த அழகுக் கன்னி அப்படியே உயிர் பெற்று நம் எதிரே வந்து நிற்பது போலவே இருக்கும்! இம்மி அளவுகூட வித்தியாசமில்லை.

''நண்பரே! நானும் கண்டு பிடித்து விட்டேன், அந்த முகம் யாரென்று! அடடா! இது ஞாபகம் வருவதற்கு இத்தனை குழப்பம் குழம்பி விட்டதே மனம்! இப்பொழுதாவது குழப்பம் குறைந்ததா? சித்திர மடலிலே இருக்கிற முகம் ஒரு பெண்ணின் முகம்! நாம் பார்க்கிற நிஜ முகமோ ஒரு வாலிபனின் முகம்! என்ன இது! திகைப்பு குறைவதற்குப் பதிலாகமேலும் அதிகரித்திருக்கிறதே!''

இப்படி நான் சொன்னபோது லாலா சமிக்ஞை செய்தார், பேசாதீர்கள் என்று! காரணம், அந்த இளைஞன், சற்றுத் தொலைவிலே வந்து கொண்டிருந்ததை அவர் பார்த்துவிட்டார்!

ஆம்! அந்த அதிசய வாலிபன் நடந்து வந்தான். வழக்கம்போல் அதே 'விறு விறு' நடை! தண்ணீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் வேகமான ஒரு படகைப் போல், ஒரே நேராகச் சென்று மண்டபத்தின் மேலே ஏறிக் கொண்டான். மேல்துண்டை எடுத்து விரித்தான். அதன்மீது உட்கார்ந்து கொண்டான். வழக்கப்படி வானையும், புனலையும், மேகக் கூட்டங்களையும் நோட்ட ஆரம்பித்து விட்டான்!

என்ன அதிசயம் இது! அவனை மீண்டும் கூர்ந்து பார்த்தேன்! சித்திர மடலிலேயுள்ள ஓவியக் கன்னியின் முகம் அப்படியே நூற்றுக்கு நூறு சரியாக இருந்தது! அதே நீண்ட மூக்கு, அதே விழிகள், அதே நாடி! நெற்றிகூட அதே

பிறை நெற்றிதான்! சிருஷ்டியின் விந்தையை என்னென்று சொல்வது! வாழ்க்கையில் எத்தனை ஆயிரம் முகங்களை நாம் பார்க்கிறோம்! தினந்தோறும் எத்தனை மனிதர்களை நாம் சந்திக்கிறோம். என்றாலும் ஒருவருடைய முகத்தைப் போல் இன்னொருவருடைய முகம் அமைகிறதா? இல்லை. எனினும், சில சமயங்களில் இயற்கை இப்படி ஒரு திருவிளையாடலைப் புரிகிறது. பல்லாயிரக்கணக்கான மாறுபாடுகளுக்கு மத்தியில் சில சமயங்களிலே ஒரு முகத்தைப்போல் இன்னொரு முகத்தைத் தெய்வ சிற்பி உருவாக்கி விடுகிறான்! அப்பொழுதெல்லாம் இதே தடுமாற்றந்தான்! ஆனால் அதே முகத்தை உடைய இந்த இளைஞன் ஏன் தினந்தோறும் இந்த மண்டபத்திலே வந்து இப்படி ஏகாந்தமாக உட்கார்ந்திருக்கிறான்? அதே பழைய வானம், பழைய பழைய மேகக் கூட்டங்கள், பழைய நதி—இவற்றிலே தினமும் புதிது புதிதாக என்ன விந்தை காணுகிறான் இவன்?



''நண்பரே, இவன் ஒரு சித்திரக்காரனாக இருப்பானோ?''

''நண்பரே இவன் ஒரு கவிஞனோ?''

இப்படி என் சந்தேகங்களை ஒவ்வொன்றாக வெளியிட்டேன். நண்பருக்கும் எனக்கும் இந்த இளைஞன் ஒரு பெரும் புதிராக அந்த மண்டபத்திலே ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தான்!

''ராம்லிங், இதை இப்படியே விட்டு விடக்கூடாது. கட்டாயம் ஆராய வேண்டும். சித்திர மடலிலே காண்கிற அந்தப் பெண்ணுக்கும் இந்த வாலிபனுக்கும் ஒரு சம்பந்தம் இருக்கிறது. ஒருவேளை அந்தப் பெண் இவனுடைய சகோதரியாக இருப்பாளோ? அல்லது இவனுடைய அன்னை இளம்பிராயத்தில் இந்தச் சித்திர மடலிலே காட்சி தருவதுபோல் அழகுக் கன்னியாக உலவி வந்திருப்பாளோ? அல்லது இதே இளைஞன் ஒரு பெண்ணாக இருந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை மிகுந்த ஓவியன் ஒருவன் ஆத்ம திருப்திக்காக இவ்வாறு சித்திரம் வரைந்து பார்த்திருக்கிறானோ? அப்படியானால், அந்தச் சித்திர மடலில் கோபுரமும், பொம்மைகளும் நாட்டிய உருவங்களும், புராணக் காட்சிகளும், கதை நிகழ்ச்சிகளும் ஏன் வரையப் பெற்றுள்ளன?''




''அல்லது நண்பரே, இவன் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்து, அதன் விளைவாக உணவு செல்லாமல், உறக்கம் கொள்ளாமல், மனித உறவு பிடிக்காமல், மன அமைதி இல்லாமல்—''

இப்படி நூறு விதமான கேள்விகள் எங்கள் மனத்தில் எழுந்தன. தாமிர வருணி நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது, சுழிகளும் அலைகளுமாகக் கிளம்பி எழுந்து சுழன்று மறுகிக் கரையிலே விம்மி வழிவதுபோல், அந்தக் கேள்விகள் விடை காண முடியாத குழப்பியிலே மனக் கரையினுள் பொங்கிப் பொங்கி விம்மி வழிந்தன! இந்தச் சந்தேகங்களோடு நாங்கள் இப்படிப் போராடிக் கொண்டிருந்தபோது, சீனிவாச மண்டபத்

துக்கு அப்பால் மணற்பரப்பிலே இரண்டு மனித உருவங்கள் நடந்து வந்தன. அதே பழைய உருவங்கள் அவை — மீசைக்காரரும் அவருடைய நண்பரும்! இருவரும் நடந்து வந்து அதே பழைய இடத்தில் பதுங்கினார்கள்!

"அதோ பாருங்கள். நான் சந்தேகப்பட்டது உண்மையாயிற்று. அதே மனிதர்கள் இருவரும், மண்டபத்துக்கு மறுபக்கம் மறைந்து இருந்துகொண்டு அந்த இளைஞனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்றார் லாலா.

கடந்த மூன்று நாட்களாக நாங்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தொலைவிலே, அந்தப் புதிய மனிதர்கள் சொல்லி வைத்தாற் போல வந்து உட்கார்ந்து கொள்ளுவதை நாங்கள் கவனித்தோம். அந்த இருவரும் இந்த வாலிபன் வந்த சற்று நேரத்துக்கெல்லாம் அங்கு வந்து விடுவார்கள். பேச்சு மூச்சு கிடையாது. மனிதனையே விழுங்கி விடுவது போல அந்த இளைஞனையே பார்த்துக் கொண்டு தங்களுக்குள் ஏதோ சொல்லிக் கொள்வார்கள்.



"நம்மைப் போல் அவர்களும் இந்த அதிசய இளைஞனுடைய விசித்திரப் போக்குகளை

ஆராய்கிறார்கள் போலும்!" என்று நான் ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் நண்பர் வேறு விதமாகச் சொன்னார்.

"அந்த இரண்டு ஆசாமிகளையும் நன்றாகப் பாருங்கள். அவரில் ஒருவரை எனக்குத் தெரியும். மற்றவரும் அடிக்கடி நம்முடைய கடைக்கு வருகிறவரே. செங்கோட்டை வண்டியைப் பிடிக்கும் வேகத்தில் கடைக்கு வருவார். இடது கையிலே எப்பொழுது பார்த்தாலும் கோர்ட்டுக் கேஸ்கட்டுகள் வைத்திருப்பார். ஐந்து நிமிஷங்களுக்குள் இரண்டு சேர் ஹல்வாவை நிறுத்துப் பொட்டலமாகக் கட்டி அவருடைய கையிலே கொடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் ரயில் வண்டி வேகத்தில் நம்மை நகட்டி எடுத்து விடுவார்!"

இவ்வாறு கூறினார் நண்பர்.

"மற்றவரைத் தெரியும் என்றீர்களே? அவர் யார்?"

"நெருங்கிய பழக்கம் கிடையாது. ஆனால் அவர் யாரென்று தெரியும்! நம் ஜமீன்தார் வட்டாரங்களிலே அடிக்கடி வளைய வருகிறவர் அவர்!"

"அப்படியா?"

"ஆமாம். பலே பேர்வழி. மீசையையும் கிருதாவையும் பாருங்களேன். எவ்வளவு பெரிய கொலைக்கேஸ் ஆனாலும், துப்புத் துலக்குவதிலே அசகாய சூரன்! குற்றவாளி என்று ஒருவன் அவரிடம் சிக்கிக் கொண்டு விட்டால் பிறகு கண்ணில் விரலை விட்டு ஆட்டி விடுவார் மனிதர்!"

இப்படி லாலா சொன்னதும், எனக்கு மனத்தில் ஒரு விநோதமான கவலை உண்டாயிற்று. முன்பின் தெரியாத, இனமே புரியாத, முற்றிலும் புதிய, அந்த இளைஞனிடம் ஓர் அனுதாபம் பிறந்தது!

"நண்பரே! அப்படியானால் இந்த இரண்டு பேரும் இந்த வாலிபனை ஏன் உளவு பார்க்கிறார்கள்? இந்த இளைஞனிடம் வேவு பார்ப்பதற்குரிய தடையம் என்ன இருக்கக்கூடும்? பாவம், அந்த மீசைக்காரனிடம் இந்தச் சாது வாலிபன் அகப்பட்டுக் கொண்டால் இவன் கதி என்ன ஆகும்! அதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறதே!"

இப்படி நான் சொன்னபோது என் குரலுமே நடுங்கியது. பொட்டலம் போட்டுக் கொடுப்பதற்காக மிட்டாய்க் கடைக்கு வந்த ஏதோ ஒரு சித்திர மடல் அது; அதிலுள்ள ஒரு கற்பனை முகமானது அதைப்போன்று தோற்றம் தருகிற இன்னொரு முகத்திடம் இந்த விசித்திரமான அனுதாபத்தை ஏன் உண்டாக்கியது? இறகுக்கும் வர்ணத்துக்கும் இப்படி ஒரு சக்தி இருக்கிறதா? இல்லையென்றால் நான் ஏன் யாரோ ஒரு வாலிபனுக்காக இத்தனை உறவோடு கவலைப் படவேண்டும்?"—இப்படி நான் எண்ணியதும் நண்பர் இடைமறித்தார்.

"இதோ பாருங்கள், அந்த இளைஞன் எழுந்திருக்கிறான். இப்பொழுது அந்த இருவரும் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்!" என்றார் நண்பர்.


மீசைக்காரரையும் அவரோடு வந்த மற்றவரையும் கூர்ந்து பார்த்தேன். அந்தப் பொல்லாத மனிதர்கள் இருவரும் சட்டென்று மண்டபத்தின் சுவர்களிலே மறைந்து கொண்டனர்.

அந்த இளைஞனோ என்றால் 'விறு விறு' என்று குறுக்குத் துறைச் சாலையை நோக்கி ஆற்று மணலிலே மிகவும் வேகமாக நடக்க ஆரம்பித்தான். எங்கள் பார்வையிலிருந்து அவன் மறைந்த சற்று நேரத்துக் கெல்லாம், மீசைக்காரரும் அவருடைய நண்பரும் மண்டபத்திலிருந்து வெளியேறிச் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு, எங்களை நோக்கி வேகமாக வந்தார்கள்! (தொடரும்)

ஒரு பொன்னான திருத்தம்

17-12-61 கல்கி இதழில் பிரசுரமான 'மாற்றறியும் செழும் பசும் பொன்' என்ற கடிதத்தில், நகை வியாபாரிகள் தோலா ரூ. 125 வீதம் மூசைத் தங்கம் வாங்கி அதில் நாலுக்கு ஒன்று என்ற விகிதத்தில் செம்பைக் கலந்து ஒரு சவரன் எடைக்கு ரூ. 30 லாபம் சம்பாதிப்பதாகக் கண்டிருந்தது. இதனால் நேயர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களைக் கல்கி 31-12-61 இதழில் வெளியான 'உண்மையில் கலப்படம்' என்ற கடிதம் போக்கியிருக்குமென நம்புகிறோம். மூசைத் தங்கத்தின் விலை உண்மையில் தோலாவுக்கு ரூ 146 என்றும், தங்கமும் செம்பும் பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில்தான் பொதுவாகச் சேர்க்கப்படுகின்றன என்றும், எனவே நகை வியாபாரிகள் தரமான பொன்னையே விற்பனை செய்து நியாயமான இலாபம்தான் பெறுகிறார்கள் என்பதையும் இக் கடிதம் தெளிவு செய்தது. இத் தகவல்கள்தாம் உண்மையானவை என்று நாம் இப்போது ஆதாரபூர்வமாக அறியவருகிறோம்; இதை மகிழ்ச்சியுடன் அறிவித்து இக் கலப்படம் பற்றிய கலக்கத்தைத் தீர்த்து வைக்கிறோம். கலவரம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய ஒரு கடிதத்தைப் பிரசுரித்ததற்காக மனப்பூர்வமான வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆசிரியர்


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


சுத்தமான
வைரங்கள்
பாபாலால் அண்டு கோ
பொன் வெள்ளி நகை வியாபாரிகள்
ரட்டன் பஜார் சென்னை. 3

ஐஞ்ச பூதங்களில் ஒன்றாகக் கணக்கிடப்படுவது நாம் வசிக்கும் மண். இந்த மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் சக்திதான் எவ்வளவினை தாய் இருக்கிறது? மண்ணை வெட்டி அதற்குள் சில விதைகளைப் போட்டுத் தண்ணீர் ஊற்றினால் மண்ணிலிருந்து செடியும், மரமும் மட்டையும் வெளி வருகின்றன. உண்ணும் உணவு அளிக்க நெல் விளைகிறது. இன்னும் சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை என்னும் எண்ணற்ற உணவு தானியங்கள் எல்லாம் வந்து குவிகின்றன. இன்னும் உடுக்க உடை உதவும் பஞ்சும் பருத்தியும் செடிகளில்காய்க்கின்றன. இதுமட்டுமா? பலப் பல வர்ணங்களில் மலர்கள், பலப்பல சுவையுடைய கனிகள் எல்லாம் இந்தச் செடியிலும் கொடியிலும், மரத்திலும் காய்க்கத்தொடங்குகின்றன. இத்தனை சக்தியையும் உள்ளடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது இந்த மண். இதனாலேயே மண்ணைத் தெய்வமாக்கிப் பூமாதேவி என்றனர். காத்தற் கடவுளான விஷ்ணுவின் பட்டமகிஷி என்றும் வணங்கி வந்தனர் மக்கள்.



ஸ்ரீமுஷ்ணம் பூவராகன்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

இந்த அருமையை யெல்லாம் நன்கு உணர்ந்திருக்கிறான் கவிச் சக்கரவர்த்தி கம்பன். பூமாதேவி என்னும் தெய்வம் தன்னை உழுது வழி படுபவர்களுக்கு அருள் செய்ய விரைந்து வருகிறாள். அவளது அழகான மேனியிலிருந்தே பச்சைப் பசுங் கதிர்கள் வெளிவந்து பிரகாசிக்கின்றன. அவள் தன் உண்மை உருவை ஏதோ பூமிக்குள்ளேயே ஒளித்து வைத்துக் கொண்டு வழிபடுபவர்களுக்கு மட்டும் தன் உருவைக் காட்டுகிறாள். அப் பூமாதேவியின் அம்சமான சீதாதேவியும் உழுகின்ற கொழு முகத்தில் தானே உதிக்கின்றாள். யாகம் ஒன்று செய்ய ஜனக மகாராஜனே நிலத்தைப் பண்படுத்தி அதனை உழ அங்கு சீதாதேவி தோன்றினாள் என்பது வரலாறு. இதைச் சொல்கிறான் கவிச் சக்கரவர்த்தி கம்பன்.

உழுகின்ற கொழுமுகத்தின்
உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவிமடந்தை
திருவெளிப் பட்டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோடு
எழுந்தவளும் இழிந்து ஒதுங்கித்
தொழுகின்ற நன்னலத்தில்
பெண்ணரசி தோன்றினாள்

என்பது பாட்டு. இப்படி அருமையிலும் அருமையாகப் பாராட்டப்படுகின்ற பூமாதேவியை அழித்துச் சிதைத்துவிடச் செய்யும் அக்கிரமமும் நாட்டில் நடக்கத்தானே செய்கிறது. ஒரு கதிர் உதிக்கின்ற இடத்திலே இரண்டு கதிர்கள் உதிக்கச் செய்கின்றவன் உலகை வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றவர்களில் தலைசிறந்தவன் என்று பாராட்டுகிறோம்.—ஆனால் இந்த உலகத்தையே சிதைத்துவிட அணுகுண்டு பரிசோதனைகளும் மற்ற அக்கிரமங்கள் செய்கின்றவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள். இப்படிப்பட்ட அரக்கர்கள் இன்றுதான் இருக்கிறார்கள் என்றில்லை. அன்றும் இருந்திருக்கிறார்கள். ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் பூமாதேவியையே எடுத்துக் கடலுள் சிறை வைத்து விடுகிறான். இந்தப் பூமகளைக் காக்கப் பரந்தாமன் பன்றி உருவில் தோன்றிக் கடலுள் பாய்ந்து அரக்கனைக் கொன்று பூமாதேவியை மீட்டுக் கொண்டு வருகிறான். பூமாதேவியைச் சிறை மீட்டுக் கொண்டு வந்த மூர்த்தியையே பூவராக மூர்த்தி என்கிறோம். இந்தப் பூவராக மூர்த்தியின் அற்புத வடிவைக் காண நாம் அந்த ஸ்ரீமுஷ்ணத்துக்கே செல்ல வேணும். அத்தலத்திற்கே செல்கிறோம் நாம் இன்று.

ஸ்ரீமுஷ்ணம் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் தாலுகாவில் ஓர் ஒதுக்குப்புறமாக உள்ள ஊர். சிதம்பரத்திலிருந்து விருத்தாசலம் செல்லும் வழியில் சேத்தியாத் தோப்பு என்ற ஊர் வரை சென்று அதன்பின் தென்மேற்காகச் சென்றால் ஊர் போய்ச் சேரலாம். ரயில் வசதி யெல்லாம் கிடையாது. சிதம்பரத்தி லிருந்து இருபத்தாறு மைல் தொலைவில் இருக்கிறது. சொந்தக் கார் உள்ளவர்கள் காரிலேயே செல்லலாம். இல்லா விட்டால் இந்த ஊருக்கு நல்ல பஸ் வசதியும் இருக்கிற காரணத்தால் பஸ்ஸிலேயே சிரமம் இல்லாமல் போகலாம். ஊருக்கு வடபுறத்தில் மேற்கே பார்த்த கோயிலில்தான் இந்தப் பூவராகர் இருக்கிறார். வைணவத் தலங்களுக்குள்ளே இத் தலம் சிறப்பானது. சுயம்புலிங்கம் என்பது போல் சிற்றுளி கொண்டு பொளியப் படாது தானாகவே தோன்றிய தலங்கள்



எட்டு என்பர். அவை ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடம், சாளக்கிராமம், நைமிசம், வானமாமலை, புஷ்கரம், நாரா யணம் என்றும் கூறுவர். இவற்றையே வடமொழியில் 'ஸ்வயம் வியக்த க்ஷேத்திரம்' என்பர். இக் கோயில் பிரும்மாண்டமானது. மூன்று மதில்களால் சூழப்பட்டிருக்கிறது. இன்று இருப்பது இரு மதில்களே. மூன்றாவது மதில் சிதைந்து அதன் அடையாளங்கள் மட்டும் இருக்கின்றன. கோயில் வாயிலே 150 அடி உயர முன்ன ஒரு ராஜகோபுரம் அழகு செய்கிறது. இக் கோபுர வாயி

லிலே நுழைந்த உடனே கோபுரத்தின் மேலே கிழக்கு நோக்கியவராய் வேங்கட வாணன் இருப்பதைக் காட்டுவர். வட வேங்கடம் சென்றவர்கள் அறிவார்கள் அங்குள்ள புஷ்கரணியின் மேல் கரையில் உள்ள ஆதிவராகனைச் சேவித்த பின்பே வேங்கடவனைத் தரிசிக்க வேண்டு மென் பதை. அது போல் இத்தலத்தில் கோபுரத்தில் உள்ள வேங்கடவனை முதலில் தரிசித்த பின்னரே பூவராகனைச் சேவிக்க வேண்டும் என்பது சம்பிரதாயம். ஆதலால் நாமும் படிகள் ஏறி வேங்கடவனைத் தரிசித்த பின்பே மேல் நடக்கலாம். ராஜ கோபுரத்தைக் கடந்ததும் நாம் முதலில் சேர்வது நூற்றுக்கால் மண்டபம். இம் மண்டபத்தின் நடுப் பாகம் நன்கு விரிந்து பரந்திருக்கிறது. இத்தனை அகலமாகக் கல்லாலேயே மண்டபம் அமைத்திருப்பது அழகாக இருப்பதுடன் ஆச்சரியப்படத் தக்கதாகவும் இருக்கிறது. இந்நூற்றுக்கால் மண்டபத்திலே நம்மாழ்வார் சந்நிதி இருக்கிறது. ஞான முத்திரை தாங்கிய நம்மாழ்வாரது செப்புச் சிலை சிறியதேயானாலும் அழகானது. அவரைத் தரிசித்த பின்னரே கோயிலின் சிறந்த சிற்ப வேலைகள் உடைய பதினாறு கால் மண்டபம் வந்து சேருவோம். அதனையே புருஷ சூக்த மண்டபம் என்கிறார்கள். நல்ல நுணுக்க வேலைப்பாடுகள் நிறைந்த தூண்கள் இம்மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. இக் கோயிலைக் கட்டிய நாயக்க மன்னர்கள், அவர்கள் துணைவியர் சிலையெல்லாம் கல்தூண்களில் அமைக்கப் பட்டிருக்கின்றன. இம் மண்டபத்துக்குவடபுறம் வேணுகோபாலன் சந்நிதி இருக்கிறது. அங்கு வேணுகோபாலன் ருக்மிணி சத்தியபாமா சகிதம் சிலை உருவில் நிற்கிறான். பக்கத்திலே நர்த்தன கோபாலனும் நடம் ஆடிக் கொண்டே யிருப்பான். பதினாறு கால் மண்டபத்தைக் கடந்தே பிரதான கோயிலுள் நுழைய வேணும். அங்குள்ள மகா மண்டபத்தைக் கடந்து அர்த்த மண்டபம் சென்று அதன் பின் கருவறையில் உள்ள பூவராகனைத் தரிசிக்க வேணும். கருவறையின் நடுவிலே பூவராகர் சிலை உருவில் நிற்கிறான்.

இந்த மூர்த்தி சுமார் மூன்றடி உயரமுள்ளவர். சாளக் கிராமம் என்னும் உயர்ந்த சிலை வடிவினர். இரண்டே திருக்கரங்களுடன் கம்பீரமாக இடுப்பிலே கைகளை வைத்துக் கொண்டு மிடுக்காகவே நிற்கிறார். அப்படி வைத்திருக்கும் கைகளிலேயே சங்கையும் சக்கரத்தையும் ஏந்தி யிருக்கிறார். உடல் முழுவதும் மேற்கு நோக்கி யிருந்தாலும் தெற்கு நோக்கி திமிர்ந்தே நிற்கிறார். அவர் கால் களடியிலேயே ஸ்ரீதேவியும், பூதேவியும் சிறிய வடிவிலேயே எழுந்தருளி யிருக்கின்றனர்.

இங்கு ஒரு சௌகரியம். இங்குள்ள உற்சவ மூர்த்தி மற்றக் கோயில்களில் இருப்பது போல் கருவறையில் இருந்து மூலவரின் திருவடி சரணத்துக்கு இடையூறு செய்ய மாட்டார். பூவராகமூர்த்தியின் வடிவு முழுவதும் கண்ணாரக் கண்டு மகிழலாம். இம் மூர்த்தியின் சிரசில் ஒரு தங்கக் கிரீடம் இருக்கிறது. சேவார்த்தியார் விரும்பினால் அதை எடுத்துக் காட்டுவார். அது கீழே விழுந்துவிடாதபடி ஒரு தங்கச் சங்கிலியால் பிணைக்கப்பட் டிருக்கிறது என்பதை யுமே காணலாம்.

இக்கோயிலில் உள்ள உத்சவர் யக்ஞவராகர். இவர் யக்ஞவராகர் என்று பெயர் பெற்றதற்கு ஒரு வரலாறு உண்டு. நெய்வேலிக்கு அடுத்த வளைய மாதேவியில் காத்தியாயன மகரிஷி என்று ஒருவர் இருந்திருக்கிறார். அவருக்கு ஒரு மகள் அம்புஜவல்லி என்ற பெயரோடு. இவளை மணக்கப் பூவராகர் விரும்புகிறார். அப்போது மகரிஷி பூவராகனை அவரது சுய உருவில் வந்து மணந்து கொள்ளும்படி வேண்டுகிறார். அந்த முனிவர் நடத்திய யக்ஞத்திலிருந்து தம் சுய உருவோடு எழுந்தருளுகிறார். அப்படிப் பரந்தாமன் பூதேவி சீதேவி சகிதனாக எழுந்தவரே யக்ஞவராகர் என்ற திருநாமத்தோடு அங்கு கருவறையை அடுத்த அந்தராளத்தில் இருக்கிறார். அணிகளும் பணிகளும் பட்டாடைகளும் அணிந்து மேனி அழகு முழுவதையும் காட்டாத கோலத்திலேயேதான் அவரைத் தரிசிக்க வேணும். அவர் பக்கலிலேயே சுமார் முக்கால் அடி உயரத்தில் செப்புச் சிலை வடிவில் பூவராகன் வேறே எழுந்தருளியிருக்கிறார். அச்சிறு வடிவினுக்கும் கவசம் அணிவித்து வைத்திருப்பார்கள். இந்த யக்ஞவராகர் என்னும் உத்சவரே உத்சவ காலங்களில் உலா புறப்படுவார். மாசி மாதம் நடக்கும் உத்சவத்தில் தேரோட்டம் முடிந்ததும் கிள்ளை என்ற கிராமத்துக்கு எழுந்தருளி அங்கு தீர்த்தமாடுவார்.

இத் தீர்த்தோத்சவத்தை ஒரு மகம்மதியப் பெரியார் ஏற்படுத்தி வைத்திருக்கும் மூலதனத்தைக் கொண்டு உப்பு வேங்கடராயர் என்ற ராயர் வம்சத்தவர்கள் நடத்தி வருகின்றனர். ஒரு நவாப் தமக்கிருந்த நோய் நீங்க யக்ஞவராகரை வேண்டிக் கொள்ள அப்படியே நோய் நீங்க, அதனால் அந்த நவாப் பூவராக சாஹேப் (பூரா சாஹேப்) என்ற பெயருடன் வாழ்ந்தார் என்று ஒரு கர்ண பரம்பரை வரலாறு.

அவர் ஏற்படுத்திய மான்யம் இன்றும் இருக்கிறது இந்தக் கிள்ளையிலே. சமுத்திர தீர்த்தத்துக்குச் செல்லும் முன், யக்ஞவராகர் மகம்மதியர் பிரார்த்தனை ஸ்தலமான மசூதிப் பக்கம் போய் அவர்கள் செய்யும் மரியாதைகளையும் ஏற்றுக் கொள்ளுகிறார். இன்றும் இப்படி சர்வ சமரசவாதியாக யக்ஞவராகன் எழுந்தருளுவது மிக மிகச் சிறப்பானதல்லவா? இந்த யக்ஞவராகன் ஒரு காலத்தில் திப்பு கல்தானால் களவாடப்பட்டு மறைந்திருக்கிறார். அப்போது புதிதாகச் செய்யப்பட்ட மூர்த்தியேஅபிஷேகஆராதனை ஏற்றிருக்கிறார். யக்ஞவராகன் திரும்பவும் தம் ஸ்தானத்துக்கு வந்த போது, புதிதாக நிர்மாணிக்கப் பட்டவர் போக நாராயணர் என்ற பெயரோடு கொஞ்சம் ஒதுங்கிக் கொள்கிறார். இந்தப் போக நாராயணனே சாதாரண நாட்களில் பஞ்சபர்வ உத்சவங்களை ஏற்றுக் கொள்கிறார்.

பூவராகனை, யக்ஞவராகனை, போக நாராயணனை எல்லாம் தரிசித்து வெளியே வந்து தென் பக்கம் கிழக்கே பார்த்த தனிக் கோயிலில் இருக்கும் தாயாரையும் வணங்கலாம். அவள் அருளையும் பெற்றுக் கோயில் பிராகாரத்தில் ஒரு சுற்றுச் சுற்றினால் அங்கு வட புறம் ஒரு சிறு சந்நிதி இருக்கும். அச்சந்நிதியில் சப்த மாதர்கள் புடைசூழ ஓர் அம்பிகை

எழுந்தருளியிருக்கிறாள். அவளே அம்புஜவல்லியின் அம்சம். பிள்ளையில்லாதவர்கள் வேண்டிக் கொண்டால் அவர்களுக்கு அருள் பாலிக்கிறாள். அவளையே குழந்தையம்மாள் என்று கூறுகிறார்கள். இவளுக்கு ஆராதனை எல்லாம் செங்குந்த முதலிமார்கள் செய்வார்கள். அவளையும் வணங்கி விட்டே நாம் கோயிலுக்கு வெளியே வரலாம்.

வெளியே வருகிற போது இக்கோயிலில் ராமர் சந்நிதியைக் காணோமே என்று கேட்கத் தோன்றும். அப்படிக் கேட்டால் 'ஓ! இருக்கிறதே' என்று கோயிலுக்கு வடமேற்குத் திசையில் உள்ள நந்தவனத்திலுள்ள ஒரு கோயிலுக்கு அழைத்துச் செல்வர். அங்கு ராமர் பட்டாபிஷேகக் கோலத்தில் இருப்பார். பரதன் வெண்குடை கவிக்க, சத்ருக்கனன் கவரி வீசக் காட்சி கொடுப்பார். அநுமன் அங்கே ராமாயண பாராயணமே செய்து கொண்டிருப்பான். இவர்கள் பக்கத்திலேயே தசாவதாரக் கோலங்களில் முதல் இரண்டு அவதாரங்களான மச்ச வடிவும் கூர்ம வடிவும் காணலாம். கொஞ்சம் ராமர் சீதை திருவடிகளைக் கூர்ந்து நோக்கினால் இருவரும் ஒவ்வொரு காலில் மட்டுமே பாதரக்ஷை அணிந்திருப்பது தெரியும். இருவரது மற்ற பாதரக்ஷைகள் என்ன ஆயிற்று என்று கேட்போம். அர்ச்சகர்களுக்கு அதற்குச் சமாதானம் சொல்லத் தெரியாது. நான் நினைக்கிறேன், சித்ரகூடத்தில் பரதன் வந்து ராமரது பாதரக்ஷைகளில் இரண்டை வாங்கிக் கொண்டு போனதாக ராமாயணம் கூறுகிறது அல்லவா? ஆனால் ராமர் அவனிடம் கொடுத்தது அவரது பாதரக்ஷைகள்தானா? அவர் அறிவார். சீதாதேவி, தன்னுடைய பட்டமஹிஷி, சஹதர்மசாரிணி ஆதலால் தன்னுடன் அரியாசனத்திலிருந்து ஆட்சி புரியும் பாத்தியதை பெற்றவள் என்று. பரதனிடம் தன் பாதரக்ஷை ஒன்றும், தன் துணைவி சீதையின் பாதரக்ஷை ஒன்றையுமே கொடுத்திருக்கிறார். இதை வால்மீகி, கம்பர், துளசி எல்லாருக்கும் தெரியாமலேயே மறைத்தும் வைத்திருந்திருக்கிறார். என்றாலும் ஸ்ரீ முஷ்ணத்துப் பட்டாபிஷேக ராமனை உருவாக்கிய சிற்பியிடம் இதை மறைக்க முடியவில்லை ராமனுக்கு. அவன் எப்படியோ இந்த ரகசியத்தைத் தெரிந்து அதை அம்பலப்படுத்தியிருக்கிறான். அவ்வளவுதான். இதை வைத்து ஒரு பாதுகா பிரபாவமே பாடலாம் போல் இருக்கிறது. 'பாதுகா சஹஸ்ரம்' எல்லாம் பாடத் தெரிந்தவர்கள் தானே, கவிஞர்கள், கலைஞர்கள்.

எல்லாம் சரிதான். பூவராகன் என்றீர், யக்ஞவராகன் என்றீர், போக நாராயணன் என்றீர்; இத்தலம் ஸ்ரீ முஷ்ணம் என்று ஏன் பெயர் பெற்றது என்பதைச் சொல்லவில்லையே என்றுதானே கேட்கிறீர்கள். அதையும் சொல்லி விடுகிறேன். ஹிரண்யாக்ஷன் கதையை முன்னமேயே கேட்டிருக்கிறோம். அவனுடைய செல்வம், ஆயுள், புகழ் எல்லாவற்றையும் அபகரித்து ஸ்ரீ தேவியைக் கைப்பற்றியதால் ஸ்ரீ முஷ்ணம் எனப் பெயர் வந்தது என்கிறார்கள்.

இத்தலத்தில் இன்னொரு விசேஷம். இக்கோயிலையடுத்த கீழ்ப்புறத்தில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. அங்குள்ள இறைவன் பெயர் நித்தீச்வரர். பூவராகனும் நித்தீச்வரரும் ஒருவரையொருவர் பாராது முதுகுப் புறத்திலே ஒருவர் முதுகை மற்றவருக்குக் காட்டிக் கொண்டு நிற்கிறார்கள். நமக்கு முன்னமேயே தெரியும் கம்பன் பிறந்த தேரழுந்தூரிலே வேதபுரி ஈசுவரரும் ஆமருவி அப்பனும் ஒருவரை யொருவர் எதிர்நோக்கி சௌஜன்யமாக நிற்கிறார்கள் என்று. இங்கு ஏன் பிணங்கிக் கொண்டு ஒருவரையொருவர் பார்க்காது முகத்தைத் திருப்பிக் கொண்டு நிற்கிறார்களோ தெரியவில்லை.

நித்தீச்வரர் சந்நிதி முன்பு ஒரு திருக்குளம் நித்யபுஷ்கரிணி என்ற பெயருடன். ஹிரண்யாக்ஷனைச் சம்ஹாரித்த காலத்தில் பூவராகன் மேனியிலிருந்து வடிந்த வேர்வைத் துளியே இப்படி புஷ்கரிணியாக மாறியது என்று புராணம் கூறுகிறது. இப்புஷ்கரிணியின் கரையிலே அக்னி திக்கிலே ஓர் அரச மரம் நிற்கிறது. நித்யபுஷ்கரிணியில் நீராடி இம்மரத்தை வலம் வருபவர்கள் எல்லா நலமும் பெறுவர் என்பது நம்பிக்கை. இந்த மரமும் பூஜைக்குரிய பொருளாகிறது.

இக்கோயில் யாரால் எப்போது கட்டப்பட்டது என்று தெரியவில்லை. கட்டடக் கலையைப் பார்த்தால் இது விஜயநகர நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். அதற்கேற்பவே, அச்சுதப்ப நாயக்கன், அனந்தப்ப நாயக்கன், கொண்டப்ப நாயக்கன், கோவிந்தப்ப நாயக்கன் முதலியோர் சிலைகள், புருஷ சூக்த மண்டபம் என்னும் பதினாறு கால் மண்டபத்தில் நிற்கின்றன. இக்கோயில் பல வருஷங்களாக உடையார் பாளையம் ஜமீன்தார்கள் மேற்பார்வையில் இருந்து வந்திருக்கிறது. பல நிபந்தங்கள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் ஆராய நமக்கு நேரம் ஏது? பூவராகன், யக்ஞவராகன், அம்புஜவல்லித் தாயார் முதலியோரை வணங்கி அவர் தம் அருள் பெற்றுத் திரும்புவதோடு திருப்தி யடையலாம்.

சாதுக்களில் ஒரு [illegible]

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று வங்கச் சீமையில் சொல்வார்களோ மாட்டார்களோ? ஆனால் அந்தக் கல்கத்தா வழக்கறிஞர் விசுவநாத தத்தருக்கும், அவர் மனைவி புவனேசுவரிக்கும் சரியாக நூறாண்டுகளுக்கு முன் பிறந்த ஒரு தை மாதத்தில் வழி பிறக்கத்தான் செய்தது. அதுவும் மோட்சத்துக்குப் போகும் வழியாகவே பிறந்து விட்டது. புத் என்ற நரகத்தில் விழாமல் காக்கும் புத்திரன் அன்று அவர்களுக்குப் பிறந்துவிட்டான். அவர்களை மட்டுமின்றி மனித குலம் முழுவதிலுமுள்ள எத்தனை எத்தனையோ மக்களை நரகப் பாதையிலிருந்து மீட்டு வீட்டுக்கு இட்டுச் செல்லும் வழியாக அவன் இருக்கப் போகிறான். கதிரவனுக்கு உகந்த பொங்கல் திருநாளன்று பிறந்த இந்த வங்கக் குழந்தை உலக முழுவதும் ஒளிபரப்பும் ஞான சூரியனாக விளங்கப் போகிறான்.

'துரு துரு' என்று சதா சேஷ்டை செய்யும் நரேந்திரனுடைய விஷமத்தைச் சொல்லி மாளாது.

'ஈசுவரனிடம் பிள்ளை வரம் கேட்டேன். அவன் தன்னுடைய பூதகணங்களில் ஒன்றை யல்லவா அனுப்பி விட்டான்?' என்று புவனேசுவரி தேவி சலித்துக் கொள்ளுமளவுக்கு



கணபதி

அப்படி ஒரு விளையாட்டு. இருந்த போதிலும் சமர்த்துக் குட்டியாக அம்மாவிடம் அமர்ந்து கொண்டு அமரிக்கையாக இராமாயணக் கதையும் கேட்கத்தொடங்கினான் நரேந்திரன். விட்ட குறையும் வந்து தொட்டு விட்டது. பச்சிளம் பாலன் சீதாராம விக்கிரகத்தை வைத்துக்கொண்டு வழிபடத் தொடங்கினான்.

அப்போதுதான் ஒரு நாள் அவர்கள் வீட்டு வண்டிக்காரன் இல்லறத்தின் கொடுமை பற்றிப் பேசுவதைக் கேட்டு விட்டான்.

அந்த இளம் உள்ளத்தில் உடனே ஒரு சந்தேகமும், அதை யொட்டித் தாள முடியாத துக்கமும் ஏற்பட்டு விட்டன. "அப்படியா? கலியாணம் தப்பா? அப்படியானால் ராமன் ஏன் சீதையைக் கலியாணம் செய்து கொண்டான்?"

அம்மாவிடம் சென்று 'ஹோ'வென்று அழுதான் நரேந்திரன். "தப்பு செய்த ராமனைப் போய்எனக்குச் சாமியாக்கிவிட்டாயே!" என்று குற்றம் சாட்டினான்.

குழந்தையின் மனத்தை அந்தப் புனிதவதி புரிந்து கொண்டாள்.

"அழாதே, செல்வமே! கலியாணம் கார்த்திகை வேண்டாத காசிநாதன்தான் நமக்கு இருக்கவே இருக்கிறானே? எல்லாவற்றையும் துறந்த தியாகராஜன் அவன். அவனையே தெய்வமாக வைத்துக் கொள்" என்றாள்.

இந்த முளை பிறகு நாற்றாக, செடியாக வளர்ந்து மாபெரும் விருட்சமாகத் தழைக்கப் போகிறது. 'தியாகம்; துறவு; மக்களுக்காகத் தன் வாழ்வைத் துறப்பது; மறுமைக்காக இம்மையைத் துறப்பது.' இதுவே நரேந்திரனுடைய வாழ்க்கையாகப் போகிறது. சிவபெருமானின் பக்தனான நரேந்திரன் சமரச ஞானம் பெற்றபின் ராமன் மீண்டும் அவனது உள்ளத்தில் புகுந்தான். கண்ணனுக்கு மெய்யாக எவ்வளவோ அருளும் புரிந்தான்.

நரேனின் சொல் எல்லாவற்றிலுமே ஒரு புதுமை. விஷமம் பாட்டில் விஷமம். ஆனால் பாடம் கேட்கும்போதோ வாயைத் திறப்பதில்லை. ஏன் கண்ணையும் திறப்பதில்லை. இதனால்தான் ஆசிரியருக்குச் சந்தேகம் வந்து விட்டது. 'என்ன தூக்கம்?' என்று அதட்டினார் அவர்.

"தூங்கவில்லையே!" என்றான் பாலன்.

"அப்படியானால் இப்போது நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? திருப்பிச் சொல்" என்றார் ஆசிரியர்.

அவ்வளவுதான்! அவர் ஒரு மணியாகச் சொல்லி வந்ததை யெல்லாம் இம்மி விடாமல் கடகட வென்று பொழிந்து விட்டான் நரேந்திரன்.

▶ நரேந்திரன் தூங்குவதிலும் ஒரு புதுமை! அவன் சயனித்திருக்கையில், ஒரு பேரொளி நெருங்கிவரும்; அதில் மெல்ல மெல்ல அவன் கரைந்து, உணர்விழந்து போவான். வெகு காலம் வரையில் நரேந்திரனுக்கு மற்றவர்கள் உறங்கும் விதம் வேறு, தன்னுடைய தூக்கம் வேறு என்பதே தெரியாதிருந்தது.

நரேந்திரன் உயர்தரப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது அவன் குடும்பத்தோடு இரண்டாண்டுகள் ராய்ப்பூரில் வசிக்க வேண்டியதாயிற்று. அவனது படிப்பு தடைப்பட்டுவிட்டது. பின்பு, அவன் நியாயமாகப் படிக்கவேண்டிய வகுப்பிலேயே சேர்ந்து மூன்றாண்டு படிப்பையும் ஒரே ஆண்டில் படித்துத் தேர்ச்சிபெற்று, பள்ளிக்கேபெருமை தந்தான்.

கல்வியில்மட்டுமின்றி எல்லாக் கலைகளிலும் சிறந்து விளங்கினான் நரேந்திரன். இயற்கையாக வாய்த்திருந்த இனிய குரலில் அவன் தனது இசைப் புலமையை வெளியிடும்போது மாணவர்கள் எல்லாம் சொக்கி விடுவார்கள்.

கல்லூரி நாடகங்களில் அவனது நடிப்புத் திறனும் வெளியாகி யிருக்கிறது. நரேந்திரனுடைய நாவன்மையோ யாவரையும் கவர்ந்தது. மாணவப் பருவத்திலேயே சம்பாஷணையிலும் அவன் மன்னனாக இருந்தான்.

சமையற்கலையிலும்கூடப் பெரிய விற்பன்னன் நரேந்திரன். உடலைத் திடத்துடன் வைத்துக்கொள்வதில் அவனுக்கு இணை யாரும் இல்லை. மற்போர், சிலம்பம், குதிரைச் சவாரி எல்லாவற்றிலும் 'படு'வாக இருந்தான் அவன். இளைஞர்கள் உடலை நன்கு வைத்துக் கொண்டிருக்க வேண்டும்; உடலின் நொய்மை உள்ளத்தைத் தாக்க இடம் அளித்து விட்டால் அவர்கள் உருப்படவே முடியாது என்பது நரேன் என்றும் வற்புறுத்திய கருத்து. 'கீதையைப் படிப்பதைவிடக் கால்பந்து விளையாட்டின் மூலம் நீங்கள் மோட்சத்துக்கு அருகில் செல்ல முடியும்' என்று பிறிதொரு காலத்தில் கூறியவரல்லவா அவர்?

ராஜ வம்சத்தில் பிறந்து ராஜ போகத்திலேயே வளர்ந்து வந்த நரேனுடைய சுகவாழ்வு திடீரென்று இருண்டது.

அப்போது சட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்தான் நரேந்திரன். விடுமுறை நாளொன்றில் அவன் நண்பன் ஒருவன் வீட்டில் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் போது இடி போல் வந்தது செய்தி. தந்தை விசுவநாத தத்தர் திடீரென்று காலமாகி விட்டார்!

குடும்ப பாரம் நரேந்திரன் தலையில் விழுந்தது. வெறும் பராமரிப்புப் பொறுப்பு மட்டுமல்ல அது. அன்றாடம் பொழுதைக் கழிப்பதற்கே வருவாய் காண வேண்டிய பயங்கரமான கடமை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. பெருவாழ்வு வாழ்ந்த விசுவநாத தத்தர் சொத்து சுதந்திரம் எதுவுமே வைக்காமல் இறந்து விட்டார். ஆன்மிக சுதந்திரத்துக்குத் தாம் தேடி வைத்த சொத்தான நரேந்திரனைத் தவிர வீட்டுக்கென்றும் எதுவுமே வைத்துப் போகவில்லை அவர். ஒரு வேளை அதுவேதான் நரேந்திரனை இந்நாட்டின் சொத்தாக்கியதோ என்னவோ? அன்ன விசாரம் பெருகி வரும்போதுதானே ஆன்ம விசாரமும் உண்டாகிறது?


இப்போதெல்லாம் நரேந்திரன் நடந்தேதான் கலாசாலைக்குப் போகிறான். வெயிலுக்கும் மழைக்கும் காப்பளிக்கக் குடையோ, கால் அணியோகூடக் கிடையாது. வயிற்றுக்குப் போதிய உணவு கிடையாது. சுயமரியாதை காரணமாக நண்பர்கள் கூப்பிட்டாலும் அவர்கள் வீட்டில் சாப்பிடுவது கிடையாது. ஆனால் வேணுமென்றே காலம் கடத்து தன் வீட்டுக்குச் சென்று வெளியில் சாப்பிட்டு

கோலினோஸ்

பற்சிதைவை ஒழித்து வாய் நாற்றத்தை அகற்றுகிறது.

நிச்சயமான ஆதாரம்!

பற்சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரண மான அநேகமான கிருமிகளைக் "கோலினோஸ்" பற்பசை அறவே அழித்து விடுகிறதென ஆராய்ச்சிக்கூடத்துச் சோதனைகள் நிரூபிக் கின்றன.




காலையிலும் இரவிலும் அரை அங்குல அளவு கோலினோஸ் கொண்டு உங்கள் பற்களை இரண்டு நிமிடங்களுக்குத் தேயுங்கள். அதன் விசேஷமான உட்புகும் நுரை உங்கள் பல்லிடுக்குகளிலிருந்துகொண்டு பற் சிதைவுக்கும் வாய் நாற்றத்துக்கும் காரண மான உணவுத் துணுக்குகளை அகற்றுகிறது.

தவறாமல் வழக்கமாக **கோலினோஸ்** உபயோகிப்பதால்

- பற்சிதைவு ஒழிக்கப்படுகிறது.
- வாய்நாற்றம் அறவே அகற்றப்படுகிறது.
- பற்கள் பளபளப்பாக வெண்மையாகின்றன.
- ஈறுகள் வலுப்படுகின்றன.

வேறெந்தப் பற்பசையும் உங்களுக்கு இதை விட அதிக திருப்தியை அளிக்காதென உங்கள் பல்டாக்டர் கூறுவார்!




கோலினோஸ் குளோரோபிலும் கிடைக்கிறது.

Registered User: GEOFFREY MANNERS & COMPANY LIMITED

விட்டதாக அன்னையிடம் சொல்கிறான். போதும் போதாததாக ஒருவருக்குச் சமைத்திருந்த உணவை அவன் உண்ணுமாறு செய்து களிக்கிறான்.

அவன் உள்ளம் வேறேதோ ஓர் உணவைத் தேடித் தேடித் தவித்தது. ஆம், மலை மலையாகப் புண்ணியத்தைச் செய்து குவித்தவர்களுக்கே ஏற்படக் கூடிய ஞானப்பசி நரேந்திரனுக்கு உண்டாகி விட்டது. ஆனால் அந்தப் பசியைத் தீர்க்கும் அமுது பாரதப் பண்பிலும், சமயத்திலும், நூல்களிலுமே உள்ளது என்று மட்டும் அவனுடைய அறிவு அப்போது ஒப்புக் கொள்ளவில்லை. மேலை நாட்டுப் படிப்பின் காரணமாக எதையுமே நம்பி ஏற்காமல், ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினான் நரேந்திரன். மேல் நாடு, கீழ் நாடு இரண்டின் சமய தத்துவங்களும் கலந்த பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தான். அப்படியும் அவனுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. அவன் நாடித் துடித்தது பரம்பொருளுக்காக. ஆனால் அந்தப் பரம்பொருளைக் கண்ணாரக் கண்டு அதன் உண்மையை உரைக்க ஒருவரும் இல்லாததால் அவனுக்கு அப்படி ஒன்று இருப்பதாக நம்பவே முடியவில்லை. 'கடவுளை நீங்கள் கண்டதுண்டா? கண்டதுண்டா?' என்று வேதாந்தம் பேசுபவர்களை யெல்லாம்—ஆராதனை செய்பவர்களை யெல்லாம்—கேட்டுப் பார்த்து விட்டான் அவன். கடவுளைக் கண்டவர் எவரையும் நரேந்திரன் காணவில்லை.



அவனுடைய பரிதாப நிலையைக் கண்ட ஓர் உறவினர் கூறினார்: ''அப்பனே! தக்ஷிணேசுவரத்தில் ஸ்ரீ காளிமாதாவை ஆராதித்து வருகிறார் ஒரு மகான்! அவர் உன் கேள்விக்கு விடை கூறக் கூடும்'' என்று.

கல்கத்தாவுக்கு வெகு அருகிலேயே உள்ள தக்ஷிணேசுவரத்துக்குப் புறப்பட்டார் நரேந்திரர். 1880-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. இந்துமத சரித்திரத்தில் பொன்னால் பொறித்து எழுத வேண்டிய தினம் அது.

பாரதத்தின் உள்ளுணர்ச்சியை மேலை நாட்டுப் பகுத்தறிவு சந்தித்த தினம் அது. மேல் நாட்டு மோகமும், அறிவாராய்ச்சியும் பெருகி வந்த போது அவற்றைப் புராதன பாரதத்தின் எளிமையாலும், உள்ளுணர்ச்சியாலும் வென்று காட்டுவதற்கென்றே நிகழ்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருடைய பேரவதாரத்தின் நோக்கம் பலிதமான திருநாள் அது.

தக்ஷிணேசுவரத்தில் தேவியை உபாசித்து வந்த தவமுனிவர் பரமஹம்ஸரது சந்நிதானத்தைச் சென்றடைந்தார் நரேன். இவரைக் கண்டதுமே பரமஹம்சர் பரவசமடைந்து விட்டார். ''எத்தனை நாட்கள் உனக்காகக் காத்திருப்பேன். வா, வா!'' என்று கூவி அழைத்தார்.

ஆம், ஜீவாத்மா இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தாலும் அந்தப் பரமாத்மா பத்தடி முன் வந்து இவனை ஆட்கொள்வதாக அல்லவா சொல்கிறார்கள்?

எல்லாரிடமும் கேட்ட கேள்வியைப் பரமஹம்சரிடமும் கேட்டார் நரேந்திரர்.

''நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?''

குரு மகராஜ் எல்லாரும் கூறிய விடையைச் சொல்லவில்லை. முறுவல் தவழும் முகத்தினராக, ''கண்டிருக்கிறேன்! குழந்தாய், கண்டிருக்கிறேன்! ஆனால் இதோ உன்னைப் பார்க்கிறேனே அது போல அல்ல; அதை விடத் தெளிவாக, திவ்ய திருஷ்டியுடன் கண்டிருக்கிறேன். கடவுளிடம் பேசியிருக்கிறேன், வத்ஸ! ஆனால் உன்னோடு இதோ பேசிக் கொண்டிருக்கிறேனே, இப்படி அல்ல; இன்னும் நெருக்கமாகப் பேசியிருக்கிறேன்'' என்றார்.

''உனக்கு அந்தக் கடவுளைக் காண வேண்டுமா? அவனோடு பேச வேண்டுமா? காட்டுவிக்கிறேன்; பேச வைக்கிறேன்'' என்று தொடர்ந்தார் அருளாளர்.

நரேந்திரரின் உடல் படபடத்தது; இதயம் விம்மியது; உள்ளம் பூரித்தது; அறிவு திகைத்தது. இதெல்லாவற்றுக்கும் மேலாக ஆத்மா ஆத்மா என்று எதையோ சொல்கிறார்களே அதனுடைய அழைப்பு அவருக்குக் கேட்டது. ஆனால் அந்த அழைப்பை அப்படியே ஏற்கவில்லை அவர். திகைத்து நின்ற அறிவு மீண்டும் விழிப்புற்றது. இல்லாத பொல்லாத சந்தேகங்களை யெல்லாம் கிளப்பிக் கொண்டது. 'இந்த மாயத்துக்குக் கட்டுப்படக் கூடாது; நன்றாகப் பரீட்சித்துப் பார்த்த பின்னரே பரமஹம்ஸரை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று அது கூறியது.

அதுவா மாயம்? மாயத்தை யெல்லாம் மாய்க்கும் மாபெரும் கருணை அல்லவா அது?

அந்தக் கருணை தானாகவே பேசிற்று. ''பின்னாய்! ஒவ்வொரு காசாகச் செல்லுமா என்று பார்த்துப் பார்த்துப் பணத்தை வாங்கிக் கொள்வது போல் என்னை அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்து பார்த்தே உசிதப்படி செய்வாய்'' என்றார் குரு மகராஜ்.

ஆனால் யாரை, யார், எப்படி ஆராய்வது? அந்தப் பரமஹம்ஸரே கூறியது போல், சமுத்திரத்தின் ஆழத்தை உப்புப் பிரதிமையால் ஆராய்ந்து பார்க்க முடியுமா? அந்த ஞானத்தின் எதிரில், பக்தியின் எதிரில், சீலத்தின் எதிரில், அருளின் எதிரில், எளிமையின் எதிரில் நரேந்திரனின் வாதப் பிரதிவாதங்களெல்லாம் தாமாகவே தவிடு பொடியாயின.

இறைவனை அர்ச்சித்து அர்ச்சித்துப் பாவனமான கரம் இறைவனுக்கும் மேலானது என்று வேதம் கூறுகிறதல்லவா? அப்பேர்ப்பட்ட தமது திருக்கரத்தை ஒருமுறை நரேந்திரரின் நெஞ்சில் சாத்தினார் ஸ்ரீ ராம

SWARAJYA

The first Special Number of Swarajya dedicated to the hallowed memory of Sri Khasa Subba Rau, its founder editor will be released on 23rd January 1962

The Swarajya Special Number has been planned to give the reader a broad and critical survey of the progress of our country in various spheres of our national life—social, economical, political, and administrative. The subjects that will be covered in the Special Number will be varied and comprehensive. There will be several articles in the Special Number, written by acknowledged men of eminence in their respective spheres, economists, professors, industrialists, administrators and statesmen. All this will provide a sumptuous fare for the reader. In a word, the Swarajya Special Number will be a worthy guidance and a valuable reference volume.

Rajaji, Sri K. M. Munshi, Dr. C. P. Ramaswamy Aiyar, Sri Jayaprakash Narain, Acharya J. B. Kripalani, Dr. C. D. Deshmukh, Dr. A. Lakshmanaswamy Mudaliar, Shri Sampurnanand, Benegal Rama Rau, Sri N. Raghunatha Aiyar, Mr. Frank Moraes, Sri K. Santhanam, Prof. B. R. Shenoy, Shri Murarji J. Vaidya, Prof. M. Ruthnaswamy, Sri R. K. Narayan

and many other eminent men contribute

Printed on good imitation art paper and about 250 pages in Demy Quarto size

Price per copy Rs. 5/-

75 nP. extra per copy if sent by registered post

Please register your copy in advance with MANAGER SWARAJYA, KALKI BUILDINGS MADRAS 10 or with your local agent for Kalki and Swarajya

SPECIAL NUMBER

1962

கிருஷ்ணர். அவ்வளவுதான்; ஸ்ரீ ராமகிருஷ்ணரும், காளி கோயிலும், தட்சிணேசுவரமும் வெளியுலகமும், வெளியுலகப் பிரக்ஞையும் எல்லாம் மறந்துபோயின நரேந்திரருக்கு. தம்மையே இழந்து விட்டார். காண்பனவெல்லாவற்றுக்கும் எது மூலகாரணமோ அதனில் கரைந்து விட்டார். பேசும் பேச்சுக்கெல்லாம் எது ஆதாரமோ அதில் கலந்து விட்டார். அந்த ஆனந்த அநுபவத்தைப் போன்ற உணர்வு வேறு உண்டா? கடவுளைக் கண்டவரைக் கண்டதோடும் பேசியதோடும் மட்டுமில்லை; இன்று நரேந்திரரே கடவுளைக் கண்டாயிற்று; பேசி ஆயிற்று. நரேந்திரர் விவேகானந்தர் ஆகி விட்டார்.

பகுத்தறிவினால் ஆன்மீகத்தைப் பகுத்துப் பார்த்தவர் இப்போது ஆத்ம வஸ்துக்களை அநாத்ம வஸ்துக்களிலிருந்து பிரித்துணரும் விவேகத்தைப் பெற்று அதிலேயே ஆனந்திக்கும் விவேகானந்தராகி விட்டார். புவனேசுவரியின் பிள்ளையாக இருந்தவர் உண்மையிலேயே புவனங்களுக்கெல்லாம் ஈசுவரியான பராசக்தியின் பிள்ளையானார்.

சமாதி நிலையிலேயே தாம் எப்போதும் இருக்குமாறு செய்ய வேண்டுமென்று ஒரு முறை சிஷ்யர் குருவை வேண்டினார்.

''இல்லை, குழந்தாய், நீ அதற்காகப் பிறக்க வில்லை'' என்றார் குருதேவர்.

''உன்னுடைய விடுதலையை மட்டும் நாடுவது தன்னலமாகும். நீ இந்த உலகத்திலுள்ள எத்தனையோ தேசங்களில் வாழ்பவர்களுக்கெல்லாம் விடு பெறும் உபாயத்தைச் சொல்ல வந்தவன். உன் வேலை ஆன பிறகு நீ இந்த ஆனந்த நிலையைப் பெறுவாய். அது வரையில் இவ்வழி அடைத்து வைத்திருக்கும்; திறவுகோல் என்னிடம்தான் இருக்கிறது'' என்றார்.

தாம் மறையுமுன்னர், ''பிள்ளாய்! என் தவத்தின் பலனையெல்லாம் உன் வசம் ஒப்புவித்து விட்டேன். அதைக் கொண்டு இந்த உலகெங்கும் ஆன்மீகத்தை நிலைநாட்டுவாய். முழுமனத்துடன் இந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றுவாயாக''என்றுபணித்தார் குரு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திருவுடலம் மறைந்தபின் அவர் பணித்த செயலுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார் விவேகானந்தர். சாதுக்களின் சங்கம் கலையாமல் பார்த்துக் கொண்டார். தர்ம பிரசாரத்துக்காகவே வாழ்நாளைச் செலவிடப் புதுப் புது துறவிகளை வார நகரம் என்ற இடத்தில் கொண்டு வந்து சேர்த்தார். பல விதங்களில் வந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அவர்கள் ஆனந்தமாகக் காலம் கடத்தி வந்தார்கள்.

எங்கெங்கும் சஞ்சரித்துக் குருதேவரின் ஆக்ஞையை நிறைவேற்ற வேண்டும் என்ற துடி துடிப்பு விவேகானந்தருக்கு நாள் தோறும் அதிகமாகி வந்தது. கடைசியில் 1891-ம் ஆண்டில் புறப்பட்டு விட்டார், தண்டமும், கமண்டலமும் தாங்கிய பரிவிராஜகராக. பணம் வைத்துக் கொள்வதில்லை, உணவைத் தேடிச் செல்வதில்லை, நெடும் தூரப் பயணமானாலொழியக் கால் நடையாகவே செல்வது என்ற தீர்மானங்களுடன் கிளம்பி விட்டார்.

இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் திக் விஜயம் செய்து புராதன வேதாந்த மதத்தின் வெற்றிக் கொடியை நாட்டினார் விவேகானந்த அடிகள். தொன்று தொட்டுப் பாரத மக்கள் மனத்தில் புதைந்திருப்பது மத உணர்ச்சிதான்; அரசியலோ பொருளாதாரமோ அல்ல. எனவே அந்தச் சமய நம்பிக்கை மூலம்தான் அந்நிய ஆதிக்கங்களின் கீழ் ஆத்மாவை இழந்த இந்தியாவுக்குப் புத்துயிரூட்ட முடியும் என்பதே அவரது கருத்து. நாடு முழுதும் சுற்றியதால் மக்கள் எல்லாருடைய பொருளாதார நிலையையும், மனோநிலையையும் உணர்ந்தார். பண்டைப் பாரதம் நிகழ்கால பாரதம் இரண்டையும் நன்கு உணர்ந்து, அந்த உணர்வின் உருவகமானார். தாமே தம்மை இறுகிய இந்தியா (Condensed India) என்று கூறிக் கொண்டார். இந்த அநுபவ ஞானத்தைப் பெற்றிருந்ததாலேயே அவர், வறுமையையும் உடல் நலிவையும் ஒழித்துக் கட்டியபின் மக்களுக்கு மதத்தைப் புகட்டினால்தான் அவர்களால் அதனை ஏற்க முடியும் என்பதை அறிந்து கொண்டார். அச்சத்தை அகற்றி ஆண்மை கொள்ளச் செய்வதே மக்களுக்கு அளிக்க வேண்டிய தாரக மந்திரம் என்று எடுத்தியம்பினார். சத்துவ குணம் ததும்பி நிறைந்த விவேகானந்தர், உத்வேகம் நிரம்பிய ராஜஸமே அன்றைய இந்தியாவுக்குத் தேவை என்று முழங்கினார். தாமே சாதுக்களில் ஒரு சிம்மமாக, கர்ம யோகியாகத் திகழ்ந்தார்.

சுவாமிகளின் மேதா விலாசமும், அதனை அவர் வெளிப்படுத்திய வாக் சாதுரியமும் அவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு தேடித் தந்தன. பாரதப் பண்புகள் மீண்டும் பெருமை பெற்றன. மேனாட்டு மோகம் மெல்ல மெல்லத் தணிய ஆரம்பித்தது. இவருடைய அவதார இலட்சியமே இதுதான்;

அமெரிக்காவில் சர்வ மத மகாசபை ஒன்று நடைபெற விருந்தது. அதில் இந்தியாவின் சார்பில் சுவாமிகள் கலந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தை முதலில் தெரிவித்தது அந்நாள் மைசூர் மகாராஜா. பயணத்துக்கு இயன்ற உதவிகளை அளிக்க முன் வந்தவர் இராமநாதபுரம் அரசர் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி. ஏன், தமிழகம் முழுதுமே இந்தத் திருப்பணியில் முன்னணி தாங்கியது.

இச் சமயத்தில்தான் ஒரு நாள் ஸ்ரீ பரமஹம்ஸர் தமக்குப் பிரசன்னமாகிப் பின் தொடருமாறு சைகை காட்டிக் கடலுள் மறைவது போல் ஒரு தோற்றத்தைக் கண்டார் விவேகானந்தர். குருவின் உத்தரவும் கிடைத்து விட்டது! புறப்படத் தயாரானார் விவேகானந்தர்.

1893-ம் ஆண்டு மே மாதம் முப்பத்தியொன்றும் தேதி பம்பாயிலிருந்து புறப்பட்ட 'பெனின்சுலார்' கப்பலில் சுவாமி விவேகானந்தரும் ஒரு பிரயாணி.

சர்வமத மகாநாடு நடைபெற்ற சிகாகோவில் சுவாமிகளுக்கு எத்தனையோ தடைகள் தோன்றின. இக்கட்டான நிலைகளை உண்

டாக்கி அவற்றில் அடியார் நெஞ்சுரத்தைச் சோதித்த பின்னரே கைகொடுப்பது கடவுளின் திருவிளையாடல் அல்லவா? அந்தச் சோதனைகளில் எல்லாம் தேறினார் சுவாமிகள்.

சிகாகோவிலுள்ள கொலம்பியன் ஹாலில் 1893ம் ஆண்டு செப்டம்பர் 11-ந் தேதி மகாசபை தொடங்கியது. பல பேரறிஞர்கள் உரை ஆற்றினார்கள். சுவாமிகளின் முறையும் வந்தது. அம்பிகையையும், அவளின்று வேறல்லாத ஆசாரியரையும் தியானித்து விட்டு ஆரம்பித்தார் விவேகானந்தர். சொற்களும், கருத்துக்களும் அருவியாகப் பிரவகித்தன.

மேல் நாட்டார் பரிகசிக்கும் உருவ வழிபாட்டிலிருந்து, அத்துவைத தத்துவம் வரை இந்து சமயக் கோட்பாடு முழுவதையும் தெளிவுபடுத்தி விரிவுரையாற்றினார்.

ஒரே தினத்தில் விவேகானந்தரின் பெருமை அக் கண்டம் முழுவதிலும் பரவிற்று. மக்கள் போட்டி போட்டுக் கொண்டு அவரது உரைகளைக் கேட்கவும் உபசரிணைகள் செய்யவும் முன்வந்தனர். தமக்கு அளிக்கப்பட்டிருந்த பஞ்சணை மெத்தையைக் கண்ட சுவாமிகளோ இந்தியாவின் வறிய நிலையை எண்ணி ஓர் இரவெல்லாம் விம்மி அழுதாராம்! பல நகரங்களிலிருந்து பிரசங்கம் செய்யுமாறு அவருக்கு அழைப்பு வந்தது. ஒவ்வோர் இடத்திலும் புதிதாக எதைப் பேசுவது என்று சுவாமிகள் நினைப்பார். ஆனால் பிரதி இரவும் யோகநித்திரையில் அசிரீரரன் புதுப் புதுக் கருத்துக்களை யாரோ எடுத்துக் கூறுவது தெளிவாகக் கேட்கும். அவையே மறுநாள் அவர் வாய்மொழியில் வளம் பெறும்.

அமெரிக்காவில் ஜயபேரிகை கொட்டியபின் ஐரோப்பா சென்றார் சுவாமிகள். அங்கு ஏராளமான சீடர்களைப் பெற்று இராமகிருஷ்ண முனிவரது அருட்செல்வத்தை அவர்கள் மூலம் அக்கண்டத்திலும் பரவச் செய்தார்.

1897-ம் ஆண்டுத் தொடக்கத்தில் சுவாமிகள் தாய் நாட்டில், இராமநாதபுரம் சமஸ்தானத்தில் காலடி எடுத்து வைத்த போது அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கு மூல காரணமாக இருந்த தமிழகம் அவரைப் பெருமிதத்துடன் வரவேற்றது. தமிழ்நாட்டுத் திருப்பதிகள் தோறும் சுவாமிகளுக்கு வரவேற்புகள் அளிக்கப்பட்டன. கும்பகோணத்திலிருந்து அவர் சென்னை வந்து கொண்டிருந்த போது குண்டலாளத்தில் படுத்திருந்து வண்டியை நிறுத்தி அவருக்கு மரியாதை செலுத்தினாராம் சிற்றூர்வாசிகள்! சென்னை எழும்பூரிலிருந்து. இன்று 'ஐஸ் ஹவுஸ்' என்று வழங்கும் அன்றைய 'காஸில் கர்னனுக்கு' அவர் செல்லுகையில் தேங்காய் பழம் நிவேதனம் செய்து, கற்பூர தீபாராதனை செய்தவர்கள் கணக்கற்றவர்கள்.

அதே ஆண்டு மே மாதத்தில் தம் பணிகளுக்கு மணி மகுடமிட்டார் விவேகானந்தர். ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் என்ற இரு புனித ஸ்தாபனங்களை அமைத்தார். பாரமார்த்திகப் பணியை மட்டும், சமூக சேவையைச் சங்கமும் செய்ய வேண்டுமென ஏற்பாடு செய்தார். அவர் பொன்னுள்ளத்தோடு நிறுவிய ஸ்ரீ ராமகிருஷ்ண ஸ்தாபனங்கள் இன்று உலகெங்கும் அரும் பெரும் பணிகளைப் புரிந்து வருகின்றன.

1899-ம் ஆண்டு மீண்டும்மேலைநாடுகளுக்குச் சென்று முன்பு தொடங்கிய பணியை நிறைவு பெறச் செய்தார் விவேகானந்தர். இரண்டே மாதத்தில் பிரெஞ்சு மொழியில் வல்லுநராகி, சர்வ மதங்களின் தோற்றத்தைப் பற்றி பாரிஸில் நடைபெற்ற மகாநாட்டில் பேருரை வழங்கினார். தாய்நாடு திரும்பிய விவேகானந்தரின் இக்கிழமைகள் 1901-ம் ஆண்டோடு முடிவு பெற்றன. நாற்பது வயது கூட நிரம்பப் பெறாத சுவாமிகள் துறவறத்தின் முதிர்ச்சியைப் பெற்று விட்டார். கல்கத்தா பேலூரிலுள்ள மத்திய மடத்திலேயே அடக்கமாகத் தங்கி, போதனையிலும், ஆன்ம சாதனையிலும் காலம் கழிக்கலானார். தொலைவிடங்களிலிருந்த சீடர்களையெல்லாம் வரவழைத்து ஆசி கூறி அனுப்பலானார். மடத்தின் நிர்வாகம் எப்படி யிருக்க வேண்டுமென்பதை ஒழுங்குபடுத்தி வைத்தார். உதித்த இடத்தில் ஒடுங்கவே இத்தகைய ஏற்பாடுகளும்!

1902-ம் ஆண்டு ஜூலை 4ந் தேதி. அன்று அதிகாலையில் சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சந்நிதியில் வழக்கத்தைவிட நீண்ட நேரம் நிஷ்டை புரிந்தார். பகல் தாமே உணவு சமைத்தார். அருகவையுடன், பகவத் பிரேமரஸமும் கலந்த அந்த இன்னமுதைத் தமது திருக்கையாலேயே சிஷ்யர்களுக்குப் பரிமாறினார். அவர்கள் கைகழுவ தண்ணீர் தாமே நீருப வார்த்தார்.

சந்தியா பூஜைக்குச் சிஷ்யர்களை அனுப்பி விட்டுத் தாம் மட்டும் ஏகாந்தமாகத் தமது அறைக்குச் சென்றார். கிழக்கு முகமாக அமர்ந்து நிஷ்டையில் ஆழ்ந்தார்.

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் ஜபம் செய்து கொண்டிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணானந்தரின் தியானத்தில் விவேகானந்தர் தோன்றினார். "அப்பா! நான் உடலை உதறி விட்டேன்" என்றார்.

ஆம், சரியாக அதே சமயத்தில், இரவு ஒன்பது மணிக்கு, சுவாமிகள் பேலூரில் தமது புனித சரீரத்தை நீத்து விட்டார். குரு தேவ பரமஹம்ஸர் மோட்ச சாம்ராஜ்யத்தைத் திறந்துவிட்டுத் திறக்க அதில் பிரவேசித்து பிரம்மானந்தத்தில் ஒன்றி விட்டார் விவேகானந்தர்.

சநாதன தர்மம் நலிவுற்றபோது தோன்றி அதனை மீண்டும் உயிர்ப்பித்து, பாரெங்கும் பொலிவடையச் செய்து, இளமையிலேயே உலக வாழ்வை முடித்த விவேகானந்தரை எண்ணினால் ஆதி சங்கரப் பெருந்தகையின் பாவனை நினைவு வருகிறதல்லவா?

வானந் தம்புகழ் மேவி விளங்கிய
மாசிலாதி சூரனைச் சங்கரன்
ஆனந் தன்கு மீந்நாட்டினைப் பின்னரும்
நண்ணி ஞானத் தேசுறு மக்விவே
கானந்தப் பெருஞ்சோதி

என்றே பாரதியாரும் பாடினார்.

அந்த ஆனந்தப் பெருஞ்சோதி உதயமாகி இன்று நூறாவது ஆண்டு தொடங்குகிறது. நம் அக இருள் நீங்க அதன் அருளொளியை நாடுவோமாக!

திருமூலர் தவமொழி

ராஜாஜி சோமு

40

இறைவனுடைய அனுக்கிரகப் பேரின்பத்தை அனுபவிப்பதற்கு ஒரே வழி தெய்வ சிந்தனையிலே இதயம் தோய்ந்து இரண்டற்ற பாவனையில் மூழ்குவதேயாகும். இதைப் பாடுகிறார் திருமூலர்.

" நானென்றும் தானென்றும்
நாடினேன்—"

நான் வேறு, இறைவன் வேறு என்று எண்ணி, என்னிலிருந்து அவன் வேறுபட்டு நிற்கிறான் என்பதாக நினைத்து, அவனைத் தேடத் தொடங்கினேன்.

நானென்றும் தானென்றும்
நாடினேன்; நாடலும்
நானென்று தானென்று
இரண்டில்லை என்பது

அப்படி நான் இறைவனைத் தேடத் தொடங்கியதும் நான் என்றும் இறைவன் என்றும் தனித் தனியாக இரண்டு பொருள் இல்லை என்ற உண்மையை

நானென்ற ஞான
முதல்வனே நல்கினன்

[ஞான முதல்வன்—ஞான மயமாகிய இறைவன். நான் என்ற ஞான முதல்வனை—என்னுள்ளே நானாகத் தோற்றம் காட்டி நிற்கிற ஞான முதல்வனாகிய இறைவனே. நல்கினன்—உணர்த்தித் தந்தான்.]

இந்த உணர்வு ஏற்பட்டதும் என்ன நேர்ந்தது?

நானென்று நானும்
நினைப்பொழிந் தேனே!

[நானும் நானென்று நினைப்பதை விட்டொழிந்தேன் என்று பொருள். நானென்று நினைப்பொழிந்தேனே—நான் என்று என்னைத் தனியாகப் பிரித்துக் கொண்டு நினைக்கிற ஆணவ நினைப்பை விட்டு நீங்கினேன். நீங்கி என் தனித் தோற்றம் ஒழிந்து எல்லாம் அவனே என்பதை உணர்ந்தேன்.]

நானென்றும் தானென்றும்
நாடினேன்: நாடலும்
நானென்று தானென்று
இரண்டில்லை என்பது
நானென்ற ஞான
முதல்வனே நல்கினன்
நானென்று நானும்
நினைப்பொழிந் தேனே

இறைவன் ஆன்மாக்களிலே கலந்து உணர்விலே சுடர் விடுகிறான் என்பதைச் சொல்லி, குருவின் உபதேசம் இன்றி இந்த மெய்யுணர்வு அடைவது முடியாத காரியம் என்று பாடுகிறார்.

உருவன்றி யேநின்று
உருவம் புணர்க்கும்

[உருவன்றியே நின்று—பரம்பொருளானது தனக்கென்று ஓர் உருவம் இல்லாமலே நின்று. உருவம் புணர்க்கும்—உயிர்களுக்குப் பல உடல்களைத் தரும்.]

கருவன்றி யேநின்று
தான்கரு வாகும்

[கரு—பிறப்புக்கு வித்து. கருவன்றியே நின்று—மூலகாரணமாகிய தனக்கு ஒருவித வித்தும் இன்றியே சுயம்புவாக நின்று. தான் கருவாகும்—உலகிலுள்ள உயிர்களின் தோற்றங்களுக்கெல்லாம் அவன் கருவாகிறான்.]

மருவன்றி யேநின்ற
மாயப் பிரானை

[மரு—பிணைப்பு. மருவன்றியே—ஒன்றோடும் பிணைப்பில்லாமலே. நின்ற மாயப்பிரானை—நின்று இயக்குகிற மாயனை எம்பெருமானை. மாயன்—விளைகளைக் காட்டி மயக்குகிறவன்.]

குருவன்றி யாவர்க்கும்
கூடவொண் ணாதே

அப்படிப்பட்ட மாயனை ஆசிரியனுடைய அருளில்லாமல் அடைய முடியாது.

உருவன்றி யேநின்று
உருவம் புணர்க்கும்
கருவன்றி யேநின்று
தான்கரு வாகும்
மருவன்றி யேநின்ற
மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்கும்
கூட ஒண்ணாதே!

ஞானத்துக்குக் குருவின் உபதேசம் அவசியம்!

எல்லா மளிகைக் கடைகளிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலும் கேட்கவும்

சீல் செய்த டின்கள் உத்திரவாதமானது

பரிசுத்தம் - தரம் - வாசனை

தோற்றங்களினால் ஏமாற்றமடையலாம். உதாரணமாகத் தோற்றத்தினால் மட்டும் உங்களால், நெய் கலப்பில்லாதது அல்லது சுத்தமானது என்று ஒருபோதும் சொல்ல முடியாது. சரியான ருசி, வாசனைக் குறியைக் கொண்டு கலப்பில்லாதது என்று திருப்தி கொள்ள முடியாது. கலப்பட ரகத்திலிருந்து கலப்படமில்லாதது என்று பிரித்தறிவது உண்மையாக ரொம்பவும் கஷ்டமானது. ரொம்பவும் அனுபவமான மனிதனும், தோற்றத்தையும் ருசி இயல்பையும் கொண்டு தீர்ப்பு பண்ணுவானேயானாலும் சுலபமாக ஏமாற்றப்படுவான்.

இதை லாபமாக எடுத்துக் கொண்டு, பாப காரியங்கள் செய்ய அஞ்சாதவர்கள் வனஸ்பதி மற்ற ஒத்த பொருள்களை நெய்யுடன் கலப்படம் செய்து ஜாக்கிரதையற்ற வியாபாரிகளுக்கும், உபயோகிப்போருக்கும் 'சுத்த நெய்' என்று கடத்தி விடுகிறார்கள்.

ஆராய்ச்சி ருசுப்படுத்துகிறது: சுத்தமான நெய்யில் அடிப்படை உறுதியான இரசாயனப் பொருள்கள் இருக்கின்றன என்று. இரசாயனப் பொருள்கள் உருவாகிற பாகத்தில் அளவு, சர்க்காரால் (உணவுக் கலப்படத் தடைச் சட்டம் செய்து) இடப்பட்டு இருக்கிறது.

ஆனதால் லிங்கம் கம்பெனியார் சுத்தமான நெய் கிடைக்க காரிய வகைப்படி தரம் செய்கிறார்கள். இந்த சூழ்ச்சிப்படி தரம் செய்வதற்கு முன்பு ஒவ்வொரு வெண்ணெய், நெய் மாதிரிகளை எங்கள் பூர்த்தியாக அமைக்கப்பெற்ற இரசாயனச்சாலையில் நெய்ச்சுவையில் பழக்கப்பட்டவரால் ஆரம்ப, தொடர்ச்சியான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. அநுசரணம் நெய்யில் இரசாயனப் பொருள்கள் சுத்த நெய்க்கு வேண்டிய எல்லா அளவும் இருக்கின்றன என்று ருசுப்படுத்தினால் மட்டில் அதை எடுத்துக் கொண்டு, வராதவைகளைத் தள்ளுபடி செய்து வாபீஸ் செய்து விடுகிறோம். எடுத்துக் கொண்டதை மட்டும் எங்கள் சுத்திகரிப்பு சாலையில் குறிப்பிட்ட நிலையான கொதிநிலையில் ஒரே இயல்புள்ளபடி தயார் செய்து, அன்னியமான பொருள்களை வடிகட்டுதல் மூலம் நீக்கி நெய்யில் இருக்கக்கூடிய விடமின்-A போகாதபடி முன்னெச்சரிக்கையுடன் கவனித்து குருமை வாட்டு வருவதற்கு, வெட்டுவாய்ப் பாத்திரங்களில் நிரப்பி நன்றாகக் காற்று வரும்படியான வசதியுள்ள இடத்தில் வைத்து குருமை ஏற்படும் நிலைவரை ஆறவைத்து மறுபடி வேண்டிய அளவு நேர்த்தியான புதிய டின்களில் அடைக்கிறோம்.

ஒருவர் நெய் வாங்கும்போது மூன்று முக்கிய குணங்களைப் பார்க்கவேண்டும்.

பரிசுத்தம். தரம். வாசனை

கலப்பில்லாத நெய் சுத்த நெய்யாக இருந்தால் மட்டிலும் போதாது. உயர்ந்த நற்குணமுடையதாக இருக்க வேண்டும். அதாவது புதியதாயும், துப்புரவானதாயும் பக்குவமாகத் தயாரிக்கப் பட்டு இருக்க வேண்டும். இதை நெய்யில் இருக்கக்கூடிய புளிப்பைக் கொண்டு நிச்சயித்துக் கொள்ளலாம்: 3 சத விகிதத்துக்கும் குறைந்திருக்கும் நெய்யை மட்டிலும் நாங்கள் **ரோஜா மார்க்** குறியிட்ட புதிய டின்களில் அடைக்கிறோம்.

வாங்கி உபயோகிப்பவர்கள் ஏகச்சலுகைக்கு அதிக முக்கியம், வாசனை மூலமாய் சுயமாக இருக்கிறது. வாங்கி உபயோகிப்பவன் அவனுடைய தேசத்தின் நெய்யின் வாசனைக்கு பழக்கப்பட்டிருக்கிறான். ஆனால் ஒரு மனிதன் எந்த இடத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் நெய் வாங்கும் பொழுது கீழ்க் கண்ட குறிப்புகளை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு டின் மேலும் **ரோஜாப் பூ** குறியும் '**ரோஜா மார்க் நெய் - கோயமுத்தூர்**' என்றும், 4 K. G. டின்கள் அச்சிடப்பட்டும், 16 K. G., 500 grms. 450 grms டின்களில் லேபில்கள் ஒட்டப்பட்டு இருக்கிறதா என்றும், மூடி

L. R. SWAMI




16 கனவை வளர்க்கும் கண்கள்

மணிபல்லவம்

ஏக்கறுதல் என்ற தமிழ் வார்த்தைக்குப் பொருள் 'ஆசையால் தாழ்தல்' என்று இளமையில் தனக்கு இலக்கியங்களைக் கற்பித்த புலவர் கூறியிருந்ததை இன்று நினைத்துக் கொண்டாள் சுரமஞ்சரி. நன்றாக முற்றிக் கனிந்த முழுமையான கனியைப் போல இந்த வார்த்தையில் நிரம்பியிருக்கும் பொருளை எல்லாம் இன்று அவள் உணர்ந்தாள். ஆசைக்கு உரிய பொருள் மேலே மேலே எட்ட முடியாத உயரத்துக்கு விலகிப் போகும்போது அதன் மேல் ஆசை வைத்தவர்கள் கீழே தாழ்ந்து தான் போய் விடுகிறார்கள். முன்பு இருந்த இடத்தினின்று தளர்ந்து கீழே சரிவது தான் தாழ்வு என்பதில்லை. 'இது நமக்குக் கிடைக்க வேண்டும்' என்று நாம் ஆசைப்படும் இலக்கு எதுவோ அது ; மேலே உயர்ந்து விட்டாலே நமக்குத் தாழ்வுதான் என்று தன் குறையை உணர்கிற மன நிலையோடு கையிலிருந்த ஏடுகளை யெல்லாம் பட்டு நூலில் கட்டிச் சுற்றி வைத்து விட்டு ஏக்கப் பெருமூச்சு விட்டாள் சுரமஞ்சரி.

அவளுக்கு எதிரே மேற்குப்புறத்துப் பலகணியின் முன் மாடத்துக்கு அப்பால் அந்தி வானம் செந்தழல் பரந்து அதில் சிறிது சிறிதாய் மஞ்சளும் கலந்து கொண்டிருந்தது. நான்கு காத தூரம் பரந்து கிடக்கும் இந்தப் பெரிய பூம்புகார் நகரத்தில் ஒவ்வொரு மாலைப் போதும், யார் யாருடைய வாழ்க்கையில் என்னென்ன மாறுதல்களை எல்லாம் உண்டாக்குகின்றனவோ? அவளைப் பொறுத்தவரை ஒரு மாறுதலும் இல்லை.


நா. பார்த்தசாரதி

அவளுடைய காலை நேரம் அந்த மாடத்தின் கிழக்குப் பக்கத்துப் பலகணியில் பிறக்கிறது. மேற்குப் பக்கத்துப் பலகணியில் முடிந்து விடுகிறது. இவற்றுக்கு இடையேதான் அவளுடைய ஆசைகளும் அவளும், ஏங்கி ஏக்கற்றுக் கொண்டிருக்கும்படி நேர்ந்துள்ளது. காலையில் தான் கற்ற கவிதையில் வந்த உவமை இப்போது அவளுக்கு மீண்டும் நினைவு வந்தது.

வில்லில் இருந்து புறப்பட்டுப் பாய்ந்து கொண்டிருக்கிற அம்பின் நிழலைப்போல இந்த வாழ்வின் வேகத்துக்கு இடையே சுகங்களும் தோன்றி அழிந்து கொண்டிருக்கின்றன.

'தோன்றுவதாவது? அழிவதாவது? தோன்றினால்தானே அழிய முடியும்? என்னுடைய வாழ்க்கையில் நான் ஆசைப்படுகிற சுகங்கள் இன்னும் தோன்றவே இல்லையே! கிழக்குப் பக்கத்திலிருந்து தெரியும் ஒளி மேற்குப் பக்கத்தில் ஓடி மறைவதற்குள் இந்தச் செல்வச் சிறைக்குள் எத்தனை சுகங்கள் தோன்றி விட முடியும்? 'நான் மட்டும் கவியாகப் பிறந்திருந்தேனானால் இப்போது உங்களுடைய துக்கங்களை யாரிடம் போய்ச் சொல்ல வேண்டுமோ அவரிடம் போய் அழகிய உவமை உருவகங்களோடு சொல்லி விடுவேன். அம்மா!" என்று வசந்தமாலை குறைப்பட்டுக் கொள்கிறாள். இங்கே எனக்குச் சுகம் இல்லை. சுகத்தைப் பற்றிய நினைவுகளும் ஏக்கங்களும் நிறைய இருக்கின்றன. நினைவே அநுபவமாகி விடாது. ஏக்கமே, எதற்காக ஏங்குகிறோமோ அதை அடையும் முயற்சியாகி விடாது. 'நினைப்பதும் ஏங்குவதும் மனத்தின் பசிக்கு அடையாளங்கள். அவற்றாலேயே மனம் நிரம்பி விடாது' என்று எண்ணியபடியே எழுந்து போய் நகரத்தின் பல பகுதிகள் கண் பார்வையில் படுகிறாற் போல மாடத்தின் முன்புறம் நின்று கொண்டு நோக்கினாள் சுரமஞ்சரி.

அவளுடைய பார்வையில் தன்னைப் போலவே யாருக்காகவோ ஏங்கி அழிவது போலத்தான் அந்த நேரத்தில் மேற்குத் திசை வானமும் தெரிந்தது. பக்கத்து வீதியாகிய அரச வீதியின் மாளிகை ஒன்றிலிருந்து யாரோ ஓர் இசைக் கலைஞன் வேய்ங்குழலில் சோகத்தைப் பேசும் நோதிறப் பண்ணை வாசித்துக் கொண்டிருந்தான். தன் மனத்தில் ஏங்கி ஏக்கற்றுத் தவிக்கும் சோகத்தையும், மேற்குவானில் காட்சியாய்ப் புலப்பட்ட சோக அழகையும், அந்தக் கலைஞனுடைய குழலிசை சாட்சியாய் நின்று பேசுவது போல் தோன்றியது சுரமஞ்சரிக்கு. மாடத்தின் உட்புறம் தூபகலசங்களில் நெருப்பிட்டு அகில் தூவிக் கொண்டிருந்தாள் வசந்தமாலை. அந்த நறுமணப் புகைச் சுருள்களும் காற்றில் கலந்து வந்தன. முல்லையும் மல்லிகையுமாகத் தான் சூடிக் கொள்ள வேண்டும் என்று கொடுத்தனுப்பப்பட்டிருந்த பூக்களைச் சூடிக் கொள்ளும் விருப்பமில்லாமல் அப்படியே மஞ்சத்தில் ஒரு மூலையில் வீசி எறிந்திருந்தாள் அவள். அந்தப் பூக்களின் மணமும் எழுந்து பரவிற்று இப்போது.

போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கும் இளம் பருவத்து வீரனைப் பல ஆயுதங்களோடு பல எதிரிகள் ஒன்று சேர்ந்து கொண்டு தாக்க வருவதுபோல் அந்த இசையின் சோக இனிமையும் மாலையின் அந்தி மயக்கமும், பூக்களும், அகிலும் பிறப்பித்த நறுமணமும், சொந்த மனத்தின் பசிகளும், ஒன்று சேர்ந்து தன்னைத் துன்புறுத்துவதை அவள் உணர்ந்தாள்.

அப்படியே அந்த மாடத்தின் கோடியில் அது முடியும் இடத்திலிருந்து பறந்து போய் அதற்கு அப்பால் உள்ள உலகத்தில் தன் மனம் விரும்புகிற ஓர் இடத்தில் நிரந்தரமாகத் தங்கிவிட வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. பேதைப் பருவம் முடிந்து நினைவு தெரிந்த பெண்ணாய் வளர்ந்து விட்டபின் தன் மனத்தில் அழுத்தமாய் ஏற்பட்டிருந்த பொதுவான கர்வமும், செல்வச் செருக்கும், அழகுத் திமிரும் இன்று படிப்படியாகக் குறைந்து தானும் கூட ஆசைப்பட்டு நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய குறை ஒன்று உண்டு என்று ஏங்குகிற அளவுக்குத் தன் மனம் தாழ்ந்திருப்பது அவளுக்கே புரிந்தது. ஆசையால் தாழும் போது கர்வத்தால் உயர முடியாதென்றும் இந்த அநுபவம் புரிய வைத்திருந்தது.

'பெண்ணின் அழகுபற்றிய செருக்கு அவளுடைய காதலால் அழிந்து போகிறது. ஆணின் பெருமிதம் பற்றிய செருக்கு அவனுடைய மெய்யுணர்வாலும் பக்தியாலும் அழிந்து போகிறது' என்று சொல்லப்படுகிற தத்துவத்தை முன்பெல்லாம் சுரமஞ்சரி ஒப்புக் கொண்டதில்லை. 'வீரமும் செல்வமும் பற்றிய காரணங்களால் ஆண்பிள்ளைக்கு வருகிற செருக்கு வேண்டுமானால் பக்தியால் அழியலாம். பெண்ணின் அழகு பற்றிய செருக்கு அவளிடமிருந்து என்றும் அழியாது' என்று சுரமஞ்சரி எண்ணிக் கொண்டிருந்த எண்ணம் இப்போது தேய்ந்து போய் விட்டது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பழைய இந்திரவிழாவின் போது கடற்கரை மற்போரில் இளங்குமரனைச் சந்தித்த நாளிலிருந்து இந்த வருடத்து

இந்திர விழாவில் அவரையே நாளங்காடிச் சொற்போரில் சந்தித்தது வரை உள்ள நீண்ட காலத்தில் தன்னுடைய செருக்குப் படிப்படியாகத் தேய்ந்திருப்பது அவனுக்குத் தெரிந்தது.

காற்றில் வந்த வேய்ங் குழலிசை அவனுடைய சோகத்தை மேலும் வளர்த்தது. துயரங்களை மறப்பதற்காகத் தான் அவன் காவியங்களையும், இலக்கியங்களையும் கற்க விரும்பினான். அவற்றிலிருந்தும் அதே துயரம் பிறந்த போது தான் அவன் பொறுமை இழக்கும்படி ஆயிற்று.

தன்னுடைய கண் பார்வை செல்ல முடிந்த தொலைவு வரை நகரத்தின் தோற்றத்தைப் பார்த்தான் சுரமஞ்சரி. மாலைப் போதின் இருள் கவிந்த அழகு நகரின் தோற்றத்தில் தெரிந்தது. அந்த நகரத்தில் ஏறக்குறைய எல்லா இடங்களையும் தன்னுடைய இளம் வயதிலிருந்து அவன் திரும்பத் திரும்பப் பல முறை பார்த்திருக்கிறான். கவேரவனம் என்ற சோலையையும், உய்யானவனம் என்னும் தோட்டத்தையும் தவிர மற்ற எல்லா இடங்களையும்பார்த்திருக்கிறான். உய்யானவனமும், கவேரவனமும் பார்க்கக் கூடாதவை என்று தடுக்கப்பட்டவை. இல்லாவிட்டால், அவற்றையும் சுற்றிப் பார்க்கிற வாய்ப்பை அவன் முன்பே அடைந்திருக்க முடியும். அப்படியெல்லாம் பல முறை பார்த்துப் பார்த்துச் சலித்துப் போயிருந்தாலும் இன்று இப்படி அடைபட்டுக் கிடக்கிற போது இன்னும் எதையோ பார்ப்பதற்கு விட்டு வைத்திருப்பது போலவும், அதை உடனே போய்ப் பார்த்துவிட வேண்டும் போலவும் மனம் குறு குறுப்பு அடைந்தது. இந்தக் குறுகுறுப்புத் தன் மனத்தில் ஏற்படுவதன் காரணம் தான் அவனுக்கே விளங்கவில்லை.

'எந்தப் பொருளின் மேலாவது அளவு கடந்து ஆசைப்படும் போது இப்படி விடுபட்டுப் பறக்க வேண்டும் போலத் தவிப்பது மனத்தின் இயல்பா? அல்லது ஏக்கத்தின் விளைவா?' என்று முடிவு கிடைக்காத சிந்தனையில் அழுந்தி நின்றான் அவன்.

'நினைவுகளால் மனத்தின் பசி தணிவதில்லை. நினைவுகள்தாம் பசியை வளர்க்கின்றன. நினைவுகளே பசியாகவும் செய்கின்றன. நினைவுகள் எதை அடையத் தவிக்கின்றனவோ. அதை அடைகிற அநுபவம்தான் மனத்தின் பசிக்கு உணவு' என்று எண்ணிக் கொண்டே இருள் பரவத் தொடங்கியிருந்த நகரிலிருந்து தன் கண்களையும், சோகம் பரப்பிக் கொண்டிருந்த குழலிசையிலிருந்து தன் செவிகளையும் விடுவித்து மீட்டுக் கொண்டு அவன் உள்ளே திரும்பிய போது பூக்களின் மணமும், அகிற் புகையின் வாசனையின் முன்னைக் காட்டிலும் அதிகமாக நெருக்கிக் கொண்டு பரவி அவனைத் தாக்கின.

'பரிபூரணமான இசையின் விளைவு அழுகையா யிருக்கிறது. நல்ல மணங்களை உணரும்போது ஆழ்ந்த துயரங்கள் நினைவு வருகின்றன. உயர்ந்த கவிதைகளின் பொருள் புரியும் போது



மனத்தில் ஏக்கம் பிறக்கிறது. மறைகின்ற கதிரவனையும் மேற்கு வானத்தையும் காணும்போது உலகத்தின் கடைசிக் காட்சியைப் பார்ப்பது போல் எண்ணங்களில் அநுதாபம் பொங்குகிறது. நான் இன்று மட்டும் இவற்றை உணர்கிறேன். எல்லாக் காட்சியிலிருந்தும், எல்லா உணர்விலிருந்தும் ஆழ்ந்த துயரத்தைத் தவிர வேறொன்றையும் பெற முடியாத துர்ப்பாக்கியவதியாக இப்படி நான் எப்போது மாறினேன்?'

சிந்தனையில் இப்படி ஆயிரம் எண்ணங்கள் சேர்ந்தும் பிரிந்தும் தவித்திட விளக்குச் சுடர்களைத் தணித்து விட்டு மங்கலான இருளைப் பரவச் செய்து கொண்டபின் மஞ்சத்தில் சாய்ந்து படுத்தான் கரமஞ்சரி. பொற்பேழை நிறைய நெய் அதிரசங்களும், பல்சுவைப் பணியாரங்களும், பழங்களும், வற்றக் காய்ச்சிய பாலும் கொண்டு வந்து வைத்துக் கொண்டு கரமஞ்சரியை உண்ணுவதற்கு அழைத்தாள் தோழி வசந்தமாலை.

''தோழி! நீ கொண்டு வந்திருக்கும் உணவுகள் என் மனத்தின் பசியை ஆற்றுவதற்குப் பயன்படாதவை. இவற்றைக் கொண்டு போய் விடு. எனக்கு இவற்றில் விருப்பமில்லை. இந்த மஞ்சத்தில் சாய்ந்துகொண்டு இப்படியே ஏதாவது மனத்துக்குப் பிரியமான நினைவுகளை எல்லாம் நினைக்க வேண்டும் போல் இருக்கிறது எனக்கு. நன்றாகத் தூங்கியும் விடாமல், நன்றாக விழித்துக் கொண்டுமிராமல் எவையேனும் நினைவுகளில் மிதக்க ஆசைப்படுகிறேன் நான்'' என்று தோழிக்கு மறுமொழி கூறினாள் கரமஞ்சரி. தோழி இதைக் கேட்டு மறு பேச்சுப் பேசாமல் போய் விட்டாள்.

கரமஞ்சரி இரண்டு புறக் கண்களையும் மூடிக் கொண்டு மனக் கண்களால் தான் விரும்பிய முகத்தையும் விரும்பிய எண்ணங்களையும் காணலானாள். சில நாழிகைகளில் அப்படியே சோர்ந்து போய்த் தூங்கியும் விட்டாள். அவளுடைய அந்தத் தூக்கத்தில் அதற்கு முந்திய நினைவுகளோடு தொடர்புடைய கனவு ஒன்று நிகழ்ந்தது.

ஃ ஃ ஃ

ஆலமுற்றத்துக் கோவிலில் முல்லையும் இளங்குமரனும் அருகருகே நின்று கொண்டிருக்கிறார்கள். முல்லை இளங்குமரனுடைய கழுத்தில் மணமாலை சூட்டுவதற்காகத்தன் பொற்கரங்களை உயர்த்துகிறாள். அப்போது தொலைவிலிருந்து தானும் ஒரு மணமாலையோடு கரமஞ்சரி இளங்குமரனை நோக்கி ஓடி வருகிறாள். முல்லையின் கைகள் இளங்குமரனை நெருங்க நெருங்கக் கரமஞ்சரியின் இதயம் வேகமாகத் துடிக்கிறது. இளங்குமரனுக்கும் முல்லைக்கும் நடுவே தான் ஆற்றல் குறைந்து சிறியவளாகி விட்டது போல் நம்பிக்கை தளர்ந்தும் ஆசை தளராமல் நெஞ்சம் பதற ஓடி வருகிறாள் அவள்.

முல்லை சூட்டுவதற்கு இருக்கும் மாலை அவனுடைய தோள்களில் படியுமுன்பு அவன் சற்றே திரும்பித் தான் ஓடி வருவதை ஒரு முறை பார்க்கவாவது வேண்டும் போலத் தவித்தாள் கரமஞ்சரி.

இளங்குமரனின் அழகிய கண்களைச் சந்திக்க அவளுடைய கண்கள் விரைந்து முந்தின.

அவளுடைய ஆசை வீண் போகவில்லை. முல்லையின் மாலையை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்பு இளங்குமரனே திரும்பிக் கரமஞ்சரி ஓடி வருவதைப் பார்த்து விடுகிறான். அப்படிப் பார்க்கும் போது அவனுடைய கண்களே சிரிப்பது போல் குறிப்புடன் அவளைப் பார்க்கின்றன. அந்தக் கண்களின் பார்வையைச் சந்தித்ததும் மேலே ஓடுவதற்கு முடியாமல் அவள் அப்படியே நாணி நிற்கிறாள். அவளுடைய ஆசைக் கனவுகளை அவனுடைய அந்தக் கண்களே வளர்க்கின்றன. இந்தச் சமயத்தில் யாரோ வந்து கரமஞ்சரியின் தோளைத் தொட்டு அவளை எழுப்பினார்கள். அவள் கனவு கலைந்து விட்டது.

17- வாழும் பொய்கள்

படிப்படியாய் வீழ்ச்சி என்று சொல்வார்களே அந்த வீழ்ச்சியை இன்று ஒரே நாளில் நகைவேழம்பர் அடைந்து விட்டார். சறுக்கி விழ நேர்வது உண்டு தான். ஆனால் இவ்வளவு உயரத்திலிருந்து சறுக்கி விழுந்திருக்கக் கூடாது. முழங்கால்களிலும், கை மூட்டுக்களிலும் பலமான அடிகள் பட்டிருந்தன. இடுப்பிலோ, காலிலோ, எங்கோ மிகவும் பலமான அடிபட்டிருந்ததென்றும் உணர முடிந்தது. உடலில் வார்த்தைகளால் அளவிட்டு உரைக்க முடியாத சோர்வு தெரிந்தது. நிலவறையின் கடைசிப் படிக்கும் கீழே நிலை குலைந்து உருண்டு விழுந்த போது அவருடைய கண் முன் எல்லாம் தலைகீழாகச் சுழல்வது போலத் தெரிந்தது. வலது கால் பாதத்தை அழுத்தி ஊன்றிக் கொண்டு உந்தி எழுந்திருக்க முயன்றார். எழ முடியவில்லை.

ஆண்டுக் கணக்கில் பிணியுற்று முடங்கிக் கிடந்தது போல் உடம்பு வலித்தது. இரண்டு கால்களில் ஏதோ ஒன்றில் எலும்பு முறிந்திருக்குமோ என்று பயமும் நடுக்கமும் பிறந்த போது கருங்கல்லாய் இறுகிப் போயிருந்த அந்தக் கொடியவருக்கும் கூடக் 'கோ'வென்று கதறி அழுதுவிட வேண்டும் போல் வருத்தமாக இருந்தது. முழங் கால்களில் இரத்தமும் கசியத் தொடங்கி விட்டது.

இதே பெருநிதிச் செல்வரின் மாளிகைக்குக் கீழே உள்ள இரகசியச் சிறைக் கூடங்களிலும், கொடிய விலங்குகள் அடைக்கப்பட்டிருக்கும் காராக்கிருகங்களிலும் இப்போது தான் வைக்கப்பட்டிருப்பது போலப் பலரைப் பல சமயங்களில் முன்பு தன் கைகளாலேயே தள்ளி அடைத்ததை எல்லாம் வரிசையாக நினைத்துப் பார்த்தார் நகைவேழம்பர். நாய்க்குச் சோறு வைப்பது போல் இன்று தனக்குச் சோறும் நீரும் வைக்கப்பட்டதைத் தான் கேவலமாக எண்ணுவது போலத் தானே அவர்களும் அன்று எண்ணித் துடித்திருப்பார்கள் என்று ஞாபகம் உண்டாயிற்று அவருக்கு.

அப்போது தான் நிதியறையின் படிகளிலிருந்து மட்டும் சறுக்கியிருப்பதாக அவர் நினைக்க வில்லை. வாழ்க்கையில் தன்னுடைய எல்லா நம்பிக்கைகளிலிருந்துமே சறுக்கியிருப்பதாகத் தோன்றியது. மனைவி, மக்கள், உள்ளம், உறவு எதுவுமே இல்லாமல் யாருக்காக இவ்வளவு கொடுமையாக வாழ்ந்தோம் என்று நினைத்துப் பார்க்க முயன்றார் அவர். கொடுமையாக வாழ்ந்தோமா அல்லது பொய்யாக வாழ்ந்தோமா, என்று தனக்குத்தானே அவர் கேட்டுக் கொண்ட கேள்வி இரண்டு பிரிவுகளாகக் கிளைத்தது. 'இந்த விநாடி வரையில் என்னென்ன பாவங்களையும், கொடுமைகளையும் நான் செய்திருக்கிறேன்' என்று தனக்குத் தானே பிரித்து எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியமே அவருக்கு ஏற்பட வில்லை. காரணம் தான் செய்யாமல் எஞ்சிப் போகும் படி விட்ட பாவம் ஒன்றுமில்லை என்று அவருக்கே தெரிந்திருந்தது!

அவர் தன் மனத்தில் தனக்குத் தானே கேட்டுக் கொண்ட இரண்டு கேள்விகளுக்கு விடையே கிடைக்க வில்லை. 'இது வரை நல்லதாக என்ன செய்தோம்? கெட்டதாக என்ன செய்யவில்லை?' இந்த இரண்டு கேள்விகளுக்கும் 'ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!' என்பதைத் தவிர வேறு பதில் ஏதும் அவருடைய மனத்திலிருந்து எழவே இல்லை.

தன்னுடைய பெயரின் பொருளுக்குச் சிறிதுகூடப் பொருத்தமில்லாமலே தான் வாழ்ந்திருப்பதாக நினைவு வந்தது அவருக்கு. நகைவேழம்பர் என்றால் பிறருக்குச் சிரிப்பும் மகிழ்ச்சியும் உண்டாக்குகிற பரியாசகர் என்றுதான் காவிரிப் பூம்பட்டினத்துக் கூத்தரங்கங்களி



னும், நாடகக் கலைஞர்களிடையேயும் பொருள்படுவது வழக்கம். தானும் எப்போதோ ஒரு காலத்தில் அப்படிச் சில ஆண்டுகள் இருந்ததைக் கடந்த காலத்துக் கழிவிரக்கமாக அவரால் நினைத்துக் கொள்ள முடிந்தது. இப்படி மாறிய பின்பு தன் பழைய பெயருக்கு ஏற்பத் தான் யாருக்கும் சிரிப்போ மகிழ்ச்சியோ ஏற்படுத்தியதாக ஞாபகம் இல்லை.

பூம்புகாரின் பட்டினப்பாக்கமும், மருவூர்ப்பாக்கமும் சந்திக்கிற நாளங்காடியின் கலகலப்பான இடத்தில் கூத்தரங்கம் ஒன்றில் அவர் புகழ் பெற்ற நகைச்சுவை வேழம்பராக இருந்த காலம் அதிலிருந்து மாறிய போதே பொய்யாய்ப் போய் விட்டது. பெருநிதிச் செல்வரோடு தொடர்பும் பழக்கமும் ஏற்பட்டபின் வஞ்சகப் பேயாய்த் தான் வாழ்ந்த கொடிய வாழ்க்கையும் இன்று இப்படி அடைபட்ட பின்னர் இந்த விநாடியிலிருந்து பொய்யாய்ப் போய் விட்டது.

இப்படி எத்தனை எத்தனை பொய்கள்? படியிலிருந்து உருண்டு விழுந்ததும் காலை ஊன்றி எழ முடியாமல் போன போது சென்ற விநாடி வரை கால் ஊன்றி நடந்ததும் பொய்யாய்ப் போய்விட்டது. நடந்தவை யெல்லாம் பொய்யாகவும், நடக்கின்றவை யெல்லாம் உண்மையாகவும், நடக்க இருப்பவை யெல்லாம் சந்தேகங்களாகவும் வாழ்க்கையையே மாற்றிக் கொண்டு தான் என்றிலிருந்தோ கெட்டுப் போய் விட்ட கொடுமையை நினைத்து நினைத்துக் கண்ணீர் வற்றுகிற வரை அழ வேண்டும் போல் இருந்தது அவருக்கு. இந்த ஏலாமையும் பயமும் கூடச் சில கணங்கள்தான் நீடித்தன. மனம் சபலப்பட்டு மாறி மறுபடியும் கொடுமையில் நம்பிக்கை வந்த கணத்தில் காலை ஊன்றி எழுந்திருந்துவிட முயல்வதும், 'எழ முடியவில்லை. எலும்பு முறிந்துதான் போயிருக்கிறது' என்று உணர்கிற கணத்தில் அழுது விடுவது போல் தளர்வதுமாக அந்த நேரத்தில் அந்த நிலவறையில் கணத்துக்குக் கணம் பொய்யாயிருந்தது நகைவேழம்பருடைய காலம்.

இனிமேலும் தனக்குச் சமயமும் பொருத்தமாக வாய்த்து உடம்பிலும் வலிமையிருந்தால் அந்த வாய்ப்பைத் தவற விடாமல் எதிரியைத் தீர்த்துக் கட்டி விட வேண்டும் என்று இப்போது கூட வைரமாகவும் கொடுமையாகவும் நினைப்பதற்கு அவரால் முடிந்தது. ஆனால் எரியுண்டு போன படகில் பட்ட தீக் காயங்களும், கடலில் நெடுந்தொலைவு நீந்தி வந்த களைப்பும், பசியும், படிகளில் பயங்கரமாகச் சறுக்கி விழுந்த வேதனையும், சேர்ந்து தனக்குக் கெடுதல் செய்யவேண்டிய கெட்ட நேரங்கள் எல்லாம் 'இனி உன்னை இப்படியே விட மாட்டோம்' என்று ஒன்றாகச் சேர்ந்து வந்து வளைத்துக் கொண்டு விட்டாற் போல் அவரை மலைப்பு அடையச் செய்திருந்தன. அவர் வீழ்ந்து விட்டார். இப்போது நிச்சயமாக வீழ்ந்தே விட்டார்.

நிலவறையின் எதிர்ப்புறத்திலிருக்கும் இருளடைந்த சுவர் திடீரென்று பிளப்பது போலவும் அந்தப் பிளவிலிருந்து ஒரு புலி பயங்கரமாகப் பாய்ந்து கொண்டு வருவது போலவும், அந்தப் புலியே அருகில் வரும்போது பெருநிதிச் செல்வராக மாறி விடுவது போலவும் பொய்க் காட்சிகள் அவர் கண்ணில் தெரிந்தன. தானும் புலியாக மாறி எதிர்த்துப் போராடுவது போலக் கற்பனை செய்ய முயன்றார் அவர்.

'மரணவஸ்தை மரணவஸ்தை என்று சொல்கிறார்களே, அது இப்படித்தான் இருக்குமோ?' என்று அப்போது நினைக்கத் தோன்றியது நகைவேழம்பருக்கு.

இப்படி நினைத்த போது தன்னைச் சுற்றிலும் காலனின் கொடிய பாசக் கயிறுகள் சுழன்று சுழன்று வீசப்பட்டு விழுவது போலவும், தான் அந்தக் கொடிய பாசத்தில் சிக்கிக் கொண்டு விடாமல் தப்பித்து விட உடனே முயல வேண்டும் போல்வும் அவருக்குத் தோன்றியது. பதறி எழுந்து அங்கிருந்து ஓடி விடும் நோக்கத்துடன் வலது கால் பாதத்தைப் பதித்து ஊன்றி மேலே எழ முயன்று மறுபடி கீழேயே விழுந்தார் அவர்.

அப்படி விழுந்ததும் அவருக்கு முன்னை விடத் தளர்ச்சி பெருகியது. முழங்காலைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். தொட்ட இடத்தில் இரத்தம் பசையாகப் பட்டுக் கை நனைந்தது. பாவத்தைத் தொடுவதுபோல் அவருக்கே அருவருப்பாக இருந்தது அப்போது.

'உன் உயிரைக் கொடுத்து விடு! இனி மேல் நீ வாழ்வதைக் கூடப் பொய்யாக்கிவிட வேண்டும்' என்று யாரோ பேய்க் கூச்சல் இட்டுக்கொண்டே வந்து தன் கழுத்தை இறுக்குவது போல் இருந்தது அவருக்கு.

அந்த விநாடியில் தான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது மெய்யா, பொய்யா என்று புரியாமல் அவர் உடல் நடுநடுங்கி நினைவிழப்பது போலத் தலை சாய்ந்தார். இருட்டில் அடைபட்டுக் கிடந்த வௌவால் ஒன்று தன் சிறகுகளைப் படபட வென்று அடித்துக் கொண்டு அவருடைய தலைக்கு மேல் பறந்து விட்டு மீண்டும் தன்னுடைய பழைய இடத்தில் போய்த் தலைகீழாகத் தொங்கியது. (தொடரும்)

புதுவெள்ளம்



அத்தியாயம் ஒன்பது

முதலாளி சித்திரா

வியாபார விஷயமாகப் பம்பாய்க்குப் போய்விட்டு வந்த சித்திராவின் தமையன் மாணிக்கம் அங்கே வெள்ளைக்கார வியாபாரிகளும் பம்பாய்த் தொழில் அதிபர்களும் வாழும் கோலாகல வாழ்வில் சில நாட்கள் அழுந்தி வாழ்ந்தார். தொழில் வளர்ச்சிக்குச் செலவு செய்வதாய்ச் சொல்லிக்கொண்டு அவர்கள் எத்தனையோ வழிகளில் தங்கள் உல்லாச வாழ்க்கு வசதிகளைத் தேடிக் ஓடிருந்தார்கள்.

பங்களாக்களில் குளிர் சாதன யந்திரங்கள், மேல் நாட்டுப் பாணியில் மின்சார வசதிகள், காஷ்மீர் விரிப்புகள், விருந்துக் கூடங்கள் இப்படியெல்லாம் அவர்கள் மேல் நாட்டு நாகரிக மோகத்தில் மிதந்து வந்தனர்.

ஆடம்பர வாழ்க்கை என்ற அந்தத் தொத்து நோய் மாணிக்கத்தையும் நன்ருகப் பற்றிக் கொண்டது. சென்னைக்குத் திரும்பி வந்தவுடன் தன் பங்களாவின் சீர்திருத்தத்துக்கான திட்டங்களைப் போட்டார் அவர். ஐம்பதாயிரம் ரூபாய்களை அதற்காக ஒதுக்கி வைத்தார். சாமான்கள் மேல் நாடுகளிலிருந்து வந்தவுடன் வேலைகளைத் தொடங்குவதென்று முடிவாயிற்று.

தம்முடைய அலுவல் அறைக்கு 'ஏர் கண்டிஷன்' பொருத்த அவர் யோசனை செய்தவுடன் அவருடைய மனைவி வந்து மாடியில் உள்ள தங்கள் படுக்கை அறைக்கும் குளிர் சாதனம் வேண்டும் என்ருள். சித்திரா சும்மா இருப்பாளா? தன்னுடைய அறைக்கும் அது வேண்டும் என்ருள். ஐம்பதாயிரத்துக்குப் போட்ட திட்டம் ஒரு லட்சத்துக்கு வந்து நின்றது.

வெள்ளைக்காரர்கள் குளிர்ப் பிரதேசத்தி லிருந்து வந்து குடியேறியவர்கள். அவர்களுக்குத் தங்களைக் குளிர் காலத்தில் வெப்பமாக வைத்துக் கொள்வதற்கும் வெயில் காலத்தில் குளுமையாக வைத்துக் கொள்வதற்கும் என்னென்னவோ பொருள்கள் தேவைப்பட்டன. சிம்லாவும் ஊட்டியும், கோடைக்கானலும், காஷ்மீரும் அந்தத் துரைமார்களுக்கு அவசியமாகத் தோன்றின. நம்முடைய கறுப்புத் துரைமார்களுக்குக் கறுப்புப் பணம் சேர்ந்தவுடன் அவர்களும் மெல்ல, மெல்ல வெள்ளைக்காரர்களாகவே மாறப் பார்த்தார்கள்.

மாணிக்கத்தின் மனம் இப்படி மாறிக் கொண்டு வந்த சமயத்தில்தான் திடீரென்று ஒரு நாள் பெரிய பாளையத்திலிருந்து குமரவேல் வந்து மாணிக்கத்துக்கு மன அதிர்ச்சியைக் கொடுத்து விட்டுப் போனர். ''வெள்ளைக்காரனே நாட்டிலேயிருந்து ஏற்றுமதியாகப்போயிருன். அவனை நம்பி நீங்கள் ஏற்றுமதி இறக்குமதித் தொழில் செய்யறீங்களே, இது எத்தனை நாளைக்கு நிலைக்கும்? கால மாறுதலுக்குத் தகுந்தாப்பலே நாமும் தொழிலை மாத்திக்கிட்டாத்தான் நல்லது. மழைக் காலத்திலே குடை வியாபாரம் செய்யணும், வெயில் காலத்திலே செருப்பு வியாபாரம் செய்யணும். யோசனை பண்ணிப்பாருங்க. நான் ஊருக்குப் போய்க் கடுதாசி போடுகிறேன்.''

ஊருக்குப் போன பிறகு குமரவேல் மாணிக்கத்துக்குப் பல கடிதங்கள்



அகிலன்

எழுதி விட்டார். அந்தக் கடிதங்களை வைத்துக் கொண்டு புதிய யோசனையில் ஆழ்ந்திருந்தார் மாணிக்கம். பழைய தொழில்களையும் வைத்துக் கொண்டு, குமரவேலுடன் சேர்ந்து அவர் சொல்லும் புதுத் தொழிலையும் தொடங்கி விட்டால் என்ன?

இந்தச் சமயத்தில்தான் ''எப்போது அண்ணா என் அறைக்கு 'ஏர் கண்டிஷன்' செய்யப் போறீங்க?'' என்று கேட்டுக்கொண்டே மாணிக்கத்தின் அலுவல் அறைக்கு வந்தாள் சித்திரா.

''வா, சித்திரா! உன்னிடம் தொழில் விஷயமா ஒரு யோசனை கேட்கப் போகிறேன். இந்தா குமரவேல் மாமா எழுதியிருக்கிறதைப் படிச்சுப் பார்'' என்று ஒரு கடிதத்தை மட்டும் அவளிடம் நீட்டினார் மாணிக்கம்.

சித்திரா முகத்தைக் களித்துக் கொண்டே கடி

தத்தை வாங்கினுன். வியாபார விஷயங்களைப் பற்றி மாணிக்கம் பேசத் தொடங்கி விட்டால், தனக்குத் தலைவலி ஏற்படும் வரையில் அவர் விடமாட்டார் என்று தெரியும். சித்திராவுக்கு எப்பொழுதுமே தொழில் பேச்சுப் பிடிப்பதில்லை. சிட்டுக் குருவி போல் கட்டற்றுத் திரிய விரும்புகிறவள் அவள்.

''அண்ணு! நான் எதற்கு இதையெல்லாம் படிக்க வேண்டும்?'' என்று சிணுங்கினுள்.

''ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இதையெல்லாம் தெரிஞ்சுக்கிட்டாத்தான் இனிமேல் இந்த நாட்டிலே பிழைக்க முடியும் சித்திரா! 'ஏர் கண்டிஷன் ரூம்' கேட்கிறியே, அது சும்மா வந்திருமா? நகை, புதுப் புடவை, பாட்டுக் கச்சேரி, நாட்டியம், காருக்குப் பெட்ரோல், இவையெல்லாம் காசு கொடுத்தால்தானே கிடைக்கும்? காசு எப்படிக் கிடைக்குதுன்னு நீ தெரிஞ்சுக்க வேண்டாமா?''

மாணிக்கம் தன் செலவுகளைப் பற்றிக் குத்திக் காட்டியவுடன் அரை மனத்தோடு கடிதத்தைப் படித்தாள் சித்திரா.

குமரவேல் எழுதியிருந்தார்:

''என்னுேட தொழில் இருக்கே, அது மனுஷன் பிறக்கிற நாளிலிருந்து சாகிற நாள் வரையிலே தேவைப்படுகிற தொழில். ஒவ்வொருத்தனும் சாப்பிடணும். ஒவ்வொருத்தனும் குடியிருக்கணும். ஜனப் பெருக்கம் அதிகமாயிட்டுப் போகப் போக இந்தத் தொழிலுக்குக் கிராக்கி அதிகம். சாப்பாட்டுக்குத் தேவையான அரிசி, பருப்பு, உப்புப் புளி, மிளகாய் வியாபாரம் செய்யறதும், வீடு கட்டுறதுக்குத் தேவையான சிமெண்ட், இரும்பு, மரம், ஓடு விற்கிறதும் எப்பவுமே வளரக்கூடிய தொழில். என்னுேட கிராமத்திலே இதனுலே எனக்குக் கிடைச்சிருக்கிற லாபம் எவ்வளவுன்னு நான் உங்களுக்கு நேரிலே சொல்லி யிருக்கேன். நாம்ப கூட்டுச் சேர்ந்து மொத்த வியாபாரம் செய்யலாம். நான் சரக்கு வாங்கி உங்களுக்கு அனுப்பறேன்.. நீங்க அதை 'ஸ்டாக்' பண்ணி, கிராக்கி ஏற்படுத்தித் தள்ளி விடுங்க. — விலை எவ்வளவுதான் அதிகமா விற்ருலும் காசு உள்ள எவனும் பட்டினி கிடந்து சாக மாட்டான். அப்படியே ஏழைகள் வாங்கலேன்னுலும் வசதி படைச்சவன் ஒண்ணுக்கு ரெண்டு பங்கு விலை கொடுத்து எதையும் வாங்கறதுக்கு எப்பவும் தயாராயிருப்பான். யோசனை செய்து முடிவுக்கு வந்திடுங்க!''

வேண்டா வெறுப்போடு கடிதத்தைப் படித்து விட்டு, ''அவர் எழுதியிருக்கிறபடியே செய்யுங்கண்ணு: அருமையான யோசனைதான்!'' என்று உற்சாகமாய்ச் சொல்வது போல் சொல்லி வைத்தாள் சித்திரா. பிறகு மெதுவாக அங்கிருந்து நழுவப் பார்த்தாள்.

''இந்தத் தொழில் சம்பந்தமாக எனக்கு உதவி செய்யறதுக்குத்தான் நான் முருகையனைப் பத்தி உன்னிடம் விசாரித்தேன்'' என்ருர் மாணிக்கம்.

முருகையனின் பெயரைக் கேட்டவுடன் எழுந்திருக்கப் போன சித்திரா தன் தமையனின் அருகில் நெருங்கி உட்கார்ந்தாள். ஆவலோடு அவர் முகத்தைப் பார்த்தாள்.

''முருகையனைப் பற்றி எனக்கு இதற்கு முன்னுல் அக்கறையே கிடையாது. ஆனுல், குமரவேல் அவனைப் பற்றி என்னிடம் விவரம் கேட்டார். அவனைப் பார்த்தால் அவரிடம் வேலைக்கு அனுப்பி வைக்கச் சொன்னுர்.... வியாபார ரகசியத்தைப் பற்றி உனக்கு ஒரு விஷயம் சொல்லி வைக்கிறேன் சித்திரா. ஒரு வியாபாரிக்கு ஒரு பொருள் மேலே நோக்க மிருக்கிறது தெரிஞ்சால், அவர் அதை வாங்குவதற்குமுன்னுலே நாம்ப வாங்கிடணும்!''

''நீங்க ரொம்பக் கெட்டிக்காரர்!'' என்று கூறிச் சிரித்தாள் சித்திரா.

''நேத்து வரையிலேயும் வெள்ளைக்காரனுக்கு மதிப்பு இருந்தது. அவனுேட தயவைத் தேடிக்கிட்டோம். இப்போ காந்திக்கு மதிப்பு வந்துக் கிட்டிருக்கு. முருகையனு காந்தி பேச்சைக் கேட்டுப் படிப்பை விட்டுத் தொலைச்சவன். காந்தி பேச்சைக் கேட்டு ஜெயிலுக்குப் போனவன். அவன் நம்ப ஆளுன்னு சொல்லிக் கிட்டால் நமக்கு மதிப்புத்தானே?''

'காந்தியடிகளையும், அவரைப் பின் பற்றியவர்களையும் நாக்கில் நரம்பின்றித் திட்டிய அதே மனிதர்தானு இவர்?' என்று ஆச்சரியப்பட்டாள் சித்திரா. என்ருலும் முருகையனை அவர் மதிக்கத் தொடங்கியது தன்னுடைய அதிர்ஷ்டம் என்று தோன்றியது அவளுக்கு.

முருகையன் சென்னையில் இருப்பதையும் அவனுடைய விநோதமான நடவடிக்கைகளையும் மாணிக்கத்திடம் சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வம் அவளை உந்தித் தள்ளியது. என்ருலும் அவள் தன்னை அடக்கிக் கொண்டாள். மாணிக்கம் ஏழை எளியவர்களைக் கண்டாலே வெறுத்து அலட்சியப்படுத்தும் சுபாவம் கொண்டவர். தமக்குக் கீழ் அந்தஸ்தில் உள்ளவர்களோடு பேசுவதே அவருக்குப் பிடிக்காத விஷயம். ஆகவே சித்திரா தன் ஆவலை அடக்கிக்கொண்டாள்.

''நான் முடிவு செய்திட்டேன் சித்திரா!'' என்றார் மாணிக்கம். ''அப்பா உன் பேருக்கு வைத்திருக்கும் பணத்தில் உன் பேரிலேயே குமரவேல் மாமாவுடன் இந்தக் கூட்டுத் தொழிலே ஆரம்பிப்போம். நம்முடைய பங்குக்கு வரும் லாபத்தில் உனக்குப் பாதி; எனக்குப் பாதி. — எனக்கு உழைப்புப் பங்கு; உனக்குப் பணத்துக்குப் பங்கு.''

''அப்புறம் அத்தானுக்கு?''

''அவனும் நம் வீட்டில்தானே இருக்கப் போகிறான். அவனுக்கும் செலவுக்குக் கொடுப்போம். லாபம் அதிகமாக வந்தால் பிறகு ஒரு ஏற்பாட்டுக்கு வரலாம்'' என்றார் மாணிக்கம்.

தன் பணத்தில் தொழில் தொடங்குவதையும் அதில் முருகையன் உழைப்பதையும் நினைத்துப் பார்த்தபோது சித்திராவுக்குப் பூரிப்புத் தாங்கவில்லை. 'உழைக்கப் போகிறவர் அவர். ஆனால் பங்கு கேட்கிறவரோ அண்ணா!' என்று அவள் நினைத்துப் பார்த்தாலும் அண்ணா தனக்கு நன்மையே செய்வார் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

'அத்தானுக்கு நாம் முதலாளி' என்ற கர்வமும் அவளுக்குப் பெருமை தந்தது.

''அப்படியானால் உடனே தொழிலைத் தொடங்குங்கள், அண்ணா. அத்தான் எங்கே இருந்தாலும் அவரைத் தேடிப் பிடித்து அழைத்துவருகிறேன்'' என்றாள்.

கடற் கரையில் அவனைச் சந்திப்பதாக முதல் நாள் முருகையனிடம் செய்து கொண்ட ஏற்பாட்டை அவள் வெளியிடவில்லை. தாயாரிடமும் அண்ணியிடமும் போய்ப் புதுத் தொழிலைப் பற்றிப் பெருமை அடித்துக் கொண்டாள். இனிமேல் தொழில் சம்பந்தமான பேச்சுக்களில் அலட்சியமாக இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள் — முதலாளியல்லவா!

அந்தச் செய்தியினாலேற்பட்ட ஆனந்தத்தைக் கொண்டாடுவதற்காகத் தாத்தாவையும் உடன் அழைத்துக்கொண்டு காரில் சினிமாவுக்குக் கிளம்பினாள் சித்திரா. அவளே கார் ஓட்டிச் சென்றதால், தாத்தா பதைபதைக்கும் நெஞ்சோடு அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து எதிரில் தெருவைக் கவனித்து வந்தார். குடி போதையிலுள்ள மனிதனைப் போல, பெட்ரோலைத் தாராளமாக நிரப்பிக் கொண்டு கார் சென்னைத் தெருக்களில் சென்றது.

அத்தியாயம் பத்து

ஒளி மிகுந்தது

எழும்பூர் ரயிலடியில் இறங்கி ரிக்ஷாவில் புறப்பட்ட சிவப்பிரகாசத்துக்குச் சென்னை நகரத்தின் முதற் காட்சியே பயங்கரமாகத் தோன்றியது. கட்டடங்களையும் மின்விளக்குகளையும் குறுக்கும், நெடுக்கும் பரபரப்பாகச் செல்லும் மனிதர்களையும் பார்த்துக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் திகைத்தார். 'சே! ரிக்ஷாவாம், ரிக்ஷா! மனிதனோட முதுகிலே சவாரி செய்து தொலைக்க வேண்டி யிருக்கிறதே!'

முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பவர் போல் முகத்தைச் சுளித்துக் கொண்டு வேதனையோடு வந்தார் அவர். ஏற்கனவே நோய்வாய்ப் பட்டிருந்த அவருடைய தேகம் இந்த மனக் கிலேசத்தால் இன்னும் மோசமாகியது. தொடர்ந்தாற்போல் இருமல்கள் வெளி வந்தன.

ரிக்ஷா இழுத்தவனோ பிரயாணி நோயாளி என்பதைத் தெரிந்து கொண்டு மெதுவாக நடந்தான்.

''ஏன் சாமி, நமக்கு எந்த ஊரு?'' என்று ரிக்ஷாக்காரன் பாஷையில் கேட்டான் அவன்.

பெரியவர் ரிக்ஷாக்காரர்களைப் பற்றி அவ்வளவு நல்ல விதமாகக் கேள்விப் படவில்லை. நாட்டுப்புறத்து மனிதர் என்று தெரிந்தால் அந்த நகரத்தையே சுற்றிக் கொண்டு போய் நாலு ரூபாய் கூலி கேட்பார்கள் என்று யாரோ ஒருவர் ரயிலில் கூறி வைத்தார். சிவப்பிரகாசத்துக்கு அந்த நினைவு வரவே, ''எனக்குத் திருச்சிக்குப் பக்கத்திலே ஊர்'' என்று சொல்லி வைத்தார். ஜல தோஷத்தால் அவருடைய தொண்டை கம்மிப் போயிருந்தது.

''பட்டணத்துக்கு என்ன வேலையா வந்திருக்கீங்க?''

'இந்தக் கேள்வியெல்லாம் இந்தப் பயலுக்கு எதற்கு?' என்று ஒரு கணம் நினைத்தார் பெரியவர். பிறகு போனால் போகட்டும் என்று ''என்னோட பிள்ளை இங்கே உத்தியோகம் பார்க்கிறான்; அவனைப் பார்க்கறதுக்கு....'' என்றார். அதற்குள் இருமல்கள் குறுக்கிட்டன.

''வேண்டாம் சாமி, உங்களுக்கு உடம்பு சுகமில்லாதப்போ நான் வேறே உங்களோடே பேச்சுக் கொடுக்கப் படாது. நீங்க பேசாதீங்க!''

ரிக்ஷாக்காரன் பேச்சுக் கொடுத்ததற்குக் காரணம், பிரயாணியைப் பழக்கப்படுத்திக் கொண்டால் கீழே இறங்கும்போது தாராளமாகக் கூலி கொடுப்

பார் கூடத்தான். அதைத் தவிர அவரைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. 'கட்டாயம் இவரிடம் ஒரு ரூபாயாவது கிடைக்கும்' என்று அவன் திட்டம் போட்டுக் கொண்டு வந்தான்.

சற்று நேரம் மௌனமாக ரிக்ஷாவை இழுத்து விட்டு, ''நீங்க திருவல்லிக்கேணியிலே எந்தத் தெருவுக்குப் போறீங்க சாமி?'' என்று ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான்.

''என்னமோ ஒரு தெரு. — இந்தக் கடுதாசியிலே விலாசம் எழுதியிருக்கு. உனக்குப் படிக்கத் தெரியுமா?''

ரிக்ஷாவை நிறுத்திப் பின்புறம் திரும்பாமலே கை நீட்டிக் காகிதத்தை வாங்கிக் கொண்டான் அவன். அரு



கில் இருந்த விளக்குக் கம்பத்தின் அடியில் சென்று காகிதத்தை விரித்தான்; படித்தான்.

உச்சந்தலையில் அந்த விளக்குக் கம்பம் சாய்ந்து விழுந்தது போலிருந்தது ரிக்ஷாக்காரனுக்கு. கண்கள் சுழன்றன. கால்கள் தடுமாறின. அதே இடத்தில் தலை சுற்றி விழுந்துவிடப் பார்த்தான் அவன். — 'அட, முருகையா! உன்னுடைய தந்தையடா அவர்! நீ முன்பு குடியிருந்த வீட்டுக்கு உன்னைத் தேடிக் கொண்டு வருகிறாரடா, அவர்!'

திடீரென்று திரும்பி, நடுத் தெருவென்றும் பாராமல் அவரைக் கட்டிக் கொண்டு கதறத் துடித்தான் முருகையன். ஆனால், தெரிந்து விட்டால் அவருடைய நிலை என்ன ஆகும்? அவர் என்ன செய்வார்?

ரிக்ஷாவைப் பற்றியபடியே விளக்கடியில் நிலைகுத்தி நின்றுவிட்ட ரிக்ஷாக்காரனின் போக்கு மேலே இருந்தவருக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. ''ஏண்டாப்பா, உனக்குப் படிக்கத் தெரியுமா? விலாசம் புரியுதா?''

''புரியுதுங்க!'' என்று வழிந்த கண்ணீரைத் துடைக்காமலே கூறினான் முருகையன்.

''பின்னே ஏன் நிக்கிறே? போயேன்! சீக்கிரம் போ!''

எங்கே போவது? எப்படிப் போவது? முருகையனை எந்த உருவத்தில் அவர் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவது?

வேகமாய் ஓடத் தொடங்கினான் முருகையன். தாங்க முடியாத துக்கம் தொண்டையை அடைத்தது. 'நேரே சாந்தாவின் வீட்டுக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தி விட்டு, அவருக்குத் தெரியாமல் உள்ளே சென்று, மாற்றுடையுடன் வெளியே வரலாமா? இல்லை, முனியாண்டியின் குடிசைக்கே அழைத்துக் கொண்டு போனவுடன் எப்படியாவது பார்த்துக் கொள்ளலாமா?'

ஒன்றல்ல, இரண்டல்ல, நூற்றுக் கணக்கான கேள்விகள் அவனைப் பிடுங்கி எடுத்தன.

எந்தத் திசையில் செல்கிறோம் என்பதைக்கூட மறந்து விட்டு வெகு வேகமாக ஓடத் தொடங்கினான் முருகையன், தன்னுடைய அழுகையை விரட்டிக்கொண்டு ஓடுவது போல், வேதனையைத் துரத்தி வெருட்டுவது போல், துயரத்தை மிரட்டி ஒதுக்குவது போல் அவன் ஓடினான்.

கால்கள் தரையில் பாவவில்லை. காதுகள் பஞ்சடைந்து விட்டன. கண்களும் தெரியவில்லை.

''டே, டேய், அடே, பாவிப் பயலே! மெதுவாய்ப் போடா!''

சிவப்பிரகாசம் பயந்து போய்க் கத்தினார். அவனுக்கோ காது கேட்கவில்லை.

''டேய், நிறுத்துடா!'' — அவன் நிறுத்தவில்லை.

தார்க்குச்சி பாய்ந்த காளை, சவுக்கடி பட்ட குதிரை, அங்குசம் பாய்ந்த யானை அவ்வளவும் அந்த மனித மாட்டிடம் தோற்றுப் போகத் தக்க வேகம்.....

ஒரு சில விநாடிகளுக்குள் சிவப்பிரகாசம் உலகமே தம் கண் முன்னே பம்பரமாய்ச் சுழலுவதைக் கண்டார். கொள்ளி வாய்ப் பிசாசுகளைப் போல் சாரி சாரியாகப் பறந்த கார்களினூடே அவர் தாறுமாறாக இழுத்துச் செல்லப்பட்டார். வட்ட வடிவமாக இருந்த மௌண்ட் ரோடு மையம் திடீரென்று

மேலே எழும்பி அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது. ரிக்ஷாக்காரனுக்கு வெறி பிடித்து விட்டதா?

திரைப் படக் கொட்டகை ஒன்றில் முதல் ஆட்டம் முடிந்து கார்கள் வெளியில் வந்து கொண்டிருந்தன. அந்தக் கார்களில் ஒன்று நேரே தனது நெருப்புக் கண்களில் ஒளியைக் கக்கிக் கொண்டு ரிக்ஷாக்காரனை நோக்கி வந்தது. — அல்லது ரிக்ஷாக்காரனேதான் அப்படிப் போகிறானா?

'படார்!' என்று ஒரு சத்தம்.—

கார் நிற்கப் பார்த்தது. அதற்குள், அதை ஓட்டிய பெண்ணிடமிருந்து, 'ஸ்டியரிங்கை'ப் பற்றிக்கொண்டு, அருகிலிருந்த கிழவர் நிறுத்தாமல் மேலே ஓட்டிச் சென்றார்.

இங்கே, ரிக்ஷா விளக்குக் கம்பத்தில் மோதியது. ரிக்ஷாக்காரன் தரையில் குப்புற விழுந்து கிடந்தான். அவன் மேல் பெரியவர் விழுந்தார். — எல்லாம் நொடிப் பொழுதுக்குள் நடந்துவிட்டன.

விழுந்தவன் குப்புறப் படுத்துக் கொண்டு எழுந்திருக்கவே இல்லை. இடையே ரென்று அங்கே சிறு கூட்டம் கூடிவிட்டது. பெரியவர், ''அடப்பாவி! அடப்பாவி!'' என்று கத்தியபடியே அவனை எழுப்பிப் பார்த்தார். பிறகு தமது பலமனைத்தும் ஒன்று சேர்த்து அவன் தோளைப் பற்றித் தூக்கினார். இப்போது ரிக்ஷாக்காரனின் தலையில் தொப்பி இல்லை.

தெரு விளக்கின் ஒளி ரிக்ஷாக்காரன் முகத்தில் விழுந்தது. நான்கு கண்கள் தாங்கள் ஒளி பெற்ற பாவத்தை அநுபவித்தன.

''முருகையா!''

''அப்பா!''

கடலின் பேரலைகள் இரண்டு அங்கே சங்கமமாயின. ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு விம்மின; விக்கின; தேம்பின. பின்னர் பெரிய அலை ஓய்ந்து விட்டது.

சிவப்பிரகாசத்துக்குப் பேச்சில்லை; மூச்சில்லை; அங்க அசைவுகளே இல்லை.

கூட்டம் அதிகமாகக் கூடுவதற்கு முன்னால் அவரை ரிக்ஷாவில் வைத்து மெல்லத் தூக்கினான் முருகையன். ரிக்ஷாவுக்கு ஏதும் பழுது ஏற்படவில்லை. நிதானமாக, மிகவும்நிதானமாக ஏதுமே நடக்காதது போல் அவன் நடந்தான்.

தன்னை மார் மேலும் தோள் மேலும் சுமந்து வளர்த்தவரைச் சுமந்து கொண்டு தன்னை இந்த உலகத்துக்கு அழைத்து வந்தவரை இழுத்துக் கொண்டு, தன்னைக் காண வந்தவரை ஏந்திக் கொண்டு அவன் சென்றான்.

அழுகை ஓய்ந்து விட்டது. துயரம் தீர்ந்து விட்டது; வேதனை விலகி விட்



டது. — எல்லாமே அவனிடமிருந்து பிரண்டு ஓடி விட்டன.

முருகையன்தான் ரிக்ஷா இழுத்த தன் முழுப் பயனையும் அன்று அடைந்து விட்டான். தந்தை யாரைத் தாங்கிச் செல்லும் பாக்கியம் ஒருவனுக்குக் கிடைக்குமானல், அவன் ரிக்ஷா இழுத்தால் என்ன வந்து விடும்? — ரிக்ஷாக்காரனைச் சுமந்து செல்வதற்காக அன்று ரிக்ஷாக்காரனாக மாறிய முருகையன், இன்றைக்கு அந்த முனியாண்டியின் குடும்பத்துக்குச் சோறு போடுவதற்காகத்தான் அதே வேலையைத் தொடர்ந்து செய்தான்...... அதற்குள் விதி தன் விளையாட்டைத் தொடங்கி விட்டது போலும்!

சிவப்பிரகாசம் ரிக்ஷாவுக்குள் சுருண்டு போய்க் கிடந்தார். தமது மகனை ஒரு மனிதனாகப் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தமது உடைமைகள் அனைத்தையும் இழந்தவர், அந்த மனிதனின் உருவத்தைக் கண்டவுடன் தம்மிடம் எஞ்சியிருந்த ஒன்றே ஒன்றையும் — உயிர்த் துடிப்பையும் இழந்து கொண்டு வந்தார். புதிய மனிதனை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த மனிதனுடைய துணிவையும் மனிதாபிமானத்தையும் அவர் கண்டு கொள்ளவில்லை. லட்சோப லட்சம் மக்களுக்கிடையில் அவன் நடத்திய பயங்கரப் போராட்டம் அவருக்குப் பேரதிர்ச்சியைத் தந்து விட்டது. பாவம்! அவர் பழங் காலத்து மனிதர்.

முனியாண்டியின் குடிசைக்கருகில் ரிக்ஷா சென்றபோது குடிசைக்குள்ளிருந்து குதூகலமான குரல்கள் எழுந்தன. பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து முனியாண்டி திரும்பியிருந்தான். அவனுடைய குழந்தைகள் அவனுக்காக முருகையன் வாங்கி வைத்திருந்த புதுச் செருப்புகளைப் போட்டுவிட்டு வேடிக்கை பார்த்தன. கைகொட்டிச் சிரித்தன.

வேலம்மாளும் குழந்தைகளும் முருகையனைப் பற்றிச் சொல்லச் சொல்ல மளமளவென்று கண்ணீர் சிந்தினன் முனியாண்டி. பட்டணத்தில் பிறந்த மனிதர்களிடமிருந்து அன்பையும், பரிவையும் அவன் கண்டறியாதவன். இந்தக் கருணைப் பெருஞ் சுமையை அவனால் தாங்கவே முடியவில்லை.

''தெய்வம் இப்போது கோயிலிலே இல்லே வேலம்மா!'' என்று நாத் தழுதழுக்கக் கூறினன் அவன். ''அது நம்ப குடிசைத் தாழ்வாரத்திலே வந்து குடியிருக்குது. நம்மாலே அதுக்கு என்ன செய்ய முடியும்?....ஒண்ணுமே செய்ய முடியாது! ஒண்ணுமே செய்ய முடியாது!''

அவனுடைய தெய்வம் அப்போது தன்னைப் பிறப்புவித்த தெய்வத்தைச் சுமந்து கொண்டு குடிசைக்குள் நுழைந்தது. செய்தியைக் கேட்டுப் பதறினன் முனியாண்டி; குமுறினள் வேலம்மாள். சிவப்பிரகாசத்தை ஒரு கோரைப் பாயில் கொண்டு வந்து கிடத்தினர்கள். அவருடைய தலைமாட்டில் ஒரு விளக்கை நகர்த்தி வைத்தார்கள்.

அவருடைய கண்கள் திறந்துதான் இருந்தன. வேறு யாரையுமே அவர் பார்க்கவில்லை. முருகையனுடைய வலது கரத்தை மட்டிலும் அவர் இறுக்கமாகப் பற்றிக்கொண்டிருந்தார்.

''அப்பா! பட்டணத்து அத்தை வீட்டில்தான் இனி நான் சித்திராவுடன் இருக்கப் போகிறேனப்பா! எனக்கு வேலை கிடைத்திருக்கிறதப்பா! சித்திராவே நேரில் வந்து அழைத்து விட்டுப் போயிருக்கிறள் அப்பா!.... அப்பா!... நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா அப்பா? .... என்னை நம்புங்களப்பா! இனி நமக்கு ஒரு குறைவுமே இல்லையப்பா! நீங்களும் இங்கேயே என்னோடு இருந்து விடலாம் அப்பா!....''

சிவப்பிரகாசத்துக்கு வாய் திறந்து பேசமுடியவில்லை. ஆனல் அவன் பேசிய பேச்சுக்களையெல்லாம் அவர் புரிந்து கொண்டதுபோல் புன்னகை செய்தார். அவற்றை நம்பியது போலவும் அவர் தலையசைக்க முயன்றார்.

புன்னகை புன்னகையாகவே இருந்தது. மகனை இறுகப் பற்றியிருந்த கரம் தளர்ந்தது. சிவப்பிரகாசம் சிவமாகி ஒளியில் கலந்தார். மகன் அவர் கால்களில் விழுந்து கதறினன். தலைமாட்டிலிருந்த விளக்குப் புதிய ஒளி பெற்றது போல் முன்னிலும் பிரகாசமாகச் சுடர் விட்டது.

(தொடரும்)

அன்பே ஆரமுதே



தி. ஜானகிராமன்

அத்தியாயம் நாற்பத்தொன்று

ருக்மிணியிடம் சாவியைக் கொடுத்து விட்டுப் பல பேரைப் பார்க்க அனந்தசாமி புறப்பட்டு விட்டார். உடல்நிலை இன்னும் தேறாததால் நின்று நின்று போய்க் கொண்டிருந்தார் அனந்தசாமி. வழக்கத்தை விட இன்று அலைச்சல் அதிகம். ஏறி இறங்கின வீடுகளும் அதிகம். இன்று பத்து வீடுகள், நாளைக்கு வேறு பத்து, மூன்றும் நாள் இன்னொரு பத்து—என்று சௌகர்யத்தை முன்னிட்டு வைத்துக் கொண்டிருந்த முறையை மீறித் தெரிந்த வீடுகள், நோயாளிகள் — அத்தனையையும் பார்த்துக் கொண்டே சென்றார் அவர். பசி நமநம வென்று அரித்தது. ஆனால் இரண்டு மூன்று வீடுகளில் வந்த காப்பி டீனி எல்லாவற்றையும் பிடிவாதமாக மறுத்துவிட்டார். ''நான் தானம்மா குடுப்பேன்' என்று இரைச்சல் போட்டு அம்மாவின் கையிலிருந்து சர்பத் கண்ணாடியைப் பிடுங்கி அவரிடம் நீட்டினான் காசிலிங்கத்தின் குழந்தை. மலர்ந்த முகத்துடன் அதை வாங்கிக் கொண்டார் அவர். ஆனால் உதட்டில் வைத்து ஒரு வாய் குடிக்க முடியவில்லை. பசியை யெல்லாம் அமுக்கி அடிவயிற்றையும் மார்பையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அந்த வேதனை எதையும் உள்ளே போடவொட்டாமல் கொப்பளித்தது.

''இது போதும். முடியவில்லை.''

''காய்ச்சல் சோர்வு இன்னும் இருக்காப்பலதான் தோணுது. ஏன் இப்படி நடந்து வரணும் சாமி?'' என்றாள் சிவபாக்கியம். ''வண்டி அனுப்பறேனே. அதிலே வேணுங்கற இடத்துக்கு நீங்கள் போய்ட்டு வந்திரலாமே.''

''பரவாயில்லை'' என்று மேலும் வற்புறுத்த முடியாத குரலில் சொல்லி விட்டு, மருந்தைக் கொடுத்து விட்டு வெளியே நடந்தார் அவர்.

இன்னும் இரண்டு மூன்று இடங்களிலும் இப்படித்தான் தட்டிக் கழித்தார். காசிலிங்கத்தின் குழந்தை முன்னேறி வருவது அவருக்கே வியப்பாக இருந்தது. விரல் மட்டும் இல்லை. பாதம் முழுவதையும் அசைக்கத் தொடங்கி விட்டான். ஆனால் அந்த வியப்பும் வந்த நிமிடமே கரைந்து விட்டது. மனத்தோடு இறுக ஒட்டி வரும் பரபரப்பு, இகைப்பு ஒன்றும் இப்போது இல்லை. குழந்தை, அதன் பிணி - எல்லாம் தூரத்தில் தெரியும் சாதாரணக் காட்சிகளாக எங்கோ விலகி நின்றன. இங்கு மட்டும் இல்லை. இன்று பார்த்த அத்தனை நோயாளிகள், அவர்களுடைய நோய்கள், கேள்விகள், பேச்சுகள்-எல்லாமே மூன்றும் மனிதர்களின் விவகாரங்களாக விலகி நின்றன.

திருவல்லிக்கேணி, மீர்சாகிப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை, சூளை, புரசைப்பாக்கம்-எல்லாவற்றையும் பார்த்து

விட்டு எழும்பூர் ஸ்டேஷனுக்கு முன் பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றார். ஒன்பதாம் நம்பர் பஸ்கள் இரண்டு வந்தன. அவற்றில் நிற்கும் இடம் தான் இருந்தது. ஏறாமலே நின்றார். மூன்றாவது பஸ் கிட்டத்தட்ட காலியாகத்தான் வந்தது. ஏறவில்லை. வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்றார்.

வேதனை குறையவில்லை. ரிக்ஷாக்காரர்கள் சண்டை, ஹிருதயத்தை அதிர அடித்து ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள், கடையில் தொங்கிய மாலை இன்சரிகளின் சுவரொட்டிகள் - இவற்றைப் பார்க்கும்பொழுது கலகலத்திருந்த மனம், வீட்டை நினைத்த பொழுது மீண்டும் வேதனையில் விழுந்து துவண்டது.

பத்து வருடப் பழக்கம் வீடு என்ற ஒன்றை நோக்கிக் காலை இழுத்தது. ஆனால் இன்று இழுக்கிற வீடு....

பஸ் ஒன்று நின்றுவிட்டுப் போயிற்று. இன்னொரு ஒன்பதா! பக்கத்தில் ஓர் ஆரஞ்சுக் கடை தெரிகிறது! அந்தப் பழங்களில் ஒன்றாக இருந்திருந்தால், புத்தன் நம்மை உரித்துத் தின்றிருப்பான். ஆனால் ருக்மிணி...!

ருக்மிணி எல்லா யாத்திரைகளையும் முடித்துக் கொண்டு விட்டாற்போல் இங்கே வந்திருக்கா!

அனந்தசாமியை அச்சம் ஒன்று புகுந்து ஆட்டிற்று. யாரைக் கண்டுஅஞ்சுகிறோம்! ருக்மிணியைக் கண்டா! அல்லது இத்தனை



ஆண்டுகளாகத் தனக்கு எஜமானனாக இருந்து அமைதியையும் நிறைவையும் கொடுத்து இப்பொழுது கால் இற்றுப் போய் நிற்கும் தனிமையைக் கண்டா?

இறந்து போனவன் மீண்டும் வந்து ஆண்ட வீட்டினுள் புகுந்து, நடமாடுவதுபோல் ஒரு பயம்தான் அவரை வீடு வீடாக ஏற்றி இறக்கி, வண்டி வண்டியாகத் தவறவிட்டு, அங்கேயே அடித்து நிறுத்தியிருந்தது.

எதிரே வரும் பஸ்...ஆமாம்—பாரிசுக்குப் போகிறது. அதில் ஏறி சென்ட்ரலில் இறங்கி, ரயில் ஏறி...டிக்கட் வாங்காமல், இறக்கி விட்ட இடங்களில் இறங்கி இறங்கி, ஹரித்துவாரம், ரிஷிகேசம் வரையில் போய்விடலாம். அந்த வேகத்தில் காலை முன்னால் வைத்தாற்போல் அவருக்குத் தோன்றியது.

ஆனால் அவர் ஏறியது ஒன்பதாம் நம்பர் பஸ்ஸில்தான். நினைத்த இடங்களில் நிற்காமல் ஓடிற்று அது. இறங்குகிற ஒன்றிரண்டு பேரையும் மனமில்லாமல் இறக்குவது போல் இறக்கிவிட்டு எகிறி எகிறி விரைந்தது. ஜன்னலில் எதிர்த்து வீசிய குளிர்ந்த காற்று மட்டும் வேதனையை இறக்கவில்லை. விசிறி விசிறிப் பெருக்கிற்று.

இறங்கி நடந்தபொழுது வீதிக்கெல்லாம் தூக்கக் கலக்கம். தெருக்குள் புகுந்து வீட்டின் இருப்புக் கிராதியைத் திறந்துகொண்டே மேலே பார்த்தார். தென்னண்டை அறையிலும் ஹாலிலும் வெளிச்சம் தெரிந்தது. பூட்டிவிட்டுச் சாவியைக் கொடுக்கவில்லை.?

மெதுவாக நடந்து கீழ்ப்படியில் நின்று பார்த்தார். மாடிக் கதவு திறந்திருந்தது. மேலே ஏறிப் போனதும், ஹாலில் மேஜைக்குப்பின் சுழல் நாற்காலியில் அமர்ந்து வாசித்துக் கொண்டிருந்த ருக்மிணி அரவம் கேட்டு வேகமாக எழுந்து நின்றாள்.

"ரொம்ப நேரமாகி விட்டாற்போலிருக்கிறதே..." என்று வரவேற்றாள்.

"மணி என்ன?"

"பத்து அடித்து ஐந்து நிமிஷம்" என்று கையைப் பார்த்தாள் ருக்மிணி.

"ரொம்ப நேரந்தான் ஆகிவிட்டது."

"சாப்பாடு கொண்டு வருகிறேன்" என்று கீழே விரைந்தாள் அவள். அவர் கையைக் கழுவி, அறைக்கு வந்ததும் சாப்பாடு வந்து விட்டது—மத்தியானம் வந்த மாதிரி.

ருக்மிணி பிசைந்த சாதங்களை யெல்லாம் எடுத்து வைத்தாள் — சின்னச் சின்னக் கிண்ணங்களாக.

அனந்தசாமி கிண்ணங்களை வெறித்துப் பார்த்தார். அப்படியே பிடித்து வைத்தாற்போல உட்கார்ந்திருந்தார்.

பின்னால் கைவைத்துச் சுவர்மீது சாய்ந்தாற்போல் நின்ற ருக்மிணி ; இந்த மௌனத்தைச் சுமந்து கொண்டு ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷம் நின்றாள்-ஏதாவது ஸ்தோத்ரம் சொல்லிக் கொண்டிருக்கிறாரோ என்று.

"சாப்பிடலாமா?" என்று கடைசியில் கேட்டும் விட்டாள்:

"ஆங்!" என்று நிமிர்ந்தார் அவர்.

"சாப்பிடவில்லை?"

"ம்" என்று கிண்ணத்தைத் தொட்டவர் மீண்டும் அதே நிலையில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்துக் குழம்பினாள் ருக்மிணி. "பசி இல்லையா?"

"அவ்வளவாக இல்லை."

"வெகு தூரம் அலைந்துவிட்டு வருகிறாற்போல் தோன்றுகிறதே."

"அலைந்தேன். ஆனால் அது பசியைவிடப் பயத்தைத்தான் அதிகப் படுத்தியிருக்கிறது."

"பயத்தையா?"

"ஆமாம். இங்கே வந்ததிலிருந்தே ஒரு—ஒரு— -ஒரு—ஒரு ஏன், பயம் என்றே சொல்லி விடலாம். முதல் முதல் நாகம்மாள் வீட்டில் பார்த்த அன்று, குற்றம் செய்துவிட்ட குறுகுறுப்பு வயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்தது. வீட்டுக்கு வர மனமில்லாமல் பீச்சிலேயே உட்கார்ந்து கிடந்தேன். இன்று காலையிலிருந்து ஒரு வேதனை, ஒரு பயம். டொக்கி இருக்கிற வரையில் அவ்வளவாகத் தெரியவில்லை. அவன் போனபிறகு இருப்புக் கொள்ளவில்லை. கிளம்பிவிட்டேன். வேலைகளை முடித்துக் கொண்டு ஏழு மணிக்கு வந்திருக்கலாம். முடியாமல்தான் தயங்கித் தயங்கி நின்றேன்."

ருக்மிணியின் முகம் அந்தப் பயத்தின் அனலில் தளிரை வாட்டினாற் போல் சுருங்கிற்று. எங்கேயோ பார்த்துக் கொண்டு நினைவு தேங்கி நின்றாள். பயம்—பயம்!....தலைப்பை இழுத்து இரு கைகளும் மறையப் போர்த்திக் கொண்டாள் ருக்மிணி.

"ரொம்ப காலமாகப் பழகின ஸ்வாதீனம் எனக்கு இருக்கிறது. மேலும் இப்பொழுது தனியாக இருக்கிற தைரியத்திலும் சொல்லுகிறேன். அன்று அவசர அவசரமாக டில்லிக்கு விமானத்தில் போனேன். நாகபுரி போகிறவரையில் பிரயாணம் ரொம்பத் தொல்லையாயிருந்தது. விமானம் வசமிழந்து ஏறுவதும் இறங்குவதுமாக அல்லாடிற்று. அது சகஜமாம். ஆனால் எனக்கு இந்த உயிர் போய்விடுமோ என்று அடிவயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்தது. உயிர் போகிற பயமில்லை. ஆனால் ஏதோ ஒரு நம்பிக்கையில்தான் உயிரை வைத்துக் கொண்டி

ருந்துவிட்டோம். அது பலிப்பதற்கு முன்னால் போய்விடுமோ என்ற பயம் தான்....''

மேலே பேசமுடியாமல் நின்றாள் ருக்மிணி. அருகே நின்று பார்த்துக் கொண்டிருப்பது ஒன்றுதான் என் ஆசை என்று சபதம் போல சத்தியம் செய்யாத குறையாக அன்று விமானத்தில் உயிருக்காக இறைஞ்சியதை இப்பொழுது வெளியிடக் கூசிற்று. தனியாக இருக்கும் தைரியத்தில் அதையே சொல்லி விடத் தொடங்கியவள் தடைப்பட்டு நின்றாள். சற்றுக் கழித்துத் தொடர்ந்து சொன்னாள். ''அன்று உயிரைக் காப்பாற்றத் தெய்வத்திடம் வேண்டிக் கொண்டேன். எனக்கு எந்தவித பயமுமில்லை. ஒரே நினைவாக இருக்கிறது. பயம் இல்லாமலும் இல்லை. நான் நினைத்தது நடந்து விட்டதே என்றுதான் பயம். கிடைக்காதது கிடைத்து விட்டால், நீடிக்க வேண்டுமே என்ற கிலி. திடீரென்று இன்று மத்தியானத்திலிருந்து இரண்டு தடவைகள் தூக்கிப் போட்டு விட்டது. வேறு எந்தப் பயமுமில்லை. ஆசையுமில்லை; வேளா வேளைக்கு இந்தக் கவளம், தண்ணீர், காப்பி — இதைக் கொடுத்துவிட்டுக் கீழே போய்விடுகிற ஆசையைத்தவிர...இதோ வருகிறேன்'' என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் ருக்மிணி.

அவள் கீழே போவதுபோல்தான் தோன்றிற்று.

'நான் இந்தப் பயமெல்லாம் பயப்படவில்லையே...' என்று அவர் உள்ளுக்குள் நகைத்துக் கொண்ட பொழுது ருக்மிணியின் உயரமும் வெடவெடப்பும் அவர் கண்முன் நின்றன. அசாதாரண சௌந்தர்யம். அதாவது, நிறைந்து ததும்பிக் கவர்ந்து கட்டிப் போடுகிற அழகில்லை அது. சாதாரண அழகு செய்யக்கூடிய கடமை. இது யாரையுமே நிறுத்தாத, யார் கண்ணையும் உறுத்தாத சௌந்தர்யம் — வரப்பில் சிறுத்து, மலர்ந்து கிடக்கிற நீல, வெள்ளைப் பூக்களைப் போல. யாராவது கவனித்து நின்று பார்க்க வேண்டும். நின்றாலும் மணம் இல்லை. குழந்தையைப் பார்ப்பது போலப் பார்த்துக் 'கடவுளின் படைப்பு' என்று ஒரு சின்ன சபாஷ் போட்டுவிட்டு நகர்ந்து போகிற சௌந்தர்யம்.

ருக்மிணி சிரமப்பட்டு இங்கிதமாக வெளியிட்ட கவலை அவருக்கு இல்லை.

இப்பொழுதுதான் புரிகிறது. என்னைப் பயமுறுத்தியது தனிமையை விட்டுப் பிரிந்துபோகும் விரகம் தான். ருக்மிணி சொன்னதுகூட உண்மை போல் தான் தோன்றிற்று. அவள் மனத்தில் அடைத்த வேலிகூட அவசியம் என்றும் பட்டது...சிறிது சிறிதாக அவருடைய வேதனைகூட இறங்கிக் கொண்டிருந்தது; கிண்ணத்திலிருந்த சாதத்தை எடுத்து ஒரு கவளம் போட்டுக் கொண்டார். நிமிர்ந்தார்.

''என்னது?''

ருக்மிணி பதில் பேசவில்லை. இரண்டு கைகளாலும் தூக்கி வந்ததைக் கீழே வைத்தாள். சுருண்டிருந்த வளையத்தை விடுவித்துச் சுவரிலிருந்த ப்ளக்கில் செருகினாள்.

''ரேடியோவா?''

''ஆமாம். நாராயண தீர்த்தரின் பாடல்களை நாலைந்து பேர்கள் பாடுவதாகப் போட்டிருந்தது ஞாபகம் வந்தது. எனக்கு ஏதாவது பயம் வரும்போது, வேதனை வயிற்றைப் புரட்டும்பொழுது இதைக் கேட்பேன். நம் அதிர்ஷ்டம், நல்ல பாட்டாக இருந்தால் மனசுக்குத் தெம்பும் தைரியமும் வந்து தெளிந்து போகும். அப்பாடா என்று குளிர் விட்டு விடும். அர்த்தமில்லாத பயம், கவலை இரண்டும் சங்கீத ஞானம் இல்லாதவன் மாதிரி. சங்கீதத்தைக் கண்டு ஓடுகிறவர்கள், முகத்தைச் சிணுக்குகிறவர்கள், கலைகளிலேயே கீழ்ப்படியிலிருப்பது சங்கீதம்தான் என்று குதர்க்கம் பண்ணுகிற கலைரசிகர்கள்—இவர்கள் காரணமில்லாமல் பிறரை ஹிம்சைப் படுத்திக் கொண்டே யிருப்பார்கள். ஸ்வாமி என்னமோ தங்களிடம் ஒரு விளக்கைத் தந்து வழிகாட்டு என்று சொல்லிவிட்டாற்போல் கேட்காதபொழுது உபதேசம் செய்வார்கள். அதையும் தப்பாகவே செய்து கொண்டிருப்பார்கள். பிறரை நோக அடிப்பதில் தனி ஆனந்தத்தை அடைவார்கள்—அந்த மாதிரிதான் பயமும் கவலையும். அந்தச் சமயங்களில் நல்ல பாட்டாகக் கேட்டால், மனசு தெளிந்துவிடுகிறது. மூடர்களைப் பெரிய எதிரிகளாக நினைத்துப் பயப்படுவதும் நீங்கி விடுகிறது. நம்முடைய கோபம் கூடத் தணிந்து விடுகிறது.''

இவ்வாறு சொல்லிக் கொண்டே ருக்மிணி திருகைத் திருப்பி ஒலியை உயர்த்தினாள். ஆண் குரலும் பெண் குரலுமாக நாலைந்து குரல்கள் ஏதோ நாமாவளியைப்பாடிக் கொண்டிருந்தன.

கேட்டுக் கொண்டே சாப்பிட்டார் அவர். வேண்டிய மட்டும் எடுத்துக் கொண்டு மிகுதியை அப்பால் வைத்தார். சாப்பிட்டார். கவளங்கள் தீர்ந்ததும் உட்கார்ந்து கேட்டுக்கொண்டே யிருந்தார். பத்து நிமிடங்கள் பாடிவிட்டு நிலையமே விடைபெற்றுக் கொண்டது.

''வாஸ்தவந்தான்'' என்றார் அவர் ருக்மிணியைப் பார்த்து.

"?"

"மந்திரம் போட்டு விஷத்தை இறக்குவார்களே. அப்படியல்லவா செய்து விட்டீர்கள்?" என்று கண்ணகல வியந்தார் அவர்.

அந்தக் குழந்தை வியப்பைப் பார்த்ததும் பழைய அனந்தசாமி திரும்பி வந்து விட்டதைக் கண்ட விடுதலே ருக்மிணியின் முகத்தில் வெளிச்சம் விழுந்தது போல் தெரிந்தது.

"இனிமேல் இந்த மாதிரி வேதனைகள் வராதென்றே நினைக்கிறேன்" என்றார் அவர்.

"கைகழுவவில்லே? இப்படியே தட்டிலேயே கழுவி விடலாமே!" என்று தண்ணீரை விட்டாள் ருக்மிணி.

"சித்தி சாப்பிட்டாகி விட்டதா?"

"அவளுக்கும் பசி தாங்காது....சீக்கிரம் வந்து விடலாமோ என்ற சந்தேகத்தில் ஒன்பது மணி வரை காத்திருந்தாள். கடைசியில் பலகாரம்தானே என்று தனக்குப் போட்டிருந்த கோதுமைக் கஞ்சியைச் சாப்பிட்டு விட்டாள்."

"சித்தியாகட்டும். நீங்களாகட்டும். எனக்காகக் காத்திருக்க வேண்டாம். போகும் இடத்தில் எப்படியோ — நாழியாகும். இங்கேயே இருந்தாலே யாராவது வருவார்கள். பேச்சு போய்க் கொண்டேயிருக்கும்."

"இன்று சாயங்காலம்கூட உங்களைத் தேடிக் கொண்டு வந்தார்.... உங்கள் சிநேகிதர்."

"யாரு?"

"ரங்கன்!"

"ரங்களு!"

"ஆமாம். சாயங்காலம் ஐந்து மணியிருக்கும். வந்தார். பழைய வீட்டுக்கு வந்து விசாரித்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தாராம்."

"என்னையா பார்க்க வந்தான் அவன்...?"

"அப்படித்தான் சொன்னர். இல்லே என்றதும் உடனே கிளம்பி விட்டார்."

"டொக்கி அப்பா இன்று ஊருக்குப் போகிறர். நான்கூட எழும்பூர் ஸ்டேஷன் வாசலில் அத்தனே நேரம் நின்றவன் மறந்தே போய் விட்டேன். அவரை வண்டியில் பார்த்திருக்கலாம்."

"டொக்கியை விடமாட்டார் போல் இருக்கிறதே இந்த ரங்கன்."

"டொக்கி சொன்னளா.....? சந்திரா எப்படியிருக்கிருள்?"

"அழுகிருள். இந்த அழுகைக்கு அர்த்தமே தெரியவில்லே எனக்கு."

"ம்....எனக்கும் ஒன்றும் புரியவில்லே. அவளே நினேக்கிற பொழுதெல்லாம், பெரிய சுவர் முன்னுல் நிற்பது போல் விழிக்க வேண்டி வருகிறது."

"அப்பாவிப் பெண்."

"கோபம்கூடப் படாமல் இவ்வளவு அழும்படியாக—"

"அழும்படியாக ஏதோ நடந்திருக்க வேண்டும். இன்று வேண்டாமே இந்த விஷயம்." ஒரு வேதனே தெளிந்ததோடு நிறுத்திக் கொண்டால் நல்லது என்று தோன்றிற்று அவருக்கு.

"சரி, ரங்கன் மறுபடியும் எப்போது வருவதாகச் சொன்னுன்?"

"அப்புறம் வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனர்" என்று தட்டையும் கிண்ணங்களேயும் எடுத்துக் கொண்டு, "வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டாள் ருக்மிணி.

அப்புறம் - அப்புறம் - எப்போது? நெற்றியில் இடித்தாற் போல் அன்று வந்த அதிர்ச்சியிலிருந்து மீள இத்தனே நாளா ஆகியிருக்கிறது அவனுக்கு? அப்படி இலேசில் சமாளித்துக் கொள்ளும் அதிர்ச்சியும் இல்லே. பின் ஏன் இங்கே வந்தான்? எப்படி வந்தான்? மறு நாள் அவன் வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்து அந்த நினேவுகளே யெல்லாம் ஒதுக்கி விட்டுத் தாழம் பாயைக் கீழே விரித்து உட்கார்ந்து கொண்டார் அவர்.

மூச்சை அடக்கி மோன வெளியில் உயர உயர எழுந்தது ஆவி. இத்தனே நாட்களாகப் பிரிந்திருந்த தனிமை அவரை மீண்டும் கையைப் பிடித்து அழைத்துப் போயிற்று.

மறு நாள் ரங்களேப் பார்க்க முடியவில்லே. அவன் வீட்டில் இல்லே. டொக்கியும் அவர் போன சமயத்துக்கு வீட்டில் இல்லே. நடன வகுப்புக்கு அவன் போயிருந்தாளாம்.

நாலேந்து நாட்களாயிற்று.

இப்பொழுது மாடி வீட்டுக்கு மாறியதைத் தெரிந்து கொண்டு பல பேர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். ருக்மிணி கல்லூரிக்குப் போய்க் கொண்டிருந்ததால் அவர் பகலில் சுற்றி விட்டு உச்சி வேளேக்கு வரும்போது சூடு ஆறுத அலுமினியப் பெட்டிக்குள் உணவு பிசைந்து வைத்து மாடியில் காத்திருந்தது. அம்மாவின் மூச்சும் அருளும் இந்தப் பச்சை வர்ணமும், வசதியும் தென்றலுமாக வடிவு கொண்டு வந்தாற் போலிருந்தது.

ஆனுல் இனிமேல் வர மாட்டேன் என்று சொன்னது போல் அன்றிரவு மறைந்த வேதனே மீண்டும்மீண்டும்வந்து கொண்டிருந்தது. மருந்தையே வென்று பிழைக்கக் கற்றுக் கொண்ட நோயைப் போல அது இசையை மீறி வந்து கொண்டிருந்தது. அப்படி வேதனே வரும்

ரீடா கூந்தலைப் பாதுகாக்கும்



தொல்லைகளைத் துரிதமாகவும்
திறமையாகவும் நீக்குகிறது.

ரீடாவை உபயோகித்து மயிர்க்கால்களுக்குப் போஷாக்குத் தருவதால் உங்கள் கூந்தல் நீண்டு வளர்ந்து மிருதுவாகவும் பளபளப்பான கருமை நிறத்துடனும் காணப்படும். இதிலுள்ள மருந்துசத்துக்கள், மயிர் கொட்டுதலை நிறுத்தி, பொடுகைப்போக்கி, நரைக்காமல் பாதுகாக்கும். புட்டியிலுள்ள ரீடாவைத் தேங்காய் எண்ணெய், கடுகு அல்லது நல்லெண்ணெயில் கலந்து எப்போதும் உபயோகியுங்கள். காரிருள் போன்ற கருங்கூந்தல் அழகை நிச்சயம் நீங்கள் பெறலாம். ரீடாவை உபயோகிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கும் சிபாரிசு செய்யுங்கள்.



ரீடா

கவர்ச்சி தரும் கூந்தலின் ரகசியம்

R.C TM

ரீடா கம்பெனி, சென்னை-1.



நமது எல்லைப்புறப் பாதுகாப்பு

எல்லைப்புறங்களில் பழக்கப்பட்ட பாதைகளுக்கு அப்பால் மலைகளின்மேல் புதுப் புது மலை ரஸ்தாக்கள் துரிதமாக நிர்மாணிக்கப்படுகின்றன. வீரத்திற்குப் பெயர் பெற்ற நமது ராணுவப் படையினர் இம்மாபெரும் புராதன நாட்டின் புனிதமான எல்லைப்புறப் பிரதேசங்களுக்கு உடனுக்குடன் சென்று பாதுகாக்கும் பொறுப்பைச் சிறப்பாக நடத்தவே இந்த ஏற்பாடுகள்.

நாட்டின் தற்காப்புக்கு அத்யாவசியமான உயிர்நாடிகளைப் போன்ற இத்தகைய ஏராளமான பாதைகள் சிமெண்டினாலேயே நிர்மாணிக்கப்படுகின்றன. இக்காலத்தில் கட்டிட சாதனங்களில் அடிப்படையான ஒன்று சிமெண்டு.

இத்தகைய மலை ரஸ்தாக்களை நிர்மாணிப்பது மலைப்பைத் தரும் சிரமமான பணியாகும். நிர்மாண என்ஜினியர்கள் மிக மிகச் சிறந்த பொருள்களைக் கொண்டே செய்யவேண்டிய பணி.

தரமான நிர்மாண வேலை எதுவாயிருந்தாலும் டால்மியா சிமெண்டையே அநேகமாக எல்லோரும் நாடுகின்றனர்.

டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்

சமுதாயத்தின் சேவையில் ஈடுபட்ட ஸ்தாபனம்

டால்மியாபுரம் (சென்னை ராஜ்யம்)

தலைமை ஆபீஸ்: 4, சிந்தியா ஹவுஸ், புதுடில்லி



பொழுதெல்லாம் இமே போய் ரேடியோவின் பக்கத்தில் அமர்ந்திருப்பார் அவர். ஆனால் அதே மருந்தாக எப்பொழுதுமே கிடைக்கவில்லை. நல்ல சங்கீதம்கூட அந்த வேதனையைத் தணிக்க முடியாமல் பின்வாங்கிற்று.

அன்று உச்சிப் போதில் அலுமினிய பிளாஸ்கைத் திறந்து சாப்பிடத் தொடங்கிய போது வந்து விட்டது அது. காரணம் தெரியாமல் கலங்கினார் அவர். ஒவ்வொரு கவளத்தையும் 'ராம ராம ராம' என்று அந்த இனித்த பெயரில் சுற்றிச் சுற்றிப் போட்டுக் கொண்டார். யாரைப் பற்றி இந்தக் கவலை, இந்தப் பயம்?

''ஸ்வாமி இருக்கிறீரா?'' என்று குரல் கேட்டது.

''யாரு?''

''யாரா? என்ன ஸ்வாமி! அப்படி வேற்றுக் குரலாகி விட்டதா?''

அனந்தசாமிக்கு வியப்பாகத்தான் இருந்தது. காலில் சக்கரம் கட்டி அலைகிற கப்புசாமி வந்து நின்று கொண்டிருந்தார்.

''வரணும், வரணும். என்ன ஆச்சரியம் இது!''

''இதுதான் ஆச்சரியமாகப்படுகிறதா, உங்களுக்கு? அப்புறம் நான் எதைக் கண்டு ஆச்சரியப்படுகிறது.... ம்....'' என்றார்.

''உட்காருங்கள், இதோ வந்துவிடுகிறேன்'' என்று கைகழுவி விட்டு வந்தார் அனந்தசாமி.

''அப்பா! என்ன நெஞ்சழுத்தம்!'' என்றார் பிரமித்தாற் போல் கப்புசாமி.

''என்ன!''

''என்னிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லை ஸ்வாமி!''

''யாரு?''

''இந்த ருக்மிணிதான். வீட்டையே நான்தான் கூடமாட இருந்து அமர்த்தினேன். அட்வான்ஸ் கொடுத்தேன். நீங்கள் வரப்போவதாக வாயைத் திறக்கவில்லை ஸ்வாமி...''

அனந்தசாமிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

''நம்ம மாதிரி ஓட்டை வாயா, எல்லாரும்........ம்.... சௌகரியமாயிருக்கிறது. இல்லையா?'' என்று கேட்டார் கப்பு.

''ரொம்ப.''

மீண்டும் மௌனம்.

''உங்களைப் பார்த்து ரொம்ப நாட்களாயிற்று'' என்று அதைக் கலைத்தார் அனந்தசாமி.

''என்னை என்ன பார்வை! அந்த ராஸ்கலைப் பார்த்து ஏதாவது சொல்லுங்கள்.'' என்று திடுக்கென்று குமுறினார் கப்பு. எதற்கும் அசைந்து கொடுக்காத அந்த முகம் கோணிப் புரு புருவென்று துடித்தது — நெஞ்சு உடைந்து விடுவதுபோல.

''யாரை?''

''என்ன யாரை என்கிறீர்கள்? இந்த ரங்க ராஸ்கலைத்தான். உங்களோடு ரொம்பக் குலாவுகிறானே....''

''நானும் அவனைப் பார்த்து நாளாகி விட்டது. நாலைந்து நாட்கள் முன்னால் வந்தானாம். நான் இல்லை. அவன் வீட்டுக்குப் போனேன். இல்லை.''

''நான் போனேன், ஸ்வாமி...பேசினேன். கழுத்தை முறித்துப் போடவில்லை. வந்து விட்டேன்.''

''என்ன நடந்தது?''

''நாகம்மாள் பிடுங்கி எடுத்தாள். இந்தப் பொம்மனாட்டிகளுக்கு அநாவசியமாகச் சந்தேகப்படுகிறது, கவலைப்படுகிறது — பிறத்தியாரும் அப்படிப்படவில்லையே என்று கண்ணைக் கசக்குகிறது இதுதானே தொழில்; ஆளையே காணவில்லையே காணவில்லையே என்று புலம்பினாள். கடைசியில் நானும் ஐந்தாறு தடவை பார்த்து முடியாமல் நேற்று வீட்டிலேயே பிடித்து விட்டேன். நாவல், நாடகத்திலே பேசுகிறாற்போல் பேசுகிறான் ஸ்வாமி. சந்திராவையும் தன்னையும் கணவன், மனைவி என்ற உறவில் நினைத்துப் பார்க்க முடியவில்லையாம். கேட்டேன். எனக்கு உடம்பு நிலை கொள்ளவில்லை. பொறுத்துக் கொண்டேன். அவன் மாத்திரம் அப்படி நினைத்துக் கொண்டு பொழுதைத் தள்ளிக் கொண்டிருக்கிறானே, ஏன் என்று கேட்டேன். என்னமோ நான் என்னத்தைக் கண்டேன் என்றான். சொல்லுகிறேனே என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். பச்சையாகக் கேட்டு விட்டேன். 'ஏண்டா, பாவி, என்னமோங்கிறியே, அவள் கையைக் கோத்துண்டு பீச்சிலே உலாவினே, கூட்டிக்கிண்டு நின்னே, அப்பல்லாம் இந்த நினைவு வரலியோ' என்று கேட்டேன். திகைத்துப் போய் நின்றான். என்ன சொல்றே என்று கேட்டேன். 'நீங்க சொல்றப்படியேயே நடந்திருக்கலாம். அதுவே என் மனசு மாறினதுக்கும் காரணமாக இருந்திருக்கலாம் இல்லியோ? எனக்கும் அவளுக்கும் இந்த உறவு சாத்தியமில்லேங்கிறது,— கொஞ்சம் தாமதமாகவே எனக்குத் தெரிஞ்சது ஒரு குத்தமில்லையே' என்று பட்ட மரம் மாதிரி சொல்லிக் கொண்டு நின்றான். எனக்கு விரல், உடம்பெல்லாம் ஆவேசம் வந்து பரந்தது. கொஞ்சம் மனசை விட்டிருந்தேனானால் என்ன செய்திருப்பேனோ—?''

அனந்தசாமி அப்போது அவரைப் பார்த்தார். உண்மைதான்; இந்த வயதிலேயும் முரட்டு ஆணவத்தின் உருவாகத்தான் நிற்கிறார் அவர். அந்த ரங்கனை கையில் எள்ளாகப் பிடித்து எண்ணெயாகப் பிழிந்து விடுகிற உரம் அந்த ஆகிருதியில் கண்டிக் கொண்டு தான் இருந்தது.

''நீ சொல்லுகிற வார்த்தையின் அர்த்தத்தை யெல்லாம் உணர்ந்து தானே பேசுகிறாய் என்று கேட்டேன். படித்த முட்டாள்கள், புதிதாகப் படித்தவர்கள் பிறர் உணர்ச்சிகளை அனுபவித்துப் புரிந்து கொள்ளும் கருணை சக்தி யெல்லாம் இல்லாத தாயில்லாமல் வளர்ந்த பிள்ளைகள் – இவர்கள் மாதிரி ஆடம்பரப் பேச்சாகப் பேசுகிறானோ என்ற சந்தேகம் எனக்கு. என்ன சொல்கிறோம் என்று யோசனை இல்லாமல், கற்றுக் கொண்ட வார்த்தைகளை எங்காவது உபயோகித்துப் பிரமிக்க அடிக்க வேண்டும் என்று துடிப்பார்கள். அந்த மாதிரி பிதற்றுகிறானோ என்று சந்தேகம். அந்தப் பயல் அசைந்து கொடுக்கவில்லை. 'நன்றாக உணர்ந்துதான் சொல்கிறேன்' என்றான். இப்படிப் பரீட்சை பார்த்துப் பார்த்து எத்தனை பேரை உதறப் போகிறாய் என்று கடைசியாகக் கேட்டேன். 'இவ்வளவு முக்கியமான விஷயத்தில் பரீட்சை பார்க்கிறது இயற்கைக்கு விரோத மில்லையே' என்று கண்ணாடியைப் பார்த்துத் தலையை வாரிக் கொண்டே பதில் சொல்கிறான் சாமி, அற்பப் பயல். பேசாமல் உட்கார்ந்திருந்தேன். குட்டியின் நினைவு வந்து தான் கையைக் கட்டிப் போட்டு விட்டது. தொடாமல் பார்க்காமல் ஓடிப் போன ஆண் பிள்ளைகளை நினைத்து நினைத்து உருகுகிறவர்கள் இருக்கிற பொழுது, தொட்டுக்கிட்டுப் பழகினவனை நினைத்து இது எத்தனை கஷ்டப் படும்?.... சை என்று வெறுப்பாக வந்தது. எழுந்து வந்து விட்டேன்...எனக்கு ஒன்றுமே புரிய மாட்டேன் என்கிறது வந்ததிலிருந்து. நீங்கள் ஏதாவது சொல்லி அவன் வழிக்கு வருவானோ என்று பாருங்கள் என்றால் அவனைப் பார்க்கக் கூட முடியாதுபோலிருக்கிறது. இதைச் சொல்லத்தான் வந்தேன்'' என்று கண்ணை மூடிக் கொண்டார், சுப்பு. தோல்வியையும் துயரத்தையும் அந்த முகத்தில் பார்ப்பது அனந்தசாமியை எல்லையில்லாத கவலையிலும் குழப்பத்திலும் ஆழ்த்திற்று.

''நானும் இதே கவலையாகத்தான் இருக்கிறேன்'' என்றார் அவர். சற்றுப் பேசாமலிருந்த சுப்பு இரண்டு நிமிஷம் கழித்துக் கண்ணைத் திறந்தார். சொன்னார்: ''செத்துப் போனதை மீட்க முடியாது. ஆனால் இவன் மனசு எப்படி என்று தெரிய வில்லை. யாரோ சினிமாக்காரப் பெண்ணைச் சுற்றிக் கொண்டு அலைகிறானோ?''

''அந்தப் பெண்ணுக்கு இவனைக் கண்டால் பிடிக்க வில்லை. அதுவும் எனக்குத் தெரியும். கௌரவமான குடும்பந்தான்.''

''அப்படியா? நாவல், நாடகத்தில் வருகிற முக்கோணம்தானா?''

''கழுதை இங்கு அடிக்கடி வரும். அதன் அப்பாவோடு கூட வந்து விட்டுப் போயிற்று. ஆனால் அதன் ஆசைகள் எனக்குத் தெரிய வில்லை. இப்பொழுது ஸத்தியாக சினிமா, அதில் வரும் பெயர் இந்தக் கடுதாசியைத் தின்னத்தான் பழகிக் கொண்டிருக்கிறது'' என்றார் அனந்தசாமி.

சுப்பு அவரை உற்றுக் கவனித்தார். ''வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதீர்கள். என் மருமானுக்காக நான் யாரையும் குறைத்துப் பேசுவதாக நினைக்கக் கூடாது'' என்று தம்மையே திருத்திக் கொள்ளும் பாவனையில் கேட்டுக் கொண்டார். எனக்கு வேறு ஒன்றும் கோப மில்லை. இந்தப் பயல் வயிற்றில் பிறந்தவன் மாதிரி அதை விட ஸ்வாதீனமாக வந்தான், பழகினான், பேசினான். அவன் இப்படி எங்கேயோ போய்க் கதவைச் சாத்திக் கொள்வது போல நின்று கொண்டு பேசினானே, அதை நினைக்கிற போதுதான் மனசுக்குச் சிரமமாயிருந்தது. நானும் அந்தப் பயலிடம் அப்படி ஒரு பாசம் வைத்து விட்டேன்.''

''வயிற்றில் பிறந்த பிள்ளையே வரப் போகிறானே'' என்று அவரை உற்சாகப் படுத்துவதற்காகப் பேச்சைத் திசை மாற்றினார் அனந்தசாமி.

கழுவித் துடைத்தாற் போலச் சட்டென்று சுப்புவின் மனம் பொலிந்தது. ''ஆமாம். இரண்டு வாரம் இருக்கு. செப்டம்பரில் வருவதாக முன்னால் ஒரு லெட்டர் வந்தது. இந்த மாசமே வருவதாக முந்தாநாள் கடுதாசி வந்திருக்கிறது. ஸ்விட்ஜர்லாந்துக்கு வந்திருக்கிறானாம். அங்கிருந்துதான் வந்திருக்கிறது கடிதம்.''

''குடும்பத்தோடுதானே அவன் வந்திருக்கிறான்?''

''அப்படித்தான் எழுதி யிருக்கிறான். என்ன செய்கிறானோ!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து அலமாரியை ஒரு நோட்டம் விட்டார் சுப்புசாமி.

பிறகு, ''சரி. மணி இரண்டாகப் போகிறது. நான் வருகிறேன். அந்தப் பயலைப் பார்த்து முடிந்தால் ஏதாவது

செய்து பாருங்கள். எனக்கு நம்பிக்கை இல்லை'' என்று குனிந்து கொண்டே சொல்லி விட்டு வெளியே நடந்தார் சுப்புசாமி.

திசைப் பூண்டை மிதித்தாற்போல் மாடிப் படியில் நின்ற அனந்தசாமி கார் புறப்படுவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அணில் ஒன்று கன அவசரமாகப் படிக்கட்டில் படி மீது ஓடிக் கொண்டே கீழே இறங்கி மறைந்தது.

சுப்பு போன கையோடு கிளம்பினார் அனந்தசாமி. தேனாம்பேட்டைக்கு வந்து மௌபிரேஸ் சாலையில் ஏறி நடந்தார். ஆனால் இன்னும் அந்த ரங்கன் வீட்டில் இல்லை. டொக்கியின் வீட்டுக்கு வந்த போது அங்கு அவனும் இல்லை. அவளும் இல்லை. டொக்கியின் தாயார் உட்காரச் சொன்னாள் அவரை.

''டொக்கி டான்ஸ் கிளாசுக்குப் போயிருக்கிறாளா?''

''போய்க் கால் மணிதான் ஆயிற்று. நீங்கள் இருக்கிற ஜாகையில்தான் கீழே இருக்கிறாராமே — ருக்மிணின்னு ஒரு காலேஜ் வாத்தியாராமே.''

''ஆமாம்.''

''அவரோடுதான் பீச்சுக்குப் போயிருந்தாள் சாயங்காலம். திரும்பி இவளைக் கொண்டு விட்டு விட்டுப் போனார் அவர். கைகால் கழுவிக் கொண்டு இப்பொழுதுதான் கிளம்பினாள் டொக்கி.''

'ருக்மிணியா இங்கு வந்தாள்?' என்று சட்டென்று வியப்பாக வந்த கேள்வியை வாய்க்குள்ளேயே மடக்கிக் கொண்டார் அனந்தசாமி. ''ஓகோ!'' என்று சாதாரணமாக அதை மனத்தில் வாங்கிக் கொண்டார்.

சிறிது நேரமாயிற்று. விடை பெற்றுக் கொண்டவரை, ''காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம்'' என்று அடுப்பண்டை போய் விட்டாள் டொக்கியின் தாயார். சொல்ல, மெல்ல முடியாமல் உட்கார்ந்த அனந்தசாமி ருக்மிணி வந்த காரணத்தைக் கேட்க வந்த துடிப்புக்குத் தமக்குள்ளேயே சமாதானம் தேடிக் கொண்டிருந்தார்.

காப்பி சாப்பிட்டபிறகும் அந்த அம்மாள் விடுகிற வழியாக இல்லை. ''நானே வந்து உங்களைப் பார்க்க வேண்டும் என்றிருந்தேன்'' என்று இழுத்தாள்.

''என்ன?''

''இந்தப் பெண்ணுக்கு ஒரு வகையாகப் புத்தி சொன்னால் தேவலை.''

''என்ன விசேஷம்?''

''பாட்டு, டான்சென்னு சாதகமும் பண்றதாகத் தெரியலே. ஏதோ போய் வருகிறாள். என்னன்னே புரியல்லே. இங்கே எதுக்கு ஜாகை போட்டிருக்கு? ஏதாவது ஒரு வழியைப் படிக்கணும். இல்லே கச்சேரி, டான்சென்னு பண்ணனும். ரெண்டையும் விட்டு அந்தரத்திலே தொங்கறதுக்குக் காலத்தை வீணாக்குவானேன்!''

''எனக்குப் புரிய வில்லையே நீங்கள் சொல்கிறது?''

''ரங்கன் வருகிறாரே, அவர் ஒரு அபிப்பிராயமாகச் சொல்கிறார். அவர் நல்ல குடும்பம், நல்ல மனுஷான்னு தான் எனக்குப் படறது. அப்படித் தானே...?''

''ஆமாம்.''

''அவர் ஒரு அபிப்பிராயமா என் கிட்டே ஏதோ சொன்னார்'' என்று 'அபிப்பிராயம் அபிப்பிராயம்' என்று சொல்லித் தவித்தாள் அந்த அம்மாள். அனந்தசாமி, அவளுடைய குழப்பத்தை விடுவிக்க ''என்ன' அபிப்பிராயம்? டொக்கியைக் கல்யாணம் செய்துகொள்கிறேனென்கிறாரோ?'' என்று கேட்டார்.

''ஆமாம். இவளுக்கு அதற்கு இஷ்டமில்லையாம்.''

''ஏனாம்?''

''ஏனோ?.... இஷ்டமில்லேன்னு. கச்சேரி, டான்ஸையாவது நன்னா சாதகம் பண்ணலாமோல்லியோ? அதையும் செய்ய மாட்டேன்றா? அவராலும் கொடுத்திருக்கிற இடமோ—செல்லமோ அப்படிக் கொடுத்து வச்சிருக்கார்..'' என்று கணவனைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, ''எனக்கு ஒன்றுமே புரியலே. பத்திரிகை படிச்சிண்டு மூலையிலே உட்கார்ந்திருக்கவா இங்கே வந்திருக்கு! வீட்டு வேலை ரெங்கு மாங்குன்னு செய்யறா. இல்லேங்கலே. ஆனால் அதையெல்லாம் நான் செய்ய மாட்டேனா? வந்த காரியத்தைப் பார்க்காட்டா? இந்த அடுப்பங்கரை வேலைதான் பிடிச்சிருக்குன்னு கலியாணத்தைப் பண்ணிக்கோ என்றால், அந்தப் பேச்சை எடுத்தாலும் அவளுக்கு எரிச்சல் வரது'' என்று பொருமினாள் அவள்.

''ரங்கனுக்கு அவளைக் கொடுக்கலாம் என்று தோன்றுகிறதா உங்களுக்கு!'' என்றார் அனந்தசாமி.

''நல்ல வரன். தானே வரது. கெடுத்துப்பானேன்!''

''அதுவும் சரிதான்'' என்று தலையைக் குனிந்து கொண்டார் அனந்தசாமி.

இப்பொழுது அவர் மண்டையை ருக்மிணி — டொக்கி — எல்லா உருவங்களும் சேர்ந்து கொண்டு குழப்பத் தொடங்கி விட்டன. (தொடரும்)

1. சம்பாஜி

முழு நாவல்

வெள்ளையனே



பெரிய பெரிய லாரிகள் ஆறு அந்தச் சாலையில் சென்று கொண்டிருந்தன. குண்டும் குழியுமான பாதையில் விழுந்து எழுந்து விரைந்தன. அவை கிளப்பிய புழுதிப் படலமே அந்த லாரிகளுக்குத் திரையிட்டுப் பார்வையிலிருந்து அவற்றை மறைத்தது. பாதையின் ஒரு வளைவிலே திரும்பும் போது தான் ஆறு லாரிகளும் ஒன்றன் பின் ஒன்றாகக் கண்களுக்குப் புலனாயின. திறந்த லாரிகள் அல்ல அவை. வளைந்த இரும்புச் சட்டங்கள்மீது தடிப்பான துணி போர்த்தி இரு பக்கங்களிலும் இழுத்துக் கட்டியிருந்தார்கள். ஆனபோதிலும் துணியின் முனைகள் காற்றில் படபடக்கத்தான் செய்தன. லாரிகளின் முன்பக்கங்கள் சப்பையாகத் தோற்றமளித்து ஒருவித முரட்டுத்தனமான உறுதியைப் பிரதிபலித்தன.

அந்த ராணுவ லாரிகளுள் முதலாவதாகச் சென்ற வண்டியின் முன்பக்கத்தில் பிராங்கோ அமர்ந்திருந்தான். தூசி படிந்த கறுப்புக் கண்ணாடியைக் கழற்றிக் கைக்குட்டையால் துடைத்து விட்டுத் திரும்பவும் அணிந்து கொண்டான். ஒரு சிகரெட்டை வாயில் வைத்தபடியே லாரியை ஓட்டிச் சென்ற நீக்ரோ டிரைவரைக் கேட்டான்: "பெட்னி மதானுக்குச் செல்லும் வரையிலும் ரோடு இதே போலத்தான் இருக்குமா?"

அண்டோனியின் முகத்தில் சிரிப்பின் சாயல் மட்டுமே தெரிந்தது என்றாலும் அதைப் பிராங்கோ கவனிக்கத் தவறவில்லை.

"ஆமாம்" என்றான் அண்டோனி கிம்பா. "லிஸ்பனிலிருந்து இன்று காலையில்தானே வந்து இறங்கி யிருக்கிறீர்கள்; கொஞ்ச நாட்களானால் எல்லாம் பழகிப் போகும்!"

"அயோக்கியன்!" என்று தனக்குள் முணுமுணுத்தான் பிராங்கோ. வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை அவன். மௌனமாகச் சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகைத்திரை யைத் வெளிப்படுத்தினான். அந்தக் கேள்வியைத் தான் கேட்டிருக்க வேண்டியதேயில்லை என்று நினைத்தான் அவன்.

ஆப்பிரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்டுப் பல வருஷங்களாகக் கோவாவில் வாழ்ந்து வரும் நீக்ரோ ராணுவ வீரர்களுள் ஒருவன் அண்டோனி கிம்பா. ஆகவே கொஞ்ச நாட்களானால் போர்க்களிய இந்தியா, பிராங்கோவுக்கும் பழகிப் போகும் என்று அவன் கூறியது இயல்புதான். குற்றம் கண்டுபிடித்துக் கோபித்துக் கொள்ளும்படியான அசாதாரணமான பதிலல்ல அது. ஆனால் வெளிப்படையாக ஏதுமில்லா விட்டாலும் அதில் ஏளனம் தொனித்ததைப் பிராங்கோ நன்றாக உணர்ந்தான்.

'ஐரோப்பிய நகரத்தில் உடல் நலுங்காமல் வாழ்ந்தவர்களுக்குக் கோவாவின் கிராமியச் சூழ்நிலையும் சீதோஷ்ண நிலையும் ஒத்துக் கொள்ளாது' என்று கேலி செய்கிறானா? அல்லது 'என்னைப் போன்ற ஆப்பிரிக்க நீக்ரோக்களுக்கு உள்ள உடல் உறுதியும் சகிப்புத் தன்மையும் வெள்ளையருக்கு இல்லை என்று இடித்துக் காட்டுகிறானா?'

தன் சொல்படி கேட்டுத் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய சாதாரணச் சிப்பாய், அதிலும் கேவலம் ஒரு நீக்ரோ சிப்பாய் தன்னிடம் இளக்காரமாய்ப் பேசுவதா? அந்த வாய்ப்பை அவனுக்கு அளித்துவிட்டதற்காகத் தன்னைத்தானே நொந்துகொண்டான் அவன்.

ஆப்பிரிக்காவில் போர்ச்சுகீசிய காலனி ஆதிக்கத்தைக் கவிழ்த்து விடக் கறுப்பர்கள் முற்பட்டதுமே ராணுவத்தைச் சேர்ந்த நீக்ரோ சிப்பாய்களுக்குக் கூடத் திமிர் அதிகமாகித்தான் விட்டது என்று எண்ணமிட்டான் பிராங்கோ. அங்கோலா கலகக்காரர்களை அடக்கக் கோவாவிலிருந்த ஆப்பிரிக்க ராணுவத்தினர் பலரைத் திரும்ப அழைத்துப் போனார்களே? இந்த அண்டோனிக்கு மட்டும் வேளை வரவில்லை போலிருக்கிறது! தக்க சமயம் வாய்க்கும்போது இந்தக் கறுப்புத் தடியனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்!

பிராங்கோ தன் வெள்ளைத்தோலைப் பற்றிக் கொண்டிருந்த பெருமிதம் வேறு எந்தப் போர்ச்சுகீசியனுடைய செருக்கைக் காட்டிலும் கொஞ்சமும் குறைந்ததல்ல.

ஆறு லாரிகளிலும் ஆட்டு மந்தைகளைப் போல் அடைந்து கிடந்த சிப்பாய்கள் அறுநூறு பேரும் குலுங்கிக் குலுங்கி ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டும் உராய்ந்து கொண்டும் பிரயாணம் செய்தார்கள். சிலருக்கு இந்த அவஸ்தையே வேடிக்கையாகக் கூட இருந்தது; சிரிப்பை வரவழைத்தது. சிப்பாய்களில் பெரும்பான்மையோர் வெள்ளையர்கள். மீதமுள்ளோர் நீக்ரோக்கள். ஆப்பிரிக்காவின் தென் கிழக்கில் உள்ள போர்ச்சுகீசியக் காலனியாகிய மொஸாம்பிக்கிலிருந்து தருவிக்கப்பட்ட நாலாயிரம் பேர்களில் ஒரு பகுதியினர். தங்கள் காப்டன் லிஸ்பனிலிருந்து விமானத்தில் வந்து இறங்கிய ஓர் இளைஞன்

என்பதைத் தவிர அவரைப் பற்றி அவர்களுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லைதான். ராணுவத்தினருக்கு இது போன்ற கவலைகளெல்லாம் எதற்கு? கட்டளைகளை யெல்லாம் ஏனென்று கேட்காமல் நிறைவேற்றப் பழகியவர்கள் அவர்கள்.

பேரிரைச்சலுடன் பெட்ரிமறுலை அடைந்தன ஆறு லாரிகளும். சத்தத்தைச் செவியுற்றுக் கிராமிய மக்கள் வியப்படைந்து வீடுகளை விட்டு வெளியே வந்தார்கள்.



லாரிகளிலிருந்து தொப் தொப் பென்று குதித்த ராணுவத்தினரைக் கண்டதும் அவர்களுடைய முகங்களில் ஆச்சரியத்தின் அறிகுறி மறைந்துபோய்த் திகில் குடிகொண்டது. பரவலாக நின்று கொண்டிருந்தவர்கள் சொல்லி வைத்தாற் போல் ஒருவரை யொருவர் நெருங்கி ஒரே கூட்டத்தினரானார்கள். இப்படி இணைந்து நின்ற போது புதியதொரு பலம் பெற்று விட்டது போன்ற பாவம் மிளிர்ந்தது அந்த முகங்களில்.

கீழே இறங்கிய பிராங்கோ காரை முன்னும் தள்ளி விரைப்பாகத் தோற்றமளித்தான். சுளீர் என்று விழும் சவுக்கடி போல உறைக்கக் கூடிய பாணியில் சிப்பாய்களுக்கு உத்தரவு பிறப்பித்தான். வீரர்கள் அந்தந்த லாரிகளுக்கு எதிரிலேயே கட்டுப்பாடுடன் அணி வகுத்து நின்றார்கள்.

அதுவரை காரோட்டி வந்த அன்டோனி டிம்பாவை மொழி பெயர்ப்பாளராகப் பயன்படுத்திக் கொண்டான் பிராங்கோ.

"இந்தக் கிராமத்தின் தலைவனை நான் பார்க்க வேண்டுமென்று சொல்லு!"

நீக்ரோ அதனை மொழிபெயர்த்துக் கூறியதும் கூட்டத்தினர் திரும்பிப் பார்த்து வழிவிட்டு ஒதுங்கி நின்றார்கள். பின் வரிசையிலிருந்து வயது முதிர்ந்த ஒருவர் முன்வந்தார். ஒரு காலை அவர் இழந்து விட்டிருந்த போதிலும் அதனால் தாம் எந்த விதத்திலும் குறைந்து போய் விடவில்லை என்று நிரூபிக்க விரும்புகிறவர் போல அவர் வேகமாகவே நடந்தார். தமக்கு இரு புறங்களிலுமிருந்த தடிகளைத் தரையில் ஊன்றி எம்பித் தாவித் தாவி எட்டிப் பிராங்கோவின் அருகில் வந்து அவன் முகத்தை நேருக்கு நேராக ஏறிட்டுப் பார்த்தார் அவர். நாலு நாட்களாக க்ஷவரம் செய்யப்படாத முகம். தாடைகளில் வெள்ளை யும் கறுப்புமாக மயிர், தேங்காய் நார் பிரஷ் போலக் குத்திட்டு நிற்பதை அருவருப்புடன் நோக்கினான் பிராங்கோ. நாக்கை வெளியே நீட்டி உதடுகளை ஒரு முறை தடவிக் கொடுத்து ஈரமாக்கிக் கொண்டார் சம்பாஜி.

அவருக்குப் புரிகிற மாதிரியில், கொஞ்சம் மராட்டி வாடை வீசும் கொங்கணியில் பிராங்கோ கூறுவதை யெல்லாம் மொழி பெயர்த்தது அன்டோனி டிம்பாதான் என்றாலும் தன்னுடன் பேசிக் கொண்டிருப்பது பிராங்கோவே என்பதைக் கிழவர் கணப் பொழுது கூட மறக்கவில்லை. டிம்பாவை அவர் லட்சியம் செய்யவே யில்லை. தலையை இலேசாக உயர்த்திப் பிராங்கோவையே முறைத்துப் பார்த்தபடியே கண்களின் கருமணிகளை உருட்டி விழிக்கவும் செய்த அவர், தாம் எதற்கும் அஞ்சியவரல்ல என்பதைக் காண்பித்துக் கொள்ள ஆசைப்படுபவராகத் தோன்றினார்.

தன் சட்டைப் பையிலிருந்து ஒரு தாளை எடுத்தான் பிராங்கோ. அதைச் சம்பாஜியிடம் தந்து, "மேலிடத்துக் கட்டளை. கிராமமக்கள் உடனடியாகத் தங்கள் வீடுகளை யெல்லாம் காலிசெய்து பட்டாளத்துக்கு இடமளிக்க வேண்டும்" என்றான்.

அவன் கூறி முடிக்கும் வரை அசையாதிருந்தார் சம்பாஜி. பிறகு அன்டோனி டிம்பாவின் மொழிபெயர்ப்பைக் கேட்டு வரும் போதே சம்பாஜியின் மகாராஷ்டிர ரத்தம் கொதித்தது; கையிலிருந்த உத்தரவுக் காகிதத்தைக் கசக்க வைத்தது. அன்டோனி சொல்லி முடித்ததும் பந்தாகச் சுருண்டிருந்த தாளைத் தரையில் அறைந்தார் சம்பாஜி. கட்கத்தில் இடுக்கியிருந்த தடிகளுள் ஒன்று கீழே கிடந்த காகிதத்தின்மீது பதிந்தது. அழுத்தியது. புழுதியினுள் புதைந்தே விட்டது.



பிரமித்து நின்று விட்டான் பிராங்கோ சில விநாடிகளுக்கு. பின்னர் விருட்டென்று தன் சிப்பாய்கள் இருந்த பக்கமாகத் திரும்பினான். அனலைக் கக்கின அவன் கண்கள். விஷத்தைக் கக்கியது அவன் கண்டம்.

அவ்வளவுதான்! கட்டுப்பாட்டுடன் அது வரை காத்திருந்த வீரர்கள் காட்டுமிராண்டிகளாக மாறினார்கள். மூலைக்கு மூலை ஓடித் தாங்கள் இஷ்டப்பட்ட வீடுகளுக்குள் அவர்கள் புகுந்தனர்.

கி. ராஜேந்திரன்

சம்பாஜி தமது மக்களை நோக்கித் திரும்பினார். "வெறி பிடித்துக் கிடக்கும் இந்த விலங்குகளிடம் நம் வெறுப்பைக் காண்பித்துக்கொண்டு விட்டோம். அதுவே இப்போதைக்குப் போதும்! மேற்கொண்டு இவர்களை எதிர்க்க முயன்றால் விபரீதமாகும். உடனடியாக வீடுகளைக் காலி செய்துகொண்டு கிராமத்தை விட்டு வெளியேறுங்கள். விரைந்து செல்லுங்கள்!"

திபு திபு வென்று நூற்றுக்கணக்கான மக்கள் தலைதெறிக்க ஓடும் சத்தமும், பெண்டிர் பீதியுடன் வீரிட்டு அலறும் ஒலியும், பாத்திரங்களும் மற்ற உடைமைகளும் ராணுவ வீரர்களால் தூக்கி எறியப்பட்டு வீதியில் வந்து விழும் ஓசையுமாக அங்கே ஒரே அல்லோல கல்லோலமாக இருந்தது.

வெட்டுக் கிளியைப் போல் சம்பாஜி இங்கு மங்குமாகப் பாய்ந்தார். சிலரை ஊக்குவித்தார்; சிலரைத் துரிதப்படுத்தினார். இங்கே ஒருவனுக்குத் தைரிய மூட்டினார்; அங்கே ஒருவனைக் கோபித்துக் கொண்டார்.

அவருடைய துணிச்சல், மக்களைக் கட்டிக் காக்கும் திறமை, அவர்களுடைய நலனில் அவர் கொண்டுள்ள அக்கறை, எதுவுமே பிடிக்கவில்லை பிராங்கோவுக்கு.

ஜனங்களை அவன் அலற வைக்க நினைத்தால் இவர் அவர்களிடையே அமைதி நிலவச் செய்கிறார்; அராஜகத்தை ஆரம்பித்து வைத்தால் இவர் அவர்களிடம் அன்பு காட்டி ஆதரவாக அணைத்துக் கொண்டு போகிறார். இன்னமும் விட்டு வைத்தால் இவர் தம் மக்களை ஒன்று கூட்டிப் புதியதொரு கிராமத்தையே சிருஷ்டித்துக் கொண்டாலும் கொள்வார்! ஒன்றுமே நடவாதது போல் ஒரு கவலையும் இல்லாமல் இந்த மக்கள் எப்போதும் போல வாழத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பிராங்கோவை எதிர்க்கத் துணிந்தவர்கள் வாழ்வதா? கூடவே கூடாது! சும்மா விடக் கூடாது இந்தச் சம்பாஜியை!

பிராங்கோ சீறினான். சிப்பாய்கள் சிலர் விரைந்து சென்று சம்பாஜியைச் சூழ்ந்தார்கள். சம்பாஜி சிரித்தார். பயங்கரமாகச் சிரித்தபடியே நடந்தார். ஆறு வாரிகளுள் ஒன்றினுக்குள் அலட்சியமாகத் தாவி ஏறினார். கம்பீரமாக நின்று தம் மக்களிடம் கரம் அசைத்து விடைபெற்றுக் கொண்டார்.

கூட்டத்தின் முன்னணியில் இருந்த ஒரு பெண்ணுருவம் சம்பாஜியின் பார்வையில் பட்டது. விநாடிப் பொழுதில் இரும்பு மனிதர் இளகும் பஞ்சாக மாறினார். "லக்ஷ்மீ! லக்ஷ்மீ!" என்று கதறியபடியே பொல பொலவென்று கண்ணீர் உகுத்தார்.

"அப்பா! அப்பா!" என்று கூவிக்கொண்டே அவரிடம் ஓடி வந்தாள் அந்தப் பெண்.

அதுவரைக்கும் ஒற்றைக் காலால் நடந்தே உலகைச் சுற்றி வந்து விடக்கூடியவர் போலக் காட்சி தந்த சம்பாஜி தம்மைத் தாங்குவதற்கு இரண்டு தடிகள் இருந்தும் கூட நிமிர்ந்து நிற்கவும் முடியாமல் தள்ளாடினார். தடிகளை அப்பால் ஒதுக்கித் தள்ளி விட்டு வாரியினுள்ளேயே விழுந்தார். இரு கரங்களை வெளியே நீட்டித் தமது மகளின் தலையை ஆசையுடன் கோதிவிட்டார்.

"லக்ஷ்மீ! ரகுநாத் சீக்கிரத்திலேயே வந்து விடுவான் என்று எல்லாரிடமும் சொல்லு. அவன் யோசனைப்படியே அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்; தெரிந்ததா? நமக்கு விடிவு காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. லக்ஷ்மீ! நெருங்கிக் கொண்டிருக்கிறது!"

வாரி புறப்பட்டு உறுமியது; புகையைக் கக்கியது.

"லக்ஷ்மீ! போய் வருகிறேன்" என்றார் சம்பாஜி. வாரி நகருகையில் அவர் விரல்கள் லக்ஷ்மியின் நெற்றியையும், கன்னங்களையும், தோள்களையும், பின்னர் நீண்டிருந்த அவள் கரங்களையும் — மருதாணியிட்ட அவள் நகங்களின் நுனி வரையில் வருடிக் கொண்டே வந்தன. அதன் பிறகு காற்றைத்தான் ஸ்பரிசித்தன அவருடைய விரல்கள்.

லக்ஷ்மியின் மிருதுவான உடலுக்கும் காற்றின் மென்மைக்கும் வித்தியாசம் ஏதுமிருப்பதாகவே அவருக்குத் தோன்றவில்லை!

2. சரயூ

கடலில் மிதந்த போதிலும் கூடுமான வரையில் கரை ஓரமாகவே தான் சென்று கொண்டிருந்தது அந்தப் படகு. சாதாரணமான மீனவர் படகுதான். ஆனால் துடுப்பு வலித்து அதனைச் செலுத்துவதற்குப் பதில் அதன் ஒரு முனையில் சிறிய இஞ்சின் பொருத்தப்பட்டிருந்தது. அக்கறையுடன் துடைத்துச் சுத்தம் செய்து எண்ணெய் போட்டு நன்கு பாதுகாத்து வரப்பட்ட இஞ்சினாதலால் அது அதிகமாகச் சத்தம் போடவில்லை. 'சக் சக் சக் சக்' என்று அடக்கமாகவே ஒலி எழுப்பிய போதிலும் படகை வேகமாகவே ஓட்டிச் சென்றது. ரகுநாத் இஞ்சினருகே அமர்ந்து சரியான திசையில் படகு செல்கிறதா என்று கண்காணித்துக் கொண்டிருந்தான்.

அவனெதிரே உட்கார்ந்திருந்த சரயூவின் முகத்தை நிலவுக் கதிர்கள் தொட்டன. அதன் மென்மையை உணர்ந்தன. ஊடுருவிச் சென்றன. உள்ளுக்குள்ளேயே ஊறித் திளைத்தன. முழுமதியுடன் சரயூவின் வதனம் பால் நிலவுக்காகப் போட்டி போடுவதாகப்பட்டது ரகுநாத்துக்கு. நிலவைக் கவர்ந்திழுத்துக் கிரகித்துக் கொள்ளும் போட்டியில் சரயூவே வெற்றி பெற்றாள். மேலே மேலே நிலவொளி அவள் வதனத்தை வந்தடைந்து பளிங்கைக் காட்டிலும் பளபளப்புடன் அதனை மிளிரச் செய்தது. அவனெதிரே சந்திரன் ஒளி மழுங்கிப் பரிதாபமாகக் காட்சி தந்தான்.

"சரயூ!"

"ம்ம் ம்?"

"என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் சரயூ?"

"இதே போன்ற அமைதி நம் வாழ்க்கையில் என்றைக்குமே நிலவக் கூடாதா என்றுதான்!"

"சரயூ!" என்று கொஞ்சம் கோபமாகவே அழைத்தான் ரகுநாத். "இங்கே குடிகொண்டிருக்கும் நிசப்தமும் நிலவும் மென்காற்றும் உன்னை ஏமாற்றப் பார்க்கின்றன சரயூ! இந்த அமைதி போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை எதிர்த்து நாம் நடத்திக் கொண்டிருக்கும் போராட்டத்தை மேலும் தீவிரமாக்க வேண்டும் என்பதைத்தான் அறிவிக்கிறது. வெள்ளை



களை வெளியேற்ற வெகுண்டு எழ வேண்டும் நாம். போர்ச்சுகீசியரின் ஆயுதக்கிடங்குகளும் வாகனங்களும் பற்றி எரியும்போது நம் வயிறு இத்தனை நாட்களாகப் பற்றி எரிந்ததை உணர்வார்கள். நாம் வைக்கும் வெடிகுண்டுகள் பாலங்களைத் தகர்க்கும் போது அவர்களுடைய காலனி ஆட்சி பற்றிய ஆகாயக் கோட்டைகளும் இடிந்து தவிடுபொடியாகும். தந்திக் கம்பிகள் அறுந்து தொங்கும்போது அவர்களுடைய எதேச்சாதிகார எண்ணங்களும் அறுபட்டுப் போகும்; தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பத்தான் போகிறார்கள். ரயில் தண்டவாளங்கள் பெயர்க்கப்படும் போது நமது அடிமைத் தளைகளும் பெயர்ந்து விழும், சரயூ!''

ஆவேசத்துடன் அவன் பேசுவதை அசையாது அமர்ந்து கேட்டாள் சரயூ. அவள் உடல் இலேசாக நடுங்கியது. அன்று கடலில் அவர்கள் பிடித்த மீன்களுக்கு அடியில் துப்பாக்கிகள் ஒளிந்திருந்ததும் வலைகளுக்கு அடியில் வெடி மருந்துகள் பதுங்கி இருந்ததும் சரயூவுக்குத் தெரியும். அவை எவ்வாறு பயன்படப் போகின்றன என்பதும் அவள் அறிந்த விஷயங்கள் தான். ஆனாலும் அதனை ரகுநாத்தின் கட்டெரிக்கும் சொற்களாலேயே கேட்டதும் உடல் நடுக்கத்தைத் தவிர்க்க முடியவில்லை அவளால்.

படகின் மறுமுனையில் அதுவரைக்கும் மௌனமாக உட்கார்ந்திருந்த இருவர் இப்போது ரகுநாத்தைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள். அவன் கவனத்தைக் கவர்ந்ததும், ''ரோந்துப் படகு வருவதாகத் தோன்றுகிறது'' என்றார்கள் இருவரும் ஒரே சமயத்தில்.

சட்டென்று தன் இயந்திரத்தின் ஓட்டத்தை நிறுத்தி விட்டு ரகுநாத் காது கொடுத்துக் கேட்டான். விசைப்படகு ஒன்று விரைந்து வரும் சத்தம் அவன் செவிகளுக்கும் இப்போது எட்டியது. அளவிலும் சக்தியிலும் தன் படகை விட மிகப் பெரியது அது என்பதை ஓசையைக் கொண்டே அவனும் தீர்மானிக்க முடிந்தது.

போர்ச்சுகீசிய போலீஸாரின் ரோந்துப் படகு பற்றிக் கள்ளக் கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ரகுநாத் என்றைக்குமே கவலைப்பட்டதில்லை. அவன் கரங்களுக்கு அவர்கள் விலங்கு பூட்டிக் கம்பி எண்ண வைக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல அவனுக்கும் அவனைப் போன்ற வேறு பலருக்கும் அவர்கள் மறைமுகமாக ஆதரவே அளித்து வந்தார்கள். போர்ச்சுகீசிய ஆட்சியின் பொருளாதாரம் அந்த நிலையிலிருந்தது.

ஆட்சியிலுள்ளோரின் மேற்பார்வையில், அவர்கள் அளித்த ஊக்கத்துடன் அங்கே விவசாயம் செழிக்காது போனாலும் வியாபாரம் தழைத்தது. கள்ளக் கடத்தல் வியாபாரம்தான்!

மப் பொட்டலங்களும் அரிசியும் பருப்பும் புடவைகளும் வேறு பல துணி வகைகளும் அவன் எத்தனையோ தடவைகள் கோவாவுக்குள் கொண்டு வந்திருக்கிறான். உண்மையில் மீன் பிடிப்பதென்பது அவனைப் பொறுத்த வரையில் கண் துடைப்புக்காகத்தான். கள்ளக் கடத்தலே அவன் குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக நடத்தி வந்திருக்கும் தொழில்.

சரயூவின் வற்றாத காதல் ஊற்றிலே மூழ்கித் திளைத்தும் கூடத் தணியாத சுதந்திர தாகம் அவனை ஆட்கொள்ளு முன்னர், அவன் ஆட்களைக்கூட ஆசை காட்டி அழைத்து வந்து போர்க்கைதிய இரும்புக் கரங்களிலே அடிமைகளாக உழைக்க விற்றிருக்கிறான். இவையெல்லாம் போர்க்கைதியப் போலீஸாருக்கும் நன்றாகத் தெரிந்தவைதான்.

ஆனால் இன்றைய நிலை வேறு. தங்களுடைய நண்பன் யார், விரோதி யார் என்று போர்க்கைதிகளுக்கே புரியாத காலம் இது. ரகுநாத்தை அவர்கள் தட்டிக் கொடுத்து அனுப்பிவிடலாம்; நிரபராதி அவன் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டால் தீர்த்துக் கட்டி விடவும் நினைக்கலாம்.

ரகுநாத் எதற்கும் சித்தமாக இருந்தான். சரயூ எழுந்து வந்து அவனருகே அமர்ந்தாள். அவள் தளிர் விரல்கள் அவனுடைய கரங்களில் சரண் புகுந்தன.

''என்ன நடக்கப் போகிறதோ?''

''நம்மைக் கவனியாமலே போய் விடுவார்கள், கவலைப்படாதே!''

ஆனால் அவன் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. இரண்டு நிமிஷங்களுக்குள்—போலீஸார் அவன் படகைப் பார்த்துவிட்டார்கள். அடுத்த கணம் பிரகாசமான 'ஸர்ச் லைட்'டின் வெளிச்சம் ரகுநாத், சரயூ இருவரது கண்களையும் குருடாக்கியது.

''ரகுநாத்! இஞ்சினைக் கிளப்பு. சீக்கிரம்'' என்றனர்



படகின் மறுமுனையிலிருந்த அவன் தோழர்கள். ரகுநாத் அவ்வாறே செய்தான். படகு கிளம்பி நீரைக் கிழித்துக் கொண்டு பாய்ந்த வேகத்தில் சரயூ பின்னுக்குச் சாய்ந்தாள். ஆபத்து நிறைந்த அந்த வேளையில் ரகுநாத்தின் அரவணைப்பு அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

விநாடிக்கு விநாடி இரண்டு படகுகளுக்கும் இடையே இருந்த தூரம் குறைந்து கொண்டே வந்தது. ஒளி வெள்ளத்தில் தன் படகை ஆழ்த்தும் மின்விளக்கினிடமிருந்தும் சக்தி மிகுந்த போலீஸ் படகினிடமிருந்தும் தப்பி ஓடவே முடியாதென்பது தெளிவாயிற்று.

வந்தது வரட்டுமென்று ரகுநாத் இஞ்சினின் இயக்கத்தை நிறுத்தி விட்டான். படகின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்து, கடைசியில் ஓரிடத்தில் நிலையாக மிதக்க ஆரம்பித்தது. கிட்டத்தில் அணுகிய போலீஸ் படகிலிருந்து ஒருவன் ரகுநாத்தருகே குதித்தான்.

''ரொஸாரியோ!''

''ரகுநாத்!''

இருவரும் ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டார்கள்; தட்டிக் கொடுத்துக் கொண்டார்கள்; உடல் குலுங்கக் குலுங்க நகைத்து மகிழ்ந்தார்கள்.

சட்டென்று ரொஸாரியோவின் குதூகலம் குறைந்தது. ''ரகுநாத்! உண்மையைச் சொல்லி விடு! ஏன் அப்படி போலீஸ் படகைக் கண்டதும் தப்பி ஓடப்பார்த்தாய்?''

ரகுநாத் சற்றும் தயங்கவில்லை. பதிலளிக்க யோசிக்க ஆரம்பித்தால் ரொஸாரியோவின் சந்தேகம் வலுப்படுவது உறுதி. ''நீங்கள் தான் என்று எனக்கு எப்படித் தெரியும்? சில தினங்களாக இந்தப் பக்கங்களில் போர்ச்சுகீசியத் துருப்புக்களின் ஆர்ப்பாட்டங்கள் அதிகமாகி யிருக்கின்றனவே? உங்களைப் போன்ற போலீஸார் காட்டும் கருணையை ராணுவத்தினரும் கடைப்பிடிப்பார்கள் என்பது என்ன நிச்சயம்?''

''உண்மைதான், உண்மைதான்!'' என்று தலையசைத்தான் ரொஸாரியோ. ''எனக்கே தலை கால் ஒன்றும் புரியவில்லை. சென்ற சில வாரங்களுக்குள் பன்னிரண்டாயிரம் சிப்பாய்களுக்கு மேல் கோவாவில் வந்து குவிந்திருக்கிறார்கள். நேற்றைக்கு மட்டும் மொஸாம்பிக்கிலிருந்து நாலாயிரம் துருப்புக்கள் வந்து இறங்கி யிருக்கின்றனர். தினம் தினம் பஞ்சிம்மில் விமானங்கள் உயர்தர ராணுவ உத்தியோகஸ்தர்களை லிஸ்பனிலிருந்து கொண்டு வந்து சேர்ப்பிக்கின்றன. பிரும்மாண்டமான ஒரு கப்பல் ஏராளமான போர்த் தளவாடங்களையும் பட்டாளத்தையும் ஏற்றிக் கொண்டு போர்ச்சுகலை விட்டுப் புறப்பட்டு விட்டதாம்! இப்படி ஒரே ரகளையாக இருக்கும் இந்தச் சமயத்தில் நீ உன்னுடைய நடவடிக்கைகளைக் கொஞ்ச நாட்களுக்கேனும் ஒத்திப் போடுவது நல்லது, ரகுநாத்!''

''யோசிக்கிறேன், அதைப் பற்றி'' என்றான் ரகுநாத்.

''அது சரி உன்னுடைய வியாபாரம் எல்லாம் எப்படி?''

''எப்போதும் போல்தான். இந்தத்தடவை கொஞ்சம் காப்பிக்கொட்டை கொண்டு வந்தேன். நல்ல உயர்ந்த ரகம்.''

''ஆ! காப்பிக்கொட்டை!'' ரொஸாரியோ கண்களை மூடி நீள மூச்சை உள்ளே இழுத்து, மீன் வாடையைக் காப்பிக்கொட்டையின் மணமாகப் பாவித்துரசித்தான். ''நல்ல காப்பியாக அருந்தி எத்தனை நாட்களாயிற்று? டீயைக் கண்டாலே இப்போதெல்லாம் பிடிப்பதில்லை எனக்கு. அலுத்துப் போய் விட்டது.''

சரயூ எடுத்துக் கொடுத்த பெரிய காப்பிக் கொட்டைப் பையைத் தூக்கி ரொஸாரியோவின் கரங்களில் வைத்தான் ரகுநாத். பகல் பொழுதாக இருந்திருந்தால் அப்போது ரொஸாரியோவின் இருபத்து நாலு பற்களைச் சரயூவினால் எண்ணியிருக்க முடியும்! அத்தனை சந்தோஷம் அவனுக்கு.

''சரயூ! ஸில்வியாவுக்கு நீ ஏதோ கொடுத்து அனுப்ப வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே?'' என்று ஞாபகப் படுத்தினான் ரகுநாத்.

''புடவை'' என்றாள் சரயூ. காப்பிக் கொட்டைப் பொட்டலத்துடன் உயர்தர நூல் புடவை ஒன்றும் சேர்ந்து கொண்டது.

உதட்டைப் பிதுக்கினான் ரொஸாரியோ. ''ஸில்வியா புடவை உடுத்திக் கொண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. கேட்டால் தானே? இந்த ஆடைதான் எடுப்பாக இருக்கிறதாம்! கொள்ளை ஆசை அவளுக்கு!''

''ஸில்வியா புடவை கட்டிக் கொண்டால் அந்தச் சேலைக்குத்தான் பெருமை'' என்றாள் சரயூ. ''அடேயப்பா! அத்தனை அழகு! அத்தனை அழகு!''

''இருக்கலாம். ஆனால் இந்திய பாணி உடை பிரான்கோவுக்குப் பிடிக்க வேண்டாமா?''

''பிரான்கோவா? யாரது?'' என்று கேட்டான் ரகுநாத்.


''ஸில்வியாவுடன் சிறு வயது முதல் நெருங்கிப் பழகியவன்.'' வருங்கால மாப்பிள்ளையைப் பற்றிய வர்ணனைகளில் இறங்கினான் ரொஸாரியோ.


''சமீபத்தில்தான் உத்தியோக உயர்வு கிடைத்ததாம் அவனுக்கு. இன்று காலையில் வேறு பல ராணுவ உத்தியோகஸ்தர்களுடன் பஞ்சிமுக்கு விமான மூலம் வந்து சேர்ந்த பிறகுதான் இந்த விவரம் எங்களுக்குத் தெரிந்தது. லெப்டினண்ட் பிரான்கோ இப்போது காப்டன் பிரான்கோவாகி விட்டான்! ஆனால் ஸில்வியாவுக்குத்தான் ஒரே ஏமாற்றம். விமானத்தை விட்டு இறங்கியதும் இறங்காததுமாக ஒரு பட்டாளத்துக்குத் தலைமை தாங்கி லாரியில் ஏறிக் கொண்டு போய் விட்டான். வீட்டுக்கு வரவேயில்லை. மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவனைச் சந்திக்கும் போது முழுமையாக மூன்று வாக்கியங்கள் கூடப் பேச முடியவில்லை என்றால் வருத்தமாயிராதா அவளுக்கு?''

''பாவம்!'' என்று பரிந்து சூள் கொட்டினாள் சரயூ. ''சேலையைக் கொண்டு கொடுங்கள். அதைக் கண்ட பிறகாவது அவள் சோகம் சற்றுத் தணியட்டும்.''

பத்து நாள் குழந்தையைத் தூக்குவது போல சர்வ ஜாக்கிரதையாகப் பொட்டலங்களைச் சுமந்து கொண்டு போலீஸ் படகில் ஏறினான் ரொஸாரியோ.

கடலை அந்தக் கலத்தின் இயந்திரம் கலக்கிக் கடையத் தொடங்கு முன்னர், ''ரகுநாத்! உனக்கும் சரயூவுக்கும் எப்போது கல்யாணம்?





பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "குக் மோல்கேப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையையும்விட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.

சொத்தைபாக்கும் கிருமிகளை தடுக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தை பாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபில்லின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபில்லின் பூரண தன்மையை அடைந்து ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவங்கொண்ட உலகிலேயே மிகப்பெரிய ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது!

வேறெந்த பற்பசையிலும்
இதைவிட அதிக வீரிய குளோரோபில்
இல்லை — குழந்தைகள் அதன்
பெப்பர்மின்ட் வாசனையை மிகவும்
விரும்புகிறார்கள்!



CTPA-6-10 TAM.

கணவன் மனைவியாகாமலே கண்டபடி இருவரும் சுற்றித் திரிந்தால் காண்பவர் என்ன நினைப்பார்கள்?'' என்று கூறி விட்டுப் பெரிதாகச் சிரித்தான் அவன்.

''உனக்கு உத்தியோகம் கொடுத்திருக்கும் ஊழல் மலிந்த ராஜ்யத்தை ஒழித்துக் கட்டி ஆழப் புதைத்து விட்டு எழுப்பும் சமாதியிலே எங்கள் கல்யாணம்!'' என்று ரகுநாத் ஆத்திரத்துடன் இரைந்தது நல்ல வேளையாக மோட்டார் படகு போட்ட சத்தத்திலே ரொஸாரியோவின் காதுகளில் விழவில்லை.

பொழுது புலரும் சமயம். கடற்கரையோரமாக அடர்ந்து வளர்ந்திருந்த காடு. கோவா தீவுப் பகுதியில் கடல் உட்புகுந்து ஏற்படுத்தியிருந்த சிறிய வளைகுடாவை முழுமையாக மறைத்து விட்டிருந்தது. ரகுநாத்துக்கும் அவனைச் சேர்ந்த ஒரு சிலருக்கும் மட்டுமே தெரிந்த ரகசிய இடம் அது. நன்கு பழக்கப்பட்ட அவனையே சில சமயங்களில் ஏமாற்றி விட்டிருக்கிறது அந்த இயற்கைத் துறைமுகம். அதனாலேயே அந்த ஒளிவிடத்தின் சிறப்பையும் அவன் உணர்ந்திருக்கிறான்.



படகையும் அது ஏற்றி வந்த பண்டங்களையும் மறைத்து வைக்க வேண்டிய அந்தப் பிரதேசத்தை நெருங்க நெருங்கச் சரயூவுக்கு அங்கே ரகுநாத்துடன் தான் கழித்த எண்ணற்ற நாட்களைப் பற்றிய இன்ப நினைவுகள் எழுந்தன.

வெறும் காடா அது? இல்லை, இல்லை! காதல் தேவதைகளான அவர்களுக்கு, ஈடு இணையற்ற, மதிப்பிடவொண்ணாத இயற்கைச் செல்வங்களைக் கொண்டு கொட்டி எழுப்பப் பெற்ற காதல் கோயில்! தரையில் அங்கே மரகதப் பச்சை நிறத்தில் பட்டு விரித்திருந்தது. கரம் கோத்து உலவி வரும் அவர்களுடைய பாதங்கள் நோகாதிருக்க. வைரக் கற்கள் இழைக்கப் பெற்ற நீல விதானத்தின் கீழ் ஒருவருக்கு முத்து மழையென அருச்சனை நடந்தது; மற்றொருவருக்குத் தகதகக்கும் தங்கக் காசுகள் போல பொல வெனக் காணிக்கையாக உதிர்ந்தன.

கண்களைப் பறிக்கும் வகையில் சொரியும் சரக்கொன்றை மலர்களிடமிருந்தும் பரப்பும் மணத்தினால் கிறுகிறுக்கச் செய்யும் மல்லிகைப் பூக்களிடமிருந்தும் தப்பி ஓடி அந்தத் தடாகத்தில் விழுந்து நீச்சலடித்து நீராடிக் களிக்கும்போது அவர்கள் மேனியில் படும் பாக்கியம் பெற்ற நீர்த்துளிகள் வைரங்களாகச் சிதறி வானவில்லின் வர்ண ஜாலம் காட்டும்.

கற்கண்டாகத் தித்திக்கும் ஒருகாலும் தெவிட்டாத அவர்களுடைய அந்தரங்கமான காதல் பேச்சுக்களை மரக்கிளைகளில் வசித்த கிளிகள் கேட்டுக் கிளர்ச்சி யுற்றிருக்கின்றன. வேடிக்கைச் சிரிப்பிலே சிற்றலைகளும் சேர்ந்து கொண்டு 'களுக் களுக்'கென நகைத்துக் களிப்படைந்திருக்கின்றன. பளபளக்கும் வெள்ளி இழைகளைக் கொண்டு வலை பின்னிய சிலந்தி, ரகுநாத்தைச் சிக்க வைக்கச் சரயூ பின்னும் அன்பு வலையையும் கண்டிருக்கிறது. விஷமத்தனமான அவர்களுடைய விளையாட்டைப் பார்த்த கொடி வகைகள் வெட்கம் மிகுந்து மரங்களை இறுகத் தழுவியுள்ளன.

ரகுநாத்தின் படகு இந்த மர்மமான இடத்துக்குள் புகுந்து நின்றது. எப்போதும் போலச் சரயூ முதலில் பசும்புல் தரையில் துள்ளிக் குதித்தாள். படகின் ஒரு கோடியிலிருந்த கயிற்றுச் சுருளை ரகுநாத் அவள் பக்கமாக வீசி எறிய லாகவமாக அதனைப் பிடித்துக் கரையில் அடிக்கப்பட்டிருந்த முளையில் படகை இழுத்துக் கட்ட யத்தனித்தாள்.

எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத காட்சி இது ரகுநாத்துக்கு. பாதங்களைப் பூமியில் அழுத்தமாகப் பதித்து, இடுப்புக்கு மேலே உடலைப் பின்னால் சாய்த்து, தன் தேகத்தின் தசைகளையெல்லாம் செயலுக்குக் கொணர்ந்து சரயூ படகுடன் போராடும்போது அவள் தலை இலேசாக ஆடும்; அதரங்கள் குவியும்; நாசிகள் அகலும்; இமைகள் மூடிக் கொள்ளும்; தோள்கள் பம்மும்; நெஞ்சகம் விம்மித் திரளும். சரயூவுக்கு உதவ முற்படாமல் பேராசையுடன் படகில் நின்றவாறே தன் இருதயத் துடிப்பை அதிகரிக்கச் செய்யும் ஆற்றலுடன் அவள் வனப்பு மிகைப்பட்டு மிளிருவதை மூச்சு விடாமல் பார்த்தான் ரகுநாத்.

படகு பிணைக்கப்பட்டதும் தாமதிக்காமல் நால்வரும் கானகத்துக்குள்ளே புகுந்து சற்றுத் தூரம் நடந்தார்கள். அவர்கள் கரங்களிலே கடப்பாறை மண் வெட்டி போன்ற உபகரணங்கள் இருந்தன. ஒரு மரத்தினடியில் இலை தழைகளை ஒதுக்கி விட்டுத் தோண்ட ஆரம்பித்தார்கள். ஓர் அடி ஆழத்துக்கு, மண்ணை அப்புறப்படுத்தியதும் பூமியில் புதையுண்டு கிடக்கும் பெரிய மரப்பெட்டி ஒன்று தென்பட்டது. அதன் மூடியைத் திறக்கத் தேவையான அளவுக்கு மட்டுமே அவர்கள் பாடுபட்டிருந்தார்கள். நவீன போர்த் தளவாடங்கள் பெட்டியைப் பாதி அளவுக்கு ஏற்கெனவே நிறைத்திருந்தன. படகிலிருந்த பயங்கர ஆயுதங்களையும் தாற்காலிகமாக, அந்தப் பெட்டியினுள்ளேயே பதுக்கி வைத்து விட்டு மூடியைக் கீழே இறக்கித் தாளிட்டார்கள். வெட்டி எடுத்து வெளியே போட்டிருந்த மண்ணைப் பள்ளத்தினுள்ளே தள்ளிச் சமன் செய்தார்கள். பூமி புரண்டு கொடுத்திருப்பது யார் கண்ணிலும் பட வேண்டாம் என்பதற்காக முன்பிருந்தது போலவே இலை தழைகளை அவ்விடத்தில் பரப்பினார்கள்.

வேலை முடிந்து நிமிர்ந்ததும், "நீங்கள் மூவரும் பெட்னி மறைவுக்குச் செல்லுங்கள். நான் மஸப்ளாவுக்குப் போகிறேன். அங்கே நமது 'ஆஸாத் கொமண்டுக் தாள்' ரகசியமாகக் கூடுகிறது. புரட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி நமது கடமைகளைத் தெரிந்து கொண்டு வருகிறேன்" என்றான் ரகுநாத்.

"இவர்கள் போகட்டும் பெட்னி மறைவுக்கு. நான் உங்களோடுதான் வருவேன்."

"இல்லை சரயூ! ரொஸாரியோ துருப்புக்கள் வந்து குவிந்திருப்பது பற்றிக் குறிப்பிட்டதைக் கவனித்தாயல்லவா? நமக்கு விடிவு காலம் வந்து விட்டதாகத் தோன்றுகிறது. அதே நேரத்தில் வேதனைகள் பலவற்றுக்கும் நாம் உள்ளாக நேரிடும் என்பது நிச்சயம். இந்த இக்கட்டான வேளையில் கிராம மக்களுடன் சம்பாஜிக்குத் துணையாக நம்மில் ஒருவராவது இருக்க வேண்டாமா?"

சரயூ தலையாட்டினாள். "ரொஸாரியோ கூறிய மற்றொரு விஷயமும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது: நீங்கள் ஒரு வேளை அதனைத் துச்சமாக மதிக்கலாம். ஆனால் நான் சாமான்யமாகக் கருதவில்லை!"

வெட்கம் மிகுந்த கனிவுடன் ரகுநாத்தின் ஒரு புருவம் உயரப் புன்முறுவலிலே உப்பிய அந்தக் கதுப்புக் கன்னங்களைக் கிள்ளத் துடித்துத் நிலைவெடுத்தன சரயூவின் விரல்கள்.

"சரயூ!" என்று ஆசையோடு அழைத்தான் ரகுநாத். "நாம் ஈடுபட்டிருக்கும் இந்த இயக்கத்தின் வெற்றி கோவாவை இந்தியாவோடு இணைக்கப் போகிறது: மேன நாளைத் தோடு அதே நாளன்று நம்மிருவரையும், பிணைத்து வைக்கவும் போகிறது! நம்பு சரயூ, நம்பு! நம்பிக்கையோடு செயலாற்று. நம்பிக்கைதான் நம்மை வாழ்விக்கப் போகிறது. நம்பிக்கை இழந்தால் நாட்டை அன்னியனிடம் பறி கொடுத்தவர்களாவோம் நாம்!" என்று சொல்லிக் கொண்டே வேகமாக நடை போட்டான்.

3. லக்ஷ்மி

பெட்னி மறைவை விட்டு வெளியேறிய மக்கள் கிராமத்துக்கு அப்பால் ஒரு முந்திரித் தோப்புக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மரங்களின் அடியில் உட்கார்ந்து அழுது புலம்பினார்கள். இருள் கவிந்து நீண்ட நேரத்துக்குப் பிறகு பசியும் தூக்கமும் அவர்களை ஆட்கொள்ள அழுகை ஓய்ந்தது. அசதி மிகுதியால் அப்படி அப்படியே அயர்ந்து தூங்கிப் போனார்கள். சூரியோதயம் ஆகி விழித்தெழுந்ததுமே பிரலாபத்தை மீண்டும் தொடங்கி விட்டார்கள்.

இந்தக் கோழைத்தனத்தைக் காணவும் கேட்கவும் சகிக்கவில்லை லக்ஷ்மிக்கு.

'ஏன் தலையிலடித்துக் கொண்டு அழ வேண்டும்? நெஞ்சில் உறுதி இருக்கிறது; உடலில் வலிமை இருக்கிறது. எதற்காக விழுந்து புரண்டு கதற வேண்டும்? இன்று நம்மை வெளியேற்றிய வெள்ளையரை நாம் நாளைக்கு வெளியேற்ற முடியாதா என்ற நெஞ்சுரம் — இல்லையா இவர்களுக்கு? சே, சே! மூட ஜனங்கள்! வீரத்தை நாம் விலக்கி விட்டால் போர்ச்சுகீசியர் ஏன் மனிதத் தன்மையையே மறக்க முற்பட மாட்டார்கள்? வாலைக்குழைத்துக் கொண்டு ஓடுகிற நாய் அடிபட்டு அவதிப் படத்தான் வேண்டும்!'

அவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்திருக்கவே பிடிக்கவில்லை லக்ஷ்மிக்கு. வீர சிவாஜியின் வரலாற்றைச் சம்பாஜி கதைகதையாகச் சொல்லக் கேட்டு வளர்ந்தவள் லக்ஷ்மி. சிவாஜியினுடைய மகனின் பெயரைத்தானே அவள் தகப்பனாரும் சூடியிருந்தார்! இன்றைய சம்பாஜி அந்நாளைய சம்பாஜி போர்ச்சுகீசியரை எதிர்த்து நடத்திய போர்களைப் பற்றித் தானது கற்பனையையும் தாராளமாகக் கலந்து கதைகதையாகக் கூறுவார் மகளுக்கு. சிவாஜியின் மகன் தொடங்கி வைத்த போராட்டம் இன்று வரை நீடித்தாலும் இறுதியில் ஜெயம் பெறுமளவா போகும்? தோல்வியாகத்தான் முடியுமென்றால் மஹாராஷ்டிர ரத்தத்துக்கு அதை விட மானக்கேடான விவகாரம் வேறென்ன இருக்க முடியும்?

தைரியமிழந்து தள்ளாடுவதா? வாளெடுத்து வீசாது போனாலும் வாய்ச் சொல்லிலாவது வீரம் பேச வேண்டாமா? ஜெய் ஹிந்த் என்று முழக்க வேண்டாமா?

ஜனங்கள் மீது தவறில்லை என்றும் அவர்களுக்குத் தலைமை தாங்கிச் சரியான மார்க்கத்தில் இட்டுச் செல்ல யாருமில்லாத குறை தான் என்றும் அடுத்தாற் போல் லக்ஷ்மிக்குத் தோன்றியது. அப்பா இப்போது இங்கே இருந்தால் இவர்கள் ஓலமிடுவார்களா இப்படி? ஒரே ஒரு அதட்டல் போதாதா இவர்களை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்த? ரகுநாத்தாவது சீக்கிரமாகத் திரும்பி வரக் கூடாதா? நெருப்புப் பொறிகளாகப் புறப்படும் அவன் சொற்களைக் கேட்டால் இவர்கள் உடம்பில் சுதந்திரக் கனல் மூண்டு கட்டுப் போகக்கூடுமே!

துன்பத்தைச் சகிக்கப் பழகியவள் லக்ஷ்மி. இன்னல்களை எதிர்க்கும் இதயம் படைத்தவள். துக்கப்பட்டுக் கண்ணீர் உகுப்பதென்பது அவளுக்குக் கட்டோடு பிடிக்காத ஒன்று. மன வேதனை என்பது என்னவென்பதே அவளுக்குத் தெரியாமல் போயிருக்கும்; துயரத்தின் சாயல்கூட அவள் வாழ்வில் எட்டிப் பார்த்திராது, ரகுநாத்திடம் அவள் கொண்ட காதல் மட்டும் நிறைவேறி யிருந்தால்.


இன்று அவள் சோக சாகரத்திலிருந்து தப்பிப் பிழைத்து வந்தவள். உள்ளத்தைக் குடைந்தெடுத்த உற்பாதைகளை உணர்ந்து அவற்றைத் தாங்கிச் சமாளித்து மீண்டு விட்டவள். இனி அவளை எந்தக் கவலையும் அணுகாது: கடுமையான ஒரு நோய் கண்டவளை மறுபடியும் அதே நோய் அண்டாதது போல.

மஸப்ளாவுக்கு ஒரு முறை போய் வந்த ரகுநாத் திரும்பும் போது சரயூவையும் பின்னோடு அழைத்து வந்தான். அவ்விருவரையும் அருகருகே சேர்த்துப் பார்த்த அந்தக் கணமே லக்ஷ்மிக்கு அவர்கள் என்றைக்குமே இணை பிரியாதிருக்கப் பிறந்தவர்கள் என்பது விளங்கி விட்டது. அடுத்த விநாடி ஆயிரமாயிரம் ஊசி முனைகள் அவள் மென்னுடலைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தன. பஞ்சிம் சிறைக் கூடத்தில் கோவாவின் விடுதலைக்காகப் புரட்சி செய்த பலர் போர்ச்சுகீசிய அதிகாரிகளின் கோர சித்திரவதைகளுக்கு ஆளானதாக

ஏழுமலை ஆண்டவனின்
எழில் மிகுந்த சித்திரம்



பிரகாசமான வண்ணங்களில் மிகத் தெளிவாக அச்சிடப்பட்டுள்ள இப்பரிசுப் பெட்டி ஏழுமலையானின் கோடிக் கணக்கான பக்தர்களின் மனதை மகிழ்விக்கும் என்பது நிச்சயம்.



Nutrine

நியூட்ரைன் கன்பெக்ஷனரி
கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சித்தூர் (ஆந்திர பிரதேசம்)

லக்ஷ்மி கேள்விப் பட்டிருக்கிறாள். அவையெல்லாம் தான் அன்றைக்கு உள்ளான சித்திரவதையின் ஒரு சிறு பகுதியாகக் கூட இருக்க முடியாது என்பது அவள் எண்ணம்.

தனித்திருக்கையில் சம்பாஜி கூறினார்:- "லக்ஷ்மி! ராஜநாத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் மனத்தை அலைய விட்டது உன் குற்றம். சுதந்திர லட்சியத்தை அடைவதற்காக உழைக்கும் லட்சிய உள்ளங்கள் அவர்களுடையது. கருத்தொருமித்த அந்தக் காதலர்களுக்கிடையில் புகுந்து கண்ணீர் உகுத்து அவர்கள் மனத்தைப் புண்படுத்தும் உரிமை உனக்கில்லை! லக்ஷ்மி! கண்களைத் துடைத்துக் கொள், அம்மா!"

கடமையாகச் சொல்லி விட்டார் அவர். செயலில் நிறைவேற்ற அவள் பட்ட பாடு!....

சிந்தித்துக் கொண்டே லக்ஷ்மி, கிராமப் புறத்தின் எல்லையைத் தாண்டி வெகு தூரம் நடந்து விட்டாள். மரங்களின் மறைவில் ஒடுங்கிக் கொண்டிருந்த ஓநாய்கள் நான்கு ஒண்டியாக வந்த அவளை வேட்டையாடுவதற்காக நோட்டம் பார்த்தன. அவற்றின் கண்கள் அவளைப் புசித்தன; கரங்கள் அவளை நுகரத் துடித்தன. ரத்த நாளங்கள் விரிந்தன; இருதய தாளங்கள் தப்பின. புத்தி பேதலித்து விட்டது; மனம் அவளை மறுகிக் கொண்டது.

ஓநாய்களல்ல அவை. ஓநாய்களைக் காட்டிலும் கேவலமான சில மனித ஜன்மங்கள். அவற்றின் பசி வயிற்றுப் பசியல்ல; வறட்டுப் பசி. விவேகத்தை விரட்டி விடக் கூடிய விகல்பப் பசி.

சீட்டி அடித்தான் ஒருவன்; சிங்காரி ஒருத்தியைச் சிக்க வைத்து விட்ட நினைப்பில்.

லக்ஷ்மி அந்த ஒலி கேட்டுத் திரும்பினாள். நான்கு பேர்களுடைய எட்டு கண்களை தன் கற்புக்குக் களங்கம் ஏற்படுத்த முயலுவதைக் கண்டு கொண்டாள். அன்று வரையில் அவளைப் பிடிக்காத பீதி இன்று ஆட் கொண்டது. உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் ஒரு நடுக்கம் உண்டாகி அவளை உலுக்கி எடுத்தது.

தேகத்தின் அந்தப் பதற்றம் பதுமையாக நின்ற அவளை ஊனும் உணர்ச்சியும் உயிர்த் துடிப்பும் மிக்க நங்கையாக எடுத்துக் காட்டியது ராணுவ வீரர்களுக்கு.

துப்பாக்கியைத் தோளிலிருந்து கழற்றிக் கீழே போட்டு விட்டு இடையில் இறுக்கிக் கட்டியிருந்த பெல்ட்டில் இரண்டு கட்டை விரல்களையும் கோத்துக் கொண்டு முன்னேறினான் ஒருத்தன்.

லக்ஷ்மி தவித்தாள். 'ஏன் என்னால் விரட்டு அகற முடியவில்லை? ஏன் இந்தக் கால்கள் இடம் பெயரவே மறுக்கின்றன? ஏன் இப்படிச் செயலிழந்து நிற்கிறேன் நான்? பீதி என்பது இதுதானா?'

அருகே அருகே வந்து விட்டான் அந்த வீரன். வாயைத் திறந்து அவளுக்குப் புரியாத போர்ச்சுகீசிய மொழியில் அவன் ஏதோ கேட்டபோது குப்பென்று சாராயத்தின் துர்நாற்றம் வீச லக்ஷ்மிக்கு வயிற்றைக் குமட்டியது.

இதற்குள் இன்னொரு சிப்பாய் அங்கே பாய்ந்து வந்தான். முதல்வனின் தோள்களில் கரத்தைப் பதித்து முரட்டுத்தனமாகத் தள்ளினான்.

நன்றியோடு அவனை நோக்கினாள் லக்ஷ்மி.

அடுத்து, ''நான்தான் அவளை முதலில் பார்த்தேன்'' என்ற வார்த்தைகள் அவளை விழிப்படையச் செய்தன. 'சீ! இந்த நீசனுக்கா நான் கடமைப் பட்டிருப்பதாகக் கணப் பொழுதுக்கு முன்னால் எண்ணினேன்?'

மூன்றாவதாக அவளை அணுகிய கிராதகன் ''யார் முதலில் இவளை அடைவதெனச் சீட்டுக் குலுக்கிப் போடலாம்'' என்று யோசனை கூறினான்.

லக்ஷ்மி உடலில் மிகுதியிருந்த தெம்பையெல்லாம் ஒன்று திரட்டித் தன் கால்களுக்கு அனுப்பி வைத்தாள். 'கால்களே! என்னைக் கைவிடாதீர்கள்!' என்று கெஞ்சினாள். 'ஓடுங்கள்! இந்தப் படுபாதகர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!'

சிட்டாகப் பறந்தாள் அவள். சில அடிகள் வரையில். அவளைத் தப்புவிக்க முற்பட்ட கால்களுள் ஒன்றில் கூரிய கத்தி பாய்ந்து குருதி குபுகுபுவென்று வெளிப்பட்டது.

பிறகு அவள் மண்ணிலே விழுந்தாள், புரண்டாள். பூமித் தாயே! நீ பிளக்க மாட்டாயா? இந்த அபலையை ஏற்றுக் கொள்ள மாட்டாயா?

பூமித்தாய் பிளந்தாள்; அவளை ஏற்றுக் கொள்ளவும் செய்தாள்.—பத்து மணி நேரத்துக்குப் பிறகு.

4. ஸில்வியா

மூன்று வருஷங்கள்! பிரான்கோவைப் பிரிந்து மூன்று வருஷங்களை எப்படியோ ஓட்டி விட்டாள் ஸில்வியா. மூன்று வருஷங்கள் உருண்டோடப் பல்லைக் கடித்துக் கொண்டு வாளாவிருந்தவளுக்கு இப்போது மூன்று விநாடிகளைப் பொறுப்பது கடினமாக இருந்தது. 'விமான நிலையத்திலிருந்தபடியே விடை பெற்றுக் கொண்டு எப்படிப் போகலாம் பிரான்கோ? ஒரு நாள் வேண்டாம்; ஒரு மணி நேரம் கூடவா அந்யோன்யமாக அளவளாவி விட்டுச் செல்லக் கூடாது? அப்படி என்ன அவசரமோ அவருக்கு? கோவாவைக் கட்டிக் காக்க இவர் ஒருத்தர்தானா அகப்பட்டார்?'

காதலின் சுவை கண்ட பூனை ஸில்வியா. ருசி கண்ட அந்தப் பூனையைப் பாலே மோப்பம் பிடிக்க மட்டும் அனுமதித்து விட்டுப் பாத்திரத்தோடு உறி மேலே ஏற்றி வைத்தால் தான் என்ன? எம்பிக் குதிக்காமலா இருக்கும்? பாலமுதக் கலசத்தை எட்டிப் பிடிக்க முயலாமலா போகும்? அருகே ஒரு மேஜையும் இருந்து விட்டால் அதன் மீது தாவி ஏறிப் பின் உறியின் பக்கமாகப் பாய்ந்து விடாதா?

பொறுக்க முடியாத மூன்று விநாடிகள் முப்பதைச் சிரமப்பட்டுச் சகித்த பிறகு இனியும் தாள முடியாதென்ற முடிவுக்கு வந்தாள் ஸில்வியா. பஞ்சிம்மின் ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்குப் போனாள். டென்னிஸ் பந்து போல அவளை இங்குமங்குமாகத் தட்டி விட்டார்கள் அங்கே. எல்லாருக்கும் அங்கே தலைக்கு மேலே வேலை; தலை போகிற வேலை. பத்துப் பேரை விசாரித்துப் பலனில்லாமல் பதினொன்றாவது நபராக ஒருவரிடம் அனுப்பி வைக்கப்பட்டாள் அவள். கடைசி முயற்சி எனக் கருதிக் கொண்டு போய்க் கேட்ட, அவளுக்குக் கிடைத்த விடை களிபேருவகை அடையச் செய்தது அவளை. 'லெப். விமலன்

என்ற கிராமத்தில் முகாம் போட்டிருக்கிறான் பிரான்கோ. மலைப்பாவிலிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கிறது அது. ஆனால் அங்கேயெல்லாம் ஸில்வியா இப்போது போக நினைப்பது சரியல்ல. கோவாவிலுள்ள போர்ச்சுகீஸியப் பெண்கள் குழந்தைகள் அனைவரையும் கப்பலேற்றி ஐரோப்பாவுக்குத் திருப்பி அனுப்ப ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் அவள் நகரிலேயே இருந்தால் இந்த அறிக்கை வெளியானதும் மார்மகோவாவிலிருந்து கிளம்பும் முதல் கப்பலில் இடம் பிடித்துக் கொள்ளச் சௌகரியமாயிருக்கும். அல்லது விமான மூலம் கராச்சி வழியாகவும் லிஸ்பனுக்குத் திரும்பலாம்.'

தன் அன்புக்குப் பாத்திரமானவனைச் சந்திக்கத் திட்டம் போடும் அவளுக்கு அகதி போலத் தப்பி ஓடத் திட்டம் வகுத்துக் கொடுத்து உபதேசம் செய்த அந்த அதிகாரியின் மீது கோபம் பொத்துக் கொண்டு வந்தது ஸில்வியாவுக்கு. இருந்தாலும் பிரான்கோவின் இருப்பிடம் பற்றிய தகவல்களைத் தந்து உதவிய அவரை அவமதிக்கவும் அவளுக்கு மனம் வரவில்லை. அக்கறையோடு அவர் கூறுவதையெல்லாம் கேட்பதாகப் பாவனை செய்து விட்டு வீடு சேர்ந்தாள்.



தகப்பனார் ரொஸாரியோவுக்கு இரவு டியூடி. ஜீப்பை எடுத்துக்கொண்டு போயிருந்தார். அதிகாலையில்தான் திரும்புவார். காலை ஆகாரம் பண்ணி விட்டுப் படுத்தாரானால் ஆறு மணி நேரத்துக்குக் குறையாமல் அயர்ந்து தூங்கிவிடுவார். அந்தநேரத்தில் ஜீப்பும் ஷெட்டிலே சும்மா தூங்கத்தானே போகிறது? மனிதனுக்குத்தான் தூக்கம் அத்தியாவசியத் தேவை. மோட்டாருக்கு என்ன கேடு? ஆனந்தக் கூத்தாடிய ஸில்வியாவின் உள்ளம் காலை வரை காத்திருக்க வேண்டுமே என்பதால் அமைதி இழந்து தத்தளிக்கவும் செய்தது. உறக்கமற்ற அந்த இரவு உல்லாசக் கற்பனைகளில் அவளை ஈடுபடுத்தியது. அதுவே பெரிய ஆபத்தாகவும் முடிந்தது. கட்டுக்கடங்காது பொங்கிய சிந்தனைகள் பிரான்கோவைக் காண வேண்டும் என்ற அவாவை அதிகரிக்கச் செய்து அவளை ஆட்டிப் படைத்தன.

வானம் வெளுக்கத் தொடங்கும் நேரத்தில் தகப்பனாரின் வருகையை எதிர்நோக்கி வாசலிலேயே காத்திருந்தாள் ஸில்வியா. அப்பாடா! ஒரு வழியாக அந்த ஜீப்பும் கண்களுக்குப் புலனாகித் தோட்டத்தின் பின்புறமிருந்த ஷெட்டுக்குள்ளே போய் நின்றது. ரொஸாரியோவின் அதிகார நடையை, கனமான பூட்ஸ் கால்கள் தரையில் பலமாக அழுந்தும் போது எழும் ஓசையைச் செவியுற்றாள் அவள். அடுத்து அவளுடைய இரட்டை நாடிச் சரீரம் கைகளில் பெரிய பொட்டல மொன்றையும் புடவையையும் ஏந்திக் கொண்டு முனை திரும்பியது. அசைந்து அசைந்து அவளை நோக்கி வந்தது.

''அப்பா! இதெல்லாம் என்ன?'' பொட்டலத்தையும் சேலையையும் அவரிடமிருந்து கரம் நீட்டிப் பெற்றுக் கொண்டு கேட்டாள் ஸில்வியா.

''காப்பிக் கொட்டை. ரகுநாத்திடமிருந்து வாங்கி வந்தேன். இதைச் சரயூ உனக்காகவே பிரத்தியேகமாகப் பொறுக்கி எடுத்தாளாம் பம்பாய்க் கடை ஒன்றில். நன்றாக இருக்கிறதா பார்!''

சேலையின் நான்கு மடிப்புக்களை மட்டுமே பிரித்துத் தன் உடலோடு அதனை உறவாட விட்டவாறே வீட்டினுள்ளே துள்ளி ஓடினாள் ஸில்வியா நிலைக் கண்ணாடியை நாடி. அங்கே பரபரப்புடன் புடவையை உதறிப் பிரித்தாள் ஒய்யாரமாக. இடையிலே ஒரு கரமும் கழுத்தின் கீழே ஒரு கரமும் புடவையைத் தாங்கித் தன் மேனியோடு அதனை ஒட்ட வைக்க நேராக நின்றும் பக்கவாட்டில் திரும்பியும் அழகு பார்த்தாள். அப்போது ஸில்வியாவின் கண்களிலே அசாதாரணமான ஓர் ஒளி படருவதைக் கண்டு ரொஸாரியோ நீண்ட பெருமூச்செறிந்தான்.

அவன் எதற்காகப் பாடுபட்டு வந்தானோ அதெல்லாம் பாழாகிவிடும் போலிருந்தது. எதை மூடி மறைத்து வைக்கப் பார்த்தானோ அதுவே வெட்ட வெளிச்சமாகி விடும் போல் இருந்தது. ஸில்வியாவின் தாயார் ஓர் இந்தியப் பெண்தான் என்ற ரகசியத்தை இறுதி வரை காப்பாற்ற முடியாமலே போய்விடுமோ என்ற பயம் அவனை ஆட்கொண்டது.

''ரொம்ப நன்றாக இருக்கிறதப்பா. விலை என்ன?''

''ம்ம்? நூற்றி ஐம்பது என்றுபோடேன்.'' கூசாமல் புளுகினான், ரொஸாரியோ. ''காப்பி போடுகிறாயா, ஸில்வியா!'' என்றான்.

''அதெல்லாம் இனி மேல் முடியாதப்பா'' என்றாள் ஸில்வியா, புடைவைக்குப் பொருத்தமான ரவிக்கையைத் திறந்த அலமாரியினுள் தேடியவாறே. ''உங்கள் காலை உணவையெல்லாம் ஏற்கனவே தயாரித்துச் சாப்பாட்டு மேஜை மேல் வைத்திருக்கிறேன். ஆறிப் போவதற்கு முன்னால் மடைய அருந்துங்கள். அப்புறம் பேசாமல் படுத்துத் தூங்குங்கள்.''

''ஏது இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் விழித்தெழுந்து விட்டாய், அப்பாவைக் கவனித்துக் கொள்ள? வழக்கமாக நான் உன்னை உலுக்கி எழுப்ப வேண்டியிருக்குமே?''

''என்னவோ ராத்திரி முழுதும் எனக்குத் தூக்கம் இல்லை.''

''ஐயோ பாவம்! பல வருஷங்களுக்குப் பிறகு நேற்று பிரான்கோவைச் சந்தித்தாயல்லவா? அதன் பயனாக இருக்கும். அப்படித்தானே?''

ஜாக்கெட்டைத் தேர்ந்தெடுத்து விட்ட ஸில்வியா தன் முகத்தை அவனுக்குக் காட்டாமல் சட்டென்று வேறு பக்கமாகப் பார்த்தாள். தன் அவசரக் கோலம் அவரிடம் தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டதோ என்ற அச்சம் அவளுக்கு. 'அளவுக்கு அதிகமாக அவரைத் துரிதப்படுத்தியதன் மூலம் ரகசியமாகக் காதலனைக் காணச் செல்வதென்ற என் திர்

மானத்தைப் பற்றி அவர் ஊகித்தறிய இடம் அளித்து விட்டேனு?'

பிராங்கோவைக் குறித்து வாய் வார்த்தையாகப் பேசியதும் ரொஸாரியோவுக்கு வேறு வித எண்ணங்கள் எழுந்தன.

''ஸில்வியா! நீ புடவை உடுத்திக் கொள்வதை நான் விரும்பவில்லை என்று எத்தனை தடவைகள் சொல்லியிருக்கிறேன்? பிடிவாதக்காரி! காணுததைக் கண்டுவிட்டதைப் போல் துடிக்கிறாயே இடத்து?'' என்றான் கடுமையான குரலில்.

பிறகு அவனே தொடர்ந்து, ''பிராங்கோ சௌகரியப்பட்ட போது உன்னைக் காண வருவதாக வாக்களிக்க வில்லையா? எந்த விநாடியில் அவன் இந்த வாசலில் வந்து நிற்பான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அன்போடு அவன் உன்னை அணுகும்போது நீ இந்த வீட்டு வேலைக்காரி போலவா தோற்றமளிக்கப் போகிறாய்?'' என்றான்.

எப்படியாவது பிராங்கோவை அவள் மணந்து கொள்ள வேண்டும்; வெள்ளையனைக் கல்யாணம் செய்துகொண்டு விட வேண்டும் என்பது ரொஸாரியோவின் விருப்பம். இரண்டு குழந்தைகளுக்கு அவள் தாயாகி விட்ட பிறகு அவளைப் பெற்றெடுத்தவளைப் பற்றிய விவரங்கள் வெளிப்பட்டாலும் பாதகமில்லை. அது வரைக்கும் ஸில்வியா இந்தப் பாழாய்ப் போன இந்திய பாணி ஆடைகளை அணியாதிருக்கக் கூடாதா?

எது நமக்குக் கிடைக்காது என்று தோன்றுகிறதோ அதை அடைந்து விடவே மனம் இச்சைப் படுகிறது. பிராங்கோவுக்கு எதிரே புடவை உடுத்தி நிற்கக் கூடாது என்று ரொஸாரியோ போட்ட தடை உத்தரவே அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற ஆசையை முன்னைக் காட்டிலும் தீவிரமாக்கி விட்டது ஸில்வியாவின் மனத்தில்.

அமைதியாகவும் ஒரே சீராகவும் வெளிப்பட்ட ரொஸாரியோவின் குறட்டை ஒலி ஆழ்ந்த நித்திரையை ஊர்ஜிதப்படுத்தியதும் ஸில்வியா ஐரோப்பிய பாணி ஆடைகளைக் களைந்துவிட்டு ரவிக்கையும் புடவையும் அணிந்து கொண்டாள். தகப்பனுரின் தூக்கத்தைக் கலைத்து விடக் கூடாது என்பதற்காகக் கூடுமான வரையில் ஓசைப்படுத்தாமல் ஜீப்பை ஷெட்டிற்கு வெளியே எடுத்துச் சாலைப் பக்கம் ஓட்டினாள். டெட்ஸி மகனுக்குப் போகும் பாதையை அடைந்ததும் காரின் வேகம் விஷம் போல ஏறியது.

ஒரு துளி விஷம்தான் தேவைப்பட்டது, லக்ஷ்மிக்கு ஒரு மணி நேரத்துக்குப் பிறகு. அல்லது ஒரு முழக் கயிறு! கத்தியை விட்டெறிந்து தொடையில் காயப்படுத்தினர்களே கயவர்கள். அந்தக் கத்தியையாவது தன் கையிலே அவர்கள் கொடுத்து விட்டுப் போயிருக்கக் கூடாதா?

எல்லையற்ற ஆச்சரியம் குடி கொண்ட வதனத்துடன், ஊரை காணுத ஆனந்தம் பிரதிபலிக்கும் கண்களால் பிராங்கோ தன்னை வரவேற்கும் காட்சி ஸில்வியாவின் கண்ணெதிரே தோன்றிக் கொண்டேயிருந்தது. ஜீப்பின் வேகம் மேலும் அதிகரித்தது.

இந்த உடல் வேதனையையும் மனத் துன்பத்தையும் சகித்துக் கொண்டு இனி எதற்காக வாழ்வது? யாருக்காக வாழ்வது? மானம் பறிபோன பிறகு ஆவி பிரிய வேண்டியது தானே! தேகம் மண்ணோடு மண்ணாக மக்கிப்



போக வேண்டியதுதானே? உயிருடன் இருக்கும் ஒவ்வொரு விநாடியும் உலகுக்குத் தான் துரோகம் செய்வதாகக் கருதினாள் லில்லி. சாவைத் தருவித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கியவளின் செவிகளிலே ஜீப் ஒன்றின் உறுமல் கேட்டது. அவள் வயிற்றில் பாலை வார்த்தாற் போல் இருந்தது.........

ஜீப்பை விட்டுத் தான் கீழே இறங்கியதும் பிராங்கோ என்ன செய்வான்? சட்டென்று அடையாளம் புரியாமல் விழிப்பானா? சற்றுத் தொலைவிலேயே நின்று தன் எழிலைப் பார்வையால் நிதானமாகப் பருகி ரசிப்பானா? அல்லது ஆவலை அடக்கமாட்டாது கரங்களை நீட்டி என்னைக் கட்டிப் பிடிக்க முயலுவானா?...

"பெண்ணே! நில்! ஏன் குறுக்கே ஓடி வருகிறாய்? நில்! நில்! ஓ! ஐயோ!"

மேடு ஒன்றின் மீது ஏறித் தடாலென்று விழுந்து இறங்கியது ஜீப். சதைகள் நசுங்கி எலும்புகள் முறியும் சத்தம். பின்னர் தாறுமாறாக ஜீப் வளைந்து ஓடியபோது டயர்கள் தரையில் தேய்ந்து எழுப்பிய ஓசை. ஒரு மரத்தின் மீது படீரென்று அது மோதி நின்றபோது பயங்கரச் சத்தம். முன் விளக்குகளின் கண்ணாடி உடைந்து துகள்கள் நாலாபுறமும் சிதறிய போது கலகலவென்ற ஒலி.

அப்புறம் லில்லியாவுக்கு ஒன்றுமே கேட்கவில்லை. எதையுமே அவள் பார்க்கவில்லை. அவள் நினைவிழந்து விட்டாள்.

5. பிராங்கோ

வெண்மையான தலையணையின் மேல் கூந்தல் கரும் பட்டாகப் படர அதன் மேல் தாழ்ந்திருந்த பால் வடியும் லில்லியாவின் வதனம் இனம் புரியாத ஒரு வேதனையுடன் இப்படியும் அப்படியுமாக அசைந்த போது நீண்ட கழுத்தின் அடிவாரத்தில் விழுந்த மிருதுவான மடிப்புக்கள் அவள் கண்டம் சலவைக் கல்லினாலானதல்ல, சதைப் பற்று மிக்கதுதான் என்பதைக் கூறாமல் கூறின. மலர் முகத்தை மொய்க்கும் பட்டுப்பூச்சியின் சிறகுகள்போல் அவள் இமைகள் படபடத்தன. கொஞ்சம் கொஞ்சமாகப் பார்க்கும் சக்தியைத் திரும்பப் பெற்றாள் லில்லியா. அவளெதிரே இரண்டு மூன்று உருவங்கள் நின்று கொண்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது. மிகுந்த பிரயாசைப்பட்டு அந்த உருவங்கள் யாருடையவை என்று இனம் கண்டு கொள்ள முயன்றாள். மூன்றுமே ஒருவருடைய தோற்றங்கள்தாம்; பிராங்கோவின் பிரதிபிம்பங்களே அவை. மூன்று பேரும் ஒருவருடன் ஒருவர் ஐக்கியமாகி ஒரே உருவமானார்கள்.

பிராங்கோவின் ஒல்லியான நெடிய உருவம், எடுப்பான நீண்ட மூக்கு, ஊடுருவும் கண்கள், உறுதி வாய்ந்த புஜங்கள், ஒட்டிய வயிறு, ஓங்கி உயரும் திண் தோள்கள் எல்லாம் இப்போது லில்லியாவுக்குத் தெளிவாகப் புலனாயின. ஆனால்....அவளைக் கண்டதும் ஆர்வத்தால் மலர வேண்டிய அந்த முகத்தில் ஏன் இந்தக் கடுகடுப்பு? என்ன நேர்ந்து விட்டது இப்போது?

நெஞ்சம் பதற, "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று வினவ எண்ணிய அவள் செவ்விதழ்கள் விரிந்தன. வார்த்தைகள் ஏதேனும் வெளிப்பட்டனவா என்பது அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் பிராங்கோவின் முகத்தில் கோபத்தின் அறிகுறிகள் அதிகமாவதை அவளால் நிச்சயமாக அறிய முடிந்தது. கலவரம் கூடுதலாகவே அவள் எழுந்து உட்கார முற்பட்டாள். அந்தச் செயலின் போது சரிந்த சேலைத் தலைப்பை இயல்பாக ஒரு கரம் பற்றி மேலே எடுத்துச் சென்றது. கூடவே பிராங்கோவின் கோபத்துக்குக் காரணமும் புரிந்து விட்டதாகத் தோன்றியது அவளுக்கு. 'அப்பா எதிர்பார்த்தது போல் பிராங்கோவுக்கு இந்த உடை பிடிக்கவில்லை, அவ்வளவுதான்!'

"நான் சேலை உடுத்துக் கொண்டால் நன்றாயில்லையா?" என்று கேட்டாள் லில்லியா.

அவள் கேள்வி அவனுக்குக் கசப்பாக இருந்தது என்பதை இடிமுழக்கத்துக்குத் தயாரான கருமேகங்களைப் போல அவன் அடர்த்தியான புருவங்கள் ஒன்று கூடுவதிலிருந்து அவள் உணர்ந்து கொண்டாள்.

"ஆடை, ஆபரணம், அலங்காரம், சிங்காரம் இதைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாதா உனக்கு?" என்று சீறினான் பிராங்கோ. "உன் உயிரை மாய்த்துக் குருதியைக் குடிக்கும் ஆவேசத்தோடு வெளியே நூறு பேர்கள் காத்திருக்கிறார்கள் என்பது உன் மூளைக்கு எட்டவில்லையா?" என்று தாளிட்டிருந்த கதவைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

அவன் கூறிய செய்தியைக் காட்டிலும் அவன் போட்ட இரைச்சல்தான் லில்லியாவுக்குப் பயத்தை உண்டாக்கியது. நெஞ்சில் நிறைந்த ஒருத்தியை மூன்று வருஷங்களுக்குப் பிறகு பார்க்கும் போது பேசக் கூடிய வார்த்தைகளா இவை?

"ஏன் கோபிக்கிறீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்?" என்று கேட்டாள் லில்லியா ஈனசுவரத்தில்.

"அப்படிக் கேள்; மெல்லக் கேள். நிதானமாக ஆற அமர இருந்து நானும் கதை போலக் கூறுகிறேன்" என்றான் பிராங்கோ இளக்காரமாக. "நீ பாட்டுக்குக் கிளம்பி வந்து விட்டாயே, யாரைக் கேட்டுக் கொண்டு புறப்பட்டாய்? எந்தத் தைரியத்தில் என்னைக் காண இங்கே வந்தாய்? என் கழுத்தறுக்க என்றுதான் வந்து சேர்ந்தாயே, அந்த ஜீப்பை மெள்ளவாவது ஓட்டிக் கொண்டு வந்து தொலைக்கக்கூடாதா?"

திடீரென்று லில்லியாவுக்கு அந்தப் பயங்கரச் சொப்பனம் நினைவுக்கு வந்தது. 'அதைத்தான் குறிப்பிடுகிறானா பிராங்கோ? தான் கண்ட சொப்பனத்தைப் பற்றி இவனுக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை....? உண்மையாகவே நடந்த சம்பவம் என்று கூறுகிறானா பிராங்கோ?'

லில்லியாவின் உடலில் இருந்த ரத்தமெல்லாம் உறைந்து விட்டது. சிவந்த முகம் வெளுத்துப் போயிற்று.

"அவள்....அவள்...."

"ஏன் தட்டுத் தடுமாறுகிறாய்? நீ ஓட்டி வந்த ஜீப் அந்தப் பெண்மீது மோதிவிட்டது!"

துள்ளி எழுந்து அவனருகே வந்தாள் லில்லியா. பிச்சை கேட்டு இறைஞ்சுகின்ற பரிதாபத்துக்குரிய கபோதியைப்போல் "அவள் தப்பிப் பிழைத்துவிட்டாளல்லவா? உயிருக்கு



எழில்
மிகுந்த
ஆடைகளுக்கு
ஸ்ரீநிவாஸ்
ஸ்ரீநிவாஸ் காட்டன் மில்ஸ் லிட்.
பம்பாய்-13
ஸ்ரீ
வாயில்கள்
பிரிண்டுகள்
லான்கள்
பாப்லின்கள்



வீட்டில்
கைவசம்
இருக்கட்டும்
சீதளம், ஜலதோஷம்
தலைவலி மற்றும்
ஜுரத்திற்கு
C.A.Q
REGD. TRADE MARK
8 காப்ஸ்யூல்கள் கொண்ட
எளிதாகத் திறக்கும்
பெட்டியில் கிடைக்கும்.
ஸ்பென்ஸர் & கோ. லிட்.
சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, மற்றும் கிளைகள்.
CQ-16-9A



சிட்டிகைப் பொடி
சிறந்த
நண்பர்களாகச்
செய்கிறது
ஸ்ரீ
அம்பாள்
ஆபீஸர் பொடி
ஸ்ரீ அம்பாள் & கோ.,
த. பெ. நெ. 3, சென்னை-1
சிறந்த மூலப்
பொருள்களைக்
கொண்டு விஞ்ஞான
முறையில்
தயாரிக்கப்பட்டது

ஆபத்தில்லை அல்லவா?'' என்று பரிதவிக்கும் நெஞ்சுடன் கேட்டாள்.

''அவன் சடலத்துக்கு ஈமக்கிரியைகள்செய்ய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன வில்லியா!'' என்றான் பிராங்கோ. கொஞ்சமேனும் அவளிடம் இரக்கம் காட்டாமல் பட்டவர்த்தனமாக விஷயங்களை விண்டுரைத்தான். ''தகனக் கிரியைகள் நடக்கு முன்னர் அவன் தகப்பன் அவன் உடலை ஒரு முறையாவது பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று ஊரார் கேட்டுக் கொண்டார்கள். போனால் போகட்டும் என்று சிறைப்பட்டிருக்கும் சம்பாதியை விடுவித்து அழைத்து வர உத்தரவுகளுடன் ஆள் அனுப்பியிருக்கிறேன் பஞ்சிமுக்கு.''

நேராக நிற்கவும் முடியாமல் தளர்ச்சியுற்ற வில்லியாவின் கரங்கள் பிராங்கோவைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டன ஆதரவுக்காக. ''பிராங்கோ! தயவுசெய்து என்னை நம்ப மாட்டீர்களா? நான் அவன் மீது ஏன் வண்டியை ஏற்றப் போகிறேன்? வேண்டுமென்றே அவளாகத்தான் ஜீப்புக்குக் குறுக்கே வந்து விழுந்தாள். ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். அவள் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்துத் தக்க தருணத்தில் வேண்டுமென்றே பாதையில் பாய்ந்திருக்கிறாள். அது என் தவறா? சொல்லுங்கள், பிராங்கோ! அது என் தவறா? இல்லை என்று சொல்ல மாட்டீர்களா? என்னை நம்ப மாட்டீர்களா?'' சுழலில் சிக்கிய சிறு படகைப் போல அல்லலுற்றாள் அந்தப் பேதை.

பிராங்கோ தன் கழுத்தைச் சுற்றி வளைந்த கரங்களைப் பிடுங்கி உதறினான். கட்டிலில் போய் விழுந்தாள் வில்லியா. கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீருடன் கருணையற்ற அவனை ஏறிட்டு நோக்கினாள். என்னிடம் இவருக்குப் பரிவு இல்லையா? பச்சாத்தாபம் இல்லையா? பிரியமே இல்லையா? பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்தும் கூட அவர்களைப் பிணைத்து அன்று வரை உறுதியாக இருந்த காதல் கயிறு இருவரும் மிக நெருங்கி இருக்கும் இந்தச் சமயத்தில் நைந்து அறுபட்டுவிட இருப்பதைஉணர்ந்தாள் வில்லியா. அதற்கு இடம் கொடுக்க அவளுக்கு விருப்பம் இல்லை. எப்பாடுபட்டேனும் தன் காதலைக் காப்பாற்றிக்கொள்ளவே எண்ணினாள் அவள்.

''ஏன் இன்றைக்கு நீங்கள் என்னை இப்படி வெறுக்கிறீர்கள்? உங்களிடம் நான் பொய் சொல்லுவேனா?''

''என்னிடம் புலம்பிப் பயன் என்ன? நான் உன்னை நம்பினால்தான் பிரயோசனமென்ன? வெள்ளையருடைய ஆதிக்கவெறியில், ஆணவச் செருக்கில் அகப்பட்டு மிதிபட்டு அறைபட்டு லக்ஷ்மி மாண்டதாக மக்கள் எண்ணுகிறார்கள். தாய்நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த வீரப் பெண்மணியாக அவளைக் கருதுகிறார்கள். அவளைக் கொலை செய்து விட்ட கிராதகி என்று உன்னை ஏசுகிறார்கள். புரிகிறதா உனக்கு? அவர்களை நம்ப வைப்பது எப்படி? அவள் கறுப்புத் தோல் படைத்தவள் என்பதால் நீ அலட்சியமாக இருந்தாயாம். அதனால் அவள் மீது ஜீப் ஏறி விட்டாலும் பரவாயில்லை என்று வேகத்தைக் குறைக்கவில்லையாம். பிரேக் போட நீ மறக்கவில்லையாம். மறுத்தாயாம்!''

''பிராங்கோ! அத்தனையும் கட்டுக் கதைகள்! அந்நியரை வெளியேற்ற வேண்டும் என்ற வெறி இவர்களை ஆட்கொண்டிருக்கிறது. பிராங்கோ! இந்த நேரத்தில் வெள்ளையர் மீது குற்றம் சாட்ட ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்தால் போதும். அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வார்கள்; அவதூறுகளைக் குவிப்பார்கள். அவர்கள் சொல்லுக்கு நீங்கள் மதிப்புத் தருகிறீர்களா, பிராங்கோ?''

பிராங்கோ அவற்றுக்கு மதிப்புத் தரவுமில்லை, நம்பவுமில்லை. லக்ஷ்மி தற்கொலை செய்து கொண்டாள் என்பது அவனுக்கும் இன்னும் மூன்று வெள்ளை நிறச் சிப்பாய்களுக்கும் நிச்சயமாகத் தெரியும். ஆனால் இதனை வெளிக் காண்பித்துக் கொள்ள அவர்களுக்குப் பைத்தியமா என்ன? பிறகு தற்கொலைக்குக் காரணம் கண்டுபிடிக்க முயலுவார்கள் உற்றார் உறவினர்; இல்லாத கேள்விகளையெல்லாம் கேட்டுக் குடைவார்கள். எதற்கு அந்தத் தொல்லை?

பிராங்கோ தன் மீதே கொண்ட கோபம் வில்லியாவிடம் எரிந்து விழச் செய்தது. அதை அந்தப் பேதை எங்ஙனம் அறிவாள்? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்துத்தான் சம்பாதியை இட்டு வர அனுமதி தந்தது என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

'கோவாவினியர் கண்களுக்கு லக்ஷ்மி ஒரு தியாகியாகவே திகழட்டும். வெள்ளையர்களுக்கு அந்நிகழ்ச்சி ஒரு விபத்தாகவே விளங்கட்டும். தற்கொலை பற்றிய தகராறுகள் வேண்டவே வேண்டாம்!' என்று நினைத்த பிராங்கோ, ''வில்லியா! அந்தப் பெண் சாலை ஓரத்தில் நிற்பதைப் பார்த்ததும் நீ மோட்டாரின் வேகத்தைக் குறைத்தாயா?'' என்று கேட்டான்.

''இல்லை. அவள் குபுக்கென்று குறுக்கே புகுவாள் என்று நான் கண்டேனா?''

''எதிரே அவள் விழுந்ததும் நீ பிரேக் போட்டாயா?''

''அவள் பாய்ந்து வருவதைப் பார்த்ததும் சில விநாடிகளுக்கு என் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன, பிராங்கோ!''

''தாமதமாகச் செயல்பட்ட மூளை அவசரத்தில் தாறுமாறாகவும் செயல்பட்டிருக்கலாம் அல்லவா? பிரேக்கை அழுத்துவதற்குப் பதிலாக நீ ஆக்ஸிலேட்டரையே அழுத்தியிருந்தாயானால்?''

''அப்படிச் சொல்ல முடியாது.''

''அப்படி நடக்கவில்லை என்றும் உறுதியாகக் கூற முடியாது, இல்லையா?''

'ஏன் என் அறிவைக் குழப்புகிறான் பிராங்கோ?' வில்லியா விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ''எனக்கு எதுவுமே சரியாக ஞாபகம் இல்லை. நான் என்ன செய்வேன்?'' என்று அழுகையினூடே கேட்டுத் தவித்தாள்.

தற்கொலை என்ற எண்ணத்தை அவள் உள்ளத்திலிருந்து அகற்றிவிட முற்பட்ட பிராங்கோ அதில் வெற்றி பெற்று விட்டதாக மகிழ்ந்தான். அதே சமயத்தில் அவர்களிடையே தளிர்விட்டிருந்த காதலை வாட்டி வதக்கியும் விட்டான். மனம் கசந்து போய் விட்டது வில்லியாவுக்கு.

நிம்மதியுற்ற மனத்துடன் இப்போது குனிந்து வில்லியாவை எழுப்பி நிற்க வைத்

தானே பிராங்கோ. "கவலைப்படாதே வில்லியா! ஒன்றும் நேர்ந்து விடாது உனக்கு. வழக்கு நீதிமன்றத்துக்குப் போனாலும் பிரமாதமான தண்டனை ஒன்றும் விதித்து விடமாட்டார்கள். வெள்ளையர் அல்லவா நாம்?"

தன்னைக் கலங்க அடித்தவனே இப்போது கனிவுடன் பேசியதை வில்லியாவினாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. அது அவளுக்குப் பிடிக்கவுமில்லை.

அது வரை பிராங்கோவை ஆட்கொண்டிருந்த அச்சம் நீங்கி விடவே அவனும் வில்லியாவின் நூதனத் தோற்றத்தைத் தெளிந்த மனத்துடன் ஆராய முடிந்தது.

இந்திய பாணி உடை கணிசமாக அவளை மாற்றி விட்டுத்தான் இருந்தது. உற்று நோக்கினான் அவளை. வெள்ளை உடல்தானா அது? அல்லது இலேசாகப் பழுப்பு நிறமும் படர்ந்திருக்கிறதா? உடைக்கேற்ப அந்தத் தேகத்தில் இந்திய ரத்தமும் ஓடுகிறதா? ஒப்பனை ஏதுமில்லாமலே மை பூசியது போல் அந்த விசால நயனங்களின் ஓரங்கள் கருமையாகக் காட்சி தந்தனவே, ஏன்? கண்ணின் மணிகளுடைய கருநீல நிறம், முழங்கால் அளவு நீண்டு வளர்ந்து தொங்கிய அடர்த்தியான கருங்கூந்தல், தடிப்பான அந்த உதடுகள்... ஐரோப்பியப் பெண்தானா இவள்?

"வில்லியா! உன் அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார்; உன்னை இங்கே அனுப்பி விட்டு?" என்று கேட்டான் பிராங்கோ.

"தூங்குகிறார்" என்றாள் அவள் எரிச்சலுடன். ஏனோ அவன் பார்த்த பார்வையும் விரல்களின் ஸ்பரிசமும் அவளுக்குக் கூச்சத்தை அளித்தன இப்போது.

"பாவம்! தாயன்பு என்பதையே அறியாதவள் அல்லவா நீ?" என்றான் பிராங்கோ பரிவுடன். பிறகு சட்டென்று ஏதோ நினைத்துக் கொண்டவன்போல, "ஆமாம், ரொம்ப நாட்களாகவே உன்னைக் கேட்க வேண்டுமென்று இருந்தேன். நீ குழந்தையாக இருந்த போதே உன்னை விட்டுப் பிரிந்து விட்டாளா உன் அம்மா?" என்று கேட்டான்.

"ஈன்றெடுத்த போதே இறந்து விட்டாள் என்பதைத் தவிர அவளைப் பற்றி ஒன்றுமே அப்பா கூறுவதில்லை. கேட்கும்போதெல்லாம் தட்டிக் கழித்து விடுவார்; பேச்சை மாற்றுவார். நாளடைவில் எனக்கே அலுப்புத் தட்டி அவளைப் பற்றி அறிந்து கொள்வதில் அக்கறையில்லாமலே போய் விட்டது."

பிராங்கோவின் சந்தேகங்கள் பறந்தோடின. 'சீ! கோவானியப் பெண்ணுக்குப் பிறந்தவளையா காதலித்தேன்? இவளையா திருமணம் செய்து கொள்ள முன் வந்தேன்? நல்ல வேளை தப்பிப் பிழைத்தேன்!' தக்க சமயத்தில் விழித்துக் கொண்டதற்காகத் தன்னைத்தானே வாழ்த்திக் கொண்டான் பிராங்கோ!

உடலின் வேட்கையைத் தணித்துக் கொள்ளக் கறுப்புத் தோலுடையவளை வேட்டையாடத் தயங்காத வெள்ளையன் விவாகம் என்றதும் கண்களில் விளக்கெண்ணெய் போட்டுக் கொண்டு கல்யாணப் பெண்ணின் பரம்பரையையே ஆராய்ந்தான். இதைப்பற்றி எண்ணிப் பார்த்தபோது பிராங்கோவுக்கே சிரிப்பு வந்தது.

6. ரகுநாத்

பஞ்சிமை நோக்கிச் சென்று கொண்டிருந்தது மோட்டார் லாரி. பின்புறம் ஒரு பக்கத்துப் பெஞ்சில் சரயூவும் வில்லியாவும் அருகருகே அமர்ந்திருந்தார்கள். முன்னும் ஆயுதம் தாங்கிய போர் வீரர்கள் மூவர் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவனே ராணுவ லாரியை ஓட்டிச் சென்றான்.

"பஞ்சிமுக்கு உன் பின்னோடு பிரயாணம் செய்ய நான் முன் வந்தது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா, வில்லியா?" என்று சரயூ கேட்டாள்.

ரகுநாத்துடனும் சரயூவுடனும் நெருங்கிப் பழகத் தன் தகப்பனுக்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அநேகம் என்பது வில்லியா அறிந்தது தான். அந்த அளவுக்கு அவ்விருவரையும் சிநேகம் பிடித்துக் கொள்ள அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அவளுக்கு உண்டானதில்லை. என்றாலும் அந்த இளம் காதலர்கள் நல்ல இதயம் படைத்தவர்கள் என்பதில் அவளுக்கு எள்ளளவும் சந்தேகமிருக்கவில்லை.

ஆனபோதிலும்கூட பெட்ஸி மனுவல் கிராமத்தைச் சேர்ந்த ஒருத்தியின் மரணத்துக்குக் காரணமான தனக்கு — ஒரு போர்ச்சுகீசியப் பெண்ணுக்கு—உதவச் சரயூ சுலபமாகத் தீர்மானிப்பாள் என்று வில்லியா எதிர்பார்க்கவே இல்லை.

பிராங்கோ தகுந்த காவலுடன் அவளைப் பஞ்சிமுக்குத் திருப்பி அனுப்ப முடிவு கட்டிய போது அவளுக்குத் துணையாகத் தான் செல்லத் தாய்ச் சரயூ தானாகவே மனமுவந்து கூறியது கேட்டு வில்லியா வியப்பிலாழ்ந்தாள்.

"தங்கமான உள்ளம் உனக்கு" என்றாள் வில்லியா இப்போது. "எந்த விதமாக நன்றி தெரிவிக்கப் போகிறேன் நான்?"

"காரணத்தோடுதான் உன்னோடு புறப்பட்டு வந்திருக்கிறேன்!" என்ற சரயூ அவள் காதோடு காதாக, "இந்த லாரியைப் புரட்சி வீரர்கள் சிலர் மறைந்திருந்து தாக்கப் போகிறார்கள்" என்றாள்.

"என்ன? என்ன?" தொண்டையிலேயே சிக்கிக்கொண்டன கேள்விகள் வில்லியாவுக்கு. திகைப்பு நீங்கி வீரிட்டு அலறப் போன அவள் வாயை அழுத்திப் பொத்தினாள் சரயூ. "இரையாதே! உனக்கு ஓர் ஆபத்தும் நேராதென உறுதி அளிக்கிறேன்!"

இரும்புப் பிடியிலிருந்து விடுபடத் திமிறினாள் வில்லியா.

"இதோ பார்! நான் சொல்லப் போவதைச் சற்று அமைதியாக இருந்து கவனமாகக் கேள். பிறகு உன் இஷ்டம் போல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள். கூச்சல் போடு; லாரியைத் திரும்பவும் பெட்ஸிமனுவலுக்கே விடச் சொல்லு. உன் விருப்பம்போல் நடந்து கொள். கவலை இல்லை."

வில்லியாவின் பிடிவாதம் தளர்ந்தது. முரண்டு பிடிப்பதை நிறுத்தி அடங்கிப் போய் விட்டாள் அவள். அவள் கரங்கள் மட்டும் இலேசாக நடுங்குவதைக் கவனித்த சரயூ அவற்றைப் பற்றித் தடவிக் கொடுத்துக் கொண்டே பேச ஆரம்பித்தாள்.

"நானும் தலைமறைவாகத் திரியும் தோழர்கள் இருவரும் இன்று காலை பெட்ஸி மனுவலை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.

வனாந்திரமான பிரதேசத்தைக் கடந்து சற்றுத் தூரம் வந்ததும் சாலை தென்பட்டது. அதிலிறங்கி விரைந்தோம். தொலைவில் ஒரு பெண் பாதையின் குறுக்கே விழுந்து கிடப்பதைப் பார்த்து விட்டுப் பரக்கப் பரக்க ஓடினேன். கிட்டத்தில் நெருங்கிய பின்னர்தான் லக்ஷ்மியை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அண்டம் கிடுகிடுக்க அலறினேன். அழுதேன், புலம்பினேன். இதற்குள் உடன் வந்த மற்ற இருவரும் ஜீப் மரத்தில் மோதிக் கிடப்பதையும் உள்ளே பெண்ணொருத்தி மயங்கி விழுந்திருப்பதையும் பார்த்து விட்டுக் கூப்பாடு போட்டார்கள். கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து வந்தால் நீ நினைவிழந்து விழுந்திருந்தாய் அங்கே. அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி எனக்கு.

''எப்படியோ மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, கையிலிருந்து நழுவித் தரையில் விழுந்திருந்த தோல் பெட்டியைத் திறந்தேன். அதனுள்ளிருந்த மாற்றுடைகள் இரண்டொன்றில் ஒரு புடவையை உருவி எடுத்தேன். லக்ஷ்மியின் மீதெல்லாம் ஒரே ரத்தக் காயங்கள். புடவையை அவள் மீது விரித்த பிறகு இறந்துபோன லக்ஷ்மியையும் மூர்ச்சையாகிக் கிடந்த உன்னையும் தூக்கி வர உடன் வந்த நண்பர்களின் உதவியை நாடினேன்.


'' பெட்னிமதுவை அடையு முன்னரே தோப்பில் கிராம மக்கள் குழுமி இருப்பதைப் பார்த்தேன். அப்போதுதான் அவர்கள் கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் விவரம் தெரியவந்தது எனக்கு. கிராம மக்களின் பெருங் கூட்டம் எங்களைச் சூழ்ந்து விசாரிக்கத் தொடங்கியது. விஷயமறிந்ததும் அந்தக் கணமே உன் உயிரைப் பறித்துவிடத் திட்டம் போட்டார்கள், சில தீவிரவாதிகள். போர்ச்சுகீஸியக் கொடுங்கோன்மையை அந்நாள் வரை அவர்கள் பொறுத்து வந்த போதிலும் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்த கோபம் கிராமத்திலிருந்து அவர்களை வெளியேற்றியதும் எரிமலையாக வெடித்து அனலைக் கக்கியது. ஆயுதம் தாங்கிய வீரர்களிடம் ஆத்திரத்தைக் காண்பித்துக் கொள்ளத் துணிவில்லாத அவர்கள் அபலை ஒருத்தியைப் பழி வாங்க எண்ணினார்கள். வேண்டுமென்றே தான் நீ லக்ஷ்மியின் மீது ஜீப்பை ஏற்றியிருப்பாய் என்று வாதாடினார்கள். எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. வெள்ளை உடலின் குருதியைச் சிந்தி வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற அவர்களுடைய வெறி கணத்துக்குக் கணம் அதிகரித்துக் கொண்டு போகையில் சட்டென்று ஒரு யோசனை உதித்தது எனக்கு. ரகுநாத்தின் பெயரைச் சொன்னேன். அவ்வளவுதான்; அடுப்பிலிருந்து இறக்கி வைத்த பாலைப் போல அத்தனை பேரும் அடங்கிப் போனார்கள்.

''கோவாவை விடுவிக்க ரகசியமான நடவடிக்கைகள் எடுத்து வரும் கூட்டத்தினருள் அவனொரு முக்கியஸ்தன் என்பது அவர்கள் அனைவருக்கும் தெரிந்த ரகசியம். மபஸாவில் நடக்கும் புரட்சியாளர்களின் அந்தரங்கக் கூட்டத்துக்கு அவன் போயிருப்பதாயும் அன்று மாலைக்குள் நிச்சயம் திரும்பி வருவானென்றும் அவன் கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் இது போன்ற பயங்கரக் காரியங்களில் ஈடுபடத் துணியக் கூடாதென்றும்

நான் கூறியதை அனைவரும் ஒருமுகமாக ஆமோதித்தார்கள். உன் மயக்கம் தெளிந்த பிறகு உன் கட்சியை எடுத்துச் சொல்லுவதற்கு உனக்கும் சந்தர்ப்பம் அளித்து நீதி விசாரணை செய்வதையே ரகுநாத் விரும்புவான் என்ற என் அபிப்பிராயத்தை அனைவரும் ஒப்புக் கொண்டார்கள்; விலகி எனக்கு வழி விட்டார்கள்.

"பிராங்கோவைப்பற்றி உன் அப்பா நேற்று இரவு என்னிடமும் ரகுநாத்திடமும் சொல்லியிருந்தார். பெட்னிமறைவுக்கு வந்திருக்கும் போர்ச்சுகீசிய ராணுவத் தலைவன் பெயரும் பிராங்கோதான் என்றறிந்ததும் எனக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. அவனைச் சந்திக்கத்தான் நீ புறப்பட்டு வந்திருக்கிறாய் என்பதை ஊகிப்பது கஷ்டமாகவில்லை எனக்கு. உடனே ராணுவ வைத்தியரின் சிகிச்சை கிடைக்கும் என்பதால் பிராங்கோவிடம் உன்னைக் கொண்டு போகச் செய்தேன். பிறகு அவனுடன் வாதாடி லஷ்மியின்—தகனக் கிரியை நடக்குமுன்னும் சமாதியை இட்டு வரவும் சம்மதம் பெற்றேன்.

"இப்போது நீயே சொல்லு. கிராம மக்களுக்கு நான் கொடுத்த வாக்குறுதி என்ன ஆவது? உன்னை விசாரித்து ரகுநாத் நீதி வழங்குவான் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். உணர்ச்சி வசப்பட்டிருக்கும் அவர்களுக்கு ஏமாற்றமளித்தால் ரகுநாத்தின் உயிருக்கே கூட ஆபத்து நேரலாம்!"



"என்னை என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?" என்று அழமாட்டாத குறையாகக் கேட்டாள் வில்லியா.

"ரகுநாத் திரும்பி வந்து விட்டான். ஒரு மணி நேரத்துக்கு முன்னர்தான் அவனைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன் நான். கானகத்தின் மத்தியில் கிளர்ச்சியாளர் பலருடன் நம் வருகைக்காகக் காத்திருக்கிறான். அவனிடம் நடந்ததைக் கூறு. உன்னை விடுவித்து அழைத்துப் போய் உன் அப்பாவிடம் சேர்ப்பித்து விடுவான்."

"எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய், எனக்குத் தீங்கு ஒன்றும் நேராது என்று?....."

"தங்கைக்குத் தண்டனை விதிக்க எந்தத் தமையனுக்கு மனம் வரும்?" என்று கேட்டான் சரயு.

படமெடுத்து ஆடும் பாம்பைப் போல விசுக்கென நிமிர்ந்தாள் வில்லியா. "என்ன சொல்லுகிறாய்?"

"ஆமாம், வில்லியா! உன்னிடமிருந்து ரொஸாரியோ அதை மறைத்து வைப்பது சரியல்ல என்பதே பல நாட்கள் யோசித்து நாங்கள் கண்ட முடிவு.

"கள்ளக் கடத்தல் வியாபாரம் ரகுநாத்தின் பரம்பரைத் தொழில். ரகுநாத்தின் தாத் தகப்பனாரும் எங்கள் இருவரையும் போலவே படகில் போவார்கள், வருவார்கள். அவர்களைக் கண்காணிக்கச் செல்லுவார் ரொஸாரியோ. நடுக் கடலில் அவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள். ரகுநாத்தின் அப்பா திடீரென்று அகால மரணமடைந்ததும் அந்த இளம் விதவையின் மீது ரொஸாரியோவுக்கு அனுதாபம் பிறந்தது. நாளடைவில் அவர்களிடையே பரிணமித்த காதலின் பயனாகப் பிறந்தவள் நீ!"

வில்லியா மௌனத்தில் ஆழ்ந்து விட்டது கண்டு, "உன்னைத் துயரத்தில் ஆழ்த்தி விட்டேனா நான்? அப்படியானால் என்னை மன்னித்து விடு?" என்றான் சரயு.

"அதொன்றும் இல்லை; இதைப்பற்றித்தான்" என்றாள் வில்லியா. "என்னை நானே இந்த விநாடியில்தான் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறேன்" என்றபோது அவள் குரலில் குழப்பம் நீங்கப் பெற்ற நிம்மதி நிலவுவதாகப் பட்டது சரயுவுக்கு.

சாலை ஓரத்திலிருந்த மரங்களின் மறைவிலிருந்து படார் படாரென்ற ஓசை எழுந்தது. லாரிகளின் டயர்களில் குண்டுகள் பாய்ந்தன. சக்கரவட்டமாக ஒரு முறை சுழன்று வந்து பாதையின் நடுவே நின்றது லாரி. அதன் முன்புறத்திலிருந்தவர்களும் மரங்களின் மறைவில் ஒளிந்திருந்தவர்களும் குண்டுகளைப் பரிமாறிக் கொண்டிருக்கையில் சரயு, வில்லியாவையும் தன்னுடன் குதிக்கச் செய்து அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினான்.

அந்த யுத்தத்தின் முடிவு என்ன ஆயிற்றோ, அவர்களுக்குத் தெரியாது. அதனை அறிந்து கொள்வதற்காக அவர்கள் காத்துக் கொண்டிருக்கவில்லை. காட்டினுள்ளே புகுந்து போய்ச் சரயு அந்தப் பிரதேசத்தில் ஓடினான். இருள் கவிந்து கொண்டு வந்த போதிலும் அவள் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மங்கிய ஒளியிலும் கூடத் தயங்காது ஓடும் காட்டுப் பூனையா அவள்? அவள் இழுத்த இழுப்புக்குத் தக்கவாறு விரைவது பெரும்பாடாகப் போய் விட்டது வில்லியாவுக்கு.

மரங்களினூடே எப்படி எப்படிசெல் லாமோ வளைந்து திரும்பி வெகு தூரம் வந்து விட்டார்கள் அவர்கள். சற்றுத் தொலைவில் தீவர்த்திகளின் வெளிச்சம் தெரிந்தது. அந்த ஒளியில் மக்கள் சிலர் அங்கே கூடியிருப்பதும் புலனாயிற்று. சரயுவுடன் அன்று காலை பெட்னி மறைவுக்குத் திரும்பிய இருவரும், "இதோ வந்து விட்டார்கள்!" என்று கூவியபடியே அவர்களை எதிர்கொண்டு அழைத்துப் போனார்கள். தாழ்ந்து தழைத்திருந்த ஒரு மரத்தின் கிளையின்மீது ரகுநாத் அமர்ந்திருந்தான்.

'இவனா?' என்று சிந்திக்கத் தொடங்கினாள் வில்லியா. 'கொள்ளைக் கூட்டம் ஒன்றின் தலைவனைப் போலத் தோற்றமளிக்கும் இவனா என் தமையன்? நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாக வாழும் இவர்களில் ஒருவனா என் அண்ணன்! சே! இருக்கவே இருக்காது! இதெல்லாம் ஏதோ சூழ்ச்சி! என்னை மயக்கி இழுத்து வரச் சரயு கையாண்ட தந்திரம்! வில்லியாவின் உடலில் ஓடிய ஐரோப்பிய ரத்தம் கொதிப்படைந்து மேனி முழுதும் பாய்ந்தது. கோப மிகுதியில் அவள் செவிகள்

சிவந்தன, பற்கள் இறுகின. 'வெட்டிச் சாய்க்கட்டும், கொன்று குவிக்கட்டும், பரவாயில்லை. அதற்காக இவர்களிடம் அடிபணிய மாட்டேன், உயிர்ப் பிச்சை அளிக்குமாறு கெஞ்ச மாட்டேன்.'


பிராங்கோவிடம் குழைந்து கொடுத்த அதே நெஞ்சம்தான் இவர்களைக் கண்டதும் கோபாக்கினியால் சூழப்பட்டுக் குமுறிக் கொந்தளித்தது!

''என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தீர்கள்?'' என்று அதிகாரத் தோரணையில் கேட்டு ரகுநாத்தையே திடுக்கிடச் செய்தாள் வில்லியா.

''நீதி விசாரணைக்கு!'' என்றான் அவன் வியப்பை அடக்கிக் கொண்டு.

''நீதியாம், நீதி! காட்டில் பதுங்கித் திரியும் கரடிகளாகிய உங்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியுமா? யார் யாரை விசாரிப்பது? நீதிபதியாக உங்களை நீங்களே அமர்த்திக் கொள்வதா? தீர்ப்புக் கூற உங்களுக்கு ஏது உரிமை? விசாரணை நடத்த வேண்டுமானால் நீதிமன்றத்துக்குப் போவோம். அங்கே சட்டப்படி நடவடிக்கை எடுங்கள்!''

ரகுநாத்தின் பிரமிப்பு அதிகமாயிற்று. சரயூ தன் கட்டளைப்படி நடந்து கொள்ளவில்லையா? இவளிடம் பிறப்பின் ரகசியத்தைச் சொல்லவில்லையா? இவளைக் காப்பாற்றவே முற்பட்டிருக்கிறேன் நான் என்பதைக் கூறவில்லையா? சரயூவும் திடுக்கிட்டுப் போய் வில்லியாவை அணுகினாள். தன்னைத் தொடப் போன அவளிடமிருந்து சட்டென விலகி அப்பால் நகர்ந்தாள் வில்லியா.



''இங்கே நீங்கள் எந்த முடிவுக்கு வந்தாலும் அது என்னைப் பாதிக்காது. வழக்கறிஞர் வேண்டும் என் கட்சியை எடுத்துச் சொல்ல. விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற வேண்டும்!''

ரகுநாத் சிரித்தான் பயங்கரமாக. அவனுடைய கோபத்தையும் கிளறி விட்டது வில்லியாவின் சொற்கள்.

''போர்ச்சுகீசிய நீதிமன்றங்கள் எங்களுக்கு நியாயம் வழங்கும் என நினைப்பது நெருப்புக்குள் விரலை விட்டு விட்டு அது சுடாது என்று எதிர்பார்ப்பது போலத்தான். அடக்குமுறை ஓர் அளவுக்கு அதிகமாகி விட்டால் நீதி மன்றங்கள் வெறும் கேலிக் கூத்தாகி விடுகின்றன வில்லியா! இன்று கோவாவில் கூட்டம் கூட்டமாகக் கைது செய்யப்படுபவர்களில் எத்தனை பேர்கள் நியாய ஸ்தலத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்? தவறிப் போய் அங்கே போய்ச் சேர்ந்தாலும் வக்கீலை அமர்த்திக் கொள்ளும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டுகிறதா? அல்லது எங்கள் கட்சியை எடுத்துக் கூற வழக்கறிஞர்கள் யாரேனும் முன் வரத்தான் செய்கிறார்களா? அப்படியே யாரேனும் துணிந்து எங்களுக்காக வாதாட முற்பட்டால் பிறகு அவன் தன் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியுமா, போர்ச்சுகீசியரின் அழகான ஆட்சியில்? நாட்டின் விடுதலைக்குப்போராடும் என் போன்றோருக்கு நியாயம் என்பதில் நம்பிக்கையே போய் விட்டது.''

''சிம்மராஜன் கலைத்துச் சென்ற கனியை உட்கொள்ள ஒன்றுசேரும் நரிக் கூட்டம் தான் உங்களைப் பார்க்கும்போது நினைவுக்கு வருகிறது எனக்கு'' என்றாள் வில்லியா காரசாரமாக. ''ஒரு பெண்ணை இப்படிப் பலவந்தமாக இழுத்து வந்திருக்கும் நீங்கள் மனிதர்களே அல்ல; வன விலங்குகள்தான்!''

''நீ பேசவில்லை வில்லியா! உன் உடம்பில் ஓடும் போர்ச்சுகீசிய ரத்தம் பேசுகிறது! வனவிலங்குகளாம்! நரிக் கூட்டமாம்! கேள், வில்லியா! ஆறு வருஷங்களுக்கு முன்னால் பாரதத்தின் ஒன்பதாவது சுதந்திர தினத்தன்று காந்திய அடிப்படையில் அஹிம்சை முறையில் நால்வர் சத்தியாக்கிரகம் செய்தார்கள். என்ன நடந்தது? போர்ச்சுகீசிய வெள்ளைச் சிப்பாய்கள் கரங்களில் துப்பாக்கி ஏந்தி வந்தார்கள், அணிவகுத்து நின்றார்கள். நிராயுதபாணிகளாய்ச் சாந்தமே உருவமாய் நின்று கொண்டிருந்த அந்த நால்வர் மீதும் குண்டுகளைப் பொழிந்து சுட்டு வீழ்த்தினார்கள். கணப் பொழுது கூடத் தயங்கவில்லை. இமைகளைக்கூடக் கொட்டவில்லை அந்த வெள்ளையர்கள்! நாகரிக மிக்கவர்கள் அல்லவா? கண்மூடித்தனமாகக் கொலைகளைப் புரிவதுதானே உங்கள் நாகரிகத்தின் லட்சணம், லட்சியம்! சரித்திரம் பேசுகிறது, வில்லியா உங்கள் அழகான நாகரிகத்தைப் பற்றி!''


பதில் கூறத் தோன்றாத வில்லியாவுக்கு அழுகை பொத்துக் கொண்டுவந்தது. ''கலகக்காரர்கள்! கொள்ளைக்காரர்கள்! புரட்சிக்காரர்கள்'' என்று வசை பாடித் தீர்த்தாள் அவள்.

''உண்மை! உண்மை!'' என்று ஆமோதித்தான் ரகுநாத். அப்படி எங்களை மாற்றியது போர்ச்சுகீசிய ஆட்சிதான். காந்திய நெறியைக் கடைப்பிடித்த போதிலும் எங்களைக் கொன்று குவிக்கத் தயங்காத போர்ச்சுகீசியரின் கல் மனம் எங்களைக் கலகக்காரர்களாக்கியது. இதயமற்ற இயந்திரங்களாக இயங்கும் வெள்ளையரிடம் சத்தியாக்கிரகமும் அஹிம்சைப் போரும் எடுபடாது என்று உணர்ந்த பிறகுதான் நாங்களும் உருமாறினோம்.

ஏளனம் கலந்த வெறுப்புடன் சிரித்தாள் வில்லியா. ''இரண்டொரு பாலங்களைப் பெயர்த்து விட்டால், நாலைந்து தந்திக் கம்பங்களை வெட்டிச் சாய்த்து விட்டால் வெள்ளையனை வெளியேற்றிவிடலாம் என்று எண்ணுகிறீர்களா? உங்களை நசுக்கி எறிய அவர்களுக்கு எவ்வளவு நேரமாகும்?''

''மேலே மேலே உண்மைகளையே கூறிக் கொண்டு போகிறாய் நீ! பாலத்தைத் தகர்த்ததாலோ ஓர் ஆயுதக் கிடங்கில் வெடி மருந்து வைத்துக் கொளுத்தியதாலோ நாங்கள் வெற்றி பெற்றுவிடப் போவதில்லை. மாறாக ஆக்கிரமிப்பாளரின் ஆத்திரத்தையே அதிகமாக்குவோம். அதுவேதான் எங்கள் நோக்கமும். அடக்குமுறையை அவர்கள் மேலும்

தீவிரமாக்க நாங்கள் தூபம் போடுகிறோம். நீ கூறியது போல, எங்களை அவர்கள் நசுக்குவார்கள், சித்திரவதை செய்வார்கள். நாங்கள் அதைச் சந்தோஷத்தோடு சகிப்போம், கோவாவின் எல்லைக்கு அப்பால் தாய்நாட்டு துன்னோரின் கண்கள் திறக்க வேண்டும் என்பதற்காக! நாங்கள் இங்கே படும் அவதி பற்றிய செய்திகள் ஓரளவுக்கேனும் அவர்கள் செவிகளுக்கு எட்டாதா? அதைக் கேட்டு இரங்கி எங்களை விடுவிக்க முற்படமாட்டார்களா என்ற நம்பிக்கையிலே வாழ்கிறோம். புரிகிறதா உனக்கு? எவ்வளவுக் கெவ்வளவு உங்கள் அதிகாரவெறி அதிகமாகிறதோ, எத் தனைக்கெத்தனை எங் களை உங்கள் காலடி களில் போட்டு மிதித் துத் துவைக்கிறீர் களோ அத்தனைக் கத் தனை நாங்கள் விடுதலை யடையும் நன்னாளும் அருகே நெருங்கிக் கொண்டிருப்பதை மறக்கவில்லை. ஆகவே தான் அவதிக்குள்ளாக ஆசைப்படுகிறோம், துன்பப்படத் தயாராக இருக்கிறோம். உயிரைத் திருணமாக மதித்து அதைத் தாய்நாட்டின் விடுதலைப் பணியிலே தியாகம் செய்து விடத் தயங்காதிருக்கிறோம்!''



ஆவேசமான பேச்சைக் கேட்டு அசையாது நின்று விட்டாள் ஸில்வியா. அவள் மட்டுமென்ன, அங்கு கூடியிருந்த ரகுநாத்தின் புரட்சித் தோழர்கள் அனைவருமே உணர்ச்சி மிகுதியால் திணறிக் கொண்டிருந்தார்கள். இனவெடுத்த தோள்களுடனும் பரபரக்கும் கரங்களுடனும் அவர்கள் போராடத் துடித்துக் கொண்டிருந்தார்கள். அச் சந்தர்ப்பத்தைத் தனக்கும் ஸில்வியாவுக்கும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை ரகுநாத்.

''தோழர்களே! நமக்கு விடிவு காலம் நெருங்கி விட்டது. சிறையிலே போர்ச்சுகீசியரின் சித்திரவதைக்கு உள்ளாகி பொன்னுடன் உயிர் துறந்தது உங்களுக்குத் தெரியும். அதை அடுத்து நம் அனைவரையுமே ஒழித்துக் கட்டத் துருப்புக்கள் வந்து குவிந்திருக்கின்றன கோவாவில். அதே நேரத்தில் சூயெஸ் கால்வாய் வழியாகப் போர்ச்சுகீசியப் போர் வீரர்களை ஏற்றி வரும் கப்பல் செல்லக்கூடாதென எகிப்தியர்கள் தடை விதித்து விட்டார்கள் என்ற தகவலும் கிட்டியிருக்கிறது. மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தி! பாரதத் துருப்புக்களைக் கோவா எல்லைப்புறத்துக்கு அனுப்பி வைப்பதென்று புது தில்லியில் முடிவாகி விட்டதாய்த் தெரிய வருகிறது. விடுதலை பெறும் வேளை நெருங்கி விட்டது. தோழர்களே! உங்கள் கடமைகள் என்னவென்று உங்களுக்குத் தெரியும். போங்களெழுங்கள். விரைந்து செல்லுங்கள்! ஜெய் ஹிந்த்!''

''ஜெய் ஹிந்த்! ஜெய் ஹிந்த்!'' என்ற கோஷங்கள் அங்கே வானளாவின. பூமியடியில் புதைத்து வைத்த பெட்டியில் சேமித்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் விரைவாக விநியோகமாயின. ஸில்வியாவை அடியோடு மறந்து விட்டுத் தங்கள் கடமைகளை நிறைவேற்றப் பிரிந்தோடினார்கள்.

ஸில்வியாவுக்கு எதிரே ரகுநாத் வந்து நின்று கொண்டான். உற்று நோக்கினான். உள்ளத்தை ஊடுருவிச் சென்றது அவன் கூரிய பார்வை. அங்கே குடிகொண்டிருந்த போர்ச்சுகீசிய மனப்பான்மையைக் குத்திக் கொன்றே விட்டது. அதே நேரத்தில் உறங்கிக் கொண்டிருந்த சகோதர பாசத்தையும் தூண்டிவிட்டு விழித்தெழச் செய்தது.

''அண்ணா!'' என்று அலறினாள் ஸில்வியா.

ரகுநாத் சரயூ ஸில்வியா மூவருமே கரம் கோத்துக் கொண்டு 'ஜெய் ஹிந்த்' என்று எழுப்பிய வீர முழக்கங்கள் அந்தக் கானகத்தின் எட்டுத் திக்குகளிலும் பரவி எதிரொலித்துக் கொண்டிருந்தன.......

7. கிம்பா

மகனின் பிரேதத்துக்குக் கொள்ளி வைத்து விட்டுத் திரும்பி நடந்தார் சம்பாஜி. அந்த ஒற்றைக் கால் மனிதருடைய நடையிலே முதல் நாளிருந்த கம்பீரமில்லை. தள்ளாடினார். கிராமத்தின் எல்லையை அவர் அடைந்தபோது 'யாரங்கே? நில்' என்ற குரல் கேட்டது. காவலிருந்த கிம்பா அருகே வந்து அவரை உற்றுப் பார்த்தான். ''யார் சம்பாஜியா? உங்களைச் சேர்ந்தவர்களெல்லாம் தோப்பிலே இருக்கிறார்கள். அங்கே போங்கள்'' என்றான் அண்டொனி கிம்பா.

தம்மையுமறியாமல் பழக்கம் காரணமாகத் தாம் கிராமத்துக்குள் புக எண்ணியதை அப்போதுதான் உணர்ந்தார் சம்பாஜி. மகனைப் பறி கொடுத்த பிறகு அறிவே மழுங்கி விட்டிருந்தது அவருக்கு.

திரும்பி நடக்கப் போன அவர் திடுமெனத் தரையில் உருண்டார். மண்ணை ருசி பார்த்த பின்னர்தான் கிம்பாவுக்கு அருகே இருந்த வெள்ளைச் சிப்பாய் தம் ஊன்று கோலைத் துப்பாக்கியின் அடிவாரத்தினால் விளையாட்டாகத் தட்டி விட்டிருப்பது தெரிந்தது அவருக்கு. ஆம், வெள்ளையனுக்கு அது விளையாட்டுதான்! இன்னொரு சமயமாயிருந்தால் அந்த வீரக் கிழவருடைய கண்கள் அனலைக் கக்கி இருக்கும். செத்தாலும் பரவாயில்லை என்று கைத்தடியின் துணை கொண்டே அந்தச் சிப்பாயை நன்றாகச் சாத்தியிருப்பார்.

ஆனால் இப்போது அவருக்குப் போராடும் திராணியில்லை. நடைப்பிணம் அவர். மெல்ல எழுந்து நின்றார். தடியை எடுத்துக் கொடுத்து உதவக் கிம்பா கீழே குனிந்தான். அந்தத் தடியின் மீது வெள்ளையனுடைய பூட்ஸ் கால் பதிந்து அழுத்தியது. கணப் பொழுது அவனை முறைத்துப் பார்த்து விட்டு விலகிக் கொண்டான் கிம்பா. கிழவர் தட்டுத் தடுமாறித் தடியை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தார். போர்ச்சுகீசியனுடைய துப்பாக்கி வெடித்தது. சம்பாஜியின் காலருகே தரையில் தோட்டா பாய்ந்தது. இயல்பாக ஒரு முறை துள்ளினார் சம்பாஜி. போர்ச்சுகீசியன் சிரித்தான். சிரித்துக் கொண்டே மேலே மேலே துப்பாக்கியிலிருந்த ரவைகளை அவர் காலடி

யில் வெடித்துத் தீர்க்க முற்பட்டான். ஆபத்து நெருங்கிற சமயத்தில் தோன்றும் இயற்கையான வேகத்தோடு குண்டுகளிடமிருந்து தப்ப சம்பாஜியின் கால் துள்ளிக்குதித்தது. இரண்டு கரங்களாலும் தடிகளைப் பற்றிக் கொண்டு அந்த ஒற்றைக் கால் மனிதர் எம்பிக் குதித்து ஆடுவது அந்தப் போர்ச்சுகீஸியனுக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது. துப்பாக்கி வெடிக்கும் சத்தத்துக்கும் மேலாக அவன் வயிறு குலுங்க நகைக்கும் ஒலி எழுந்தது.


இம்பாவினால் இதனைப் பொறுக்கவே முடியவில்லை. பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டே போர்ச்சுகீஸியனின் தோள்களைப் பற்றித் தள்ளித் தன்னை நேருக்கு நேராகப் பார்க்குமாறு திருப்பினான். இரும்புக்கரத்தை முஷ்டியாக்கி அவன் முக வாயைத் தாக்கினான். கருமானின் சுத்தியைப் போல் விழுந்தது அந்தக் குத்து. நான்கு முறைகள் பம்பரமாகச் சுழன்ற வெள்ளைத் தேகம் தடாலென்று தரையைத் தாக்கியது.

அவ்வளவுதான்; அங்கே ஒரே கூச்சல் களேபரம். ரகளையைக் கேட்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தான் பிராங்கோ. வெள்ளையனை நீக்ரோ தாக்கத் துணிந்த விவரத்தைத் தெரிந்து கொண்டதும் அவன் தேகம் முழுவதும் ஆத்திரத்திலே பதறியது. கோபத்தில் நடுங்கும் கரங்களுக்கு உறை போட்டுக் கொண்டு இம்பாவின் கன்னத்திலே அறைந்தான் அவன். கறுப்புத் தோலை வெறுங் கையால் தொடுவதற்குக்கூட அவனுக்கு இஷ்டமில்லை!

''இங்குள்ள நீக்ரோக்கள் அனைவரையும் சுவரோடு சுவராக ஒட்டினாற் போல் நிற்க வைத்துச் சுட்டுக் கொன்று விடுவேன்!'' தொண்டை கிழியக் கத்தினான் பிராங்கோ.

''அதைத்தான் தாராளமாகச் செய்து கொண்டிருக்கிறீர்களே அங்கோலாவில்!'' என்றான் இம்பா அமைதியாக.

இம்பாவின் உயிர் அந்தக் கணமே பிரிந்திருக்கும்; ஜீப் ஒன்று வேகமாக வரும் ஒலி அவர்களுக்கு மிகச் சமீபத்தில் கேட்டுப் பிராங்கோவின் கவனத்தைத் திருப்பியிருக்கவில்லையானால். ஜீப்பிலிருந்து கீழே குதித்து இறங்கியவன் பிராங்கோவைக் காட்டிலும் பதவியில் உயர்ந்தவன். திடுக்கிடச் செய்யும் தகவல்களைக் கொணர்ந்திருந்தான் அவன்.



இந்தியத் துருப்புக்கள் கோவாவின் எல்லைப் புறங்களில் குவிகின்றன. எந்த விநாடியில் அவர்கள் கோவாவை மீட்க முன்னேறுவார்களோ தெரியாது. இந்தச் சமயத்தில் அந்தக் காலனிக்குள்ளேயே வாழும் கலகக்காரர்கள், பயங்கரவாதிகள் போர்ச்சுகீஸிய ஆட்சியைக் குலைத்துப் பாரத சர்க்காருக்கு உதவப் பார்க்கிறார்கள். போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்வது அவர்கள் முதல் நோக்கம்!

''நம்முடைய ராணுவத்தின் நடமாட்டம் இதனால் குறைந்து போகும். இந்தியத் துருப்புக்களின் முன்னேற்றத்தைத் தவிர்க்கப் பின்னால் நாமே பல பாலங்களைத் தகர்க்க நேரிடலாம். ஆனால் இப்போது சாலை, ரயில் பாலங்களைப் பாதுகாப்பது உடனடியாக நாம் செய்ய வேண்டிய காரியம். இல்லையானால் கோவாவைக் கட்டிக் காக்க நாம் போட்ட திட்டங்களெல்லாம் குட்டிச்சுவராகிப் போகும்!''

இருவருமாக உத்தரவுத் தாள்களைப் பிரித்து ஆராய்ந்து விட்டுச் சிப்பாய்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தார்கள். பாலங்களின் பாதுகாவலர்களான அவர்களை லாரிகள் ஏற்றிச் சென்று ஆங்காங்கே இறக்கி விடப் புறப்பட்டன.

இம்பாவை ஒழித்துக் கட்டும் காலம் வரவில்லை பிராங்கோவுக்கு. நல்ல மொழிபெயர்ப்பாளன் தனக்கு இந்தப் பாழாய்ப் போன இடத்திலே எந்த விநாடியில் தேவைப் படுவானோ, யார் கண்டது?

ஜீப்பை இம்பா ஓட்டி வர பிராங்கோ பல பாலங்களுக்கும் நேரில் சென்று மேற்பார்வை யிட்டான். ஒவ்வொரு பாலத்தருகிலும் வண்டியை நிறுத்தி இறங்கிச் சிப்பாய்களை விசாரித்தான். உஷாராயிருக்குமாறு அவர்களை எச்சரித்து விட்டு அடுத்த இடத்துக்குப் போனான்.

மபூஸாவுக்கும் பஞ்சிமுக்கும் இடையே ஓடிய சாலையில் ஜீப் விரைந்தது. மாண்டவி நதியை நெருங்கும் போதே ஏதோ சரியாக இல்லை என்று தோன்றியது பிராங்கோவுக்கு. ஜீப்பின் மோட்டாரை நிறுத்தச் செய்தான். சத்தமில்லாமல் சற்றுத் தூரம் போய்த் தன்னால் நின்று விட்டது அது. கீழே இறங்கி, சாலையோரமாகப் புல்தரையில் ஓசைப்படுத்தாமல் நடந்தார்கள் இருவரும். வரவர பிராங்கோவுக்கு ஏற்பட்ட சந்தேகம் வலுவடைந்தது. பாலத்தின் மேல் சிப்பாய்களின் நடமாட்டத்தைக் காணுமே, ஏன்? பிரகாசமான பெரிய டார்ச் லைட்டின் வெளிச்சம் ஆற்று நீரையும் சுற்றுப் புறத்தையும் வலம் வந்து கொண்டே இருக்க வேண்டுமே? இங்கே அந்தகாரம் சூழ்ந்திருப்பது எதனால்? ஆற்றங் கரையை அணுகியதும் அவன் கால்களில் ஏதோ தடுக்கியது. குனிந்தான் பிராங்கோ. தன் கையிலிருந்த டார்ச் லைட்டை எடுத்து ஒளியை அதிகமாகச் சிந்த விடாமல் விரல்களால் மூடிக் கொண்டு அதைப் பொருத்தினான். கீழே சிப்பாய் ஒருவன் மண்டையில் பலமாக விழுந்த அடியினால் மயங்கிக்கிடப்பது தெரிந்தது. நாலடி தூரத்தில் இன்னொருவன் வாயில் துணி அடைக்கப்பட்டுக் கயிற்றினால் கட்டுண்டு கிடந்தான். இருவரையும் இன்னாரென்று உடனடியாக அடையாளம் கண்டு கொண்டான் பிராங்கோ. பிரேதக் களை நிறைந்த லக்ஷ்மியின் முகம் அவனெதிரே அந்தரத்தில் மிதந்தது. சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு மேலே ஆக வேண்டிய

வற்றைப் பற்றிச் சிந்தித்தான். இந்தத் தருணத்தில் ஆற்றின் அக்கரையை ஒட்டினாற் போல் சலசலப்பு ஏற்பட்டிருப்பது போலவும் உருவங்கள் சில நகருவது போலவும் தனக்குத் தோன்றுவதாய்க் கூறினான் லிம்பா. நீக்ரோவின் கூரிய கண்களில் அபார நம்பிக்கை பிராங்கோவுக்கு. சற்றும் யோசியாமல் லிம்பா பின் தொடர ஓடினான் பாலத்தின் மேலாக, மறு கரைக்கு. அவசரம் அவன் அறிவை ஏமாற்றி விட்டது. பாலத்தின் இந்தப் பக்கத்தில் காவலர்களை யாரோ செயலிழக்கச் செய்திருந்தார்களே, அதன் பொருள் என்ன என்பதைப் பற்றி அவன் சிந்திக்கவில்லை. பாலத்தின் அடிவாரத்தில் வெடி மருந்துகள் வைக்கப்பட்டிருக்கின்றனவா என ஆராயத் தவறி விட்டான். சக்தி மிகுந்த 'டைம் பாம்'கள் பல அங்கே ஒளிந்து கொண்டிருந்தன. குறிப்பிட்ட நேரத்தில் கணக்காக வெடிக்கக் காத்திருந்தன. அவற்றை அங்கே வைத்து விட்டுத் தானே லிம்பாவின் கூர்மையான கண்களுக்குத் தட்டுப்பட்ட அந்த உருவங்கள் ஆற்றின் அக்கரையிலிருந்த காவலர்கள் தங்களைக் கண்டுவிடக் கூடாதென்பதற்காக நீரில் இறங்கி நீந்திப் போயிருக்க வேண்டும்? பாலத்தின் பாதி தூரத்தைக் கடப்பதற்குள் துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. ஒரே ஒரு கணம் திடுக்கிட்டு நிதானித்து, பின்னர் முன்னைக் காட்டிலும் வேகமாய் ஓடினான் பிராங்கோ.

அவன் போய்ச் சேருவதற்குள் அங்கே காவலிருந்த ஒரே போர்ச்சுகீசியச் சிப்பாயின் வாழ்வு முடிந்து விட்டது. அதே கணத்தில் ரகுநாத்தின் தோளிலிருந்து ரத்தம் குபுகுபுவென்று பீறிட்டது. குண்டு துளைத்த காயத்தை அழுத்தி ரத்த ஓட்டத்தை நிறுத்த முயன்றபடியே கீழே விழுந்த அவனைக் கண்டு வீரிட்டு அலறினாள் சரயூ. அவனுக்கு உதவப் பாய்ந்து சென்றாள். "வந்த வேலையைக் கவனி. பிறகு இதற்குக் கட்டுப் போடலாம்!" பல்லைக் கடித்துக் கொண்டு பேசினான் ரகுநாத். "அதோ யாரோ வருகிறார்கள்! சீக்கிரம்!"

ரகுநாத்தின் கட்டளையை நிறைவேற்றுவதில் சரயூவை முந்திக் கொண்டு விட்டாள் ஸில்வியா. போலீஸ் அதிகாரியின் மகளான அவளுக்கு வெடி மருந்துகள், குண்டுகள் போர்த் தளவாடங்கள் இவை பற்றிய அறிவு நிறைய இருந்தது.

திபுதிபு வென்று ஓடி வந்த பிராங்கோவின் கண்களுக்கு முதன் முதலாகத் தட்டுப்பட்டது அந்தப் பாலத்தின் மூன்றாவது காவலாளியின் உயிரிழந்த உடல்தான். இது என்ன விபரீதம்! லக்ஷ்மியின் தற்கொலைக்குக் காரணமான நால்வரும் மீண்டும் இங்கே ஏன் ஒன்றாகக் கூடி இருக்கிறோம்?

டார்ச் லைட்டை ஏந்திச் சுழன்று வந்த அவன் பார்வை ஸில்வியா இருந்த திசையை நோக்கி நின்றிருந்த போது நிலையாக நின்றும் விட்டது.

"ஸில்வியா!" என்று அலறினான் பிராங்கோ. "என்ன செய்து கொண்டிருக்கிறாய், நீ? துரோகி!" போர்ச்சுகீசியன் ஒருவனுடைய மகளே வெள்ளையருக்கு எதிராகச் சதி செய்வதா? மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டான் பிராங்கோ. பெண்ணென்பதையும் பாராமல் அவளை எதிரே நிற்க வைத்து இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அடித்தான். அவனைத் தடுக்க எண்ணி எழுந்திருக்கத்தான் முயன்றான் ரகுநாத். அதற்கு அவன் லாயக்கற்றவன் என்பதைப் பழுக்கக் காய்ச்சிய இரும்பை வைத்துச் சதையைச் சுட்டுப் பொசுக்குவது போல் தோளில் உண்டான வலி உணர்த்தியது.

பிராங்கோவின் வலதுகை சளைத்துவிட்டது. கிட்ட நெருங்கிய சரயூவை உதைத்துத் தள்ளி விட்டு அவன் இடது கரத்தையும் வலது கரத்தையும் மாற்றி மாற்றிப் பயன்படுத்தினான் ஸில்வியாவைத் தாக்குவதற்கு. அடித்தே அவளைச் சாக அடிக்க வேண்டுமென்ற வெறி பிடித்து விட்டதா அவனுக்கு?

லிம்பாவினால் இந்தக் கோரக் காட்சியைச் சகிக்க முடியவில்லை. பிராங்கோவின் மீது பாய்ந்தான் அவன். ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழித்த பிராங்கோவுக்கு, "அதைத் தானே செய்து கொண்டிருக்கிறீர்கள் அங்கோலாவிலே" என்ற லிம்பாவின் சொற்கள் நினைவுக்கு வந்தன. 'வாய் திறவாமல் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டிய ராணுவ மனப்பான்மையையும் மீறிக் கொண்டு சுதந்திர வேட்கை கிளர்ந்தெழுகிறதா அந்தக் கறுப்பனுடைய உள்ளத்தில்? இதோ, மேலே வளர விடாமல் ஆரம்பத்திலேயே அதனைக் கிள்ளி எறிந்து விடுகிறேன்!'

லிம்பாவைப் பலம் கொண்ட மட்டிலும் தாக்கினான் பிராங்கோ. இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் புரண்டார்கள், உருண்டார்கள். அதனிடையே, "ஓடுங்கள்! தப்பி ஓடுங்கள்!" என்ற லிம்பாவின் குரலொலி எழுந்தது.

அதைக் கேட்டுச் சுய உணர்வு பெற்ற பெண்கள் இருவரும் ரகுநாத்தை அணைத்துத் தாங்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்கள். அவர்களுடைய வேலை முடிந்து விட்டது.

முப்பதே விநாடிகளில் அங்கே அண்டம் கிடுகிடுக்கும் பயங்கரப் பேரொலி எழுந்தது. தூள் தூளாகச் சிதறியது அந்தப் பாலம்.

இருபத்தாறரை மணி நேரத்தில் கோவாவை நானூறு வருஷங்களுக்கு மேற்பட்ட அடிமை வாழ்விலிருந்து விடுவித்த பாரத நாட்டு ராணுவத்தினரில் சிலர், மறுநாள் அந்தப் பக்கமாக வந்த போது பாலத்தைப் புரட்சியாளர்கள் தகர்த்து விட்டிருப்பதையும் அப்போது நான்கு உயிர்கள் பலியாகி யிருப்பதையும் பார்த்தார்கள். அதிலும் நீக்ரோ ஒருவனும் போர்ச்சுகீசியன் ஒருவனும் மரணத் தறுவாயிலும் அந்யோந்யமாக ஒருவரை ஒருவர் கட்டித் தழுவியபடியே உயிர் நீத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். "உலகிலுள்ள அனைவரது உள்ளங்களிலிருந்தும் நிற வேற்றுமை அடியோடு நீங்கி இவர்களைப் போலவே வெவ்வேறு நிறத்தினராய் இருந்தாலும் அன்பு செலுத்தி வாழக் கற்றுக் கொண்டால் இந்த உலகம் எவ்வளவு இன்பமயமாக விளங்கும்?" என்று அந்த ராணுவத்தினருக்குள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.


கூந்தலை நன்றாக வாரி முடிவதின் வனப்பு
கூந்தலை வழவழப்பாகவும், பொலிவுடனும் விளங்கச் செய்யும்
ஸ்வஸ்திக் பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயிலைத் தடவி
வாரினால் உங்கள் கூந்தல் அழகாகத் தோற்றமளிக்கும்.
கூந்தல் அலங்காரத்தைச் செய்யும் விதம்:
ஸ்வஸ்திக் பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயிலைத் தடவி கூந்தலை நன்றாக இழைய வாரவும். அடியில் ரிப்பனினால் கூந்தலை நன்றாகக் கட்டவும். மேல்புறத்தைநோக்கி கூந்தலை வளைவாக மடித்து, பின்செய்து, எஞ்சியுள்ள கூந்தலை இடதுபுறம் தொங்கும்படி விடவும். (படம் 1.) எஞ்சியுள்ள கூந்தலை வளையமாகச் சுற்றி, நுனிப் பாகத்தை உள்ளே சொருகிவிடவும். (படம் 2.) கொண்டையை நன்றாகப் பின்செய்து, நகைகளினால் அலங்கரிக்கவும்.
1
2
ஸ்வஸ்திக் ஹெயர் ஸ்டைல் "அலங்கார்"
ஸ்வஸ்திக்
ஆயில் மில்ஸ்
லிமிடெட்
பம்பாய்.
Shilpi S.O.M. 16-A TAM

REGISTERED No M. 4392
Registered as a Newspaper in Ceylon

யாரோ இவள்

என யாரும் கேட்க..எவரும் வியக்க...



...உங்கள் மேனியெழிலை மிளிரச் செய்வது

செங்கமல வண்ண ப்ரீஸ்



TM